Koviloor Digital Library

ஆசாரியஸ்வாமிகள்

உபந்நியாசங்கள்

4776
Q1:332ம

கலைமகள் வெளியீடு

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-5

ஆசாரிய ஸ்வாமிகள் சென்னை உபந்நியாசங்கள் 1957—59

கோவிலூர் ஆண்டவர்
A. No. 4476
வி: 332 வ
நூலகம், கோவிலூர்

பாகம்-3

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-5

ஆசாரிய ஸ்வாமிகள்

உபந்நியாசங்கள்

1957—59

பாகம்-3

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 4776

கலைமகள் காரியாலயம்
சென்னை-4

Koviloor Digital Library

முதற் பதிப்பு, நவம்பர், 1960.
இரண்டாம் பதிப்பு, ஜூன், 1965.
உரிமை பதிவு
விலை: ரூ. 2/-

Printed at the MLJ Press Private Ltd., Madras-4.

Koviloor Digital Library

பொருளடக்கம்

			பக்கம்
1.	உள்ளும் புறமும்	...	1
2.	கீதோபதேசம்	..	8
3.	அத்வைத தத்வம்	...	23
4.	கலாசாரம்	...	39
5.	பழைய சாஸ்திரங்கள்	...	66
6.	பக்தி	...	90
7.	சமய வளர்ச்சியும் நலிவும்	...	96
8.	தெற்குப் பார்த்த ராஜாக்கள்	..	109
9.	அம்பாள் தத்துவம்	..	134
10.	அபரிக்ரஹம்	..	146
11.	எது மோட்சம்?	..	152
12.	இஷ்டம், பூர்த்தம்	..	161
13.	திருவெம்பாவை, திருப்பாவை	..	169
14.	ஆருத்திரா தரிசனம்	...	176
15.	திருக்கார்த்திகை	..	188

Koviloor Digital Library

Koviloor Digital Library

முன்னுரை

'மஹான் என்ற சம்ஸ்கிருத பதமும் 'பெரியவர்கள்' என்ற தமிழ்ச் சொல்லும் ஒரே பொருளைக் குறிக்கும். 'பெரிய வர்கள்' என்ற சொல்தான் பேச்சு மொழியில் 'பெரியவாள்' என்று வந்திருக்கிறது. இன்று தமிழ்நாட்டில் 'பெரியவாள்' என்ற சொல் ஸ்ரீ காமகோடி பீடத்தை அலங்கரித்து வரும் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களைக் குறிக்கின்றது என் பதை யாவரும் அறிவர். சமீப காலத்தில் (1957-1959) சென்னை மாநகரம் பெரியவாள் பட்டினமாக மாறியதைக் கண்டு நாமெல்லோரும் மகிழ்ந்தோம். நம்மீது தயை கூர்ந்து சுமார் 25 வருஷங்களுக்குப் பிறகு இரண்டாவது முறையாக ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் சென்னைக்கு விஜயம் செய்தார்கள். பட்டினத்தின் பல் வேறு பாகங்களில் முகாம் செய்து மக்களை அநுக்கிரகித் தார்கள். அவர் தங்கியிருந்த இடம் சிவபுரமாக ஜ்வலித்தது. ஸ்ரீ சந்திர மௌளீச்வர பூஜையில் ஈடுபட்டு மக்கள் தம்மையே மறந்தார்கள். இரவு, பூஜைக்குப் பிறகு அருள்மொழிகளைக் கேட்டுப் பேரானந்தம் அடைந்தார்கள்.

ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளின் உபந்நியாச முறையே ஒரு தனிஅழகு பெற்றது. பூஜையை முடித்துக்கொண்டு உபந்நியாசம் செய்தவற்காக மேடைமீது அமர்வார். லோக க்ஷேமத்திற்காக அவர் செய்யும் பூஜையே பின் வரப் போகும் உபந்நியாசத்திற்கு ஒரு முகவுரையாக உள்ளது. பூஜையில் ஈடுபட்டவர்களுக்கு அகங்காரம் அடங்கி ஈசுவர சிந்தனை மேலோங்கி நிற்கும். வேதாந்த சிரவணத்திற்கு முக் கியமாக வேண்டுவது அகங்காரத்தின் ஒடுக்கம் அல்லவா? இந்த ஒடுக்கம் நம்முள் நிலைபெறுவதற்காகச் சிறிது நேரம் மௌனமாக அமர்ந்திருப்பார், ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள். இக் காட்சியைக் கண்டவர்களுக்கு ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் நினைவு வரும். உபந்நியாசத்திற்குப் பூர்வாங்கமாக அநுசரிக்கும் மௌனமே ஒரு பெரிய உபதேசமாக அமையும். எங்கே சாந்தி உளதோ அங்கேதானே சுகம்? ஆசாபாசங்களாகிற அலை களால் மோதுண்டு கிடக்கிறபடியால் நமக்குச் சாதாரணமாக மௌனம் சித்திப்பது கிடையாது. ஒரு மஹானின் முன்னிலை யிலே நாம் இருக்கும்போது மனம் ஒடுங்குகிறது; நம்முள்ளே இருக்கும் சுகம் ஸ்புரிக்கின்றது. இந்த நிலையை நாம் அடைவதற்காக ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் மௌனத்தை அனுஷ் டித்துக் காட்டுகின்றார். மௌன சுகத்தில் கட்டுண் டிருக்கும் நமக்கு (மௌனத்திலே ஞானத்தைப் பெறும் சக்தி இல்லாத படியால்) ஞான ஒளியைத் தருவதற்காகப் பேச ஆரம்பிக் கின்றார். ஆனால் இங்கு ஓர் அற்புதம்: எங்கு மௌனம் முடிகிறது, எங்கே பேச்சு ஆரம்பிக்கிறது என்று சொல்லமுடியாத ஓர் அநுபவம். ஒலிபெருக்கியின் மூலம் வரும் சப்தம்கூட அமைதி

Koviloor Digital Library

யாக இருக்கிறது, சாந்தமாக இருக்கிறது. சாந்தமூர்த்தியின் பேச்சு அல்லவோ அது! சற்றுமுன் மௌனத்தில் லயித்த மக்கள் இப்பொழுது பேச்சில் லயிக்கிறார்கள். 'நாம் கேட்கின்றோம்' என்ற அகங்காரம்கூட இல்லாமல் 'கேள்வி' மாத்திரம் மிஞ்சுகிறது.

அநேக விஷயங்களைப்பற்றிப் பேசுகிறார்கள் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள். அவருடைய மேதா விலாசத்தைக் கண்டு வியக்காத மேதாவிகள் கிடையாது. ஆனால் உண்மையில் வியப்படைவதற்கு என்ன இருக்கின்றது? 'ஒன்றை'க் கண்டுகொண்டவர்களுக்குப் 'பலவற்றை'ப் புரிந்துகொள்வது கடினமா? எந்த 'ஒன்றை' உணர்ந்தால் எல்லாவற்றையும் உணர்ந்தவர் ஆவரோ, அந்த 'ஒன்றை' உணர்ந்தபடியால் எல்லா ஞானமும் தம் வசத்தில் உள்ளது. அவ்வொன்றைத் தெரிந்துகொள்ளாத நமக்கு அந்த ஏக வஸ்துவைக் காட்டுவதற்காகப் பலவற்றைக் குறித்து உரையாடுகின்றார் ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள். அவருடைய உபதேசங்களினால் பழமையில் புதுமையையும் புதியதில் பழமையையும் பார்க்கின்றோம் நாம். 'நாம் தினமும் சொல்லும் வார்த்தைகளிலே, நாம் ஒவ்வொரு நாளும் காணும் சம்பவங்களிலே, இவ்வளவு பொருள் அடங்கியிருக்கிறதா!' என்று ஆச்சரியப் படுகிறோம், அவர் அவற்றிற்கு விளக்கம் செய்தபிறகு. எவ்வளவு சிறிய விஷயமாக இருந்தாலும் அதைத் துணையாக வைத்துக் கொண்டு யாவற்றிற்கும் பெரிய பொருளைக் காட்டும் சக்தி மஹாத்மாக்களுக்குத்தான் உண்டு.

ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளின் சென்னை உபந்நியாசங்களின் சுருக்கம் அவ்வப்போது பத்திரிகைகளிலே வந்தது. அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட உபந்நியாசங்களை அநேகர் ஆர்வத்தோடு வாசித்தார்கள். உலக நிகழ்ச்சிகளைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்று பத்திரிகை வாசிப்பதை 'நித்யகர்மாவாக'க் கொண்டவர்கள்கூட முதலாவதாக உபந்நியாசம் இருக்கும் பக்கத்தைத் தேடி வாசித்து வந்தார்கள். சென்னை உபந்நியாசங்களின் சுருக்கம் முதலில் ஆங்கிலத்தில் வெளிவந்தது. இப்பொழுது உபந்நியாசங்களின் மூலத்தை ஆச்சார்யரவர்கள் தமிழில் கூறியபடியே கலைமகள் காரியாலயம் அளித்துவருகிறது. இதுவரையில் இரண்டு பாகங்கள் வெளியிடப்பட்டன. இது மூன்றாம் பாகம்.

ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளின் உபந்நியாசங்களின் பரம தாத்பர்யம் அத்வைதம். அத்வைதம் என்பது பல மதங்கள் அல்லது தரிசனங்களில் ஒன்றல்ல. எல்லா மதங்களும் தரிசனங்களும் எதை லக்ஷ்யமாகக் கொண்டுள்ளனவோ அதுதான் அத்வைதம். இந்த உண்மையை ஆதிசங்கரரின் கல்வியாற்றலைப் புகழும் ஒரு சுலோகத்தை வைத்துக்கொண்டு தெளிவாக்குகின்றார், ஆசார்யரவர்கள். அந்தச் சுலோகத்தின் தாத்பர்யம் இது: 'தர்க்க சாஸ்திரத்தில் தேர்ச்சிபெற்றார் (சங்கரர்); அதே போல் கபில மஹரிஷியால் ஸ்தாபிக்கப்பட்ட ஸாங்க்ய சாஸ்திரத்தில் நிகரற்ற பாண்டியத்தியமடைந்தார்; பதஞ்சலியின் யோகம், வியாகரணம், இவற்றைக் கரைத்துக் குடித்துவிட்டார்! பாட்ட மீமாம்ஸா மதத்தின் உயரிய நுண்பொருளையும்

Koviloor Digital Library

உணர்ந்துகொண்டார். இவற்ருல் உண்டாகும் சுகமானது சுத்தமான அவருடைய அத்வைத வித்தியாசுகத்தில் அடங்கி விட்டது. எப்படியென்ருல், ஒரு கிணற்றினுல் என்ன பிரயோஜனம் உண்டோ அது நல்ல ஜலமுள்ள விஸ்தாரமான ஏரியில் கிடைக்காதா?'

ஸ்ரீ சங்கர பகவத்பாதாவதாரமே அத்வைதத்தின் பூர்ணத்வத்தை உணர்த்துவதற்காகத்தான் ஏற்பட்டது. அவர் போதித்த அத்வைத சிந்தாந்தம் என்ன என்பதை ரத்தினச் சுருக்கமாக நமது ஆசார்யரவர்கள் கூறுகின்ருர்: 'வேறு வேறு பொருள் என்பதே கிடையாது. துக்கத்துக்குக் காரணமே இன்னெரு பொருள் இருக்கிறது என்பதான மித்யா ஞானம்தான். நான் வேறு, அது வேறு என்று நினைத்துக்கொண் டிருப்பதெல்லாம் அறியாத்தன்மை. எல்லாம் ஒன்றுதான்.' (பக்கம் 32). இந்த உண்மையை சாக்ஷாத்கரிப்பதுதான் மோக்ஷம். 'மோக்ஷம் என்பது செத்துப்போன பிறகு வேறு எந்த லோகத்திற்கோ போய் அநுபவிப்பது என்பது அல்ல. கைகண்ட பலனுக இந்த லோகத்தில் இருக்கும்போதே நமக்குக் கிடைக்கவேண்டும.' (பக்கம் 155).

ஆனுல் சாக்ஷாத்காரம் கிடைப்பது துர்லபம். எத்தனையோ ஜன்மங்களின் சுக்ருதம் வேண்டும். தன்னலமற்ற மனப்பான்மை யோடு காரியங்கள் செய்ய வேண்டும். ஈசுவரா நுக்கிரகம் வேண்டும். ஆசார்யரின் கடாக்ஷம் வேண்டும். இவற்றையெல் லாம் சம்பாதிக்கும் மார்க்கத்தை ஆதியோடு அந்தமாக எல் லோரும் புரிந்துகொள்ளுமாறு உபதேசிக்கின்ருர், ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள். 'இஷ்டம், பூர்த்தம்' என்ருல் என்ன? எல்லாப் பிராணிகளுக்கும் எதற்காகத் தொண்டு செய்யவேண்டும்? எவ்வாறு செய்ய வேண்டும்' 'வெட்டிக்கொண் டிருந்தானு?' என்று சொல்லுகிறேமே அதற்கு என்ன பொருள்? மதம் என்ருல் என்ன? எதற்காகப் பலமதங்கள் தோன்றியிருக்க வேண்டும்? ஒரு மதத்தின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணங்கள் என்ன? நம்முடைய மதத்தை வைதிகமதம் என்று கூறுகின் ருேம். வேதத்தின் பொருள் என்ன? ஒரே ஈசுவரதத்துவம் பல ரூபங்களில் ஏன் தோன்றவேண்டும்? தாயாகவும், தந்தை யாகவும், விஷ்ணுவாகவும் சிவனுகவும், அர்த்தநாரீச்வரனுகவும் கடவுளை நாம் வணங்குகின்ருேமே, அது எதற்காக? கிராம தேவதைகளுக்குக் காத்தாயி, பேச்சிஆயி, பிடாரி என்ற பெயர்கள் இருக்கின்றனவே அவற்றின் பொருள் என்ன? கடவுளின் சில மூர்த்தங்கள் ஏன் தென்முகமாக இருக்க வேண்டும்? மார்கழி நோன்பின் நோக்கம் என்ன? கார்த்திகைத் தீபம் எதைக் காட்டுகிறது? இவைபோன்ற கேள்விகள் உண்டு என்பதே நமக்குள் அநேகருக்குத் தெரியாது. இவற்றை யெல்லாம் எழுப்பிச் சமாதானங்கள் கூறுகின்ருர் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள். நகைச்சுவை ததும்பப் பேசுகின்ருர்: (1) பிரசாதத்தை வாங்கிச் சாப்பிட்டுவிட்டுக் கோயில் தூணில் கையைத் துடைக்கின்ருேமே; கடவுள் எங்கும் இருக்கின்ருர்; தூணிலும் இருக்கின்ருர் என்ற ஞானம் இருந்தால், நாம் அவ்வாறு செய்வோமா? (பக்கம் 19). (2) எங்கே ராமன் இருக்

Koviloor Digital Library

கின்றானே அங்கே காமன் இருக்கமாட்டான். ஏன் தெரியுமா? தகப்பனாரிடத்தில் பிள்ளைக்கு மிகுந்த பக்தி! (3) லக்ஷ்மியும் சரஸ்வதியும் ஓர் இடத்தில் இருக்கமாட்டார்கள். ஏன்? முன்னவள் மாமியார், பின்னவள் மாட்டுப்பெண். (பக்கம் 17).

ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளின் உபதேசங்களுக்கெல்லாம் ஒரே ஒரு நோக்கந்தான். அது அத்விதீயப் பிரம்மத்தை நாம் அறிந்து கொள்ள வழிவகுப்பது. ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர், ஆதி சங்கரரின் முக கமலத்தினின்று வெளிவந்த நன்மொழியைப் புகழ்கின்றார்- 'பிறவியைப் போக்கக்கூடியது, இரண்டற்ற பரம்பொருளைத் தாத்பர்யமாக உடையது; அத்தகைய பொன்மொழி ஜயம் பெறட்டும்'—என்று:

जयति भगवत्पाद-श्रीमन्मुखाम्बुजनिर्गता
जननहरणी सूक्तिर्ब्रह्माद्वयैकपरायणा ॥

பகவத்பாதரின் பரம்பரையில் தோன்றி அவருடைய நாமம் தாங்கி நந்தாவிளக்காய்ப் பிரகாசிக்கின்ற நமது ஆசார்யஸ்வாமிகளின் புனித வாக்கும் அதே உத்தேசம் கொண்டதுதான்.

இங்கு ஸ்ரீ ரமண மகரிஷிகள் அருளிய செய்யுள் ஒன்று நினைவுக்கு வருகின்றது:—

ஆன்மாவின் போதமருள் ஆசானும் சங்கரன்அவ்
ஆன்மாவுக்(கு) அன்னியன் ஆவனோ - ஆன்மாவா
என்னகத் தேஇருந்து இன்றுதமிழ் சொல்வானும்
அன்னவன் அன்றிமற் றார்.

ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் தம்முடைய பேருரைகளில் ஈசுவர பக்தி அவசியம் வேண்டும் என்று அடிக்கடி வற்புறுத்திக் கூறுகின்றார். இதனால் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது, 'அத்வைதம் நிரீச்வர வாதம், சூன்ய வாதம்' என்று வாதிப்பது அர்த்தமற்றது என்பதாம். அத்வைதானுபவத்தைப் பெற ஈச்வரானுக்கிரகம் மிகவும் அவசியம். தமது சூத்ர பாஷ்யத்தில் ஆதிசங்கரர் இவ்வாறு உபதேசிக்கின்றார்:

ईश्वराद्धेतोः अस्य जीवस्य बन्धमोक्षौ भवतः ।
ईश्वरस्वरूपापरिज्ञानात् बन्धः तत्स्वरूपपरिज्ञानात्तु मोक्षः ॥

'ஈச்வரனிடமிருந்துதான் ஜீவனுக்குப் பந்த மோக்ஷங்கள் உண்டாகின்றன. ஈச்வரஸ்வரூபத்தை அறியாமையால் 'பந்தம்; அவருடைய ஸ்வரூபத்தை அறிந்துகொள்வதால் மோக்ஷம் (iii,ii,5)'

மேலும், மோக்ஷ ஸாதன ஸாமக்கிரிகளுக்குள் பக்திதான் மிகவும் உயர்ந்தது என்று போதிக்கின்றார்:

मोक्षसाधनसामग्र्यां भक्तिरेव गरीयसी ॥

'ஈச்வர பக்தி அவசியம் வேண்டும் என்று சொல்வதற்கு முக்கியமான காரணம், ஒவ்வொரு ஜீவாத்மாவும் ஆத்மானு

Koviloor Digital Library

பவத்தை அடைந்து ஜனன நிவர்த்தியைத் தேடிக்கொள்ள வேண்டும் என்பதுதான்' என்று நமது ஆசார்யரவர்கள் கூறுகின்றார்கள்; (பக்கம் 148).

ஈச்வரனேதான் குருவாக வருகின்றான் என்பது நமது கொள்கை. குருவை உபாஸிப்பது என்றால் குருவைப் பின்பற்றுவது என்று பொருள். இது ஆதிசங்கரரின் திருவாக்கிலிருந்தே நமக்குக் கிடைக்கின்றது (ஸூத்ர பாஷ்யம் iv,i,1).

ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளின் அருள்மொழிகளை வாசித்து, அவற்றின் பொருளை உணர்ந்துகொண்டு அதன்படி நடந்து பிறந்ததாலாய பயனைப் பெறுவோமாக!

சென்னை,
9-11-1960.

டி. எம். பி. மஹாதேவன்.
(சென்னைப் பல்கலைக் கழகத் தத்வ ஆராய்ச்சித் துறைத் தலைவர்)

Koviloor Digital Library

Koviloor Digital Library

பதிப்புரை

அருளே திருவுருவாக எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாகிய ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் சென்னைக்கு வந்து தம்முடைய அருட் பிரசாதத்தை யாவருக்கும் வழங்கி நலம் பெறச் செய்தார்கள். 1935-ஆம் ஆண்டில் ஒரு முறையும் 1957-ஆம் ஆண்டில் மறுமுறையும் இம் மாநகரில் எழுந்தருளி மக்கள் உள்ளத்தில் தெய்வபக்தியை யும் சீல உணர்ச்சியையும் உண்டாக்கினார்கள். இந்த இரண்டு சமயங்களிலும் அவர்கள் பல அருமையான விஷயங்களைப் பற்றித் தொடர்ந்து உபந்நியாசங்கள் செய்தார்கள். அந்த உபந்நியாசங்களை நேரில் கேட்டவர்களும் பத்திரிகை வாயிலாக அவற்றின் சுருக்கத்தை அறிந்தவர்களும் அவற்றால் மிக்க பயனைப் பெற்றார்கள்.

முதல் முறை ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் வந்திருந்தபோது அவர்கள் மயிலாப்பூரில் செய்தருளிய உபந்நியாசங்களை 'நன் மொழிகள்' என்றும். 'சங்கர விஜயம்' என்றும் இரண்டு புத் தகங்களாக வெளியிடும் பேறு எங்களுக்குக் கிடைத்தது. அந்த உபந்நியாசங்களில் நம்முடைய ஹிந்து மதத்தைப் பற்றியும், வேத சாஸ்திரங்களைப் பற்றியும், ஸம்ஸ்காரங்களைப் பற்றியும், மூர்த்திகளைப் பற்றியும் பல அரிய உண்மைகளை மிகவும் தெளி வாக எடுத்துரைத்தார்கள். இன்றும் அந்த இரண்டு நூல்களும் ஆறு புத்தகங்களாகிக் காமகோடி கோசஸ்தான வெளியீடுகளாக உருப்பெற்று நிலவுகின்றன.

இரண்டாம் முறை இந்த ஞானப் பெருமன்னர் சென்னை யில் தங்கியபோது மயிலாப்பூரிலும் பிற இடங்களிலும் பல உபந்நியாசங்களைச் செய்தார்கள். அவற்றையும் வெளியிடும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இதற்கு முன் இரண்டு பாகங்கள் வெளியாகியிருக்கின்றன. இது மூன்றாவது பாகம். இன்னும் ஒரு பாகம் வெளியாகும். முதல் பாகம் வெளியானபோது தமிழ்மக்கள் மிகவும் ஆர்வத்தோடு அத னைப் பெற்றுப் படித்தார்கள். நம்முடைய வருங்கால சந்ததியா ராகிய இளைஞர்களிடம் இந்த அரிய நூல் பரவ வேண்டு மென்ற எண்ணத்தால் அந்த முதற் பாகத்தைச் சிறிது காலத் திற்கு அரைவிலையில் மாணாக்கர்களுக்குக் கொடுத்து வந்தோம். அந்த வாய்ப்பை ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயன்படுத்தி யதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த மூன்றாம் பாகத்தில் 15 உபந்நியாசங்கள் அடங்கி யுள்ளன. ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளுடைய திருவாக்கில் அன்பும் தெளிவும் நிரம்பியுள்ளன. மிகவும் சிக்கலான கருத்துக்களை யும் யாவரும் தெளியும் வண்ணம் சொல்லும் பாங்கை அவர்க

Koviloor Digital Library

ளிடம் பார்க்கிறோம். எத்தனையோ நுட்பமான செய்திகளை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அவர்கள் சென்னைக்கு வந்ததனால் மக்களுக்குப் பல வேறு பயன்கள் கிடைத்திருக்கின்றன; எல்லாவற்றிற்கும் மேலானது இந்த உபந்நியாசங்கள் நமக்குக் கிடைத்ததுதான்.

இந்த உபந்நியாசங்களைச் சுருக்கெழுத்தில் எடுத்துத் தட்டெழுத்தில் வடித்துத் தந்தவர் ஸ்ரீ அனந்தன் அவர்கள். அவருக்கு எங்கள் நன்றி உரியது. ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளுடைய உபந்நியாசங்களைக் 'கல்கி' அதிபர் ஸ்ரீ டி. சதாசிவம் அவர்கள் 'டேப்ரிகார்ட'ரில் பதிவு செய்யும்படி ஏற்பாடு செய்திருந்தார். அவற்றை நாங்கள் பயன்படுத்திக்கொள்ளும்படி சில காலம் கொடுத்திருந்தார். அவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்தத் தொகுதிக்கு முன்னுரை எழுதியிருக்கும் ஸ்ரீ டாக்டர் டி. எம். பி. மகாதேவன் அவர்களுடைய அன்பைப் பாராட்டுகிறோம். அவருக்கும் எங்கள் நன்றி.

பதிப்பாளர்

Koviloor Digital Library

Koviloor Digital Library



ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

Koviloor Digital Library

1

உள்ளும் புறமும்

நர நாராயணர்கள் தபஸ் பண்ணிக்கொண் டிருந்தார்களாம். நாராயணன் சாட்சாத் பகவான். நரன், ஈசுவரனுடைய அம்சம். மனிதர்களுக்குள் உயர்ந்த நிலையை அடைந்தவன். அதனால்தான் நரன் என்று பெயர். இந்த நர நாராயணர்களே சாட்சாத் கிருஷ்ணன், அர்ஜுனன் அம்சம் என்று சொல்வதும் உண்டு. அவர்கள் இரண்டு பேரும் தபஸ் பண்ணிக்கொண் டிருந்தார்கள்.

இந்திரனைத் தேவலோகத்துக்கு அதிபதி என்று சொல்வார்கள். எல்லாப் பதவிகளையும்விட இந்திரப் பட்டந்தான் உயர்ந்தது என்று சொல்வார்கள். 'யார் தபஸ் பண்ணினாலும் தபஸ் பூர்த்தியானவுடன் இந்திரப்பட்டம் அவருக்குக் கிடைத்துவிடும். இவனுக்கு இந்திரப்பட்டம் போய்விடும்' என்கிற அபிப்பிராயம் எல்லாப் புராணக் கதைகளிலும் சொல்லப்படுகிறது. ஆகையால் அப்படி யாராவது தபஸ் பண்ணினால் அந்தத் தபஸ் சித்தியாகாமல் இருப்பதற்கு என்ன என்ன இடைஞ்சல்கள் உண்டோ அவ்வளவையும் பண்ணுவது இந்திரனுடைய வேலை? இந்த இடைஞ்சல்களை எல்லாம் சமாளித்து, தபஸ் பூர்த்தியாகி, சித்தியாகிவிட்டால் அவர்களுக்குப் பெரிய பதவி ஏற்படும் என்பது அபிப்பிராயம். 'எல்லா லோகத்திலும் உயர்ந்த லோகம் இந்திரலோகம். பதவிக்குள் உயர்ந்த பதவி இந்திர பதவி. அது கிடைத்துவிட்டால் திரிலோகாதிபதியாக ஆகிவிடலாம்; தபஸ் பூர்த்தியானால் அந்தப் பதவியே கிடைத்துப் போகும்' என்பது அபிப்பிராயம்.

இப்போது அப்படித்தான். யாராவது சில பேர் நிரம்ப 'ஸாக்ரிபைஸ்' (Sacrifice) பண்ணுகிறார்கள். பேர் வருகிறது;

Koviloor Digital Library

ப்ராராட்டு வருகிறது. உடனே கட்சி என்று ஏற்பட்டு அதற்குத் தலைமைப்பதவி வருகிறது. ராஜ்யம் முழுவதையும் தம் ஆளுகைக்கு உள்ளாக்கிக்கொண்டு விடுகிறார்கள். அப்புறம் தாம் சொன்ன படிதான் எல்லோரும் நடக்கவேண்டும் என்கிறார்கள். அப்புறம் இன்னொருத்தன் நிரம்ப ஸாக்ரிபைஸ் பண்ணினான் என்றால் இந்தத் தலைமைப் பதவி அவனுக்குப் போய்விடுகிறது. இவன் கீழே விழுந்துவிடுகிறான். இப்படிக் கொஞ்ச நாள் ஸாக்ரிபைஸ் பண்ணுவதற்குள்ளேயே இந்தப் பூலோகத்தின் உயர்ந்த பதவி, கீர்த்தி எல்லாம் மாறிமாறி அவர்களுக்கு வந்துவிடுகிறது. அதே மாதிரி கொஞ்சம் தபஸ்பண்ணி, 'ஸாக்ரிபைஸ்' எல்லாம் பண்ணி விட்டால் மேல் லோக பதவியே கிடைத்துவிடுகிறது என்று புராணங்கள் சொல்கின்றன. அவர்களுடைய ஆசையும் இந்த லோகத்தோடு நிற்கவில்லை. 'தபஸ் பண்ணுகிறவர்களுக்கு இந்திர பதவியே கிடைத்துவிடுகிறது' என்றுதான் புராணம் முழுக்க எழுதியிருக்கும்.

அப்படி நர நாராயணர்கள் கடுமையான தபஸ் பண்ணவே இந்திரனுக்கே ஒரு சங்கை உண்டாகிவிட்டதாம். 'எங்கே நம்முடைய பதவி போய்விடப் போகிறதோ!' என்று அவர்களுடைய தபஸைக் கலைக்க என்ன என்ன வழியோ அதையெல்லாம் பண்ண ஆரம்பித்தான், மிரட்டுகிறது, பயமுறுத்துகிறது, இல்லாது போனால் ஸ்திரீகளை அனுப்பித் தபஸ் செய்வதிலிருந்து அவர்களுடைய மனசானது காமத்தில் பிரவர்த்திக்கும்படியாகச் செய்வது இப்படியெல்லாம் அவன் செய்வது வழக்கம். இந்தக் காரியங்களுக்கு 'விக்கினம் பண்ணும்' முயற்சி இது.

அந்தமாதிரி நரநாராயணர்கள் தபஸ் செய்துகொண்டிருந்த போது அவர்களுடைய ஆசிரமத்துக்குப் போய் அவர்கள் தபஸைக் கலைப்பதற்காக அப்ஸரஸ் ஸ்திரீகளை எல்லாம் இந்திரன் அனுப்பிவிட்டான். இந்த ஸ்திரீகள் முதலில் நரனிடத்தில் வந்தார்கள். நரன் ஈச்வராம்சம். எப்படி இருந்தாலும் ஜீவன் என்று சொன்னால் ஒரு குறை இருக்குமல்லவா? இந்த ஸ்திரீகளுடைய காமம் தபஸைக் கலைத்துவிடுமோ என்று அவர் ஒரு ஹுங்காரம் பண்ணினார். அவ்வளவுதான். அப்படியே அவர்கள் மேலும் கீழும் ஒருவர்மேல் ஒருவர் விழுந்துகொண்டு போய், எங்கே அந்தத் தபஸ் அக்னியானது தங்களை எரித்துச் சாம்பலாக்கிவிடுமோ என்று பயந்துகொண்டு இனி இந்தப் பக்கமே போகக்கூடாது என்று தீர்மானித்துக்கொண்டு விட்டார்கள். அவ்வளவு கோபம் நரனுக்கு வந்துவிட்டது.

'இவர் கொஞ்சம் சாதுவாக இருக்கிறாரே! எப்படி இருந்தாலும் இந்திரன் உத்தரவு போட்டுவிட்டான். அதற்குக் கீழ்ப்

Koviloor Digital Library

படிந்தே ஆகவேண்டும். அவனுக்குக் கீழ் உத்தியோகம் பண்ணுகிறோம். ஆகவே இவரிடத்தில் வேண்டுமானால் போய்ப் பார்க்கலாம்' என்று இந்த அப்ஸரஸ் ஸ்திரீகள் நாராயணனிடத்தில் வந்தார்கள். நாராயணன் இவர்களைக் கண்டவுடன் தம் துடையைத் தட்டினார். 'ஊரு' என்று துடைக்குப் பெயர். அவர் துடையைத் தட்டினவுடன் அந்தத் துடையிலிருந்து ஊர்வசி தோன்றினாள். அவளுடைய அழகைப் பார்த்தவுடன் அத்தனை ஸ்திரீகளும், 'இவள் அழகுக்கு நாமெல்லாரும் எம்மாத்திரம்?' என்று வெட்கி, அவமானப்பட்டு அப்படியே தலை குனிந்து நின்றுவிட்டார்கள்.

தன்னுடைய ஆத்மாவிடத்தில்தான், உலகத்திலுள்ள எத்தனை காமமோ, அழகோ, ஆனந்தமோ எல்லாம் இருக்கிறது. உள்ளே இருக்கும்படியான அகண்டாகாரமான ஆனந்தம், நிறைந்த அழகு இவை இருக்கின்றனவே, இவற்றினுடைய ஒவ்வொரு திவலைதான் உலகத்தில் இருக்கும்படியான அழகு, காமம், ஆனந்தம் என்பன எல்லாம். 'வெளியிலே ஒன்றுமே இல்லை, எல்லாம் உள்ளேயே இருக்கிறது; வெளியே இருக்கும்படியான எல்லா வஸ்துவும் உள்ளே இருப்பதோடு வந்து சேர வேண்டியதுதான்' என்கிற பரம தத்துவத்தைப் பகவான் காட்டினவுடன், 'நீங்கள்தாம் எங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டும். இனி இந்திரனுடைய ராஜசபைக்கே நாங்கள் போகவில்லை. அங்கே போனால் வயிற்றுப் பிழைப்புக்காக இப்படியெல்லாம் செய்யவேண்டியிருக்கிறது. நாங்கள் அங்கே போகவே இல்லை' என்று அந்த ஸ்திரீகள் எல்லாரும் சொல்லிவிட்டு அங்கேயே ஞானோபதேசம் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள் என்பது கதை. கொஞ்சம் கொஞ்சம் நான் சொன்னதற்கும், அந்தக் கதைக்கும் மாறுதல் இருக்கலாம். ஆனால் இந்தக் கதையினுடைய தத்துவம் போலவே கீதையில் ஒரு சுலோகம் இருக்கிறது.

आपूर्यमाणमचलप्रतिष्ठं
समुद्रमापः प्रविशन्ति यद्वत् ।
तद्वत् कामा यं प्रविशन्ति सर्वे
स शान्तिमाप्नोति न कामकामी ॥

ஆபூர்யமாணமசலப்ரதிஷ்டம்
ஸமுத்ரமாப; ப்ரவிஶந்தி யத்வத்|
தத்வத் காமா யம் ப்ரவிஶந்தி ஸர்வே
ஸ ஶாந்திமாப்நோதி ந காமகாமீ||

Koviloor Digital Library

காமம் என்பது வெளியில் இருக்கிற ஆசை. 'வெளியில் இருக்கும்படியான ஒரு பொருள் கிடைப்பதனால்தான் ஒரு சந்தோஷம், ஓர் ஆனந்தம்' என்று வெளியிலே காமத்தைக் காண்கின்றவன் இருக்கிறானே அவனுக்குச் சாந்தி என்பது என்றைக்கும் உண்டாகாது. வெளியில் இருக்கிற பொருள் வந்தால்தான் சந்தோஷம், வந்தால்தான் ஆனந்தம் என்று அதையே துரத்திக்கொண்டு போனால் எப்படிச் சாந்திவரும்? வெளியில் இருக்கிற பொருள் வரும்; போய்விடும். அது வந்தால் என்ன, போனால் என்ன? வந்தால் வரட்டும், அதையும் உள்ளே இருக்கும்படியான, பரம ஆனந்தாகாரமாக இருக்கும்படியான ஒரு வஸ்துவோடு அப்படியே சேர்த்துக்கொள்ள வேண்டியது தானே. எப்படி எவ்வளவு மகாநதிகள் வந்தாலும் சமுத்திரம் அவற்றையெல்லாம் தன்னோடு சேர்த்துக்கொள்கிறதோ, -அந்தச் சமுத்திரத்திலிருந்து போனவைதாமே அவை எல்லாம்— திரும்ப வரும்போது அந்த மகாசமுத்திரத்தோடேயே அவை கலந்துவிடுகின்றனவோ, அப்படி உள்ளே இருக்கும்படியான ஆனந்தத்தினுடைய திவலைகள்தாம் வெளியே இருப்பவை. அவ்வளவையும் உள்ளே இருக்கும்படியான ஆனந்தத்தோடேயே சேர்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, வெளியே அது இருக்கிறதே, இது இருக்கிறதே, அது வேண்டுமே, இது வேண்டுமே என்று துரத்திக்கொண்டு போகக்கூடாது. எல்லாம் உள்ளே தான் இருக்கிறது என்று நினைத்துக்கொண்டு விட்டானானால்,

स शान्तिमाप्नोति

ஸ ஶாந்திமாப்நோதி

அவன்தான் சாந்தி அடைகிறான்.

'ஒரு பதவியோ, ஒரு ஸ்திரீயோ, ஒரு பணமோ, ஒரு கௌரவமோ, ஒரு ஸ்தோத்திரமோ - இவை எல்லாம் வெளியிலிருந்து வரும்போதுதான் ஆனந்தம், சந்தோஷம்; இல்லையானால் ஒரு குறைதான், ஒரு துக்கந்தான்' என்று நினைப்பது இருக்கிறதே, இது சுத்தத் தப்பு. இப்படி வெளியிலிருந்து கிடைக்கும்படியான ஆனந்தம் எல்லாம் உள்ளே இருக்கும்படியான ஒரு மகானந்தத்தின் லேசந்தான்.

यत्सौख्याम्बुधिलेशलेशत इमे शक्रादयो निर्वृताः

யத்ஸௌக்யாம்புதிலேஶலேஶத இமே ஶக்ராதயோ நிர்வ்ருதா:

உள்ளே இருக்கும்படியான ஓர் ஆனந்தாகாரமான பரமாத்ம ஸ்வரூபம் இருக்கிறதே, அதனுடைய திவலையின் லேசந் தான் உலகத்தில், 'சக்கரவர்த்தி, இந்திரன், ராஜாக்கள்'

Koviloor Digital Library

என்று இருக்கும்படியானவர்களுடைய ஆனந்தம், சந்தோஷம் எல்லாம். வெளியில் இருக்கும்படியான எல்லா வஸ்துக்களிடத்திலிருந்தும் உண்டாகும்படியான ஆனந்தம் இருக்கிறதே, அவ்வளவும் உள்ளே போய்த்தான் கலக்க வேண்டும். உள்ளே இருக்கும்படியான ஆனந்த பரமாத்ம ஸ்வரூபத்தோடே சதா சாட்சாத்காரமாக இருக்கும்படியானவனுக்கு, 'வெளியில் இருக்கும்படியான பொருளிடத்திலிருந்துதான் ஓர் ஆனந்தமோ, ஒரு சந்தோஷமோ, உண்டாகிறது; கிடைக்காவிட்டால் குறையோ, துக்கமோதான் உண்டாகிறது' என்பது இல்லை.

அப்படி இல்லாது, 'வெளியில் இருக்கும்படியான ஒரு வஸ்து கிடைத்தால்தான் ஆனந்தம், அது வந்தால்தான் சந்தோஷம், இல்லாவிட்டால் துக்கந்தான், ஒரு குறைதான்' என்று இப்படி எண்ணிவிட்டால், அதன் பின்னுடியே ஓடுகிறது; அது கிடைக்கவில்லையே என்று ஏங்குகிறது; யாரோ அதை நமக்குக் கிடைக்காதவாறு செய்வதாகக் கோபப்படுவது: கொலை பண்ணுவது; தன்னையே தற்கொலை பண்ணிக்கொள்வது. இப்படிப் போய்க் கொண்டே இருக்கும். சாந்தியே இருக்காது.

स शान्तिमाप्नोति न कामकामी

ஸஶாந்திமாப்நோதி ந காமகாமீ

அவன் ஒருநாளும் சாந்தியை அடையமாட்டான். 'வெளியில் இருக்கிற வஸ்துவினுல்தான் ஆனந்தம் என்ருல் அது வரும், போகும்; வரும், போகும். இவனுக்கு எப்போதும் அது இல்லையே என்ற குறை இருக்குமே தவிர, சாந்தி என்பதே இராது என்று பகவான் ஓர் அத்தியாயத்தினுடைய கடைசியில் சொல்லி முடிக்கிருர் பகவத் கீதையில்.

எத்தனை காமம் வெளியிலிருந்து வந்தாலும் வரட்டும். நதிகள் எல்லாம் சமுத்திரத்திலே வந்து சேருகின்றன. எல்லாம் சமுத்திர ஜலத்தோடுதானே கலக்கின்றன? நதிகள் வந்து சேராததனுல் சமுத்திரத்துக்கு ஒரு குறை என்று உண்டோ? சமுத்திரம் எப்படி இருக்கிறது?

आपूर्यमाणमचलप्रतिष्ठं

समुद्रमापः प्रविशन्ति यद्वत् ।

ஆபூர்யமாணமசலப்ரதிஷ்டம்

ஸமுத்ரமாப: ப்ரவிஶந்தி யத்வத்|

ஆபூர்யமாணம் என்ருல் எங்கும் நிரம்பி அப்படியே நிறைந்து கிடப்பது என்று அர்த்தம்; அசலப்ரதிஷ்டம் - கொஞ்சங்கூட நிலைகுலையாதது. 'அது வரவில்லையே, இது வர

Koviloor Digital Library

வில்லையே, இன்னும் தீர்த்தம் போதவில்லையே' என்று ஒன்றுக்கும் அது அழுகிறதில்லை, கொஞ்சம்கூட அசையாத சமுத்திரம்.

आपूर्यमाणं अचलप्रतिष्ठम्

ஆபூர்யமாணம் அசலப்ரதிஷ்டம்

அசலப்ரதிஷ்டம்-அசையாத சமுத்திரம். ராமேசுவரத்துக்ருப் பக்கத்திலே ரத்னகரம், மஹோததி என்று இருக்கின்றன. ரத்னகரத்திலாவது ஆறு மாதம் அலை அடிக்கும். மஹோததி என்பது-அதுவும் தேவிப்பட்டணம் பக்கம் போய்ப் பார்த்தால் தெரியும்-குளம் மாதிரி இருக்கும்; அலையே இராது; நிச்சலமாக இருக்கும். அப்படி இருக்கும்படியான சமுத்திரம் எப்படி வெளியிலிருந்து வரும்படியான நதிகளை எல்லாம் தன்னோடு சேர்த்துக் கொள்கிறதோ, அப்படி வெளியிலிருந்து வரும்படியான ஆனந்தம் எல்லாவற்றையும், அப்படியே வாங்கி உள்ளே இருக்கும்படியான அந்தரானந்த மகாசமுத்திரத்தோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்படி உள்ளவனுக்குத்தான் சாந்தி உண்டு என்பதாக ஒரு கீதா சுலோகத்தில் இருக்கிறது. இதே கருத்தில்தான் காசியில் ஆசார்யாளுக்கெதிரில் ஈசுவரன் சண்டாளனாக வந்த சமயத்தில், ஆசார்யாள் அவரைத் தூர விலகிப் போகும்படி சொல்ல, அவர் பதிலாக ஒரு சுலோகம் சொன்னதாக இருக்கிறது.

प्रत्यग्वस्तुनि निस्तरङ्गसहजानन्दावबोधाम्बुधौ
विप्रोऽयं श्वपचोऽयमित्यपि महान् कोऽयं विभेदग्रहः ।
किं गंगाम्बुनि बिम्बितेऽम्बरमणौ चण्डालवीथीपयः-
पूरे वान्तरमस्ति काञ्चनघटीमृत्कुम्भयोर्वाम्बरे ॥

ப்ரத்யக்வஸ்துநி நிஸ்தரங்கஸஹஜாநந்தாவபோதாம்புதௌ
விப்ரோயம் ஶ்வபசோயமித்யபி மஹாந் கோயம் விபேதக்ரஹ:|
கிம் கங்காம்புநி பிம்பிதேம்பரமணௌ சண்டாலவீதிபய:-
பூரே வாந்தரமஸ்தி காஞ்சநகடீம்ருத்கும்பயோர்வாம்பரே||

கீதா சுலோகத்தில் ஸமுத்திரம் என்று இருக்கிறது. இங்கே அம்புதி என்று இருக்கிறது. அம்புதி என்றாலும் கடல்தான். அசலப்ரதிஷ்டம் என்று அங்கே இருக்கிறது. நிஸ்தரங்க ஆநந்த என்று இங்கே இருக்கிறது. தரங்கம் என்றால் அலை. அலை இல்லாத சமுத்திரம் என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே சலிக்காத சமுத்திரம் என்று இருக்கிறது.

எங்கும் நிறைந்திருக்கும்படியான ஓர் அகண்ட ஆனந்த ஸ்வரூபந்தான் உள்ளே நிறைந்திருக்கிறது. வெளியிலிருந்து எது வந்தாலும் உள்ளே இருக்கும்படியான வஸ்துவோடே

Koviloor Digital Library

சேர்ந்து போகவேண்டியதுதானே தவிர, 'அது இல்லையே, இது இல்லையே, அது வேணுமே' என்று குறைப்படவேண்டியதே இல்லை. என்ன வேணும் இப்போது? 'ஒன்று வேண்டும்' என்று நினைக்கிறபோது குறை உடையதாகத்தான் ஆகிறது. குறைவு இல்லாத நிறைந்த வஸ்துதானே உள்ளே இருக்கிறது? ஆகவே அந்த அகண்டாகாரமான பரமானந்த வஸ்துவோடே சாட்சாத்காரமாகவேண்டுமே தவிர, 'எது வெளியிலிருந்து வந்தாலும் வரட்டும், உள்ளே இருப்பதோடு சேர்த்துக்கொள்வோம். வரவில்லை என்றாலும் பாதகமில்லை. உள்ளே இருக்கும்படியான பரமாத்ம வஸ்துவினுடைய லேசந்தான் வெளியில் இருக்கும்படியானது' என்கிற தெளிவோடு இருக்க வேண்டும். அசையாத சமுத்திரம்போல், சலிக்காத சமுத்திரம்போல் உள்ளம் நிறைந்து இருக்க வேண்டும். அவனுக்குத்தான் சாந்தி என்பது உண்டாகும்.

स शान्तिमाप्नोति
ஸ ஸாந்திமாப்நோதி

என்று பகவான் அர்ஜுனனுக்கு ஞானோபதேசம் பண்ணி, ''ஆகவே உனக்கு ஒரு குறையும் வேண்டாம். எது உன் கடமை? நீ க்ஷத்திரியன். யுத்தம் செய்வதுதான் உன் கடமை. கடமையைச் செய்கிறோம் என்கிற நினைவோடு மாத்திரம் யுத்தம் பண்ணு. இது ஒரு குறை, அது ஒரு குறை என்றெல்லாம் ஒன்றுமே நினைக்காதே. அவர்களுக்குக் கஷ்டமாயிற்றே, இவர்களுக்குக் கஷ்டமாயிற்றே என்றெல்லாம் அழாதே; உன் கடமையைச் செய்து முடி'' என்று சொல்லித் தம்முடைய உபதேசத்தைப் பூர்த்தி பண்ணுகிறார்.

Koviloor Digital Library

2

கீதோபதேசம்

பகவத் கீதையில் பகவான் அர்ஜுனனுக்கு உபதேசம் பண்ணு கிற காலத்தில் அநேக விதமான விஷயங்களைச் சொல்கிறார். ஆரம்பத்தில் நான்கைந்து வகையாகச் சொல்லி.

तस्माद् युध्यस्व भारत ।

தஸ்மாத் யுத்யஸ்வ பாரத: |

என்கிறார். பாரத என்பது அர்ஜுனனுக்குப் பெயர். பரத வம்சத்தில் வந்தவன்; 'இந்தக் காரணத்தினாலே நீ யுத்தம் பண்ணு, இல்லாது போனால் இந்தக் காரணத்தினாலே யுத்தம் பண்ணு' என்று மாற்றி மாற்றிச் சொல்லிக்கொண்டே போகிறார். 'யுத்தம் பண்ணுவது உன் தர்மம். யுத்தம் பண்ணு போ. உன் கர்மாவைச் செய்' என்று கர்மாவை மாத்திரம் சொல்லி, 'யுத்தம் செய்' என்று சொல்லியிருக்கிறார். பொதுவாக,

कार्यं कर्म करोति यः ।

கார்யம் கர்ம கரோதி ய |

அவசியம் காரியம் செய்யவேண்டும் என்கிறார். அப்புறம் அந்தக் காரியத்தைச் செய்கிறபோது,

यज्ञार्थात् कर्मणोऽन्यत्र लोकोऽयं कर्मबन्धनः ।
तदर्थं कर्म कौन्तेय मुक्तसङ्गः समाचर ॥

யஜ்ஞார்த்தாத் கர்மணோன்யத்ர லோகோயம் கர்மபந்தந: |
ததர்த்தம் கர்ம கௌந்தேய முக்தஸங்க: ஸமாசர||

என்று பகவானுக்கு அர்ப்பணம் பண்ணுவதற்காக என்று எவ்விதப் பற்றும் இல்லாத நிலையில் காரியங்களைச் செய்

Koviloor Digital Library

காரியங்களைச் செய்து ஈச்வரார்ப்பணம் பண்ணு என்று அப்படிச் சில உபதேசங்கள் சொல்லியிருக்கிறார்.

அவனவன் அவனவனுக்கு ஏற்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டும். அவனவனுக்கு ஒவ்வொரு வகையான காரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை யெல்லாம் பிரித்துப் பிரித்துச் சொல்கிறார். எப்படித் தர்மம் பண்ணுகிறது, ஒவ்வொருத்தரும் என்ன என்ன தர்மங்கள் செய்யவேண்டும் என்பதை எப்படித் தீர்மானம் பண்ணுகிறது என்று கேட்கிறபோது,

तस्माच्छास्त्रं प्रमाणं ते
कार्याकार्यव्यवस्थितौ ।

தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே
கார்யாகார்யவ்யவஸ்த்திதௌ |

''இதுதான் காரியம், இதைத்தான் செய்ய வேண்டும், இதைச் செய்யக் கூடாது என்று தீர்மானம் பண்ணும்போது, 'சாஸ்திரத்தில் என்ன சொல்லியிருக்கிறது?' என்று கண்டு தீர்மானம் பண்ணு'' என்று சொல்லியிருக்கிறார்.

இவை எல்லாவற்றையும் பார்த்தால், ''சாஸ்திரத்தில் இருக்கும் காரியங்கள் எவையோ அவற்றைச் செய்யவேண்டும். நீ க்ஷத்திரியன். ஆகையால் யுத்தந்தான் பண்ணவேண்டும்'' என்று பகவான் உபதேசம் செய்கிறார் என்று தோன்றும். 'கர்மாதான் செய்ய வேண்டும், கர்மாதான் செய்ய வேண்டும்' என்று அவர் சொல்கிறது எல்லாவற்றையும் பார்த்தால், 'கர்மாவைச் செய்' என்கிற ஒன்றையேதான் அவர் உபதேசம் பண்ணுவதாகத் தோன்றுகிறது.

இவற்றை எல்லாம் வைத்துக்கொண்டுதான் பாலகங்காதர திலகர் ஒரு புஸ்தகம் எழுதினார். பால கங்காதர திலகரை அந்தக் காலத்தில் வருஷக் கணக்காகச் சிறையில் போட்டிருந்தார்கள். அப்படி வருஷக்கணக்காகச் சிறையில் இருந்தது அவருக்கு வெகு சௌகரியமாக இருந்தது. இப்போதுகூட எல்லோருக்குமே, 'வீட்டில் இருப்பதைவிடச் சிறையில் இருந்தால் அவகாசம் நிறையக் கிடைக்குமே' என்று ஆசை இருக்கலாம். அவர் சிறையில் இருக்கிறபோது ஒரு நாழிகைகூடச் சும்மா இருக்க மாட்டார். வெளியில் இருந்திருந்தால் அவருக்கு, இப்போது எனக்கு எவ்வளவு காரியங்கள் இருக்கின்றனவோ அவற்றைக் காட்டிலும் காரியம் அதிகம் இருக்கும். தேசபாரம் முழுக்க அவர் வைத்துக் கொண்டிருந்தார். ஆகவே சிறையில் அவரை வருஷக் கணக்காகப் போட்டிருந்த சமயத்தில் அங்கே கிடைத்த

Koviloor Digital Library

அவகாசத்தை எல்லாம் வீணுக்காமல் அவற்றையெல்லாம் உபயோகப்படுத்திக்கொண்டு, இந்தப் பகவத் கீதைக்கு என்ன என்ன பாஷ்யங்கள் இருக்கின்றனவோ, வேதங்கள், உபநிஷத் துக்கள் இவற்றின் அடிப்படையில் யார் யார் என்ன என்ன அபிப்பிராயங்களைச் சொல்லியிருக்கிறார்களோ, வெளித்தேசங் களில் இருப்பவர்கள் என்ன என்ன அபிப்பிராயங்கள் சொல்லி யிருக்கிறார்களோ அவை எல்லாவற்றையும் சேர்த்துப் பிடித்துப் பார்த்து, இவரே, 'கீதா ரகஸ்யம் அதவா கர்ம யோகம்' என்று ஒரு பெரிய புஸ்தகம் எழுதியிருக்கிறார். மகாராஷ்டிரத்திலே, தெலுங்கிலே, இந்தியிலே இப்படி எல்லாப் பாஷைகளிலுமே அந்தப் புஸ்தகம் பிரசுரம் ஆகியிருக்கிறது.

'ஒரு நிமிஷங்கூட வெறுமனே உட்கார்ந்திருக்காதே. காரியம் செய்துகொண்டே இருக்க வேண்டியது உன் கடமை. ஒரு நாழிகைகூடச் சும்மா இருக்கக் கூடாது. காரியங்களைச் செய்யவேண்டும். அதுவும் க்ஷத்திரியனுக இருந்தால் இந்தமாதிரி சமயத்தில் யுத்தம் பண்ணித்தான் ஆகவேண்டும்' என்பதாகப் பகவான் உபதேசம் செய்வதாக, அந்தப் புத்தகத்தில் சொல்லி யிருக்கிறார்.

நான் சொன்ன வாக்கியங்களிலிருந்து பார்த்தாலும் பகவான், 'அவரவர்கள், அவரவர்களுக்குச் சொல்லியிருக்கும் படியான கர்மாக்களைத்தான் செய்யவேண்டும்; ஒரு நிமிஷங்கூட வீணுக்காமல் காரியங்களைத்தான் செய்ய வேண்டும்' என்று உபதேசம் செய்திருக்கிறார் என்று தோன்றுகிறது. பகவான், ஈச்வரன் என்கிற பேச்சே அங்கெல்லாம் இல்லை.

'நீ யுத்தம் பண்ணு, அது உன் தர்மம். அவனவன் அவனவனுக்கு உரிய தர்மங்களைத்தான் செய்துகொண்டு வர வேண்டும்' என்றுதான் முதலிலிருந்து சுவாமி சொல்லி வந்திருக்கிறார்.

நடுவில்,

स्वकर्मणा तमभ्यर्च्य

ஸ்வகர்மணு தமப்யர்ச்ய

'கர்மாக்களைச் செய்து அவனுக்கு அர்ப்பணம் பண்ணு' என்று சொல்கிறார். அவன் என்றால் அந்த ஒருத்தன், பகவான், ஈச்வரன் என்பது அங்கே தெரிகிறது.

यज्ञार्थात् कर्मणोऽन्यत्र

யஜ்ஞார்த்தாத் கர்மணோ்யத்ர

என்று, சொல்லியிருக்கும்படியான இடத்தில் யக்ஞம் என்றால் சாட்சாத் மகாவிஷ்ணுதான் என்றும் அர்த்தம் பண்ணியிருக்

Koviloor Digital Library

கிறார்கள். பரமாத்மா என்றும் சொல்வது உண்டு. பொதுவாக யஜ்ஞம் என்றால் 'ஸாக்ரிபைஸ்' என்றும் சொல்லலாம். இந்த இடத்திலும், ஈச்வரார்ப்பணமாகக் காரியங்களைச் செய்; கர்மாவைச் செய்து அவனுக்கு அர்ப்பணம் பண்ணு' என்பது பகவான் என்று ஒருத்தன் இருக்கிறான் என்று தோன்றும்படியாக, 'அவனுக்கு அர்ப்பணமாகப் பற்றற்றவனாகக் கர்மாவைச் செய்' என்கிறார்.

'இப்படி வருகிற இடங்களை எல்லாம் அங்கங்கே பார்க்கிற போது மொத்தமாகக் கீதை முழுக்கக் கர்மாவைத்தான் சொல்கிறது என்று திலகரோடு நாமும். சேர்ந்து ஏன் தீர்மானம் பண்ணிவிடக்கூடாது? அப்படியே நாமும் தீர்மானம் பண்ணி விடலாமே?' என்று கேட்டால், இவ்வளவுக்கும் மாறுதலாகப் பின்னாலே.

तूष्णीं किञ्चिदचिन्तयन्

தூஷ்ணீம் கிஞ்சிதசிந்தயந்

என்று, 'ஒன்றையும் நினைக்காதே. மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திரு.'

मूर्ध्न्याधायात्मनः प्राणम्

மூர்த்தந்யாதாயாத்மந: ப்ராணம்

''சிரசில் கொண்டுபோய், பிராணனை வைத்துக்கொள். அப்போது ப்ரஹ்ம ஸ்வருபத்தைத் தியானம் பண்ணு' என்பதாகத் தியானங்களைப்பற்றிச் சொல்கிறார்.

இன்னோர் இடத்தில் சொல்கிறபோது, அப்படி எவன் இருக்கிறானோ.

यस्सर्वत्र...... स्थितप्रज्ञस्य

யஸ்ஸர்வத்ர..ஸ்திதப்ரஜ்ஞஸ்ய

என்று, 'அப்படியே சித்தவ்ருத்தி நின்றுபோய் விட்டவனுக்குப் பேச்சு.ஏது? நினைப்பு ஏது? அவனுக்குப் பார்வை ஏது? ஒன்றும் இல்லை. சமாதியில் இருக்கிறவனுக்குக் காரியம் என்பதே இல்லை' என்று சமாதியைப்பற்றி ஸ்தோத்திரம் பண்ணுகிறார்.

तस्य कार्यं न विद्यते ।

தஸ்ய கார்யம் ந வித்யதே |

அவனுக்குக் காரியம் கிடையாது என்றும் சொல்கிறார்.

'ஜனக் கூட்டத்தில் இருக்காதே, ஏகாந்தமான இடமாகப் போ; மலையோ காடோ ஜனங்களோ இல்லாத இடத்துக்குப் போய்விடு; ஜனங்களோடு பேசாதே?' இப்படி உபதேசம் பண்ணுகிறார்.

Koviloor Digital Library

ஜனசஞ்சாரம் இல்லாத இடத்துக்கு ஓடிப்போ என்றால் எப்படி யுத்தம் பண்ணுவது? 'யுத்தம் பண்ணு, மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்கார்' என்று இரண்டையும் சொன்னால் மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்காருபவன் எப்படி யுத்தம் பண்ண முடியும்? இதுவும் சொல்லியிருக்கிறது; அதுவும் சொல்லியிருக்கிறது. என்ன செய்வது?

இன்னோர் இடத்திலோ,

वासुदेवः सर्वं इति
வாஸுதேவ: ஸர்வ இதி

என்று, 'எங்கே பார்த்தாலும் வாஸுதேவ ஸ்வரூபத்தையே பார்த்து எல்லாம் வாஸுதேவன்தான் என்று அப்படி அநுபவிக்கின்ற மகான்கள் நாட்டில் ஒருத்தர் இரண்டு பேர்தான் இருப்பார்கள், அப்பா' என்று அப்படிப்பட்டவர்களை ஸ்தோத்திரம் பண்ணியிருக்கிறார்.

'ஏகாந்தத்தில் இரு. அதிகமாகச் சாப்பிடாதே. அதிகமாகச் சாப்பிடுகிறவனுக்கு யோகம் இல்லை.

नात्यश्नतस्तु योगः
நாத்யஶ்நதஸ்து யோக:

அதற்காக ஒரேயடியாகப் பட்டினி போட்டுவிடாதே. பட்டினி போட்டுவிட்டும் யோகம் பண்ணமுடியாது.

नात्यश्नतस्तु योगोऽस्ति न चैकान्तमनश्नतः ।
நாத்யஶ்நதஸ்து யோகோஸ்தி ந சைகாந்தமநஶ்நத:|

ஆகார நியமம் வேண்டும்' என்பதாக இப்படிச் சொல்லியிருக்கிறார்.

இப்படிப் பார்த்துக்கொண்டே போனால் கீதையில் நிறைய ஒன்றுக்கொன்று முரணான சமாசாரங்கள் எல்லாம் இருக்கின்றன. அநேக சந்தேகங்கள் வருகின்றன. இவற்றுக்கெல்லாம் சமாதானமாக அங்கங்கே சில சுலோகங்கள் காணப்படுகின்றன. ஆனாலும் கர்மாதான் பிரதானம் என்று ஒருவன் தீர்மானம் பண்ணிக்கொண்டு விட்டால் பாக்கி எல்லா விஷயங்களையும் இந்தக் கர்மாவுக்கு அநுகூலமாகவே அர்த்தம் பண்ணிக்கொண்டு தீர்மானம் செய்வான். அப்படியே பக்தியைச் சொல்வது என்று தீர்மானம் பண்ணிவிட்டால் இதைப் பிரதானமாக வைத்துப் பாக்கி எல்லாவற்றையும் இரண்டாம் பட்சமாக வைத்து அர்த்தம் பண்ணுவான். அப்படியே ஞானந்தான் பிரதானம் என்று சொல்லவேண்டுமானால் பாக்கி சொல்லியிருக்கும்படியான கர்மா, பக்தி எல்லாம் இந்த ஞானத்திலேதான் கொண்டு

Koviloor Digital Library

போய் விடுகின்றன என்று இப்படிச் சொல்லிக்கொண்டு போவது. ஆக அவரவர்களுடைய மனோபாவத்துக்கு ஏற்ப அர்த்தம் சொல்லிக்கொண்டே போவார்கள்.

நம் ஆசார்யாள் இதற்கெல்லாம் பாஷ்யம் சொல்கிற போது பரஸ்பரம் விரோதம்போல, சந்தேகம் வரக்கூடிய சுலோகங்கள் கீதையில் இருந்தாலும் இவ்வளவையும் சமாதானப்படுத்தும்படியான, 'எல்லாம் சரியானதுதான், தப்பானதே இல்லை' என்று தீர்மானம் பண்ணுவதற்கு அநுகூலமான சில சுலோகங்களை எடுத்துக்கொண் டிருக்கிறார்கள்.

உபநிஷத்துகளில் அநேக விஷயங்கள் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்று சொல்லும்படியாக இருக்கின்றன. ஓர் இடத்தில், 'ஜீவாத்மா வேறே, பரமாத்மா வேறே, ப்ரபஞ்சம் வேறே' என்பதாகவும், 'நான் நான் என்கிறது தான் பரமாத்மா; எங்கும் நிறைந்திருக்கும்படியான பரமாத்மா தான் ஸர்வாந்தர்யாமியாக இருக்கிறார்' என்பதாகவும், 'எல்லாம் ஒன்றுதான்' என்பதாகவும் இப்படி அநேக வாக்கியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனாலும் உபநிஷத்துகளில் நடுநடுவே சொல்லியிருக்கும்படியான சில வாக்கியங்களை எடுத்துக்கொண்டு ஒன்றுக்கொன்று விரோதம்போல் இருக்கிற விஷயங்கள் எல்லாம் சரிதான் என்பதற்கு அத்வைதப் பிரகாரமாகப் பார்த்தால், பரமாத்மாதான் ஸர்வாத்மகனாக இருக்கிறான் என்றும், விசிஷ்டாத்வைதப் பிரகாரம் பார்த்தால், அவன்தான் அந்தர்யாமியாகவும் உடலில் உயிர்போல், சரீரியாகவும் இருக்கிறான் என்றும் அர்த்தம் பண்ணித் தீர்மானம் செய்கிறார்கள். இப்படி இரண்டுக்கும் மத்தியஸ்தம் பண்ணி வைக்கும்படியான வாக்கியங்களை, 'கடக வாக்கியங்கள்' என்று சொல்வர். இந்தக் கடக வாக்கியங்களை எடுத்துக்கொண்டு உபநிஷத்துகளில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத விஷயங்களே சொல்லப்படவில்லை என்று எப்படித் தீர்மானம் பண்ணுகிறார்களோ அப்படிப் பகவத்கீதையில் வரும்படியான சில சுலோகங்களை எடுத்துக்கொண்டு, 'இதுதான் உண்மையான நிலை; இதிலே பரஸ்பர விரோதம் ஒன்றும் இல்லை, எல்லாம் சரிதான்' என்பதாக நம் ஆசார்யாள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

'கர்மாவைச் செய், கர்மாவைச் செய்'. என்று சொல்லும்படியான வாக்கியங்கள் கீதையில் நிறைய இருக்கின்றன. அப்புறம், 'ஏகாந்தத்தில் இரு, மூக்கைப் பிடித்துக்கொண்டு தியானம் பண்ணு' என்று சில வாக்கியம் இருக்கிறது: 'மூக்கைப்

Koviloor Digital Library

பிடித்துக்கொண்டு ஏகாந்தத்தில் இரு' என்றால் எப்படி யுத்தம் பண்ணுவது? 'ஜனங்களே இல்லாத இடத்துக்குப் போ' என்றால் அங்கே போய் யாரோடே சண்டைபோடுவது? இப்படி ஒன்றுக்கொன்று பொருத்தம் இல்லையே என்று நினைக்காமல் இந்தச் சுலோகத்தைப் பார்த்தால் இப்படிச் சொன்னது எல்லாம் சரியாக இருக்கும் என்று ஆசார்யாள் எடுத்துக் காட்டியிருக்கிறார். உதாரணமாக,

स्वे स्वे कर्मण्यभिरतः संसिद्धिं लभते नरः ।

ஸ்வே ஸ்வே கர்மண்யபிரதஃ ஸம்ஸித்திம் லபதே நரஃ |

என்று, 'சாஸ்திரத்திலே உனக்குச் சொல்லியிருக்கும்படியான கர்மாக்களைச் செய். கர்மாக்களைச் செய்து ஈச்வரனுக்கே அர்ப்பணம் பண்ணிவிடு. அப்படி ஈச்வரார்ப்பணமாகத் தன்னுடைய கர்மாக்களை ஒருவன் செய்து வந்தானானால் அவனுக்கு என்ன கிடைக்கும்? சித்தசுத்தி என்று ஒன்று கிடைக்கும்' என்று பகவான் உபதேசம் செய்கிறார்.

சித்தசுத்தி என்று சொல்கிறாரே, அதுதான் மோட்சமோ என்று ஒரு சந்தேகம் வரும். அதுவே மோட்சமாக இருந்தால், 'கர்மாவைப் பண்ணிவிட்டால் போதும். பிறவியின் பயனை நீ அடைந்தாயிற்று. அப்புறம் கர்மாவைத் தவிரப் பக்தி, யோகம், ஞானம் இவை எல்லாம் எதற்கு? வேண்டியதே இல்லை. மோட்சத்தை அடைவதுதானே இன்பம். கர்மாவைச் செய்தால் சித்தசுத்தி கிடைத்துவிடுகிறது, அதுதான் மோட்சம்' என்று ஆகிவிடும். ஆனாலும், அந்தச் சித்தசுத்தி என்பது மோட்சம் அல்ல, அதுவும் ஒரு சாதனந்தான் என்று சொல்கிறபோது,

स्वकर्मनिरतः सिद्धिं यथा विन्दति तच्छृणु ।

ஸ்வகர்மநிரதஃ ஸித்திம் யதா விந்ததி தச்ச்ருணு |

'தன் கருமத்திலே நிலைபெற்றவன் எப்படிப் பரமாத்ம ஸ்வரூபத்தோடு ஒன்றுபடுகிற பரிபக்குவ நிலையை அடைகிறான் என்பதைச் சொல்கிறேன். கேள்' என்று அப்புறம் சொல்ல ஆரம்பிக்கிறார். கர்மங்களைச் செய்வதனாலே கிடைக்கிற சித்தசுத்தி இருக்கிறதே அது என்னது அப்போது? 'அதுதான் பரமாத்ம ஸ்வரூபத்தோடு சாட்சாத்காரமாவதற்கு அனுகூலமாக இருக்கிற சாதனம். இந்தச் சித்தசுத்தி என்கிற சாதனத்தைக் கொண்டுதான் மற்ற நிலைகள் எல்லாம் உண்டாக வேண்டும்' என்று அப்புறம் பகவான் உபதேசம் பண்ணுகிறார் என்று ஆசார்யாள் பாஷ்யம் பண்ணுகிற காலத்தில் எடுத்துக் காட்டுகிறார்.

Koviloor Digital Library

கர்மாக்களைச் செய், கர்மாக்களைச் செய் என்றால் கர்மாக்களைச் செய்வதனாலே சித்தசுத்தி கிடைக்கிறது. அதாவது முதலிலே சித்தசுத்தி கிடைக்கிறது. அதற்குப் பிறகு யோக சித்தி, அப்புறம் மனோநிக்கிரகம் என்று படிப்படியாக அதிலிருந்துதான் கிடைக்கிறது.

'ஆகவே கர்மாக்களைச் செய், உனக்கு எது தர்மம் என்று தர்ம சாஸ்திரங்களிலே சொல்லியிருக்கிறதோ அதைச் செய். அதைச் செய்தால் சித்த சுத்தி ஏற்படும். அப்புறம் பரமாத்ம ஸ்வரூபத்தோடு சாட்சாத்காரமாவதற்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ அவைகளை எல்லாம் சொல்கிறேன், கேள்' என்று பகவான் சொல்லியிருக்கும்படியான சில சுலோகங்களை எடுத்துக் கொண்டு கீதையிலே ஒன்றுக்கொன்று மாறான, பரஸ்பர விரோதமான வாக்கியங்கள் சொல்லப்படவில்லை என்று காட்டுகிறார் ஆசார்யாள்.

முதலிலே ஒவ்வொருவனும் அவனவனுக்குரிய கர்மாக்களைத்தான் செய்ய வேண்டும். ஓர் அழுகை, ஒரு பயம். காமம், துக்கம் இது எல்லாம் இருந்தால் என்ன அர்த்தம்? சித்தசுத்தி ஏற்படவில்லை என்று தெரிகிறது. அழுகையோ, பயமோ, துக்கமோ, ப்ராந்தியோ எல்லாம் போய்ச் சித்தசுத்தி ஏற்பட்டால்தான் சாட்சாத் பரமாத்ம ஸ்வரூபத்தோடு, பகவானோடு நேரே உறவு கொண்டாடுகிற நிலை சாத்தியமாகும். சித்தசுத்தி ஏற்படவேண்டுமானால் அவரவர்கள் அவரவர்களுடைய கர்மாக்களை முதலில் செய்துதான் ஆகவேண்டும். 'நீ க்ஷத்திரியன், ஆகவே யுத்தம் செய்' என்று பகவான் உபதேசம் பண்ணியிருக்கிறார் என்று சொல்கிறார்.

துளசிதாசர் ராமனிடத்தில் பரமபக்தி கொண்டவர். அவர் ஒரு விஷயத்தைச் சொல்கிறார். மன்மதன் மகாவிஷ்ணுவினுடைய பிள்ளை என்று சொல்வர். கிருஷ்ணபரமாத்மாவினுடைய பிள்ளை ப்ரத்யும்னன். இவன் மன்மதனுடைய அவதாரம் என்று சொல்வர்.

அநேகமாக எல்லோரும், விஷ்ணுவுக்குப் பிள்ளை கிடையாது. சிவனுக்குத்தான் இரண்டு பிள்ளை என்று நினைக்கலாம். விஷ்ணுவுக்குப் பிள்ளை கிடையாது. ஆனாலும் மன்மதன் அவருடைய பிள்ளை. அவனுக்கு அங்கம் கிடையாது. அநங்கன் என்று பெயர். கை, கால், முகம் என்று ஒன்றுமே கிடையாது. பிள்ளைகளில் கை இல்லாமலோ, கால் இல்லாமலோ முடமாக இருக்கிற பிள்ளைகள் இருக்கின்றன. ஆனால் விஷ்ணுவினுடைய பிள்ளைக்கு ஓர் அங்கமும் கிடையாது, இருந்தாலும் ஓர் அங்கமும் இல்

Koviloor Digital Library

லாத அந்தப் பிள்ளைதான் உலகத்திலுள்ள எல்லா உயிர்களிடத்திலும் புகுந்துகொண்டு, எல்லோரிடத்திலும் காமக் கிளர்ச்சியை உண்டுபண்ணுகிறான். அவனை மகாவிஷ்ணுவின் பிள்ளை என்று சொல்வார்.

மோகினி அவதாரத்தில் மகாவிஷ்ணு ஸ்திரீ ரூபமாகவும் ஈச்வரன் புருஷ அம்சமாகவும் இருந்தபோது சாஸ்தா - ஐயனார் என்கிற பிள்ளை பிறந்ததாகச் சொல்வர். மகாவிஷ்ணு ஸ்திரீ ரூபமாக இருந்தபோது பெற்ற இன்னொரு பிள்ளை - ஐயனார்-வேறு இருக்கிறார்.

ஆனால் ஆழ்வார்கள் சொல்கிறபோது,

'பிணமாடும் பிஞ்சகனை வலத்தே வைத்து..

பிணமாடும் பிஞ்சகன் என்றால் மகேச்வரன். காசியில் மகா ச்மசானத்தில் இருப்பவன். சாட்சாத் மகாவிஷ்ணுவினுடைய வலது பாகத்தில் ஈச்வரன் இருக்கிறார்; ஈச்வரனைத் தம்முடைய வலது பாகத்தில் வைத்திருப்பவர் பெருமாள்.

பிணமாடும் பிஞ்சகனை வலத்தே வைத்து

என்று சொல்கிறார்கள். இங்கே நாயன்மார்கள் ஈச்வரனை ஸ்தோத்திரம் பண்ணுகிறபோது,

குடமாடும் கூத்தனை இடத்தே வைத்து

என்கிறார்கள். குடமாடும் கூத்தன்-மகாவிஷ்ணு. ஈச்வரனுடைய இடது பாகத்தில் அதாவது சாட்சாத் அம்பிகை இருக்கும்படியான இடத்தில் மகாவிஷ்ணுதான் இருக்கிறார். அம்பிகை வேறு, மகாவிஷ்ணு வேறல்ல. ஈச்வரனுடைய இடது பாகத்தில் அவர் இருக்கிறார்.

குடமாடும் கூத்தனை இடத்தே வைத்து

என்று சொல்கிறார்கள். ஆகவே இரண்டு கட்சிச் சாட்சியும் சரியாகப் போய்விட்டது. ஈச்வரனுடைய இடது பாகத்தில் மகாவிஷ்ணு இருக்கிறார். என்றாலும், மகாவிஷ்ணுவினுடைய வலது பாகத்தில் ஈச்வரன் இருக்கிறார் என்றாலும் இரண்டு அம்சமும் கலந்ததுதான் அவர்கள் திருவுருவம் என்பது தெரிகிறது; சிவஅம்சம், சக்திஅம்சம் இரண்டும் கலந்தது. மகாவிஷ்ணு ஏற்கனவே பத்மாசுர சம்ஹார காலத்திலும், அம்ருதம் தோன்றிய காலத்திலும் ஸ்திரீயாகவே வந்திருக்கிறார்.

மாதான மாதவனை

மாதவன் மாதாகவே ஆகியிருக்கிறார். இதையெல்லாம் வைத்துத்தான் அப்பர் ஸ்வாமிகள், 'அரியலால் தேவி இல்லை ஐயன் ஐயாறனார்க்கே' என்று பாடியிருக்கிறார்.

Koviloor Digital Library

ஐயாறு என்பது பஞ்சநத க்ஷேத்திரம்; திருவையாறு. அங்கே எழுந்தருளியிருக்கும்படியான ஐயனுக்குத் தேவி என்பது மகாவிஷ்ணுதான். தேவியார் என்ருல் ஹரியே தவிர வேறு இல்லை என்று அவர் சொல்கிருர். ஆகவே எப்படிப் பார்த்தாலும் மகாவிஷ்ணுவினிடத்தில் சக்தி அம்சமும் ஈச்வரனுடைய சிவாம்சமும் கலந்து இருப்பதனுல்தான் ப்ரம்மனைத் தோற்றுவிக்கக் கூடிய சக்தி உண்டாயிற்று என்று தெரிகிறது.

பிணமாடும் பிஞ்சகனை இடத்தே வைத்து,
பிரமனை உந்தியிலே தோற்றுவித்து

சாட்சாத் பரமேசுவரனை, சிவாம்சத்தைத் தம்முடைய இடப் பாகத்திலேயே அவர் வைத்திருப்பதனுல் பிரம்மனைத் தோற்றுவித்தார் என்று சொல்ல வருவதுபோல் இருக்கிறது இந்தப் பாட்டும்.

'சிவனுக்குத்தான் இரண்டு பிள்ளை, விஷ்ணுவுக்குப் பிள்ளை இல்லை' என்று முதலில் சொன்னேன். இப்போது பார்த்தால் சிவனைக் காட்டிலும் இவருக்கு ஒரு பிள்ளை அதிகம் என்று சொல்லிவிட்டேன். மன்மதன் ஒரு பிள்ளை, ஐயனர் ஒரு பிள்ளை, பிரம்மா ஒரு பிள்ளை; ஆக விஷ்ணுவுக்கு மூன்று பிள்ளைகள். அங்கமே இல்லாத ஒரு பிள்ளை இருக்கிருனே, அநங்கன் என்று, அவனுக்குச் சாட்சாத் பெருமாளிடத்திலே பித்ரு பக்தி அதிகம். இதைத்தான் துளசிதாசர் வெகு வேடிக்கையாகச் சொன்னுர். 'பித்ரு பக்தி மிகவும் அதிகமாக இருக்கிறது அந்த அநங்கன் என்கிற மன்மதப் பிள்ளைக்கு; அதனுலே அப்பா எங்கே இருக்கிருரோ அங்கே அவன் நிற்கவே மாட்டான். அவர் இருக்கிற இடம் என்ருல் அந்தப் பக்கங்கூட வரமாட்டான். அதேமாதிரி இவன் ஓர் இடத்தில் இருக்கிருன் என்ருல் அங்கே நிச்சயமாக அப்பாவைப் பார்க்க முடியாது.

ஜஹ ராம்

எங்கே ராமன் இருக்கிருனே அங்கே காமன் கிடையாது. காமன் உள்ள இடத்தில் நிச்சயமாக ராமன் இருக்க மாட்டான். காரணம், தகப்பனுரிடத்தில் பிள்ளைக்கு மிகுந்த பக்தி.'

லட்சுமி இருக்கிற இடத்தில் சரஸ்வதி இருக்க மாட்டாள்; சரஸ்வதி இருந்தால் லட்சுமி இருக்கமாட்டாள். காரணம் அவர்கள் இரண்டுபேரும் மாமியார் மாட்டுப் பெண்கள். ஆகையால் ஒருவருக்கொருவர் சண்டையினுல் அப்படி இருக்க மாட்டார்கள் என்று சொல்வர். ஆனுல் இங்கே பித்ரு பக்தியினுல் ராமன் இருக்கிற இடத்தில் காமன் இருக்க மாட்டான் என்று சொல்கிருர்.

Koviloor Digital Library

அது மாதிரி காமன் இருந்தால் அங்கே பகவான் இருக்கவே மாட்டார். காமாதிகளை எல்லாம் ஒழிப்பதற்காகத்தான் காரியங்களைச் செய்ய வேண்டும். நிறையக் காரியங்களை எல்லாம் செய்து, சித்தசுத்தி ஏற்பட்டு, ஈச்வரனிடத்திலே பக்தி ஏற்பட்டு இந்திரியங்களை எல்லாம் வென்றவனாய், அஸக்தபுத்தி உடையவனாய், ஆசைகளை எல்லாம் ஒழித்தவனாக ஆகிவிட்டால் அப்போது சாட்சாத் பகவானோடு சேர்ந்துவிடுவதற்குக் கஷ்டமில்லாமல் போய்விடுகிறது; ஆகவே இந்தச் சித்தசுத்தி வருவதற்குக் கர்மாக்களைச் செய்ய வேண்டும் என்று உபதேசம் செய்கிறார். கர்மாக்களை எல்லாம் செய்து,

सिद्धिं प्राप्तो यदा ब्रह्म तदाप्नोति निबोध मे ।
समासेनैव कौन्तेय निष्ठा ज्ञानस्य या परा ॥

ஸித்திம் ப்ராப்தோ யதா ப்ரஹ்ம ததாப்நோதி நிபோத மே|
ஸமாஸேநைவ கௌந்தேய நிஷ்ட்டா ஜ்ஞாநஸ்ய யாபரா||

''ஆகவே அந்த நிலை வரைக்கும் வத்துவிட்டவனுக்கு ஞானத்தின் எல்லைநிலமாகிய ப்ரஹ்மத்தை எப்படி அடைய வேண்டும் என்கிற வழியைச் சொல்கிறேன். அதை உணர்வாயாக'' என்று பின்னே சொல்லப்போவதோடு முன்னே சொன்னவற்றையெல்லாம் சம்பந்தப்படுத்தும்படியான சில வாக்கியங்கள் இருக்கின்றன என்று ஆசார்யாள் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

ஆகவே முதலிலே அவனவன் அவனவனது கர்மாக்களைச் செய்ய வேண்டும். கர்மாக்களைச் செய்து சித்தசுத்தி ஏற்பட்டுவிட்டால், அதனால் யோகசித்தி ஏற்படும். அதுவும் கிடைத்த பிறகு ஞானசித்தியை எய்துகிறான். அந்த ஞானம் வந்துவிட்டால் சாட்சாத்காரமாகவே ஆகிவிடுகிறான். நம்மைத் தவிர இன்னொன்று இருக்கிறது என்றால்தானே அங்கே பேச்சு, சிநேகம், சண்டை முதலிய காரியங்களுக்கு இடம் இருக்கிறது? இரண்டாவது என்று இல்லை, எல்லாம் ஒன்றேதான் என்கிற நிலை வந்துவிட்டால் அப்புறம் காரியம் ஏது? எல்லாவற்றையும் வாசுதேவ ஸ்வரூபமாகவே பார்த்துவிட்டால், அப்பேர்ப்பட்ட ஞானம் வந்துவிட்டால்,

तस्य कार्यं न विद्यते ।

தஸ்ய கார்யம் ந வித்யதே|

அவனுக்குக் காரியமே கிடையாது.

ஆனால் இப்போது அர்ஜுனன் இருக்கிற நிலையில் இருந்து பார்த்தால் அவன் தன்னுடைய தர்மத்தைச் செய்யத்தான் வேண்டும். தன்னுடைய தர்மத்தை, கர்மாவைச் செய்வ

Koviloor Digital Library

தனுல்தான் அவனுக்குச் சித்த சுத்தி ஏற்படும். யாருக்கோ ஏதோ துன்பம் விளைப்பதாக எண்ணி அழுகிறுனே அப்படி அழ மாட்டான். முடிந்த முடிபாகிய - சாட்சாத் பரமாத்மஸ்வரூபத்தோடு ஐக்கியமாகிவிடுகிற நிலை கிடைக்கும். அந்த நிலைக்கு இவை எல்லாம் படிகள். முதல் படி, இரண்டாம் படி, மூன்றும் படி என்பதுபோல். இவன் முதல் படியில் யுத்தம்பண்ணத்தான் வேண்டும் என்று அங்கங்கே சில வாக்கியங்களை எடுத்துக் காட்டி, ஒன்றுக்கொன்று விரோதமே இல்லையப்பா என்று சமாதானம் பண்ணும்படியான சுலோகங்களை எல்லாம் எடுத்துக் காட்டி, பாஷ்யம் பண்ணியிருக்கிருர் ஆசாரியாள்.

அதேமாதிரி பக்தி. பக்தியைப்பற்றிச் சொல்கிறபோது, சித்தசுத்தி வந்த பிறகு பக்தி வரும். பக்தியினுல்தான் நான் யார், என்னுடைய உண்மையான சொரூபம் என்ன என்பது தெரியும்.

भक्त्या मामभिजानाति यावान् यश्चास्मि तत्त्वतः ।
ततो मां तत्त्वतो ज्ञात्वा विशते तदनन्तरम् ॥

பக்த்யா மாமபிஜாநாதி யாவாந் யஶ்சாஸ்மி தத்வத:|
ததோ மாம் தத்வதோ ஜ்ஞாத்வா விசதே ததநந்தரம்||

பத்தியினுல்தான் பகவான் யார், எத்தகையவன் என்பதை அறிய முடியும் என்ருல் அவனைத் தெரிந்துகொள்ளாமல் எப் படிப் பக்தி செய்வது? பக்தி செய்யவேண்டும் என்ருல் அவனைத் தெரிந்துகொண்டுதானே ஆக வேண்டும்? ஆனுல் பக்தியினுல் தானே அவனைத் தெரிந்துகொள்ள முடியும் என்கிருர் சுவாமி. இது என்ன ஒன்றுக்கொன்று முரணுக இருக்கிறதே என்று தோன்றும்.

பக்தி செய்யவேண்டுமானுல் சுவாமியைத் தெரிந்து கொண்டுதான் பக்தி செய்ய வேண்டும்; தத்துவ ஸ்வரூபம் தெரிந்துகொண்டுதான் பக்தி செய்ய வேண்டும் என்பது இல்லை.

"பகவான் இந்தக் கோவிலுக்குள் இருக்கிருர். கர்பக் கிருஹத்துக்குள்தான் இருக்கிருர். சிலையில்தான் இருக்கிருர், அந்த இடத்தைத் தவிர வேறு எங்கும் இல்லை. அந்த விமானத் தில்தான் இருக்கிருர்" என்று இப்படித்தான் முதலில் நினைத்துப் பக்தி வந்தாக வேண்டும்.

எங்கும் இருக்கிருர் சுவாமி என்கிற உண்மையான தத்துவ ஸவரூப ஞானம் நமக்கு வந்துவிட்டது என்ருல் கோவில் தூணில் கையைத் துடைப்போமா என்ன? இந்தக் காலத்தில் பகவான் அந்தத் தூணில் இல்லை. உள்ளே இருக்கும்படியான சிலையில்தான் இருக்கிருர் என்று மட்டும்

Koviloor Digital Library

நமக்குத் தெரிந்திருக்கிறது. அவ்வளவு தெரிந்தால் போதும். சாஸ்திரங்களிலே சொல்லியிருக்கும்படியான, அவன் கார் மேக வண்ணன், பட்டுப்பீதாம்பரதாரி, நான்கு ஹஸ்தம் உடையவன், சங்கு சக்கரம் வைத்திருக்கிறுன் என்ற விஷயங்களை மட்டும் வைத்துக்கொண்டு ஆரம்பத்தில் தியானம் பண்ண ஆரம்பித்தால் போதும். கோவிலுக்குப் போகிறது, கோவிலில் உள்ள சுவாமியைத் தரிசனம் பண்ணுகிறது, அந்தச் சுவாமியையே தியானம் பண்ணுவது என்று இப்படிச் செய்து வந்தால், இப்படிப் பக்தி செய்து வந்தால் உண்மையான பக்தி உண்டாகிவிடுகிறது. இந்த உண்மையான பக்தி வந்தவுடன், 'பகவான் கோயிலில் மட்டும் இல்லை; அவர் இல்லாத இடமே இல்லை. அவர் ஸர்வாத்மகனுக இருக்கிறுர். எல்லாவற்றிலும் ஸர்வாந்தர்யாமியாக இருக்கிறுர்' என்கிற இப்படிப்பட்ட உண்மையான ஸ்வரூபத்தை, பகவான் எப்பேர்ப்பட்டவன், எத்தகையவன் என்கிற தத்துவ தரிசனத்தை அடைகிறுன்.

ஒவ்வொரு படியில் இருக்கிற நிலையையும் அநுசரித்து ஒவ்வொரு படியாகப் பகவான் கீதையில் உபதேசம் செய்திருப்பது போலவே இங்கேயும் முதல் படி சாஸ்திரங்களிலே அவனுடைய சொரூபம் எப்படி என்று சொல்லியிருக்கிறதோ அதை முதல் படியாக நினைத்துத் தியானம் செய்ய ஆரம்பித்தால், இப்படிக் கண்டமாக அவனுடைய ஸ்வரூபத்தை நினைத்துப் பக்தி செய்ய ஆரம்பித்தால் இந்தப் பக்தியினுலேயே அவனது உண்மையான அகண்ட ஸ்வரூபம் இன்னது என்று தெரிந்துகொண்டுவிடலாம். இப்படிப்பட்ட தத்துவ திருஷ்டி உண்டான பிறகு நிராகாரமாக இருக்கும்படியான ஸ்வரூபந்தான் உண்மையானது என்பது தெரிந்து போகிறது. அவனுக்குக் காது கிடையாது, கையும் கிடையாது. காலும் கிடையாது. காது இல்லாமலே கேட்பான், கால் இல்லாமலே நடப்பான் என்கிற இந்த ஞானம் எல்லாம் உண்டாகிவிடுகிறது. இதற்கு முன்பு ஆரம்ப நிலையில் தியானம் பண்ணுவதற்கு இப்பேர்ப்பட்ட தத்துவ திருஷ்டி வேண்டியதில்லை. அகண்ட ஸ்வரூபத்தைத் தியானம் செய்ய ஆரம்பிக்குமுன் கண்டமாக நினைத்துத்தான் தியானம் பண்ண வேண்டும். தியானம் பண்ணிப் பண்ணிப் பக்தி உண்டாகிவிட்டால் உண்மையான அகண்ட ஸ்வரூபம் அவனுடையது என்பது தானே தெரிந்துபோய்விடும்.

அப்புறம் அவன் வேறு, பகவான் வேறு என்பது இல்லை. பகவானுகவே ஆகிவிடுகிறுன்.

ततो मां तत्त्वतो ज्ञात्वा विशते तदनन्तरम् ।

ததோ மாம் தத்வதோ ஜ்ஞாத்வா விஶதே ததநந்தரம்|

Koviloor Digital Library

பிரஹ்ம வித்தாக இருக்கிறவன் ப்ரஹ்ம ஸ்வரூபமாகவே ஆகிவிடுகிருன். அதற்கு முந்தி பக்தி இருக்கிற காலத்தில் பகவானைப் பற்றி ஒரு தினுசாகத் தெரிந்துகொண்டாலே போதுமானது. இப்படித் தெரிந்துகொள்ளாமல் பக்தி பண்ண முடியாது. கண்டமாகப் பக்தி பண்ணி அகண்ட ஸ்வரூபத்தைக் கண்டுவிட்டால் இது எல்லாம் பொய்யாகத்தான் போய்விடும். இருந்தாலும் அகண்ட ஸ்வரூபத்தைக் கண்டுகொள்ள ஆரம்பத்தில் கண்டமாகத் தெரிந்துகொண்டுதான் பக்தி பண்ண வேண்டும்.

பக்தி பண்ணிப் பகவானுடைய உண்மையான ஸ்வரூப திருஷ்டி ஏற்பட்டுவிட்டால் அப்புறம் அவன் தனியாக இருக்க முடியாது.

विशते तदनन्तरम्

விஶதே ததநந்தரம்

தத்க்ஷணத்திலேயே அவனுக வேண்டியதுதான்.

ஓர் ஐஸ் கட்டி இருக்கிறது. மரத்தூள் எல்லாம் போட்டுப் பத்திரமாகத் தனியாக வைத்திருக்கிறோம். ஒரு குளத்தின் கிட்டே போய் நின்றுகொண்டு இந்த ஐஸ் கட்டி குளத்தின் ஜலந்தானே என்று நினைத்து அதைத் தண்ணீருக்குள் போட்டால், அது அதுவாகவே ஆகிவிடுகிறது; அப்புறம் ஐஸ் கட்டி ஏது?

அப்படிப் பகவான் யார், அவனுடைய உண்மையான ஸ்வரூபம் என்ன என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டால் அந்த க்ஷணத்திலேயே அவனுகவே ஆகிவிடுகிருன். அப்புறம், 'நான், நான்' என்று சொல்லிக்கொண்டு வெளியில் இருக்கும்படியான வஸ்து இன்னென்று இல்லாமலே போகிறது.

இதற்குத் திருஷ்டாந்தம் சொல்கிறபோது - காவேரி, கோதாவரி, கங்கை என்று நதிகள் இருக்கின்றன. சமுத்திரத்திலே போய்க் கலந்துவிட்டால் அப்புறம் எல்லாம் சமுத்திரந்தான். காவேரி, கோதாவரி, கங்கை என்று ஒன்றும் தனியாகக் கிடையாது என்று சொல்வார்கள்.

आपः समुद्रं यथा प्रविशन्ति

ஆபः ஸமுத்ரம் யதா பிரவிஶந்தி

என்று உபநிஷத்து வாக்கியம் சொல்கிறது. அப்படிப் பகவான் ஒவ்வொரு நிலையையும் அநுசரித்து அந்த அந்த நிலையில் உள்ளவர்கள் என்ன என்ன காரியங்களை அந்த நிலைக்கு ஏற்றபடி செய்ய வேண்டும் என்பதாகப் படிப்படியாக அர்ஜுனனுக்கு

Koviloor Digital Library

உபதேசம் பண்ணி, 'நீ இப்போது இருக்கிற நிலையில் யுத்தம் பண்ணத்தான் வேண்டும். ஆகவே அழுதுகொண் டிருக்காதே''

तस्माद् युध्यस्व भारत ।

தஸ்மாத் யுத்யஸ்வ பாரத

என்று உபதேசம் செய்திருக்கிறார். ஒவ்வோர் அதிகார பேதத்திற்கு ஒவ்வொரு நிலையில் ஒவ்வோர் உபதேசம் இருக்கிறது. ஒன்றுக்கொன்று விரோதமே கிடையாது என்று நடுவில் ஒன்றுக்கொன்று சமாதானம் பண்ணும்படியான சுலோகங்களை எடுத்துக் காட்டி ஆசார்யாள் பாஷ்யம் செய்திருக்கிறார்.

Koviloor Digital Library

3

அத்வைத தத்வம்

பகவான் சாரதியாக ரதம் ஓட்டிக்கொண் டிருக்கிறார். அர்ஜுனனுக்குப் பார்த்தன் என்று பெயர். அவனுடைய ரதத்தை ஓட்டினதால் சுவாமிக்குப் பார்த்தசாரதி என்று பெயர், நமது சென்னைப்பட்டணத்திலே திருவல்லிக்கேணியில் உள்ள சுவாமிக்குப் பார்த்தசாரதி என்று பெயரிட்டிருக் கிறார்கள். அதுவும் கீதையினுடைய கதை நடந்த ஞாபகத்தைக் காட்டுகிறது.

அர்ஜுனனைப் பார்த்துப் பகவான் கோபித்துக்கொள்கிறார்;

क्लैब्यं मा स्म गमः पार्थ नैतत् त्वय्युपपद्यते ।
क्षुद्रं हृदयदौर्बल्यं त्यक्त्वोत्तिष्ठ परंतप ॥

க்லைப்யம் மாஸ்ம கம: பார்த்த நைதத் த்வய்யுபபத்யதே|
க்ஷுத்ரம் ஹ்ருதய தௌர்பல்யம் த்யக்த்வோத்திஷ்ட்ட பரந்தப|

[பரந்தப பார்த்த - எதிரிகளை எரிப்பவனாகிய அர்ஜுனா, க்லைப்யம் - பேடித்தனத்தை, மாஸ்ம கம - அடையாதே.] ''கிளம்பு. யுத்தம் பண்ணாமல் திரும்புவது உன்னிடத்தில் ந உபபத்யதே-சிறிதும் பொருந்தாது. பேடித்தனமாக எல்லாம் யோசித்துக்கொண் டிராதே'' என்று சொல்கிறார்.

''நீ யுத்தம் பண்ண முன்வந்துவிட்டு எதனால் இப்போது பின்தங்குகிறாய்?'' என்று கோபித்துக்கொள்கிறார்:

''யுத்தம் பண்ணுவது என்றால் நான் அநேகம் பேரைக் கொன்றாக வேண்டுமே. அவர்கள் எல்லோரையும் கொன்று விட்டால் அது பாவம் ஆயிற்றே. ஆகையால் யுத்தம் பண்ணக் கூடாது'' என்று அவன் சொன்னான்.

Koviloor Digital Library

இதற்குச் சுவாமி ஒரு விதமாகச் சமாதானம் சொல்கிறார். "எதிரில் அநேக சத்துருக்கள் இருக்கிறார்களே. பீஷ்மர், துரோணர் எல்லோருமே சத்துருக்கள் பட்சத்தில் போய்ச் சேர்ந்திருக்கிறார்களே. உன்னால் பூஜிக்கத் தக்க ஆசார்ய புருஷர்களையும் பந்துக்களையும், சண்டை என்று போட்டால் கொன்றுவிடும்படி நேரிடும். அவர்கள் எல்லாரும் போய்விடுவார்களே என்று யோசனை பண்ணுகிறாயா? அவர்கள் எல்லாரும் எங்கும் போகிறவர்கள் இல்லை. நீ யாரைப் பீஷ்மன், துரோணன், கர்ணன் முதலியவர்கள் என்று சொல்கிறாய்? இவர்கள் எல்லோருடைய ஜீவனைத்தான் பீஷ்மன், துரோணன், கர்ணன் என்று சொல்கிறாய். அவர்கள் உடம்புகளுக்குள் இருந்து கொண்டு எல்லாவற்றையும் அறிந்துகொண் டிருக்கிறானே ஒருவன், அவனைச் சொல்கிறாய். அவர்களுடைய உடம்புகளுக்குப் பீஷ்மன், துரோணன் என்று பெயர் இல்லை. ஜீவனாயுள்ள அந்தப் பீஷ்மன், துரோணன் முதலியவர்களை உன்னிடத்தில் இருக்கும்படியான ஆயுதங்கள் ந சிந்தந்தி - சிதைக்கமாட்டா! வெட்டப்படுகிறது எல்லாம் இந்த உடல்தான். ஆத்மா என்பதை,

पावकः एनं न दहति

பாவக: ஏநம் ந தஹதி

நெருப்பு - தீ இதை எரிக்காது.

आपः एनं न क्लेदयन्ति

ஆப: ஏநம் ந க்லேதயந்தி

தண்ணீர் இதை தனைக்காது.

मारुतः न शोषयति

மாருத: ந ஶோஷயதி

காற்றும் உலர்த்தாது.

अच्छेद्योऽयमदाह्योऽयमक्लेद्योऽशोष्य एव च ।
नित्यः सर्वगतः स्थाणुरचलोऽयं सनातनः ॥

அச்சேத்யோயமதாஹ்யோயமக் லேத்யோஶோஷ்ய ஏவ ச |
நித்ய: ஸர்வகத: ஸ்த்தாணுரசலேயம் ஸநாதந:||

இது சிதைக்க ஒண்ணாதது. இது எரிக்க ஒண்ணாதது. நனைக்க ஒண்ணாதது. உலர்த்தவும் ஒண்ணாதது. இது அழிவற்றது. எங்கும் உள்ளது. பாம்புச் சட்டையைப் போல் இந்த உடம்பு போய் இன்னொர் உடம்பு வேண்டுமானால் வரலாம்.

"இது தெரியாமல், 'யுத்தம் செய்தால் அவர்கள் போய்விடுவார்களோ?' என்று கலக்குகிறாயே. பீஷ்மன், துரோணன்

Koviloor Digital Library
A. No. 4776
Q1:3326
நூலகம், கோவிலூர்

என்று நீ சொல்கிறவர்களுடைய ஆத்மா என்பது உள்ளே இருந்து எல்லாவற்றையும் பார்க்கும்படியான அறிவுதான். போகிறது, வருகிறது என்பது எல்லாம் வெறும் உடல்தான். உன்னால் வெட்டுப்பட்டுவிடுமே என்று அஞ்சுகிறாயே, அதுவும் உடல்தான். உடல் போய்விட்டால் என்ன? அவன் ஆனந்தமாக இருக்கிறான். அவன் எப்போதும் எங்கும் இருப்பான்.

अयं नित्यः सर्वगतः स्थाणुः अचलः सनातनः ।

அயம் நித்ய: ஸர்வகத: ஸ்த்தாணு: அசல: ஸநாதந:

அவன் நித்யன். நித்யனுக்கு உற்பத்தியும் கிடையாது; அழிவும் கிடையாது. எங்கும் எல்லாக் காலத்தும் உள்ளவன். ஸ்த்தாணு-பட்ட கட்டையைப்போல நிலைபெற்றவன். அசல:-அசைவில்லாதவன். ஸநாதந:-என்றுமுள்ளவன். ஆகவே பீஷ்மர், துரோணர் என்று யாரை எண்ணிக்கொண்டிருக்கிறாயோ அவர்கள் உன்னுடைய ஆயுதங்களினால் அழிந்துவிடுவார்கள் என்று சஞ்சலப்படாதே'' என்று அர்ஜுனனுக்கு ஞானோபதேசம் பண்ணி உண்மைத் தத்துவத்தை எடுத்துச் சொல்லி, ''நீ சஞ்சலம் இல்லாமல் சண்டை போடு. ஒருவரும் சாகமாட்டார்கள். அவர்கள் எப்போதும் இருக்கிறவர்கள்.

नित्यः सर्वगतः स्थाणुरचलोऽयं सनातनः ।

நித்ய: ஸர்வகத: ஸ்த்தாணுரசலோயம் ஸநாதந:

இதில் விநாசம் என்பதற்கு இடமே இல்லை. அவர்கள் எல்லோருக்கும் ஒரு நாளும் ஒருத்தராலும் நாசம் என்பதை உண்டுபண்ண முடியாது. அவர்களுக்கு ஏன் விசனம்? நாசத்தை உண்டு பண்ண முடியாது என்றால் அவன் (ஆத்மா) நித்யன்; அவன் ஸர்வகதன்-எங்கும் நிறைந்தவன்; ஸ்தாணு - அசையாப் பொருள்: பட்ட கட்டையைப் போல இருப்பவன்'' என்றெல்லாம் தேறுதல் கூறினார்.

''உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் எதனால் நிறைந்து இருக்கின்றனவோ பூர்ணமாக இருக்கின்றனவோ அப்பேர்ப்பட்ட பொருள் இந்த ஆத்மா என்கிறவன். அதனால் அவனுக்கு விசனமும் இல்லை; நாசமும் இல்லை'' என்று அர்ஜுனனுக்குப் பகவான் உபதேசம் செய்கிறார்.

அர்ஜுனன் கேட்டது என்ன? ''கிருஷ்ணா, என்னால் பூஜிக்கத் தகுந்த பீஷ்மரையும் துரோணரையும் அம்புகளைக் கொண்டு எவ்வாறு யுத்தத்தில் எதிர்த்துப் போர் செய்வேன்? அண்ணன், மாமன், மைத்துனன், ஆசிரியர் என்று எனக்கு வேண்டியவர்கள் எல்லோருமாக அல்லவா எனக்குச் சத்துருக்களாக எதிரில்

Koviloor Digital Library

நிற்கிறார்கள்? அவர்களைக் கொன்று நான் ஜயம் பெறுவதனால் அடைகிற பயன் என்ன? ராஜ்யந்தானே: இவ்வளவு பேரைக் கொலை செய்துவிட்டு இந்த ராஜ்யம் எனக்கு வந்தால்தான் என்ன? வராது போனால்தான் என்ன? மஹானுபாவர்களான குருக்களை, ஆசிரியர்களைக் கொல்லாமல் இவ்வுலகில் பிச்சை வாங்கி வேண்டுமானாலும் நான் சாப்பிடுகிறேன். ராஜ்யம் எனக்கு வேண்டாம். அதைவிட்டு யுத்தம் செய்தேனே, ருதிர ப்ரதிக்தாந் - இரத்தம் தோய்ந்த, அர்த்தகாமாந் போகாந் புஞ்ஜீய - பொருளையும் இன்பங்களையும் போகங்களையும் அநுபவித்தவனாவேன். அது எனக்கு வேண்டவே வேண்டாம்'' என்று சொல்கிறான். இப்போது 'ப்ளட்-ஸ்டெயின்டு' (Blood Stained) என்று சொல்கிறோமே அந்த வார்த்தையையேதான் 'ருதிரப்ரதிக்தாந்' (ருதிரம் என்றால் இரத்தம். ப்ரதிக்தாந் - என்றால் தோய்ந்த) என்று அர்ஜுனன் சொல்கிறான். ''நான் சண்டை போட்டால் பீஷ்மர், துரோணர் முதலியவர் சாக மாட்டார்களா? அவர்களைக் கொன்று எனக்கு ராஜ்யம் எதற்கு?'' என்கிறான்.

சுவாமி சொல்கிறார் - ''அப்பா, அப்படி நினைக்காதே. பீஷ்மர், துரோணர் என்று நீ நினைக்கிறது அவர்களுடைய ஆத்மாவையா, அவர்களுடைய உடலையா? உடல் அழியலாம். பிறப்பு என்பது உடலுக்கு எப்போது இருக்கிறதோ அப்போது அழிவு என்பதும் உண்டு. ஆனால் ஆத்மா என்கிறவனைச் சாக அடிக்க முடியாது. ஒன்று உண்டான வஸ்து என்றால் அது நாசத்தைத்தான் அடையும். மரம் உண்டாகிறது; பட்டுப்போகிறது. அப்படியே சரீரம் உண்டாகிறது; பட்டுப் போகிறது. ஆனால் உள்ளே இருக்கிற அறிவு என்கிற ஆத்மா என்றைக்கும் இருக்கிறது. அதுதான் அவர்கள். அதனால் அவர்களைச் சாக அடிக்க முடியாது'' என்று ஞானோபதேசம் பண்ணுகிறார்.

अविनाशि तु तद् विद्धि येन सर्वमिदं ततम् ।
विनाशमव्ययस्यास्य न कश्चित् कर्तुमर्हति ॥

அவிநாஶீ து தத் வித்தி யேந ஸர்வமிதம் ததம்|
விநாஶமவ்யயஸ்யாஸ்ய ந கஶ்சித் கர்துமர்ஹதி||

''உலகம் எல்லாம் எதனால் பூர்ணமாக நிறைந்துள்ளதோ அந்த வஸ்து எதனாலும் அழிவற்றது என்று உணர்வாய். மாறுதல் இல்லாப் பொருளுக்கு அழிவைச் செய்வதற்கு எவனும் சமர்த்தனல்லன். அது ஸ்தாணு. அது சலிப்பு இல்லாதது.'' - இப்படி எல்லாம் பதில் சொல்கிறார் கிருஷ்ண பகவான்.

Koviloor Digital Library

அர்ஜுனன் கேட்ட கேள்விக்கும் கிருஷ்ணன் சொல்கிற பதிலுக்கும் என்ன சம்பந்தம்? பீஷ்மர் போய்விடுவாரே, துரோணர் போய்விடுவாரே என்று அழுகிறுன் அர்ஜுனன். ''எந்த வஸ்து உலகம் எல்லாம் நிறைந்திருக்கிறதோ அந்த வஸ்துவுக்கு நாசம் கிடையாது'' என்று சொல்கிருர் சுவாமி, 'எந்த வஸ்து உலகம் முழுவதும் நிறைந்திருக்கும்?' என்ருல் எங்கும் நிறைந்திருக்கும்படியான வஸ்து ஈச்வரன்தான்: நாசமில்லாதவன், நித்யமானவன், பிறப்பு, இறப்பு என்பதே இல்லாதவன் ஈச்வரன்தான். சுவாமிதான் எங்கும் நிறைந்தவர். யுத்தம் செய்தால் பீஷ்மர், துரோணர் முதலியவர்கள் செத்துப் போவார்களே என்று கேட்கிருன் அர்ஜுனன். ''எங்கும் நிறைந்த வஸ்துவான ஸ்வாமிக்குச் சாவு ஏது? கிடையாது'' என்கிருர் பகவான். ''எங்கும் நிறைந்த வஸ்து நித்யமாக இருந்தாலும் இவர்கள் செத்துப் போவார்களே'' என்பதற்கு அது என்ன ஐயா சமாதானம்?' என்று சந்தேகம் உடனே ஏற்படும்.

''எங்கும் நிறைந்த வஸ்து இருக்கிறதே அதுதான் உள்ளே இருக்கும்படியான சரீரத்துக்குள் இருந்துகொண்டு, 'நான் நான்' என்று தோன்றும்படியாக, அகம்பாவத்தோடு சின்னதாக இருக்கிறது. அகண்டமானதாக, எங்கும் வியாபித்திருக்கிற ஒன்று தான், ஒவ்வொரு சரீரத்துக்குள்ளும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து, ஒளிந்து, இருந்துகொண் டிருக்கிறது. அதைத் தவிர இரண்டாவது வஸ்து கிடையாது. சர்வகதமான (எல்லாவற்றிலு முள்ள) வஸ்து எதுவோ அதை உன்ஞல் எரிக்கமுடியாது; அழிக்க முடியாது; கொல்லமுடியாது. இவர்களை நாசம் பண்ணுகிறேனே என்ருல் இவர்களுடைய ஆன்மாவை உன்ஞல் நாசம் பண்ண முடியாது. கவலைப்படாதே. உன்ஞல் அது அழிக்கப்படாதது. யாராலும் அழிக்க முடியாதது. நீ யாரையோ அடிக்கப்போகிருய், கொல்லப்போகிருய் என்கிருயே, அதுதான் இல்லை. எல்லாச் சரீரத்திற்கும் உள்ளே இருந்து, வெளியில் இருக்கும்படியான எல்லாவற்றையும் அறிந்துகொண் டிருக்கும்படியான வஸ்து, எங்கும் நிறைந்து அகண்டமாக இருக்கும்படியான வஸ்து எதுவோ அதுதான் பீஷ்மர், துரோணர். அதை அழிக்க முடியாது'' என்கிற அத்வைத தத்வதிருஷ்டியிலே அர்ஜுனனுக்கு, ''எல்லாம் ஒன்றுதான். வேறு வேறு என்று நினைப்பது எல்லாம் பொய். அந்த ஒன்று எல்லாமாக இருக்கிறதே தவிர, அந்த ஒன்றைத் தவிர வேறு அநேகம் இருப்பதாக நினைக்காதே. எல்லாருடைய உள்ளத்திலும் இருந்துகொண்டு எல்லாவற்றையும் உணர்ந்துகொண் டிருக்கும்படியான ஒன்று, அகண்டமாக

Koviloor Digital Library

எங்கும் நிறைந்து இருக்கும்படியான ஒன்றின் லேசந்தான். இது அழிவில்லாதது'' என்கிற ஒரு தத்துவ திருஷ்டியிலே முதலில் உபதேசம் பண்ணினர். எங்கும் நிறைந்திருக்கும்படியான வஸ்து ஒன்றுதான். அதற்குப் போவது வருவது என்பது கிடையாது. ஒரு ஸ்விச்சைப் போட்டால் அநேகம் விளக்குகள் எரிகின்றன. தனித்தனி விளக்குகளுள் பிரகாசித்தாலும் எல்லாவற்றுக்கும் மூலமாக இருக்கும்படியான சக்தி ஒன்றுதான். பல்பு பெரிதாக இருந்தால் பெரிதாகவும், சிறிதாக இருந்தால் சிறிதாகவும் பிரகாசிக்கிறது.

''அப்படி ஞானமயமாக எங்கும் அகண்டமாக வியாபித்திருக்கும்படியான சக்தி ஒவ்வொரு சரீரத்துக்குள்ளும் இருந்து கொண்டு அறிவாகப் பளீர் பளீர் என்று பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. மனத்தின் ஸ்வபாவம் பெரியதாக இருந்தால் ஆத்மா மஹாத்மாவாகிறது, சிறியதாக இருந்தால் அல்பாத்மாவாகிறது. இடத்தைப் பொறுத்தது அது. நித்தியமான, சத்யமான, எல்லா இடத்தும் நிறைந்திருக்கும்படியான அந்த வஸ்துவை உன்னால் எப்படிக் கொல்ல முடியும்? என்னால்தான் எப்படிக் கொல்ல முடியும்? கொன்றுவிடுவேன் என்பதாக நினைக்கிற நினைப்பே தப்பு. ஆகவே கிளம்பு. உன் கடமையைச் செய்'' என்று அர்ஜுனனுக்குப் பகவான் அத்வைத ஞானதிருஷ்டியிலே உபதேசம் பண்ணினர்.

* * *

'எல்லாம் ஒன்று என்று எப்படிச் சொல்ல முடியும்? தனித் தனியாகத்தானே இருக்கின்றன?' என்கிற கேள்வி வந்தாலும் சமாதானமாக இருக்கட்டும் என்று பிற்பாடும் இன்னொரு வகையில் உபதேசம் செய்கிறார்.

देहिनोऽस्मिन् यथा देहे कौमारं यौवनं जरा ।
तथा देहान्तरप्राप्तिर्धीरस्तत्र न मुह्यति ॥

தேஹினோஸ்மிந் யதா தேஹே கௌமாரம் யௌவநம் ஜரா|
ததா தேஹாந்தரப்ராப்திர் தீரஸ்தத்ர ந முஹ்யதி||

''தனியாகவே ஒவ்வொரு ஜீவனும் இருக்கிறன்; எங்கும் நிறைந்திருக்கும்படியான ஒன்றாக இல்லை என்று வைத்துக்கொள். ஒரே உடம்பில் இருக்கிறன் என்றாலும் அஸ்மிந்தேஹே - இவ்வுடலில், கௌமாரம் - குழந்தைப் பருவம், - யௌவனம் - இளமை, ஜரா - மூப்பு, கிழத்தன்மை என்று அநேக மாறுதல்கள் இல்லையா? பாம்பு, சட்டையை உரிப்பதுபோல் அவன்

Koviloor Digital Library

இந்தச் சரீரத்தை விட்டுவிட்டு இன்னொரு சரீரம் எடுத்துக் கொள்ளப்போகிறுன். சரீரத்துக்குள் இருக்கும் ஜீவனுக்கு அந்தச் சரீரத்திலே குழந்தைப் பருவம், இளமைப் பருவம், மூப்பு, இவை எப்படியோ அப்படியே உடல் அழிவும். உடல் அழியும்போதும் அவன் அழிவதில்லை, ஞானிகள் இதைக் கண்டு மயங்குவதில்லை'' என்று சொன்னுர்.

சாவு, அழிவு என்றுல் எது அழியப்போகிறது? இந்த உடம்புதான் அழியும்,

जातस्य हि ध्रुवो मृत्युर्ध्रुवं जन्म मृतस्य च ।
तस्मादपरिहार्येऽर्थे न त्वं शोचितुमर्हसि ॥

ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யுர்த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச|
தஸ்மாதபரிஹார்யே அர்த்தே ந த்வம் ஶோசிதுமர்ஹஸி||

பிறந்தான் என்றுல் எப்போது இருந்தாலும் சாகத்தான் போகிறுன். செத்தால் பிறக்கத்தான் போகிறுன். ஜாதஸ்ய - பிறந்தவனுக்கு, ம்ருத்யு: - சாவு, த்ருவம் ஹி - நிச்சயமன்றே? அப்படியே ம்ருதஸ்ய - இறந்தவனுக்கும், ஜன்ம - பிறப்பு, த்ருவம் - நிச்சயம். ஆகவே தவிர்க்க முடியாத விஷயத்தைப் பற்றி எதற்காகத் துக்கப்படவேண்டும்? பீஷ்மர், துரோணர் முதலியவர்கள் எல்லாம் செத்துப் போய்விடுவார்களே என்று நீ துக்கப்படாதே. பிறந்தால் இறக்கத்தான் வேண்டும். இறந்தால் பிறக்கத்தான் வேண்டும்; அது உன்னுல் தவிர்க்க முடியாதது என்பதைத் தெரிந்துகொண்டும் இப்போது நீ யுத்தம் செய்யாது போய்விட்டால் என்ன உண்டாகும்?

தர்மத்தினின்று பிறழாத யுத்தத்தைச் செய்யாவிட்டால் அதனுல் உனக்கு உரிய தருமத்தையும் புகழையும் விட்டு விலகித் தீவினையை அடைவாய். தர்ம யுத்தத்தைக் காட்டிலும் ச்ரேயசான எதுவுமே கிடையாது. இந்த யுத்தத்திலே நீயே செத்துப் போய்விட்டாய் என்றுல்தான் என்ன?

हतो वा स्वर्गं प्राप्स्यसि

ஹதோ வா ஸ்வர்க்கம் ப்ராப்ஸ்யஸி

கொல்லப்பட்டால் வீர சுவர்க்கத்தை அடைகிறுய்.

जित्वा वा भोक्ष्यसे महीम्

ஜித்வா வா போக்ஷ்யஸே மஹீம்

ஜயித்துவிட்டால் விஜயலக்ஷ்மி கிடைக்கிறுள். பூமியை அநுபவிப்பாய். இதைவிட்டு, போர்க்களத்தை விட்டுப் பயந்து கொண்டு ஓடினுயோ, உலகம் உள்ள நாள் வரைக்கும், 'இப்

Koviloor Digital Library

படி ஒருத்தன் தர்மத்தைக் காப்பாற்றத் தைரியம் இல்லாதவனாக ஓடினான்' என்கிற அபகீர்த்திதான் கிடைக்கும்.

अकीर्तिं चापि भूतानि कथयिष्यन्ति तेऽव्ययाम् ।
सम्भावितस्य चाकीर्तिर्मरणादतिरिच्यते ॥

அகீர்த்திஞ்சாபி பூதாநி கதயிஷ்யந்தி தே அவ்யயாம்|
ஸம்பாவிதஸ்ய சாகீர்த்திர் மரணாததிரிச்யதே||

நல்ல புகழ் பெற்றவனுக்குப் பழிச்சொல் சாவைக்காட்டிலும் அதிகமாயிற்றே. யுத்தகளத்தை விட்டு, 'என்றைக்கு இருந்தாலும் அழியக்கூடிய ஒரு பொருள் அழிந்துவிடப் போகிறதே' என்று நீ ஓடினால்தான், அது அழியாமல் இருக்கப்போகிறதா? அதற்காகத் தர்ம யுத்தத்தைச் செய்வதற்கு யோக்கியதை இல்லாமல் ஓடினான் என்கிற அபகீர்த்திதானே உலகம் உள்ள வரைக்கும் உனக்கு வரப்போகிறது? ஆகையால் இதைப் பற்றி நினைக்காதே. போருக்குத் துணிந்தவனாக எழுந்திரு. அதனால் உனக்குப் பாவம் வராது. வந்தால் விஜயலக்ஷ்மீ வருவாள். இல்லாது போனால் வீர சொர்க்கமாவது கிடைக்கும். ஆகையால் யுத்தம் பண்ணு'' என்று சொன்னார்.

முதலில் அத்வைத தத்வ உபதேசமாக, 'எங்கும் நிறைந்து இருக்கும்படியான ஒரு வஸ்துதான் எல்லாச் சரீரத்துக்குள்ளும் இருக்கிறது. அது அழிவில்லாதது, நித்யமானது. அது அழிந்துவிடப் போகிறதே எனக் கலங்கி யுத்தம் செய்யாது ஓடாதே' என்று உபதேசித்தார். அப்புறம், 'சாவு என்றால் என்ன? பாம்பு சட்டை உரிக்கிற மாதிரி இந்தச் சரீரத்தை விட்டு இன்னொரு சரீரத்தை எடுத்துக்கொள்கிறது சாவு. ஒரே சரீரத்தில் இளமை, வயோதிகம் எல்லாம் வரவில்லையா, அது போலத்தான். பிறந்துவிட்டால் சாவு என்பது வந்தே தீரும். தர்ம யுத்தத்தில் ஜயித்தால் பூமி கிடைக்கும். இல்லாது செத்தால் வீர சொர்க்கம் கிடைக்கும். யுத்தம் இல்லையென்றால் மாத்திரம் உடம்பு அழியாமல் இருக்கப்போகிறதோ?' என்பதாகக் கேவலம் நாஸ்திக திருஷ்டியை மாத்திரம் வைத்து, கடமையைச் செய்துகொண்டே செத்தோம் என்கிற புகழாவது நமக்கு வரட்டும் என்று உபதேசம் பண்ணினார். இப்படி அர்ஜுனனுக்கு ஏற்பட்ட மனக்கலக்கத்தை நீக்குவதற்கு ஐந்தாறு வழியாகப் பல பல சமாதானங்களைச் சொல்லியிருக்கிறார். இதையெல்லாம் சொல்லிவிட்டு,

तस्माद् युध्यस्व भारत

தஸ்மாத் யுத்யஸ்வ பாரத

என்று முடிக்கிறார்.

Koviloor Digital Library

"சரி, அர்ஜுனனுக்கு ஏற்பட்ட பயத்தை நீக்குவதற்குப் பகவான் அநேக விதமான சமாதானங்களைச் சொல்லியிருக்கிறாரே. இவ்வளவும் நிஜமா? எதை நிஜம் என்று எடுத்துக் கொள்வது? ஒரு சமயம் அத்வைத சித்தாந்தப்படி சொல்கிறார். அப்புறம் மீமாம்ஸகரைப்போல் பேசுகிறார். இப்படி அநேக விதமான அபிப்பிராயங்களை அவர் சொல்லியிருக்கிறாரே!' என்று தோன்றும்.

அநேக விதமான அபிப்பிராயங்களைச் சொல்லியிருந்தாலும் எதை ஸத்யமாக வைத்துக்கொள்வது என்பதற்குக் கடைசியில் அவரே ஒரு சுலோகம் சொல்லியிருக்கிறார்—

यावानर्थ उदपाने सर्वतः संप्लुतोदके ।
तावान् सर्वेषु वेदेषु ब्राह्मणस्य विजानतः ॥

யாவானர்த்த உதபானே ஸர்வத: ஸம்ப்லுதோதோதகே|
தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:||

இதற்கு என்ன அர்த்தம் என்று பார்த்தால் ஒன்றுமே புரியாதுபோல் இருக்கும். உதபாநம் என்றால் ஏதோ கொஞ்சம் குடிக்கிற தண்ணீர் என்று அர்த்தம். உதகம் என்றால் தண்ணீர். பானம் என்றால் குடிக்கிறது என்று அர்த்தம். குடிக்கிறதற்குத் தண்ணீர் என்றால் கிணற்றில் இருக்கிறது, குளத்தில் இருக்கிறது, குட்டையில் இருக்கிறது. தீர்த்தம் கொடுக்கிற தண்ணீர்ப் பந்தல் வைப்பதும் உண்டு. இவற்றினால் யாவாந் - எந்த விதமான பிரயோஜனம் ஏற்படுமோ.

सर्वतः संप्लुतोदके
ஸர்வத: ஸம்லுதோதகே

எங்கும் விரிந்து கிடக்கும்படியான தண்ணீர்க் காட்டில் என்று அர்த்தம். இதே மாதிரியாக அடுத்த அடியில்,

तावान् सर्वेषु वेदेषु ब्राह्मणस्य विजानतः ।
தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:|

அங்ஙனமே கற்றுணர்ந்த பிராம்மணனுக்கு வேதம் அனைத்திலுமாம் என்று சொல்கிறார். 'குளம், குட்டை, வாவி இவற்றினால் என்ன பிரயோஜனம் உண்டோ அதுதான் தண்ணீர் ஒரேயடியாக நிறைந்து இருக்கும்படியான, தண்ணீர் பிரவாகமாகக் கிடைக்கும்படியான தண்ணீர்க் காட்டில்; எல்லா வேதங்களிலும், நல்ல ஞானம் உடைய, எல்லாவற்றையும் கற்றுணர்ந்த பிராம்மணனுக்கு' என்றால் என்ன பொருள்?

Koviloor Digital Library

இப்படிச் சொல்வதைப் பார்க்கிறபோது ஒன்றோடொன்று ஒட்டவே இல்லை. நமக்கும் ஒன்றும் புரியவில்லை. யாவாந், தாவாந் என்ற சொற்கள் எங்ஙனமோ, அங்ஙனமே என்று சொல்கின்றன. அதுதான் எப்படி என்று புரியவில்லை. இது வரைக்கும் பல பல தத்வங்களைச் சொல்லிவந்துவிட்டுக் கடைசியில் முத்தாய்ப்பு வைத்தாற்போல் இந்தச் சுலோகத்தைக் கீதையில் பகவான் சொல்கிறார்.

ஆசார்யாள் அவதாரம் பண்ணி, ஆதிகாலத்தில் லோகம் எல்லாம் திக்விஜயம் பண்ணி, சாந்தமும் ஆனந்தமும் எல்லோரிடத்திலும் உண்டாகும்படியான தத்வத்தை உபதேசம் பண்ணினார். 'வேறு வேறு பொருள் என்பது கிடையாது. துக்கத்துக்குக் காரணமே இன்னொரு பொருள் இருக்கிறது என்பதான மித்யா ஞானந்தான். நான் வேறு, அது வேறு என்று நினைத்துக்கொண்டிருப்பதெல்லாம் அறியாத் தன்மை. எல்லாம் ஒன்றுதான்' என்கிற அத்வைத சித்தாந்தத்தைப் போதித்தார். இவர் பரம்பரையில் வந்த சதாசிவ ப்ரம்மேந்திராள் இதைத்தான், ''ஸர்வம் ப்ரஹ்ம மயம்'' என்றார். ஆசார்யாள், 'ப்ரஹ்மம் ஒன்றுதான் ஸத்யம். மீதி எல்லாம் விளையாட்டு; வேடிக்கை. பார்க்கப்படுகிற வஸ்து, பார்க்கிற வஸ்து எல்லாம் ஒன்று' என்கிற இந்தத் தத்வத்தை லோகம் முழுக்க நிர்த்தாரணம் பண்ணி, திக்விஜயம் செய்தார். அதற்கு முன் காசியில் உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தபோது வியாசர் கிழரூபம் எடுத்துக்கொண்டு வந்து இவரோடு வாதம் செய்து இவர் பெருமை எல்லோருக்கும் தெரியும்படி செய்தார் என்பது கதை.

ஆசார்யாளைச் சங்கரருடைய அவதாரம் என்று சொல்வர். அப்படியே வியாசாசாரியாள் மஹாவிஷ்ணுதான்.

शङ्करः शङ्करः साक्षात् ।

ஶங்கர: ஶங்கர: ஸாக்ஷாத்|

व्यासाय विष्णुरूपाय ।

வ்யாஸாய விஷ்ணுரூபாய|

ஸாக்ஷாத் பரமேசுவரனுடைய அவதாரமாகிய ஆதிசங்கரர் வித்யாப்யாசம் பண்ணுகிற காலத்தில் எவ்வளவு சூடிகையாக ஒவ்வொரு சாஸ்திரத்தையும் அறிந்துகொண்டார் என்பதைச் சொல்ல, அநேகம் சங்கர விஜயங்கள் இருக்கின்றன. அவை ஒன்றில் ஒரு சுலோகம் வருகிறது.

Koviloor Digital Library

आन्वीक्षिक्यैक्षि तन्त्रे परिचितिरतुला कपिले काऽपि लेभे
पीतं पातञ्जलाम्भः परमपि विदितं भाट्टघट्टार्थतत्त्वम् ।
यत्तैः सौख्यं तदस्यान्तरभवदमलाद्वैतविद्यासुखेऽस्मिन्
कूपे योऽर्थः स तीर्थे सुपयसि वितते हन्त नान्तर्भवेत् किम् ॥

ஆந்வீக்ஷிக்யைக்ஷி தந்த்ரே பரிசிதிரதுலா காபிலே காபிலேபே
பீதம் பாதஞ்ஜலாம்ப: பரமபி விதிதம் பாட்டகட்டார்த்ததத்வம்|
யத்தை: ஸௌக்யம் ததஸ்யாந்தரபவதமலாத்வைத - வித்யாஸுகேஸ்மிந்
கூபே யோர்த்த: ஸ தீர்த்தே ஸுபயஸி விததே ஹந்த நாந்தர்பவேத் கிம்||

ஆந்வீக்ஷிகி என்பது தண்டநீதி. ராஜ்யபாரம் எப்படிப் பண்ணுவது, நீதி எப்படிச் செலுத்துவது என்பவை போன்ற 'அட்மினிஸ்ட்ரேஷன்' (Administration) சம்பந்தமானவைகளைச் சொல்லும் சாஸ்திரம். இதற்கு ஆன்வீக்ஷிகி என்று பெயர்.

आन्वीक्षिकी एक्षि
ஆந்வீக்ஷிகீ ஐக்ஷி

இதைப் பார்த்த மாத்திரத்திலே அவர் தெரிந்துகொண்டு விட்டார். லோகம் முழுக்க அவரிடத்தில் வந்து வணங்கி இருக்கிறது என்றால் அந்தச் சாஸ்திரத்திலும் அவருக்கு எத்தனை ஞானம் இருந்திருக்க வேண்டும்! அதைப் பார்த்த மாத்திரத்தில் அவர் தெரிந்துகொண்டார்.

तन्त्रे परिचितिरतुला कापिले काऽपि लेभे
தந்த்ரே பரிசிதிரதுலா காபிலா காபி லேபே

அதே போல ஸாங்க்யம் காபிலம் போன்ற தத்வ சாஸ்திரங்களிலும் நிகரில்லாத பரிசயம் உண்டாகிவிட்டது. பாஷ்யத்திலும் ஸாங்யத்தைப் பற்றித்தான் அவர் அதிகமாகச் சொல்வது வழக்கம்.

पीतं पातञ्जलाम्भः
பீதம் பாதஞ்ஜலாம்ப:

பதஞ்சலி பண்ணி இருக்கும்படியான யோக சாஸ்திரம் போன்றவைகளையும் தீர்த்தம் சாப்பிடுகிற மாதிரி அவ்வளவு சுலபமாக அறிந்துகொண்டுவிட்டார்.

परमपि विदितं भाट्टघट्टार्थतत्त्वम् ।
பரமபி விதிதம் பாட்டகட்டார்த்த தத்வம்|

Koviloor Digital Library

பாட்டர்கள் என்று மீமாம்சகர்களுக்குப் பெயர். அவர்களுடைய சாஸ்திரங்களையும் தெரிந்துகொண்டு விட்டார். இப்படி வெகு கடினமான சாஸ்திரங்களை எல்லாம் அவர் லேசாகத் தாண்டிவிட்டார்.

यत् तैः सौख्यम्

யத்தை: ஸௌக்யம்

ஏதோ ஒன்றும் புரியாமல் இருந்துகொண் டிருக்கும்போது கொஞ்சம் தெளிவு உண்டாகி, சட்டென்று சந்தேகம் நிவ்ருத்தி ஆகிவிட்டதானால் நிரம்ப ஆனந்தம் உண்டாகும். இது அநுபவித்த ரசிகருக்குத்தான் தெரியும்.

यत् तैः सौख्यं तदस्यान्तरभवदमलाद्वैतविद्यासुखेऽस्मिन्

யத் தை: ஸௌக்யம் ததஸ்யாந்தரபவதமலாத்வைதவித்யா-
ஸுகேஸ்மிந்

அப்படிப் பல நாள் சிரமப்பட்டுப் படித்தவர்களுக்குக்கூட தெரிந்துகொள்ள முடியாத சாஸ்திரங்களை எல்லாம் பஹுசுலபமாகப் பார்த்தவுடனேயே தீர்த்தம் குடிக்கிற மாதிரியாகத் தெரிந்துகொண்டுவிட்டார்.

अमलाद्वैतविद्यासुखे

அமலாத்வைத வித்யாஸுகே

மலம் என்றால் அழுக்கு. கொஞ்சங்கூட அழுக்கு இல்லாதது அத்வைதம். இதர தத்வங்களை எடுத்துக்கொண்டால், கர்மானுஷ்டானங்களைச் செய்ய வேண்டும் என்றால் அதைச் செய்ய வேண்டும் என்கிற ஆசை. இப்படி ஒவ்வொன்றில் ஒவ்வொரு தப்பு. அழுக்கு இல்லாத சமாசாரம் ஒன்றும் இருக்காது. அப்பழுக்கு இல்லாதது, அமலமானது அத்வைதம். இவ்வளவு சாஸ்திரங்களை, தத்வங்களைத் தெரிந்துகொள்வதனால் உண்டாகிற ஆனந்தந்தான் அத்வைத தத்வத்தை உணர்ந்து கொள்வதனால் ஏற்படுகிற ஆனந்த சாகரத்துக்குள் அமிழ்ந்து கிடப்பது.

कूपे योऽर्थः स तीर्थे सुपयसि वितते हन्त नान्तर्भवेत् किम् ।।

கூபே யோர்த்த: ஸ தீர்த்தே ஸுபயஸி விததே ஹந்த நாந்தர்பவேத்
கிம்||

ஒரு கிணற்றினாலே என்ன பிரயோஜனம் உண்டாகிறதோ அதே பிரயோஜனம் விஸ்தாரமாக ஓடும்படியான காவேரிப் பிரவாகத்தினால் உண்டாகாது என்று சொல்ல முடியுமா? கிணற்

Koviloor Digital Library

றுத் தண்ணீரைக் குடித்து தாகசாந்தி பண்ணிக்கொள்ளலாம். பிரவாகத்தினுடைய அம்ருதமான நீரும் தாகத்தைத் தணிக்கிறது. சிறு கிணற்றினுலே என்ன காரியங்கள் பண்ணிக்கொள்கிருேமோ அந்தக் காரியங்கள் இன்னும் அதைக் காட்டிலும் அதிகமாக ஒரு பெரிய ஆற்றினுடைய பிரவாகத்தினுல் உண்டாகின்றன. பெரிய பிரவாகமாக மகாநதியாக இருப்பது அத்வைதம். பாக்கித் தத்வங்கள் எல்லாம் கிணறு, குட்டை, வாவி போலத்தான். அந்த மகாநதியினுல் உண்டாகிற பிரயோஜனங்கள் எல்லாவற்றுள்ளும் கிணறு, குட்டை, வாவி இவற்றினுல் உண்டாகிற சிறுசிறு பயன்கள் அடங்கிவிடுகின்றன. நதிப்பிரவாகம் இல்லாத ஊர்களில் கிணறுகள் வெட்டவேண்டும். காவேரி ஓடுகிற இடங்களில் பாசனத்துக்கு யாராவது கிணற்றைத் தேடுவார்களா? சின்னச் சின்ன இடங்களில் இருக்கும்படியான ஒன்றின் பிரயோஜனம் எதுவோ அதுவே எங்கும் நிறைந்திருக்குப்படியான இடத்திலிருந்து கிடைத்துவிட்டுப் போகிறது. எல்லாத் தத்வங்களினுலும் உண்டாகிற ஆனந்தமும் அமலமாக இருக்கும்படியான அத்வைதத்துக்குள் அடக்கந்தானே என்பது அந்தச் சுலோகம்.

இதை வைத்துக்கொண்டு கீதையில் இருக்கும்படியான,

यावानर्थ उदपाने सर्वतः संप्लुतोदके ।
तावान् सर्वेषु वेदेषु ब्राह्मणस्य विजानतः ॥

யாவாநர்த்த உதபாநே ஸர்வத: ஸம்ப்லுதோதகே|
தாவாந் ஸர்வேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:||

என்ற சுலோகத்தைப் பார்த்தால் அர்த்தம் நன்ருக விளங்கும். இந்தக் கருத்தை வைத்துக்கொண்டுதான் அந்தச் சுலோகமும் வந்திருக்கிறது. சங்கர விஜயத்தைத் தேடி, இந்தச் சுலோகத்துக்கு அர்த்தம் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது.

सर्वतः संप्लुतोदके उदपाने अर्थः यावान्

ஸர்வத: ஸம்ப்லுதோதகே உதபாநே அர்த்த: யாவாந்

எங்கும் பரந்து பெருகிக் கிடக்கும்படியான நீர்நிலையில், தண்ணீர்க்காட்டில். உதபாநே - பருகுதற்குரிய சிற்றூறலில் உள்ள, அர்த்த:- பயன், எப்படி அடங்கி உள்ளதோ—என்ருல் இப்போது அர்த்தம் விளங்கிவிடுகிறது.

ஸாங்க்யம், யோகம், கர்மானுஷ்டானம் போன்ற எல்லாவற்றினுலும் உண்டாகிற பயன் அத்வைத ஞானம் உண்டாகிவிட்டால் ஏற்படுகிறது. பெரிய சமுத்திரமாக இருக்கும்படியான இதில் எல்லாம் அடக்கம்.

Koviloor Digital Library

कूपे योऽर्थः स तीर्थे सुपयसि वितते हन्त नान्तर्भवेत् किम् ।
கூபே யோர்த்த: ஸ தீர்த்தே ஸுபயஸி விததே ஹந்த
நாந்தர்பவேத் கிம்|

என்ற சங்கர விஜய வாக்கியத்தை இங்கே சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான். அப்படியே,

तावान् सर्वेषु वेदेषु ब्राह्मणस्य विजानतः ।
தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:|

பிராம்மணன் என்ருல் என்ன அர்த்தம்? வேதம் தெரிந்தவன் என்பது சாமான்ய அர்த்தம். வேதத்துக்கே ப்ரஹ்மம் என்று பெயர். வேதம் படிக்கிறவன் ப்ரஹ்மசாரி. அதனுல் நன்ருக வேதாத்யயனம் பண்ணி இருக்கிறவனை ப்ராஹ்மணன் என்றும், அந்தப் பரம்பரையில் வந்துள்ளவனை ப்ராஹ்மணன் என்றும் சொன்னுலும் உபநிஷத்ரீதியாக முக்கியமான அர்த்தம் ஸாக்ஷாத் ப்ரஹ்ம ஸ்வரூபத்தை எங்கும் பார்த்து அநுபவித்துக்கொண்டிருப்பவன் என்பதுதான். அப்பேர்ப்பட்ட அகண்டமயமான ப்ரஹ்ம ஸ்வரூபஞானம் வந்துவிட்ட ப்ராஹ்மணனுக்கு, வேதங்களில் சொல்லியிருக்கும்படியான எல்லாம் அடக்கந்தான். சின்னஞ் சிறியனவாக இவை எல்லாம் இருந்தாலுங்கூட இவை எல்லாம் போய்ச் சேர்ந்துவிடுவது, அந்த ஞானத்தில்தான்.

''அப்படி அநேக வழிகளை நான் சொல்லியிருந்தாலுங்கூட அத்வைத தத்வ திருஷ்டியிலே ஒரு சமாதானம் சொன்னேனே, அதற்குள் இவை எல்லாம் அடங்கிப் போகும்'' என்று கீதையில் பகவான் சொல்லி முடித்துவிட்டார்.

''நான் அநேக அபிப்பிராயங்களைச் சொன்னேனே. சரீரம் அழிந்தால் என்ன? இந்தச் சரீரம் போய் இன்னெரு சரீரம் வருகிறது, தர்ம யுத்தத்திலே உயிர் போனுல் என்ன? உயிர் போனுல் வீர சுவர்க்கம் வருகிறது. இல்லாதுபோனுல் வெற்றி வீரனுகிருய். ராஜ்யம் கிடைக்கிறது. யுத்தம் செய்யாது பயந்து ஓடினுல் அபகீர்த்திதான் உண்டாகிறது.

''இப்படிப் பல பல காரணங்களைச் சொல்லிச் சண்டை போடு என்றேனே. அவை எல்லாம் சரி. இந்த எல்லாக் காரணங்களும் வெவ்வேருகத் தோன்றினுலும் எல்லாம் பரமாத்ம ஸ்வரூபமே என்று சொல்லப்பட்ட ஸமாதான காரணத்தில் முடிவில் அடங்குகின்றன. ஆத்மாவுக்கு அழிவு என்பதே இல்லை. சலனம் என்பதே இல்லை. எல்லாம் ஒன்று. எங்கும் நிறைந்திருக்கும்படியான ஒரு வஸ்துவில் இவையெல்லாம் அடக்கம்.

Koviloor Digital Library

ஆகவே அப்பேர்ப்பட்ட உண்மையான தத்வ ஞானத்தை சத்ய மாக வைத்துக்கொண்டு யுத்தம் பண்ணு. கலங்காதே'' என்பதாக அந்த அத்தியாயத்தின் கடைசிச் சுலோகமாக முத்தாய்ப்பு வைத்தாற்போலக் சொல்லிவிட்டார்.

''எது வந்தால் என்ன? எது போனால் என்ன? எது இருந்தால் என்ன? எது அழிந்தால் என்ன? எது தோன்றியதோ அது அழியத்தான் வேண்டும். தோற்றமுள்ள பொருள்களுக்குத்தான் அழிவு உண்டு, எங்கும் நிறைந்து எல்லாவற்றுள்ளும் இருந்து பார்த்துக்கொண் டிருக்கும்படியான வஸ்துவுக்கு அழிவு இல்லை; தோற்றமும் இல்லை. அது நித்யமானது. ஆகவே நீ கலங்காமல் உன் கடமையைச் செய்'' என்று பகவான் அத்வைத தத்வ திருஷ்டியிலே உபதேசம் பண்ணினர். இதற்குத்தான் ஞானம் ஞானம் என்று பெயர்.

அம்பாளுடைய கடாக்ஷத்தினாலே மூகனுக்கு இப்பேர்ப்பட்ட ஞானம் உண்டாயிற்று,

शिव शिव पश्यन्ति समम्

சிவசிவ பஶ்யந்தி ஸமம்

எல்லாவற்றையும் சமமாகப் பார்க்கக்கூடிய திருஷ்டி காமாக்ஷி தேவியினுடைய கடாக்ஷத்தைப் பெற்றவர்களுக்கு உண்டாகிறது என்று அவனுடைய வாக்கிலிருந்து வருகிறது. சமம் என்றால் ஏகம் என்று அர்த்தம்.

पण्डिताः सर्वत्र समदर्शिनः

பண்டிதா: ஸர்வத்ர ஸமதர்ஶிந:

ஸமம் என்றால் ஒன்று என்று அர்த்தம். ஒரு நாயைப் பார்த்து, ஒரு யானையைப் பார்த்து, இரண்டும் ஒன்றுதான் என்றால் எப்படிச் சொல்வது?' எந்த எந்த வஸ்துவாக இருந்தாலும் அவை எல்லாவற்றினுடைய ஸ்வரூபத்திலும் பரம் பொருள் ஒன்றை மாத்திரம் கவனிப்பது சமமான திருஷ்டி உடையவனுக்குத்தான் முடியும்.

समं पश्यन् हि सर्वत्र समवस्थितमीश्वरम् ।
न हिनस्त्यात्मनात्मानं ततो याति परां गतिम् ॥

ஸமம் பஶ்யந் ஹி ஸர்வத்ர ஸமவஸ்த்திதமீஶ்வரம் |
ந ஹிநஸ்த்யாத்மநாத்மாநம் ததோ யாதி பராம் கதிம் ||

''எல்லாப் பொருள்களிலும் ஸமமாக நிலைபெற்றுள்ளவனும் அழியும் பொருள்களில் அழியாமல் உள்ளவனும் ஆகிய பரமேசுவரனை எவன் பார்க்கின்றானோ அவனே பார்க்கின்றான்' என்பது கீதா வாக்கியம். எல்லா வஸ்துக்களாகவும் இருப்பவர் பரமேச்

Koviloor Digital Library

வரன். எல்லா வஸ்துக்களுக்குள்ளும் பாமேசுவரனை எவன் காண்கிறேனே அவன் சமமான திருஷ்டி உடையவனாகிறான்.

சர்க்கரையினால் அநேகம் பொம்மைகள் பண்ணி வைத்திருக்கின்றன. பொம்மைகள் அநேக விதமாக இருந்தாலும் அவை எல்லாம் சர்க்கரை. சர்க்கரைக்குத் தித்திப்புத் தவிர வேறு சுவை ஏது? அப்படி எல்லாப் பொருள்களும் பரமாத்ம ஸ்வரூபந்தான் என்று உணர்ந்துகொண்டுவிட்டவர்களுக்கு ஆனந்தத்தைத் தவிர வேறு கிடையாது. சர்வம் என்றாலே பரமாத்மா என்றுதான் அர்த்தம்.

இந்த உண்மையான ஞானம் சாக்ஷாத் அம்பாளுடைய கடாக்ஷத்தினாலே வரவேண்டும். அவளிடத்தில் நாம் வேறு ஒன்று வேண்டும் என்று கேட்காமல் இருந்தால் போதும். இந்த ஞானந்தான் முடிந்த முடிவில் அவளுடைய கடாக்ஷமாக நமக்கு வரும்.

ஞானாக்னி எல்லா அழுக்கையும் நிவ்ருத்தி செய்துவிடும். எந்தப் பொருளைக் கண்டாலும் அதனூடே அழியாத பரம் பொருளை, பரமாத்ம ஸ்வரூபத்தைக் கண்டுவிட்டவனுக்குத் துக்கம் இல்லை, விசனம் இல்லை. எல்லாத் தத்வங்களும் இதற்குள் அடங்கிவிடுகின்றன. எல்லோருக்கும் அம்பாளுடைய கடாக்ஷத்தினாலே இந்த ஞானம் உண்டாக வேண்டும்.

Koviloor Digital Library

4

கலாசாரம்

உலகத்தில் உத்தமமான எண்ணங்கள் எல்லாம் வளர வேண்டும். ஒரு மரம் வைத்தோமானுல் அது பெரிதாய் உயர்ந்த நிலையில் வளர வேண்டுமென்று நினைக்கிறேம். நம் ஊரில் தேக்குமரம் நடுகிறேம். அபூர்வமாகச் சில இடங்களில் தான் வைக்கிறேம். மலையாளத்தில் உள்ள மலையில் மலைத் தேக்கு உண்டாகிறது. இங்கே வைக்கிற தேக்குமரத்தைக் காட்டிலும் அங்கே தேக்கு மரம் மிக உயரமாக வளருகிறது. காரணம், வருஷத்தில் நான்கைந்து மாதம் சேர்ந்தாற்போல் அங்கே மழை பெய்கிறது. பூசாரமும் அங்கே நிறைய இருக்கிறது. அங்கே உள்ள தேக்குமரங்கள் ஆகாசத்தை அளாவி நிற்கின்றன.

இன்னும் மழை வெகு குறைவாக இருக்கும்படியான ஹைதராபாத் சம்ஸ்தானம், கடப்பை, கர்னூல் ஜில்லாக்களில் அவ்வளவு செழிப்பாக மரங்கள் வளருவதில்லை. இங்கெல்லாம் மழை மிகக் குறைச்சல். வருஷத்தில் இருபது, இருபத்தைந்து அங்குலங்கூட இருக்காது. மலையாளத்தில் என்றுல் வருஷத்தில் சராசரி 150, 200 அங்குல மழை இருக்கும். மகாபலேசுவரம், கோதாவரியின் உத்பத்திஸ்தானமான த்ரயம்பகம் பக்கம் போனுல், 300 அங்குல மழைகூடப் பெய்யும். திருவாங்கூருக்குப் பக்கத்திலேயே 60, 80 அங்குல மழை பெய்ய ஆரம்பித்துவிடுகிறது. இப்படி அதிக மழை பெய்யக்கூடிய ஜனர்த்தனம், பாலக்காடு, திருச்சூர் என்று வடக்கேயோ தெற்கேயோ உள்ள இடங்களுக்குப் போய்ப் பார்த்தால் அங்குள்ள கோயில் எல்லாம் நமக்குக் கோயிலாகவே தெரியாது. கோயில்கூட ஓட்டுவீடு மாதிரியேதான் இருக்கும். நம் ஊர்ப் பக்கங்களில் உள்ளது

Koviloor Digital Library

போல் கோபுரம், மண்டபம் எல்லாம் கட்டியிருக்கமாட்டார்கள். கோபுரம் கட்டியிருந்தாலும்கூட அதற்கு மேலே ஓட்டுக்கூரை போட்டிருப்பார்கள். வடக்கே நேபாளத்துக்குப் போனாலும் இப்படித்தான். தெற்கே மலையாளத்துக்குப் போனாலும் இப் படித்தான். மலையாளத்தில் திருவனந்தபுரத்துக்குப் பக்கத்தில் நம் ஊர் மாதிரியே இரண்டொரு கோவில்களுக்குக் கோபுரம். மண்டபம் எல்லாம் இருக்கும். கொஞ்சம் வடக்கே போனால் கோயிலுக்கு மண்டபம் கிடையாது. எல்லாம் ஓடுதான். கர்ப்பக் கிருகப் பக்கம் மண்டபம் மாதிரி கட்டியிருந்தாலும், அந்த மண்டபத்துக்கும் மேலே ஓட்டுக் கூரை போட்டிருப்பார்கள். அந்தப் பக்கம் நெடுகிலும் அப்படித்தான். வீடுகளுக்கும் மொட்டை மாடி என்றே இருக்காது. தப்பித்தவறி மாடி என்று கட்டினாலும் அதற்கு மேலும் ஓட்டுக் கூரை போட்டிருக்கும்.

ஏன் இப்படி இருக்கிறது என்று நான் யோசனை பண்ணிக் கொண்டிருந்தேன். வெகு நாள் அதைப்பற்றிச் சந்தேகம். ஒரு சமயம் அந்தப் பக்கம் நான் ஓர் ஊருக்குப் போயிருந்தேன். அப்போது 24 நாட்கள் சேர்ந்தாற்போல் சூரிய வெளிச்சமே இல்லாமல் ஒரே மழையாகப் பெய்துகொண் டிருந்தது. எப்படி யாவது சூரியனைப் பார்க்க மாட்டோமா என்று ஆகிவிட்டது. அப்புறம் மழை நின்று பத்துப் பதினைந்து நாள் ஆயிற்று. புதுப் புதுக் கோயிலுக்குப் போய்த் தரிசனம் பண்ணிவிட்டு வருவது என்று பத்து வருஷம் வைத்துக்கொண் டிருந்தேன். அந்த ஊரிலும் மழை நின்று பத்துப் பதினைந்து நாட்கள் கழித்து ஒரு கோயிலுக்குப் போயிருந்தேன். நிறையக் கல் மண்டபங்கள் இருக்கும்படியான கோயில். மழை நின்று பத்துப் பதினைந்து நாள் ஆகிவிட்டது. வெளியில் மழை காணோம். ஆனால் அந்த மண்டபத்தில் மாத்திரம் சொட்டுச் சொட்டு என்று ஜலம் சொட்டிக்கொண் டிருந்தது. நம் பக்கத்தில் பந்தல் போடுவார் கள். கொட்டகை இல்லை. மட்டப் பந்தல். அப்படி மட்டப் பந்தல் போட்டிருக்கிற இடத்தில் மழை வந்து நின்று போய் விட்ட பின்னருங்கூடப் பந்தலுக்குள் சொட்டுச் சொட்டு என்று மழை பெய்துகொண் டிருப்பதுபோல் சொட்டிக்கொண் டிருக்கும். அதுபோல் அந்தக் கோவில் கருங்கல் மண்ட பத்திலும் சொட்டிக்கொண்டே இருந்தது. சேர்ந்தாற்போல் இருபத்துநான்கு நாள் மழை பெய்ததல்லவா? அந்த ஜலத்தை அந்தக் கல்மண்டபம் வாங்கிக்கொண்டு, மழை நின்று பத்துப் பதினைந்து நாட்கள் ஆகியும் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுக் கொண்டிருந்தது. இதுமாதிரிதான் மலை ஊற்றுகள். அப்புறந் தான் எனக்கு, 'ஏன் இப்படி எல்லாவற்றுக்கும் கூரை போடு

Koviloor Digital Library

கிருர்கள்?' என்கிற சந்தேகம் நிவ்ருத்தியாயிற்று. அந்தமாதிரி கூரை போடாமல் நம் பக்கம் மாதிரி மொட்டைமாடி கட்டிவிட்டிருந்தால் அந்த நான்கு மாத மழைக்குள்ளேயே மழைத்தாரை மண்டபத்தைத் துளைத்துவிடும். தொப் தொப் என்று மண்டபம் விழவேண்டியதுதான். அதனுல்தான் மண்டபமாகக் கட்டினுலும், மொட்டைமாடியாகக் கட்டினுலும் அதற்கு மேலும் கூரை போட்டு வைத்திருக்கிருர்கள் என்பது தெரிந்தது.

அதேமாதிரி திருப்பதிக்கு அப்புறம் கடப்பை, அனந்தப்பூர் முதலிய ஜில்லாக்கள் பக்கம் போனுல் வீடுகளுக்கெல்லாம் நான்கு பக்கமும் சுவர்தான் கல்லால் கட்டியிருப்பார்கள். மேலே, கூரைக்குச் கள்ளிகளைப் பரப்பி அதன் மேல் மண்ணை அப்பித்தான் வைத்திருப்பார்கள். காரணம்; இந்தப் பிரதேசத்தில் அந்த மண் நனையும்படியான மழைகூடப் பெய்கிறதில்லை. நைஜாம் ஸ்டேட்டினுடைய ஆரம்பத்திலும் அப்படித்தான் இருக்கிறது. ஹைதராபாத்துக்கு 30 மைல் தாண்டி ஓர் ஊர் இருக்கிறது. அங்கே ஒரு தெருவில் ஓர் ஓட்டு வீடு. இன்னெரு தெரு மாத்திரம் மண் மட்டமாக இருக்கிறது. அதற்கு வடக்கே இந்தமாதிரி பார்க்க முடியாது. அங்கெல்லாம் மழை உண்டு. நாகபூர் வந்தவுடன் வயலில் இருக்கிற களம் முதற்கொண்டு ஓட்டுக் கூரை போட்டிருக்கிருர்கள். அறுவடைச் சமயத்தில் மழை வந்துவிடும். தானியத்தைக் களத்தில் போட்டிருந்தால் நனைந்து போகும். அதற்காகக் கூரை போட்டு வைத்திருக்கிருர்கள். மலையாளத்திலும் அநேக இடங்களில் இப்படி இருக்கிறது.

ஆகவே இந்த மழையை அநுசரித்து-சீதோஷ்ண ஸ்திதியை அநுசரித்து-அங்கெல்லாம் உள்ள சிற்பங்கூட, வீடு, கட்டிடம் எல்லாங்கூட மாறியிருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது? சீதோஷ்ண ஸ்திதிக்கு ஏற்பத்தான் அந்த அந்தப் பிராந்தியத்தில் உள்ள மக்களது உடை, வீடு, ஆகாரம், படுக்கை, மனசு, குணம் எல்லாம் இருக்கும் என்று தெரிகிறது, நல்ல மழை பெய்யக் கூடிய பிரதேசத்துத் தேக்குமரத்துக்கும், நம் ஊரில் பயிரிடுகிற தேக்குமரத்துக்கும் வித்தியாசம் தெரியவில்லையா? அதேமாதிரி மலபார்த்தேக்குக்கும் பர்மாத் தேக்குக்கும் வித்தியாசம் உண்டு. இங்கே பெய்கிற மழையைக் காட்டிலும் பர்மாவில் ஐராவதி நதிப் பிரதேசத்தில் அதிகமான மழை பெய்கிறது. அங்கே விளைகிற தேக்கு இதைவிட அழுத்தமாக, உறுதியாகத்தான் இருக்கிறது. இப்படி அததற்குத் தக்கபடி எவ்வளவு ஊட்டம் கொடுக்கிருேமோ அவ்வளவு உயர்ந்தநிலை கிடைக்கிறது. அப்படியே எத்தனை வளர்ச்சி கொடுக்கிருேமோ, அத்தனைக்கு மனசிலும் உயர்ந்த எண்ணங்கள் உண்டாகின்றன. பெரிய

Koviloor Digital Library

பெரிய மகான்கள் தோன்றி அந்தத் தேசத்திலுள்ள ஜனங்களுக்கு அடிக்கடி நல்ல விஷயங்களைச் சொல்லிக்கொண்டே இருந்தார்களானால், அந்தத் தேசத்திலுள்ள ஜனங்களது கலாசாரம் உயர்ந்துதான் இருக்கும். இந்தக் கலாசாரம். 'கல்சர்' (culture), பண்பாடு எல்லாம் ஒன்றுதான். எல்லாவற்றுக்கும் மூலம் 'கல்' என்பது.

இளமையில் கல்

என்று சொல்வர். வடமொழியில் கலா என்று பெயர். சதுஷ்ஷஷ்டி கலா-அறுபத்து நான்கு கலைகள் என்று சொல்வர் கல், கலா, காலேஜ், கலாசாரம், எல்லாம் ஒன்று. பிரெஞ்சு மொழியிலே கொலெ என்பார்கள்; ரூட்(Root) கலா என்பதுதான். எண்ணுகிறான் என்று இதற்கு அர்த்தம். வரவர வளருவதற்குக் கலா என்று பெயர். அதனால்தான் சந்திர கலா என்று வந்தது. சந்திரப் பிறை ஒவ்வொரு நாளும் வளருகிறது அல்லவா? அதுவே கொஞ்சம் கொஞ்சமாக நிறைந்து ஷோடச கலை என்று பெரிதாயிற்று.

இந்தமாதிரி ஒவ்வொரு நாட்டிலும் உயர்ந்த கலா-உயர்ந்த எண்ணம் வளர்ந்து வளர்ந்து பல கலைகளாக உருவெடுக்கிறது: சங்கீதம், நாட்டியம், சித்திரம் இவ்வளவும் உயர்ந்த எண்ணங்களுடைய ஒவ்வொரு வகை உருவங்கள்; ஒவ்வொரு கலை. இப்படி உயர்ந்த எண்ணங்கள் ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வொரு விதமாக உருவெடுக்கின்றன. உயர்ந்த எண்ணம் மாத்திரம் இருந்துவிட்டால் போதும். அது சித்திர ரூபமாக, நாட்டிய ரூபமாக, சங்கீத ரூபமாக, தான ரூபமாக, தியாக ரூபமாக உருவம் எடுக்கும். நவரஸங்களாக உருவெடுக்கும். சாந்த நிலை அடைகிறது இருக்கிறதே அதுவும் உயர்ந்த கலைதான். அப்படியே எல்லா உயிர்களிடத்திலும் அன்பு, குறுகிய மனோபாவம் போய் விரிந்த மனோபாவம் வருவது,

स्वदेशो भुवनत्रयम्

ஸ்வதேஶோ புவநத்ரயம்

என்ற எண்ணம்எல்லாம் அதனுடைய விரிவாக உருவெடுக்கிறது. அப்படி 'விஸ்தாரமாக விரிந்துகொண்டே போனால் கெட்டுப் போவோம்' என்று தோன்றும். ஊருக்கெல்லாம் நல்லது பண்ணிக்கொண்டே இருந்தால் நாம் கெட்டுத்தான் போவோம் என்று நினைக்கலாம். கெட்டுப்போனாலுங்கூடப் பாதகம் இல்லை. இந்த எண்ணம் வருவதே உயர்ந்த பண்பு, கலைதான். 'ஊர்ப் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' என்று உலகத்தில் ஒரு பழமொழி உண்டு. லோகம் முழுக்க

Koviloor Digital Library

ஒன்றுகவேண்டும். அதற்கும் ஒருகலை என்று பெயர், கலாசாரம் என்று பெயர்.

இப்படி ஒரு தேசத்தினுடைய கலாசாரம், பண்பு, (culture) என்பது உயர்ந்து இருக்கிறது என்று எதைக் கொண்டு சொல்வது? ஜனங்களுடைய மனேபாவங்கள் உயர்ந்.திருக்கின்றன என்பதற்கு அறிகுறி என்ன? ஒரு தேசத்தில் எல்லோரும் ஒரேமாதிரி இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. திருடன் இருப்பான்; பொய்யன் இருப்பான். சரீரம் உயர்ந்த தாக இருக்கலாம். நல்ல பலமுள்ளவனுக்குக்கூட ஜுரம் வருகிறது. ஜலதோஷம் வருகிறது. இதெல்லாம் இருக்காது என்று சொல்ல முடியாது. அப்படியே ஒரு தேசம் என்றுல் அதிலும் தப்பு ஒரு பக்கத்தில் இருக்கும். இருந்தாலும் டாக்டர் இருதயத்தைச் சோதனை பண்ணிவிட்டு, 'இருதயம் ஆரோக்கிய மாக இருக்கிறது. ஆகவே ஒன்றும் பயம் இல்லை' என்று சொல் கிருர் அல்லவா? அதுமாதிரி ஒரு தேசத்தினுடைய உள்ளே இருக்கும்படியான இருதயம் 'ஹார்ட்டு'தான் உயர்ந்த மன நிலையைக் காட்டுகிறது. அது எவ்வளவு உயர்ந்த நிலையில் இருக் கிறது என்பதை நாம் அளக்கவேண்டுமானுல் அல்லது உரைத்துப் பார்க்க வேண்டுமானுல் எந்த இடத்தில் பார்க்கிறது? ஒரு தேசத்தினுடைய பண்பு உயர்ந்திருக்கிறது, மனேபாவங்கள் உயர்ந்திருக்கின்றன என்பதைக் காண்பதற்கு, அது எவ்வளவு சுத்தமாக இருக்கிறது என்பதை உரைத்துப் பார்ப்பதற்கு அந்தத் தேசத்தில் உள்ள மகாகவி யாரோ அவனுடைய வாக்கே தான் ஆதாரம். அந்தத் தேசத்துக்குள் உயர்ந்த மகாகவி எவனே அவனுடைய வாக்குத்தான் அதற்கு உரைகல். கவிகளு டைய மனேபாவந்தான் அப்படி வாக்காக வருகிறது. அதுதான் ஒரு தேசத்தின் பண்புக்குச் சிறந்த உரைகல் என்று சொல்கிறது வழக்கம்.

ஒரு தேசத்திலுள்ள கவி என்றுல் அதில் மட்டமான கவியும் இருப்பான்; உயர்ந்த கவியும் இருப்பான். வருஷத்துக்கு நூறு கவிகள் உண்டாகிக்கொண் டிருப்பார்கள். சில கவிகளுடைய எழுத்தானது அவர்களோடேயே அழிந்து போய்விடும். சிலர் கவிகளை எழுதிப் பொருளுக்கோ புகழுக்கோ ஆசைப்படாமல் எங்கோ ஒரு மூலையில் போட்டு வைத்திருப்பார்கள். எவனே அதில் இரண்டொரு கவிகளை எழுதி வைத்திருப்பான். அப்படி அப்படியே அவனது கவிகள் எல்லாம் உலகம் முழுக்க எங்கே எங்கே என்று தர்ஜமா பண்ணியாகிலும் கொண்டே போய்விடு வார்கள். கவிதைகளை எழுதி எழுதி வாசலுக்கு வாசல் சென்று பணம் வாங்கி அச்சிடுகிருர்களே, அப்படி அச்சிடுகிற புத்தகம்

Koviloor Digital Library

அவர்கள் வீட்டிலேயேதான் கிடக்கும். ஆனால் கவிக்கு உண்மையான யோக்கியதை இருந்தால் அந்தக் கவி எங்கே இருந்தாலும், இங்கே அங்கே என்று போட்டி போட்டுக் கொண்டு பிய்த்துக்கொண்டு போய்விடுகிறார்கள். ஆயிரம் ஆயிரம் வருஷங்களானாலும் அந்த மகாகவிகளுடைய வாக்கியங்கள் மறைவதே இல்லை. அழுக்காகிய கனம் இருந்தால்தானே அப்படியே கீழே விழுந்துவிடுவதற்கு? அசுத்தமே இல்லாமல் வெகு லேசாக இருந்தால் அப்படியே மேலாகத் தூக்கியேதானே நிற்கும்? இப்போது இங்கிலீஷ் தேசத்தை எடுத்துக்கொண்டால் ஷேக்ஸ்பியர், கிரேக்க தேசத்தில் ஹோமர் இப்படி அநேக கவிகளைப்பற்றி-உயர்ந்த கவிகளைப்பற்றிச் சொல்கிறார்கள். அப்படி நம் தேசத்தில் எல்லோரையும் காட்டிலும் சாமானியமாக மிக உயர்ந்த கவி யார் என்று கேட்டால், 'காளிதாசன்' என்பது எல்லோருக்கும் தெரியும். காளிதாசன் என்கிற பெயர் எல்லோர் காதிலும் விழுந்திருக்கும்.

மதஸ்தாபகர்களிலும் மிகப் பெரிய கவிகள் இருந்திருக்கலாம். ஆனால் மதத்தை ஸ்தாபிக்கிறது என்று வருகிறபோது பிற மதங்களுடைய கொள்கைகளைக் கண்டனம் பண்ணித் தங்கள் மதத்தினுடைய கொள்கையை ஸ்தாபனம் பண்ண வேண்டிய பொறுப்பு வந்துவிடுகிறது. கவி, மதஸ்தாபகராக இல்லாமல், எதையுமே தமக்கென்று கருதாமல் ஸர்வசுதந்திரமாக இருந்துவிட்டால்-நல்லதோ, கெட்டதோ அவர்களுக்கு யாரையும் கண்டனம் பண்ணி, ஸ்தோத்திரம் செய்து ஆகவேண்டியது இல்லை. உள்ளதை உள்ளபடியே வருணித்துக்கொண்டு போய்விடுவார்கள். உலகம் முழுவதையும் படம் பிடித்துக் காட்டிக் கொண்டே போய்விடுவார்கள்.

மதஸ்தாபனம் என்று வந்துவிட்டால் தங்கள் கொள்கையை நிறுத்தி, மற்றதை எல்லாம் வெட்டி, தையல்காரன் போல் கொஞ்சம் பலவீனமான கருத்துக்களுக்குக்கூட ஒட்டுக்கொடுத்துத் தைத்துக்கொண்டு போய், அதற்குத் தகுந்தாற்போல் சில சில வாக்கியங்களை அங்கங்கே செருகிக்கொண்டு போய், தங்கள் மதத்தை ஸ்தாபிக்கவே முயற்சி செய்துகொண்டு போயிருப்பார்கள். வெறும் கவியாகவே மட்டும் இருக்கிற ஒருவருக்கு இந்த வேலை எல்லாம் கிடையாது. தோன்றியது, கண்ணில் பட்டது, அழகான பண்பு, அழகான காட்சி-இப்படியே விருப்பு வெறுப்பு இல்லாமல் அவர்கள் எல்லாவற்றையும் சொல்லிக்கொண்டே போய்விடுவார்கள். உலகம் எடுத்துக்கொண்டால் கொள்ளட்டும், தள்ளிவிட்டால் தள்ளட்டும், அதைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதே கிடையாது. இதுவே மதஸ்தாபகர்களுக்கும்

Koviloor Digital Library

கவிகளுக்கும் உள்ள வித்தியாசம்: தமக்கு என்று எவ்விதப் பொறுப்பும் இல்லாமல் உள்ளதை உள்ளவாறே உயர்ந்த மகா கவிகள் சொல்லிக்கொண்டே போய்விடுவார்கள். இப்படிப் பட்ட மகாகவிகளுடைய வாக்கியங்களை மத ஸ்தாபகர்கள்கூட, 'அவர் இப்படிச் சொல்லியிருக்கிறார். இவர் இப்படிச் சொல்லி யிருக்கிறார்' என்று அப்படியே எடுத்துக்கொள்வார்கள்.

குமாரிலபட்டர் என்று ஒருவர் இருந்தார்-ஆயிரம் ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன்பு - ஆயிரம் வருஷத்துக்கு மேல் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் காலம், கணக்கு எல்லாம் ஒவ்வொருவர் ஒவ்வொரு தினுசாகச் சொல்வர். காளிதாசன் பெயரைப்போல் அவர் பெயர் அவ் வளவாக எல்லோர் காதிலும் விழுந்திருக்காது.

உதயணாசாரியார் என்று இன்னொருவர் இருந்தார். ஆதி சங்காராசாரியார் அவதாரம் பண்ணி, இந்த நாட்டைவிட்டே பௌத்த மதத்தை ஓட்டிவிட்டார் என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது பொய். ஆதிசங்கராசாரியார் பௌத்த ஜைன மதங்களை விரட்டவே இல்லை; போகச் சொல்ல வும் இல்லை. இந்த உண்மையை உங்களுக்கு, அவர் பெயரை வைத்துக்கொண் டிருக்கிற நானே சொல்கிறேன்; லோகத்தில் பௌத்த மதம் வெகு அதிகமாக இல்லவும் இல்லை. சித்திர மாகவும், சிற்பமாகவும், கல்லிலும், சுவரிலும் நிறையப் பௌத்த உருவங்கள் இருக்கிறதனால் லோகம் முழுக்கப் பௌத்த மதம் இருந்தது என்று நினைத்துக்கொண் டிருக்கிறோம்; ஆசார்யாளுடைய சாஸ்திரக் கிரந்தங்களிலும், பிறகு வந்த ஆசார்யாளுடைய சாஸ்திரக் கிரந்தங்களிலும் பார்த்தால்-இவர் கள் எல்லாம் பௌத்த மதத்தைக் கண்டனம் பண்ணியிருக்கும் படியான இடங்கள் வெகு குறைவு. முந்நூறு பக்கம் எழுதி யிருந்தால் அதில் நான்கு பக்கம் பௌத்த மத கண்டனத்துக்காக இருக்கும். இவர்கள் எல்லாம் ஸாங்க்ய மதம், நியாயம், மீமாம்சை இவற்றிலே சொல்லப்பட்டிருக்கிற தத்வ விசாரங் களையே அதிகமாக விசாரித்து அந்த அந்தத் தத்வங்களை எல்லாம் எப்படி ஒப்புக்கொள்வதற்கு இல்லை என்றுதான் அதிகமாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சாஸ்திர க்ரந்தங்களில் எல்லாம் பௌத்த மத கண்டனம் என்பதே வெகு குறைவு.

பௌத்த மதம் என்று எடுத்துக்கொண்டாலும்கூடப் பிக்ஷுக்கள்தான் நிறையக் கூட்டம் கூடியிருந்தார்கள். பாக்கிக் கிருஹஸ்தர்கள் பௌத்த மதத்தைத் தழுவியது வெகு குறைவு. இப்போது தியசாபிகல் சொஸைடியில் வெறும் மெம்பராக

Koviloor Digital Library

மட்டும் இருக்கிறவர்கள் அநேகம் பேர் இருக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய வீட்டு நடவடிக்கை எல்லாம் வைதிக மதங்களை அநுசரித்தேதான் இருக்கின்றன. அப்படி ராமகிருஷ்ண மடத்தில் ராமானுஜாசாரியார் நிரம்பச் சேவை செய்திருக்கிறார். இப்போது அண்ணா அவர்கள் செய்துகொண்டிருக்கிறார். ஆனால் இவர்களுடைய வீடுகளில் எல்லாம் பழைய சம்பிரதாயப்படியே ஆராதனை, அநுஷ்டானம் எல்லாம் இருக்கின்றன. இருந்தாலும் ஒரு மகான் தோன்றினார் என்றால் அவரிடமுள்ள அபிமானத்தால், அவர்களிடத்தில் உள்ள கௌரவ புத்தியினால் அவ்விஷயங்களில் நிரம்ப மரியாதையுடன், சிரத்தையுடன் நடந்து வருகிறார்கள். இப்படி அந்தக் காலத்திலும் அரசர்கள், கிருஹஸ்தர்கள் எல்லோரும் பௌத்த மதத்தில் ஈடுபட்டுருந்திருக்கிறார்களே தவிர, பௌத்த சம்பிரதாயத்தையே தங்கள் வாழ்க்கை, வீட்டு நடவடிக்கை எல்லாவற்றிலும் கொண்டுவந்துவிடவில்லை. பிக்ஷுக்களாகப் போனவர்கள் மட்டும் பௌத்தர்களாகவே இருந்தார்கள். ஆகவே பௌத்த மதம் என்பது வெகு குறைவாகத்தான் இருந்திருக்கிறது. அப்படியே இந்தப் பௌத்த மதத்தைப்பற்றி நம்முடைய ஆசாரியாரவர்கள் கண்டனம் பண்ணியுள்ள இடமும் அவர்களுடைய கிரந்தங்களில் நூற்றுக்கு ஒரு பங்குதான் இருக்கும்.

ஆனால் பௌத்த ஜைன மதங்களையே அதிகமாகக் கண்டனம் பண்ணினவர்கள் யார் என்றால் உதயனாசாரியார் அவர்களும், குமாரிலபட்டர் அவர்களுந்தான். வடக்குப் பீஹார் மாகாணத்திலுள்ள மிதிலா தேசத்தில் இருந்தவர் உதயனாசாரியார். இவர் நியாயம், மீமாம்சை சாஸ்திரக்காரர். இவர் அங்கங்கே பௌத்த ஜைன மதங்களை நிறையக் கண்டனம் செய்து, தமது சாஸ்திரத்தை ஸ்தாபித்திருக்கிறார். குமாரிலபட்டர் அவர்கள், 'வேத சாஸ்திரங்களில் உள்ள கர்மானுஷ்டானங்களே நமக்குப் பிரமாணமே தவிர வேறு ஒன்றும் இல்லை. எவ்வளவு ஞானியாக இருந்தாலும், அனாதி காலமாக இருக்கிற வேதத்தில் சொல்லப்பட்ட கர்மானுஷ்டானங்களை விட்டுவிட்டுப் போவது சரியல்ல. எவ்வளவுதான் மகாஞானியாக இருந்தாலும் இவர்கள் சொல்வது கொஞ்ச காலத்திற்கு வேண்டுமானால் சரியாக வருமே தவிர எல்லாக் காலத்துக்கும் சரி என்று சொல்ல முடியாது. உலகம் தோன்றிய காலம் முதற்கொண்டு இருந்து வருகிற வேத வாக்கியத்தைத்தான் நாம் எப்போதும் பிரமாணமாக எடுத்துக்கொள்ளவேண்டும்'' என்று இப்படிச் சொல்லிக்கொண்டு போகிறார்கள். ''கல்லாலே

Koviloor Digital Library

ஒரு வீடு கட்டினுல் கொஞ்ச நாளிலே விழுந்துவிடுகிறது. கருங்கல்லினுல் மண்டபம் கட்டினுலும் அழிந்து போகிறது. ஆனுல் ஒரு மலே என்ருல் எத்தனே காலமானுலும் அப்படியே இருந்துகொண் டிருக்கிறது. அதிக நாளாக அது இருப்பதிலிருந்தே அதனுடைய உறுதித் தன்மை தெரிகிறது. அதையும் காட்டிலும் சாசுவதமாகக் காற்று, ஆகாசம்போல் இருந்து கொண்டிருக்கும்படியான வேதம் இருக்கிறதே, அதிலே சொல்லியிருக்கும்படியான கர்மானுஷ்டானங்கள்தாம் நமக்குப் பிரமாணமானவை. எது நல்லது, எது கெட்டது, எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்பதற்கு நமக்குப் பிரமாணம் வேத வாக்கியந்தான்'' என்று குமாரிலபட்டர் நிர்த்தாரணம் பண்ணுகிறபோது, ''எல்லாம் புத்தர் சொன்னுர் என்ருலும் இது ஒரு காலத்துக்குத்தான் சரியாக இருக்கும். இதுவே எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் என்று சொல்ல முடியாது'' என்பதாக அதற்கு ஆதாரங்கள் எல்லாம் காட்டிப் பௌத்த மதத்தை நிறையக் கண்டனம் செய்திருக்கிருர்கள்.

தர்மம் தர்மம் என்ருல் என்ன? நல்லது பொல்லாதது என்கிருேமே, அதற்கு ஆதாரம் என்ன? இப்போது திருடினுல் தப்பு, கொலே செய்தால் தப்பு என்று சொல்லி, கோர்ட்டிலே அந்தக் குற்றங்களேச் செய்தவர்களேத் தண்டிக்கிருேம், இப்படித் தண்டனே கொடுப்பதற்கு ஆதாரம் என்னவென்ருல் அதற்காக ஒரு சட்டம் போட்டிருக்கிருேம். சட்ட அமைப்பு இருக்கிறது. இது மெஜாரிட்டியினுல் பாஸ் ஆனது. அதன்பேரில் மக்கள் ஆட்சி மன்றத்தில் சட்டங்கள் போட்டிருக்கிருேம்; அந்தச் சட்டத்தை மீறினுல் தப்பு என்று ஏதோ ஒன்றின் தலேயில் போட்டு விடுகிருேம். அசெம்பிளியில் சட்டம் கொண்டு வந்தது யார்? மெம்பர்கள். அந்த மெம்பர்கள் எப்படி வந்தார்கள்? ஜனங்கள் எல்லோரும் தேர்ந்தெடுத்து வந்தார்கள். ஊரில் இருக்கிற ஜனங்கள், அவர்களேத் தேர்ந்தெடுத்த ஜனங்கள் எல்லோரும் யோக்கியமானவர்கள்தாஞ? வோட்டு வாங்கினவர்களும் சரியான முறையில்தான் வாங்கிஞர்களா? அப்படியெல்லாம் பார்த்தால் அநேக சந்தேகங்கள் வரத்தான் வரும். எப்படியோ, இருக்கிறவர்களே வைத்துக்கொண்டுதானே காரியங்களேச் செய்ய வேண்டும்? திருடுகிறவனுக்கும் வோட்டு இருக்கிறது. பொய் சொல்கிறவன், மோசம் செய்கிறவன், படிக்காதவன், ஞானம் உள்ளவன், ஞானம் இல்லாதவன், யோக்கியன், அயோக்கியன் யாராக இருந்தாலும் வோட்டு இருக்கிறது. இவர்களிடத்திலிருந்து சரியான முறையில்தான் வோட்டு வாங்கினவனும் வாங்கியிருக்கிருன். அதுவும் மெஜாரிடி

Koviloor Digital Library

யாக இருந்துதான் இவர்கள் சட்டமும் கொண்டுவந்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் சமாதானம் செய்துகொள்ளத்தான் வேண்டும். ஏனென்றால் அந்த முறையில்தான் நம்முடைய காரியங்களை நாமே செய்துகொள்வது என்றும் தீர்மானம் செய்திருக்கிறோம். இவர்கள் செய்வதும் அநேகமாகச் சரியாக இருக்கும். ஆகவே நாம் ஒரு காரியம் செய்வதாக இருந்தால் நம் தேசத்திலுள்ள சட்டம் என்னவோ அதை அநுசரித்துத்தான் செய்யவேண்டும் என்று உணர்ந்துதான் பல விஷயங்களை வக்கீல்களிடம் கேட்டுக்கொண்டு செய்து வருகிறோம்.

எந்தக் காரியத்தைச் செய்வதாக இருந்தாலும், 'அதில் அப்படி இருக்கிறது. ஆகவே இப்படிச் செய்கிறேன்' என்று ஒன்றின் தலையில் போட்டுவிடுகிறோம். சில ஜட்ஜுகள் அளிக்கிற தீர்ப்புகளைப் பார்த்தாலுங்கூட, "நானாக முடிவு செய்தால் இப்படித்தான் செய்வேன். ஆனால் இதற்குச் சட்டம் இடம் கொடுக்கவில்லை. ஆகவே சட்டப்படி இப்படி முடிவு செய்கிறேன்" என்று எழுதி வைத்துவிடுகிறார்கள். அதாவது மாரல் ஜட்ஜ்மெண்டு (Moral Judgement) இல்லை; லீகல் ஜட்ஜ்மெண்டு (Legal Judgement). ஏனென்றால் சட்டம் இப்படித்தான் இருக்கிறது. சட்டத்தை அசெம்ப்ளியில்தான் பாஸ் செய்திருக்கிறார்கள். அசெம்பிளி மெம்பர்களை நாம்தான் தேர்ந்தெடுத்திருக்கிறோம். ஆகவே இந்தச் சட்டத்தை ஒரு வகையில் நாமேதான் போட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே அந்தச் சட்டப்படி நடந்துவிடுவோம் என்று ஒன்றின் தலையில் ஏதாக இருந்தாலும் போட்டுவிட்டுக் காரியங்களைச் செய்கிறோம்.

அப்படி நல்லது என்றால் என்ன, ஆத்மார்த்தமாக நாம் எந்தக் காரியங்களைத்தான் செய்யவேண்டும், எதைச் செய்யக் கூடாது, எது தர்மம் என்று விசாரம் செய்கிறபோது,

वेदोऽखिलो धर्ममूलम्

வேதோகிலோ தர்மமூலம்

என்று சொன்னார். வேதம் வேதம் என்று இருக்கிறதே, அதுதான் எல்லாத் தர்மங்களுக்கும் மூலமானது. அதில் என்ன சொல்லியிருக்கிறதோ அவற்றையேதான் நாம் செய்ய வேண்டும். ஏனென்றால் அது காலத்தினாலே நின்று உறைத்து வந்திருக்கிறது. எல்லாக் காலத்துக்கும் பொதுவான, சாசுவதமான தர்மங்களைச் சொல்கிறது. 'வேதவாக்கு' என்றால் வெகு சுத்தமாக இருக்கும் என்கிற நம்பிக்கையில்தான் யாராவது ஏதாவது சொன்னால்கூட, 'என்ன வேதவாக்கோ?' என்று சொல்கிற பழக்கம் உண்டாகியிருக்கிறது. வைரம் பாய்ந்த

Koviloor Digital Library

மரம் என்கிறோமே, அதுபோல் வேதம் வைரம் பாய்ந்ததாக இருக்கிறது. அநாதியாக வந்துகொண் டிருக்கும்படியான சட்டப் புத்தகம் அது. அதை ஆதாரமாக வைத்துக்கொண்டுதான், நாம் ஏதாவது காரியத்தைச் செய்யவேண்டுமென்றாலும், வேதம் எப்படிச் செய்யவேண்டுமென்று சொல்கிறதோ அப்படிச் செய்ய வேண்டும். தர்மங்களுக்கெல்லாம் மூலமானது அது தான்.

वेदोऽखिलो धर्ममूलम्

வேதோகிலோ தர்மமூலம்

என்று, "வேதம் முழுக்கத் தர்மத்தைத்தான் சொல்கிறது, ஏதாவது செய்ய வேண்டுமென்றால் வேதத்தில் என்ன சொல்லி யிருக்கிறது?" என்று பார்த்து அதன்படி நடக்கவேண்டும்' என்று முதலில் போட்டார்.

"சரி. நான் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால் இந்தக் காரியத்தைச் செய்வது சரியா, தப்பா என்று வேதத்தில் எங்கே இருக்கிறது என்று தெரிய வில்லையே. அதுவோ, 'अनन्ता हि वेदा:' (அநந்தா ஹி வேதா:) சாம வெதம் என்றால் ஆயிரம் கிளை இருக்கிறது. யஜுர்வேதம் என்றால் 101 கிளை இருக்கிறது. ரிக் வேதத்தில் 21 கிளை இருக் கிறது. அதர்வ வேதக்தில் 11 கிளை இருக்கிறது. இவற்றில் எங்கே இந்தக் காரியத்தை இப்படித்தான் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லையே. இவை எல்லாவற்றையும் படித்தவர்கள் உண்டு என்றால் அவர்களிடத் தில் போய் வேதத்தில் இந்தக் காரியத்தை எப்படிச் செய்வது என்று கேட்டுக்கொண்டுவிடலாம். அப்படிப் படித்தவர்கள் யாரும் இருப்பதாகவும் தெரியவில்லையே? என்ன செய்வது?" என்று ஒரு கேள்வி.

பரத்வாஜர் என்று ஒரு தபஸ்வி இருந்தார். அவர் தபஸ் பண்ணின வருஷங்களுக்குக் கணக்கு வழக்கு இல்லை. ஈசுவரன் பிரத்தியட்சமாகி, "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்ட போது, "எனக்கு இன்னும் அதிகமான ஆயுசைக் கொடு" என்று கேட்டாராம். "ஆயுசு அதிகம் கொடுத்தால் என்ன பண்ணு வீர்?" என்று கேட்டதற்கு, "நான் வேத அத்யயனம் பண்ணு வேன்" என்று சொன்னாராம். அப்போது ஈசுவரன் அங்கே இருந்த மலையிலிருந்து ஒரு பிடி மண்ணை எடுத்து அவர் முன் வைத்து, "உம்முடைய ஆயுசுக்குள் நீர் இவ்வளவுதான் வேத அத்தியயனம் பண்ணியிருக்கிறீர். ஆனால் நீர் அத்தி யயனம் பண்ணவேண்டியது இந்த மலைபோல் இருக்கிறது. எல்லா

Koviloor Digital Library

வற்றையும் அத்தியயனம் பண்ண வேண்டுமென்றால் உமக்கு இன்னும் எத்தனை ஆயுசு வேண்டும்?'' என்று கேட்டதாக ஒரு கதை இருக்கிறது.

இப்படி ஈசுவரன் பரத்வாஜருக்குப் பிரத்தியட்சமான இடம் பட்சி தீர்த்தம் என்கிற தலம் என்று சொல்கிறார்கள். ஸதல புராணத்திலும் அப்படித்தான் இருக்கிறது. அங்குள்ள சுவாமியின் பெயரும் வேதகிரீச்வரர் என்பது. அந்த இடத்திற்கு மறைமலை, வேதாசலம், வேதகிரி என்றெல்லாம் பெயர். அங்குள்ள மலைகளை இது அதர்வ வேத மலை, இது ரிக்வேத மலை என்பதாக இப்போதும் அங்குள்ளவர்கள் காண்பித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த மலையிலிருந்தே மூன்று பிடி மண் எடுத்துப் பரத்வாஜருக்கு முன் வைத்து, ''நீர் அத்தியயனம் பண்ணின வேதம் இவ்வளவுதான். இன்னும் எத்தனை ஆயுசு கொடுத்தால் இத்தனையையும் நீர் அத்தியயனம் பண்ண முடியும்?'' என்று ஈசுவரன் கேட்டதாக வேதத்திலேயே காடகத்தில் இருக்கிறது. இப்படி வேதத்தில் இருக்கும்படியானது எல்லாந்தான் தமிழில் பழமொழியாகவே கூட வந்துவிட்டது.

''கற்றது கைம்மண் அளவு, கல்லாதது மலை அளவு'' என்று ஒரு பழமொழி சொல்கிறோமே அது இந்த வேத வாக்கியந்தான்.

''இப்படி ஏராளமான சாகைகளோடு வேதம் அனந்தமாக இருக்கிறதே! இதைப் பூர்ணமாகப் படித்தவர்களும் இல்லையாதலால், நான் இந்தக் காரியத்தைச் செய்வது என்றால் எதை ஆதாரமாக வைத்துக்கொண்டு செய்வது? 'இப்படிச் செய்' என்று வேதத்தில் இதைப்பற்றிச் சொல்லியிருப்பது தெரிந்தால் வேத வாக்கியப்படியே செய்துவிடுவேன். அது தெரியாதபோது என்ன செய்வது?''

''சரி. அப்படியானால் ஒன்று சொல்கிறேன். அந்த வேதங்களையெல்லாம் நன்கு அறிந்திருந்த மகரிஷிகள் ஸ்ம்ருதிகள் என்று செய்திருக்கிறார்கள். அதில் என்ன சொல்லியிருக்கிறது என்று பார்.''

वेदोऽखिलो धर्ममूलम् ।
तद्विदां च स्मृतिशीले ॥

வேதோகிலோ தர்மமூலம் | தத்விதாம் ச ஸ்ம்ருதிஸீலே |

ஸ்ம்ருதி என்றால் நினைவுக் குறிப்பு; விஸ்ம்ருதி என்றால் பைத்தியம்; நினைவு தப்பிப் போய்விட்டவன். ஸ்ம்ருதி இருக்கிறதே- நினைவுக் குறிப்பு, வேதங்களை எல்லாம் நன்கு உணர்ந்த மகரிஷி

Koviloor Digital Library

கள் அங்கங்கே வேதத்தையே குறிப்பாக எழுதி வைத்தவை அவை. அவற்றைப் பார்.

மனுஸ்ம்ருதி, பராசர ஸ்ம்ருதி என்று அநேகம் மகரிஷிகள்-வேதம் முழுக்கத் தெரிந்தவர்கள் அங்கங்கே எழுதி வைத்த நினைவுக் குறிப்புகள் இவை. இவற்றை ஆதாரமாகக் கொண்டு பார்க்கலாம். இவற்றைத்தான் ஸ்மிருதி என்கிறார்கள். சட்ட நிபுணர்கள் எல்லாரும் சேர்ந்து நம் தேசத்தில் இப்படி இப்படி இருக்கவேண்டும் என்று கான்ஸ்டிட்யூஷன் செய்திருக்கிறார் களே, அதைப் போலச் செய்திருப்பதாக நினைக்கிறார்கள். அந்த மாதிரி இந்த ரிஷிகளாக இந்த ஸ்ம்ருதிகளை எழுதி வைத்திருக் கிறார்கள் என்றால் அதை நாம் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதே இல்லை. வேண்டாம் என்றால் தூக்கி எறிந்துவிடலாம். இவர்கள் வேதத்தில் இல்லாததை எல்லாம் நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஏதோ தாங்களாகவே உத்தே சித்து இப்படி இப்படி இருந்தால்தான் நல்லது என்று வரை யறுத்து வைத்திருக்கிறார்கள் என்றால் அவை நமக்கு வேண் டியதில்லை. அப்படிப் பார்த்தால் அநேகம் பேர் தங்களுக்குத் தோன்றியதை எழுதி வைத்திருக்கிறார்கள், அவற்றை நாம் எடுத்துக்கொண்டு விடலாமே. இவை நமக்கு எதற்காக?

இவர்கள் வேத வாக்கியங்களையே சொல்லியிருப்பதனால் தான் இந்த ஸ்மிருதிகளை நாம் இன்றைக்கும் ஆதாரமாக வைத்துக்கொண் டிருக்கிறோம்.

''சரி அப்படி என்றால் வேதத்தில் இருப்பதையேதான் இவர்கள் பிரமாணமாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரம் என்ன?'' என்று கேட்கலாம் அல்லவா? இப்படி ஒரு வழக்கு வரும்போதுதான், 'இதைப் பற்றி மகாகவிகளுடைய வாக்கியம் ஏதாவது இருக்கிறதா? அதாவது மதஸ்தாபனக் கொள்கை அல்லாது தனக்குத் தோன்றியதை, அப்படி அப்படியே உள்ளது உள்ளபடி சொல்லும் மகாகவியினுடைய வாக்கியம் இருக்கிறதா?' என்று பார்க்கவேண்டி யிருக்கிறது.

அப்படிப் பார்க்கிறபோது காளிதாசன்—இதைச் சொல்ல வேண்டும் என்று வரவில்லை—அவன் எழுதுகிற ஒரு மகாகாவி யத்தில் இதைப்பற்றி முத்தாய்ப்பு வைத்தாற்போல் ஒரு வாக் கியம் சொல்லியிருக்கிறான்.

'ரிஷிகள் தங்களுடைய சொந்த அபிப்பிராயத்தைத்தான் ஸ்ம்ருதிகளாகச் செய்திருக்கிறார்கள், அதுதான் கைகண்ட மருந்து, பலராலும் பின்பற்றப்படுகிறது, இது அவர்களுடைய சொந்தக் கருத்தே; உலகம் நன்றாக இருப்பதற்கு அவற்றைத் தான் பின்பற்ற வேண்டும்' என்று என்ன சொன்னாலும்

Koviloor Digital Library

ஸ்ம்ருதிகள் என்பது மகரிஷிகளுடைய சொந்த அபிப்பிராயமா? சொந்த அபிப்பிராயம் என்றால் அது நமக்கு வேண்டாம் என்பதுதானே நம்முடைய கொள்கை? 'ஸ்ம்ருதிகள் என்பது ரிஷிகளுடைய சொந்த அபிப்பிராயம் அல்ல. வேதம் என்ன சொல்லி யிருக்கிறதோ அதையேதான் சகல வேதங்களையும் நன்கு உணர்ந்த மகரிஷிகள் நினைவுக் குறிப்பாக எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே வேதம்தான் இது' என்று சொன்னால் இதற்கு ஆதாரம் என்ன? என்று பார்த்தால் மகாகவி காளிதாசனுடைய வாக்கியம் நமக்குக் கிடைக்கிறது.

ராமனுக்குத் தகப்பனார் தசரதர். தசரதருடைய தகப்பனார் அஜன். அவனுடைய தகப்பனார் ரகு. அதனால்தான் ரகுராமன் என்ற பெயரே - கொள்ளுத்தாத்தாவின் பெயரே - ராமனுக்கு வந்தது. 'தாசரதி' என்று தகப்பனாரின் பெயரை இரண்டோர் இடங்களில்தான் சொல்வார்கள். பொதுவாகத் தாத்தாவின் பெயரைத்தான் பேரனுக்கு வைப்பது. ஆனால் தாத்தா பேரான அஜன் என்பது ராமனுக்குக் கிடையாது. கொள்ளுத்தாத்தா வின் பெயரேதான் இவருக்கு அதிகம். அவ்வளவு கீர்த்தி யாகப் பேரும் புகழுமாக ரகு வாழ்ந்துகொண் டிருந்தார்.

ரகுவின் தகப்பனாருக்குத் திலீபன் என்று பெயர். திலீப னுக்கு வெகுநாள் பிள்ளையே இல்லாமல் இருந்தது, திலீப னுடைய குலகுரு வசிஷ்டர். வசிஷ்டரிடத்தில் திலீபன் சென்று, "சுவாமி, எனக்குக் குழந்தையே இல்லை. என் வம்சம் விளங்க நீங்கள்தான் அநுக்கிரகம் செய்ய வேண்டும்" என்று பிரார்த் தனை செய்துகொண்டார். வசிஷ்டர் வீட்டில் ஒரு பசுமாடு இருந்தது. நந்தினி என்று பெயர். அந்த நந்தினியைத் திலீப னிடத்தில் கொடுத்து, "நீ இதைக் குளிப்பாட்டி, மேய்த்து, மிக வும் சிரத்தையுடன் பூசித்து வளர்த்துக்கொண் டிரு. உனக்குப் பிள்ளை பிறக்கும்" என்று அநுக்கிரகம் செய்தாராம் வசிஷ்டர்.

அன்றைத் தினத்திலிருந்து திலீப மகாராஜாவும் ஒரு மாட் டுக்காரனைப் போலவே தினமும் அந்த நந்தினியைக் காட்டுக்கு ஓட்டிக்கொண்டு போவது, மேய்ப்பது, குளிப்பாட்டுவது இப்படி மிகவும் பக்தி சிரத்தையுடன் ரட்சித்துக்கொண் டிருந் தாராம். காட்டுக்கு மாட்டை ஓட்டிக்கொண்டு மேய்க்கப் போகிறபோது, துஷ்ட ஜந்துக்களால் மாட்டுக்கு ஆபத்து வரா மல் இருக்க ஒரு தனுசு, ஒரு பாணம் மாத்திரம் எடுத்துக் கொண்டு மாட்டின் பின்னாலேயே போவாராம். அதைச் சொரிந்து கொடுக்கிறது. அதை மேய்க்கிறது, அது நின்றால் இவரும் நிற்கிறது, அது படுத்துக்கொண்டால் இவரும் படுத்

Koviloor Digital Library

துக்கொள்வது, அது நடந்தால் இவரும் நடக்கிறது, இப்படி அதன் பின்னாலேயே இவர் போய்க்கொண் டிருந்தார்.

स्थित: स्थितां उच्चलित: प्रयाताम्

ஸ்தித: ஸ்திதாம் உச்சலித: ப்ரயதாம்

ஸ்தித என்றால் ஸ்டாண்டு (Stand) என்று அர்த்தம். அதிலிருந்துதான் ஸ்தானம் என்றும் வந்தது.

स्थित: स्थितां उच्चलित: प्रयातां
निषेदुषीं आसनबन्धधीर: ।
जलाभिलाषी जलमाददानां

ஸ்தித: ஸதிதாம் உச்சலித: ப்ரயாதாம்
நிஷேதுஷீம் ஆஸநபந்ததீர:|
ஜலாபிலாஷீ லலமாததாநாம்

அது உட்கார்ந்தால் இவரும் ஆசனத்தோடு உட்கார்ந்து விடுகிறது. இப்படி ஒரு நிழல் எப்படி இருக்குமோ—நாம் உட்கார்ந்தால் நிழலும் உட்காருகிறது, நின்றால் நிற்கிறது. ஓடினால் ஓடுகிறது-அப்படி,

छायेव तां भूपतिरन्वगच्छत् ॥

சாயேவ தாம் பூபதிரங்வகச்சத்||

நிழல் போல அந்த அரசர் நந்தினி என்ற பசுமாட்டை ரட்சித்து வந்தார் என்று காளிதாசன் சொல்கிறான்.

स्थित: स्थितामुच्चलित: प्रयातां
निषेदुषीमासनबन्धधीर: ।
जलाभिलाषी जलमाददानां
छायेव तां भूपतिरन्वगच्छत् ॥

ஸ்தித: ஸ்திதாமுச்சலித: ப்ரயாதாம்
நிஷேதுஷீமாஸநபந்ததீர: |
ஜலாபிலாஷீ ஜலமாததாநாம்
சாயேவ தாம் பூபதிரங்வகச்சத்||

இப்படித் தினமும் வீட்டிலிருந்து திலீபன் மாட்டை மேய்க்க ஓட்டிக்கொண்டு போகிற காலத்தில் திலீபனுடைய மனைவி சுதட்சிணையும் கொஞ்ச தூரம் பின்னாடியே நடந்து போய் அப்புறம் திரும்பி வருவது வழக்கம். வெகு நியமமாக வீட்டில் இருந்துகொண்டு பர்த்தாவை அனுப்பி வைப்பது, சாயந்தரம் காட்டிலிருந்து ராஜா பசுமாட்டோடு எப்போது திரும்பி வருவார் என்று பார்த்துக்கொண் டிருப்பது. இப்படிச் சுதட்சிணையும் பதிக்குச் சுசுரூஷை செய்துகொண் டிருந்தாள்.

Koviloor Digital Library

ராமனுடைய சரித்திரத்தைக் காளிதாசன் சொல்ல வந்தான். ராமனுக்குப் பின்னுடி வந்த லவகுசர்களைப் பற்றியும் சொல்கிருன். ராமனுக்கு முந்தி ரகுவம்சம் இருக்கிறதே - ராமனுடைய முன்னோர்கள்—அவர்களைப் பற்றியும் எழுதி வைத்திருக்கிருன். இப்படி ராமாயணம் சொல்ல வந்தவன், அந்த உத்தமமான வம்சத்தில் முன்னும் பின்னும் உள்ள சந்ததிகளைப் பற்றியும் சொல்லி, ராமனுக்கு யாருடைய பெயர் வந்ததோ அந்த மகா கீர்த்தி வாய்ந்த, ராமனுடைய கொள்ளுத்தாத்தா பெயரையே வைத்து ரகுவம்சம் என்றதொரு மகாகாவியத்தைச் செய்தான். உத்தமமான வம்சத்தைப் பற்றிச் சொன்னுலே நா பவித்திரமாகும் என்பதுபோல் அப்படிச் சொல்லியிருக்கிருன்.

இப்படிச் சொல்கிற காலத்தில் திலீபன் நந்தினியை மேய்க்கக் காட்டுக்கு ஓட்டிக்கொண்டு போகிறதைச் சொல்கிற போது, ரிஷிகள் எல்லாரும் ஸ்ம்ருதிகளை எப்படிப் பண்ணினுர்கள் என்பதைச் சொல்கிருன். இதைச் சொல்ல வேண்டும் என்று சொல்லவில்லை. இதற்காகச் சொல்கிற மாதிரியும் சொல்லவில்லை. திலீபனுடைய மனைவி சுதட்சிணை மாட்டின் பின்னுல் கொஞ்ச தூரம் எப்படிப் போனுள் என்று வருணிக்கிருன். நந்தினி முன்னுடி போகிறது. சுதட்சிணை வேறு எங்கும் பார்க்காது, அந்த அடிச்சுவட்டின் மேலேயே நடந்தாள் என்று சொல்ல வருகிருன். நந்தினி நடக்கும்போது அதனுடைய குளம்புகள் படுகிற இடத்தில் கொஞ்சம் தூசி கிளம்புகிறது. இப்படிக் கிளம்பும்படியான பவித்திரமான தூசி இருக்கிறதே, அந்தத் தூசியைப் பார்த்துக்கொண்டு, அந்தச் சுவட்டை அநுசரித்துச் சுதட்சிணை கொஞ்ச தூரம் நடந்தாள் என்று காளிதாசன் சொல்கிருன். மற்றக் கவிகளைக் காட்டிலும் காளிதாசன் வெகு அழகாக உபமானம் சொல்வான். அதுதான் இவனிடத்தில் உள்ள விசேஷம். ஒவ்வொரு கவிக்கு ஒவ்வோர் அம்சத்தில் விசேஷம்.

उपमा कालिदासस्य भारवेरर्थगौरवम् ।
दण्डिनः पदलालित्यं माघे सन्ति त्रयो गुणाः ॥

உபமா காலிதாஸஸ்ய பாரவேரர்த்தகௌரவம் |
தண்டிந: பதலாலித்யம் மாகேஸந்தி த்ரயோ குணு: ||

என்று சொல்வர். அப்படி உபமானத்தோடு சுதட்சிணை நடந்து போகிறதைச் சொல்கிறபோது,

तस्याः खुरन्यासपवित्रपांसुं अपांसुलानां धुरि कीर्तनीया ।
मार्गं मनुष्येश्वरधर्मपत्नी श्रुतेरिवार्थं स्मृतिरन्वगच्छत् ॥

Koviloor Digital Library

தஸ்யா: குரந்யாஸபவித்ரபாம்ஸூம்
அபாம்ஸூலாநாம் துரி கீர்த்தநீயா |
மார்கம் மநுஷ்யேஸ்வரதர்மபத்நீ |
ஶ்ருதேரிவார்த்தம் ஸ்ம்ருதிரந்வகச்சத் ||

என்கிறார். பாம்ஸூம் என்றால் தூசி. நந்தினி குளம்பு வைக்கிற இடத்தில் தூசி கிளம்புகிறது. குர; என்று குளம்புக்குப் பெயர். குரந்யாஸ-குளம்பு வைத்ததனாலே, பவித்ர பாம்ஸூம் - கிளம்புகிற பவித்திரமான தூசியைப் பார்த்துக்கொண்டு,

अपांसुलानां धुरि कीर्तनीया

அபாஸூலாநாம் துரி கீர்த்தநீயா

ஒரு தூசி இல்லாதவள், யாதொரு பழியோ களங்கமோ இல்லாத ஜன்மம், அப்பேர்ப்பட்ட உத்தமமான சுதட்சிணை தூசி அல்லது களங்கமே இல்லாது இருக்கும்படியான ஜன்மம் உலகத்தில் யார் என்றால், அதில் முதலாகக் கை மடக்கவேண்டிய சுதட்சிணை திலீபனுடைய தர்மபத்தினியாகிய சுதட்சிணை, நந்தினியின் குளம்பு படுவதனாலே எழும்புகிற பவித்திரமான தூசியை அநுசரித்து-பசுமாடு என்றாலே பவித்திரமானது: அதன் சாணங் கூட விபூதியாகி நம் உடம்பிலுள்ள அசுத்தங்களைப் போக்கிப் பவித்திரமாக்குகிறது; அப்படிப்பட்ட மிகவும் பவித்திரமான பசுவின் குளம்பு படுவதனால் எழும்புகிற பவித்திரமான தூசியை அநுசரித்து - சுத்தமான மார்க்கத்தை அநுசரித்து, காலடி எடுத்து வைத்து நடந்தாள். அது எப்படி என்றால் வேதத்தினுடைய, சுருதிகளுடைய அர்த்தத்தை அநுசரித்து மகரிஷிகள் செய்திருக்கும்படியான ஸ்ம்ருதிகள் எப்படிச் சென்றிருக்கின்றனவோ அப்படி.

श्रुतेरिवार्थं स्मृतिरन्वगच्छत् ।

ஶ்ருதேரிவார்த்தம் ஸ்ம்ருதிரந்வகச்சத் |

அந்வகச்சத் - பின்தொடர்ந்தாள். இங்கே பசுமாடு தான் சுருதி. அதனுடைய குளம்படிதான் அர்த்தம். சுதட்சிணை ஸ்மிருதிபோல. முழுக்க அப்படியே பசுமாட்டோடு போகாது கொஞ்ச தூரந்தான் போனாள். அதுபோல் வேதத்தில் இருப்பதை எல்லாம் ஸ்ம்ருதிகள் சொல்லவில்லை. நினைவுக் குறிப்புகள்தான். ஆனால் வேதத்தினுடைய அடியும் பொருளும் தப்பாமல் அதில் இருப்பதையே ஸ்மிருதிகள் சொல்லியிருக்கின்றன. அப்படிச் சுதட்சிணை நந்தினியின் குளம்படி தப்பாது, அதை அநுசரித்து, பின்பற்றி நடந்தாள்.

Koviloor Digital Library

तस्याः खुरन्यासपवित्रपांसुमपांसुलानां धुरि कीर्तनीया ।
मार्गं मनुष्येश्वरधर्मपत्नी श्रुतेरिवार्थं स्मृतिरन्वगच्छत् ॥

தஸ்யா: குரந்யாஸபவித்ரபாம்ஸுமபாம்ஸுலாநாம் துரி
கீர்த்தநீயா |
மார்கம் மநுஷ்யேஸ்வரதர்மபத்நீ ஸ்ருதேரிவார்த்தம்
ஸ்ம்ருதிரந்வகச்சத் ||

என்று சொல்லியிருக்கிறான்.

ஆகவே வேதந்தான் ஸ்ம்ருதி. மகரிஷிகளுடைய சொந்தக் கற்பனை அல்ல. வேதத்தை நன்கு முற்றும் உணர்ந்த மகரிஷிகள் அதையே குறிப்பாக எழுதி வைத்திருப்பது ஸ்ம்ருதி. ஆகவே, 'இந்தக் காரியத்தைச் செய்வதா, கூடாதா?' என்கிற சந்தேகம் வந்துவிட்டால் வேதத்தைப் பார்.
அதில் தெரியவில்லையே என்றால் ஸ்ம்ருதியைப் பார்.

वेदोऽखिलो धर्ममूलम् ।

வேதோகிலோ தர்மமூலம்

அதில் தெரியவில்லையே என்றால் ஸ்ம்ருதியைப் பார்.

तद्विदां च स्मृतिशीले ।

தத்விதாம் ச ஸ்ம்ருதிஸீலே

"இதில் அந்தக் காரியத்தைச் செய்யலாமா, கூடாதா என்று பார்த்து இதில் என்ன சொல்லியிருக்கிறதோ அப்படி நட" என்றார்.

'சரி. இதிலும் பார்த்தேன். எனக்கு ஒன்றும் அகப்படவில்லையே. என்ன செய்வது?' என்றால், 'வேதத்தை நன்கு அறிந்தவர்கள் எப்படி நடந்துகொண்டிருக்கிறார்கள், இந்த மாதிரி சந்தர்ப்பங்களில்?' என்று பார்.

'இவர்கள் எப்படி நடந்துகொண்டிருக்கிறார்கள் என்றும் தெரியவில்லையே. எனக்கு இது ஒரு புதுப் பிரச்னையாக அல்லவா எழுந்திருக்கிறது? இந்தக் காரியத்தைச் செய்வதா கூடாதா என்பதை எப்படி நான் தெரிந்துகொள்வது?' என்று திரும்பவும் கேட்டால், "சரி. உனக்கு வேதத்திலும் தெரியவில்லை. என்றால் உன் மனசில் யார் கெட்ட எண்ணமே இல்லாதவர்கள், சாதுக்கள் என்று தோன்றுகிறதோ அவர்கள் இந்தமாதிரியான சந்தர்ப்பங்களில் எப்படி நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று பார்."

आचारश्चैव साधूनां

ஆசாரஸ்சைவ ஸாதூநாம்

Koviloor Digital Library

''சீலம் என்பது தத்விதாம்-வேதத்தை நன்ருக அறிந்தவர்களுடைய நடவடிக்கை. வேதத்தை நன்ருக அறிந்தவர்களுடைய நடவடிக்கையிலிருந்தும் இந்தச் சந்தேகம் தீரவில்லை என்ருல், கெட்ட எண்ணமே இல்லாதவர்கள், சாதுக்கள் என்று உனக்கு யார் பேரில் நம்பிக்கை இருக்கிறதோ அவர்களுடைய ஆசாரத்தை, ஒழுக்கத்தைப் பார்'' என்ருர்.

'அப்படியும் காணவில்லை. எனக்கு இதுபற்றி முடிவு செய்ய ஒருவிதமான அத்தாட்சியும் இல்லையே' என்ருல்,

आत्मनस्तुष्टिः

ஆத்மநஸ்துஷ்டிः

''ஈச்வரனை நினைத்து, கெட்டதோ, நல்லதோ எனக்குத் தெரியவில்லை. இந்தக் காரியத்தை இப்படித்தான் செய்யவேண்டும் என்று என் மனச்சாட்சி சொல்கிறது. ஆகவே இப்படிச் செய்கிறேன்' என்று உன் மனச்சாட்சி என்ன சொல்கிறதோ அப்படி நடந்துகொள், போ.''

''கெட்ட எண்ணமே எதுவும் இல்லாது உன் மனத்திற்கு எந்த வழியில் போக வேண்டுமென்று தோன்றுகிறதோ அந்த வழியில் ஈச்வரனை நினைத்துப் போ'' என்று வைத்தார். இப்படி முதல் பிரமாணம் வேதமாக வைத்து, அதிலிருந்து படிப்படியாக, ஸ்ம்ருதி, தத்விதாம் சீலம், சாதுக்களுடைய ஆசாரஸ்தானம், கடைசியாக ஆத்மனஸ்துஷ்டி - மனச்சாட்சிப்படி நட போ என்று சொன்ஞர்கள். இப்போது அப்படியே தலைகீழாகப் போய்விட்டது. முதல் பிரமாணம் மனச்சாட்சிதான்: வேதம் எல்லாம் என்னவோ எவனே எழுதி வைத்தது, மனச்சாட்சிப்படிதான் நடக்கவேண்டும் என்று சொல்கிற காலமாக வந்துகொண் டிருக்கிறது. ஆனல் சாஸ்திரப்படி கடைசிப் பிரமாணம் மனச்சாட்சி? வேதம், ஸ்ம்ருதி இவற்றில் ஒன்றும் கிடைக்கவில்லை, வேறு வழியில்லை என்ருல் கடைசிப் பட்சமாக ஆத்மனஸ்துஷ்டி, மனச்சாட்சி என்று கொண்டுவந்தார்கள்.

वेदोऽखिलो धर्ममूलम् ।

வேதோகிலோ தர்மமூலம்

கடைசிப் பிரமாணம் நமக்கு முதல் பிரமாணமாக இன்றைக்கு ஆகிவிட்டது.

வேதாந்த தேசிகர் என்று வடகலை ஆசாரியர் ஒருவர் இருந்தார். அவர் அநேக கிரந்தங்கள் எழுதியிருக்கிருர். தர்மங்களைப்பற்றி விசாரிக்கிறபோது, அதற்கு ஆதாரங்கள் சொல்ல வருகிற ஓர் இடத்தில், குமாரிலபட்டர் அவர்

Koviloor Digital Library

கள் எப்படிச் சாகுந்தல நாடகத்திலிருந்து காளிதாசனுடைய வாக்கை எடுத்துக்கொண் டிருக்கிறார்களோ, அப்படியே இவர், குமாரிலபட்டர், காளிதாசன் இரண்டு பேர் வாக்கையும் எடுத்து, விசிஷ்டாத்வைத தர்மங்களைச் சொல்கிறார். மகாகவி காளிதாசனுடைய 'சாகுந்தலம்' உயர்ந்த நாடகம். தர்மசாஸ்திரம் பண்ணுகிறபோது, அந்த நாடகத்திலிருந்து ஒரு வாக்கியத்தை இவர்கள் எடுத்துக்கொண் டிருக்கிறார்கள். ஒரு மகாகவியினுடைய வாக்கு என்றால் நாடகத்தில் சொன்னாலுங்கூட மிக உயர்ந்ததாக, மதாசாரியர்கள் அதையே எடுத்துக் கையாளுகிறார்கள் என்பதைச் சொல்ல வருகிறேன்.

அதிலே துஷ்யந்தன் சகுந்தலையைக் காட்டில் பார்க்கிறான். பார்த்தவுடனே அவனுக்கு அவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும் என்ற ஆசை வந்துவிடுகிறது. அப்போது அவன் யோசனை பண்ணுகிறான்: 'இந்த ஸ்திரீயை நாம் கல்யாணம் பண்ணிக்கொள்ளலாமா? தர்மமா? இவளோ ஒரு மகரிஷியினுடைய ஆசிரமத்தில் இருக்கிறவள். நாமோ க்ஷத்திரியன்; ஒரு ராஜா. இவளை நாம் கல்யாணம் செய்து கொள்வது என்றால் அது தர்மமா? அது தர்மந்தான் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?' இப்படிப் பார்க்கிறபோது இவனுக்கு ஆதாரம் எதுவுமே தோன்றவில்லை. ஆனாலும், 'இதுவரைக்கும் இதுமாதிரியான எண்ணம் என் மனத்தில் தோன்றியதில்லையே. கெட்ட குணம் என்பது ஒன்றுமே மனத்தில் உண்டானதில்லையே. கெட்ட வழியில் போகவேண்டும் என்ற எண்ணமும் இல்லையே. அப்படி இருக்கிறபோது என் மனம் அந்தப் பெண்ணை ஏன் காதலிக்கிறது? காதல் உண்டானது என்றால் அது ஈச்வரசங்கல்பமாகத்தான் இருக்கும். தப்பானதாக, அதர்மமானதாக இருக்காது.

असंशयं क्षत्रपरिग्रहक्षमा यदार्यमस्यामभिलाषि मे मनः ।
सतां हि सन्देहपदेषु वस्तुषु प्रमाणमन्तःकरणप्रवृत्तयः ॥

அஸம்ஶயம் க்ஷத்ரபரிக்ரஹக்ஷமா யதார்யமஸ்யாமபிலாஷி
மே மந:—
ஸதாம் ஹி ஸந்தேஹபதேஷு வஸ்துஷு ப்ரமாணமந்த:-
கரணப்ரவ்ருத்தய: ||

இதுவரையில் என்னுடைய அந்தக்கரணப் பிரவ்ருத்தி தவறான மார்க்கத்தில் போனதில்லையே. ஆகவே எப்போது என் மனத்தில் அந்த எண்ணம் உண்டானதோ அப்போது இது தான் ஈச்வர சங்கல்பமாக இருக்கும். தவறானதாக இருக்காது. ஆகவே ஆத்மனஸ்துஷ்டியைப் பார்த்தால் இவளை விவாகம் பண்ணிக்கொள்ளத்தான் வேண்டும்.

Koviloor Digital Library

सतां हि सन्देहपदेषु वस्तुषु प्रमाणमन्तःकरणप्रवृत्तयः ।

ஸதாம் ஹி ஸந்தேஹபதேஷு வஸ்துஷு ப்ரமாணமந்த:-
கரணப்ரவ்ருத்தய: |

என்று காளிதாசன் ஒரு வாக்கியம் போட்டிருக்கிறான்.

இந்த வாக்கியத்தை எடுத்துக் குமாரிலபட்டர், ஆத்மனஸ் துஷ்டி என்பதற்குப் பிரமாணம் எடுத்துக் காட்டுகிறபோது உபயோகப்படுத்தி யிருக்கிறார். இதையே வேதாந்த தேசிகர் விசிஷ்டாத்வைத தர்மங்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டு வரும்போது, குமாரிலபட்டருடைய வாக்கியத்தையும் சொல்லி, ''கவிச்சக்கரவர்த்தியாகிய காளிதாசனும் சொன்னான்'' என்று போட்டிருக்கிறார்.

இப்படி இந்த இரண்டு பெரிய ஆசாரியர்களும் மீமாம்ஸாகாரரும் சரி, விசிஷ்டாத்வைதக்காரரும் சரி-தங்களுடைய கிரந்தங்களில் மகாகவி காளிதாசனுடைய வாக்கியத்தை எடுத்து மேற்கோள் காட்டியிருக்கிறார்கள்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? ஒரு தேசத்தினுடைய உயர்ந்த பண்பு, கலாசாரம் (Culture) என்ன என்று பார்ப்பதற்கு ஒரு பெரிய மகாகவியினுடைய வாக்கைப் பார்த்தால் போதும். மகாகவியினுடைய வாக்கியந்தான் அதற்குப் பிரமாணம். வேதம் எப்படித் தர்மங்களுக்கெல்லாம் பிரமாணமாக இருக்கிறதோ, அப்படியே ஒரு மகாகவியினுடைய வாக்கு அந்தத் தேசத்தினுடைய பண்பாடு, கலாசாரம் இவற்றை அளவிட்டுப் பார்ப்பதற்குப் பிரமாணமாக இருக்கிறது என்று தெரிகிறது. அந்தக் கவி ஒரு மகாகவிதான் என்பதற்கு என்ன அத்தாட்சி என்றால் எத்தனை ஆண்டுகளானாலுங்கூட அவனது காவியம் மறையாமல், பின்னால் வரக்கூடியவர்களாலும் எடுத்துக் கையாளப்படக்கூடிய நிலைமையில், பிற பாஷைகளில் எல்லாம் மொழிபெயர்த்து வைத்துக்கொண்டு போற்றக்கூடிய நிலையில் இருப்பதிலிருந்தே தெரிகிறது. இன்று வந்து நாளை மறைந்து போகக்கூடிய கவிகளை எல்லாம் பார்க்கக் கூடாது. பல காலமாக உறைத்து உறைத்து மக்களுடைய ஜீவனைப் போலவே உறைந்து சாசுவதமாக விளங்கிக்கொண் டிருக்கக் கூடிய காவியங்கள் இருக்கின்றனவே, அவற்றைச் செய்த மகா கவிகள் இருக்கிறார்களே அவர்களுடைய வாக்கியந்தான் பிரமாணம், ஒரு தேசத்தினுடைய உயர்ந்த எண்ணங்களை எடுத்துக் காட்டுவதற்கு, பண்பை எடுத்துக் காட்டுவதற்கு. சாகுந்தலம் என்ற காளிதாசனுடைய நாடகத்தை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு எத்தனை நாடுகளில் அதை மொழிபெயர்த்து

Koviloor Digital Library

வைத்துக்கொண்டு சந்தோஷமாகப் படிக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அவ்வளவு பேரும் அவரவர்கள் பாஷையில் அப்படியே அதை எழுதி வைத்துக்கொண் டிருக்கிறார்கள்.

இன்னொன்று: நம் மதத்தில்தான் ஏராளமான சுவாமிகள் வைத்துக்கொண் டிருக்கிறோம் என்று மற்ற மதத்தார்கள் எல்லாம் பரிகாசம் பண்ணுகிறார்கள். ''சுவாமி என்றால் ஒரு சுவாமி இருந்தால் போதாதா? எத்தனை சுவாமிக்கு விளக்குப் போடுவது, தேங்காய் உடைப்பது'' என்றெல்லாம் பேசுகிறார்கள். இப்படிப் பல சுவாமிகளை வைத்துக்கொண் டிருப்பது போலி தீசம் (Polytheism) என்றும், ஒரே ஒரு சுவாமியை மட்டும் வைத்துக்கொள்வது 'மானோதீசம்' (Monotheism) என்றும் சொல்வர். தீசம் (Theism) என்றால், 'மதத்தில் நம்பிக்கையுள்ளவன்' என்று பொருள்.

அரபு தேசத்தில் அநேக தெய்வங்களைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். ஒரு தத்வத்தைக் கொண்டாடும்படியாக முகம்மதுதான் பண்ணினார். கிரீஸ் தேசத்திலுங்கூட அநேக தெய்வங்களைத்தான் கொண்டாடிக்கொண் டிருந்தார்கள். கிறிஸ்துவ மதம் வந்த பிற்பாடு ஒரு தெய்வம் என்று ஏற்பட்டது என்று கதை சொல்கிறார்கள். இப்போது நமக்கு எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். நம் தேசத்தின் உயர்ந்த பண்பாட்டை, உயர்ந்த எண்ணத்தை எடுத்துச் சொல்லக் கூடியவர்கள், தேசத்தின் கலாசாரத்தையே எடுத்துப் பிரதிபலிக்கக்கூடிய மகாகவிகள் நமக்கு முடிவாக என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று பார்க்கலாம். மகாகவிகள் என்றால் அவர்களுக்கு ஒரு கட்டுப்பாடு கிடையாது. எது மனத்தில் உத்தமமானது என்று தோன்றுகிறதோ அதைச் சொல்லிவிடுவார்கள். யாருக்கும் பயப்பட்டு ஒன்று சொல்வது, சொல்லாமல் விடுவது என்பதே அவர்களுக்குக் கிடையாது.

அப்படிப்பட்ட மகாகவி காளிதாசனைப்பற்றி இப்போது சொன்னேன். மதாசாரியர்கள்கூட, அவனது வாக்கியம் நாடகத்தில் இருந்தாலுங்கூட அதை, தர்மங்களைப்பற்றிச் சொல்ல வருகிற சாஸ்திரக் கிரந்தங்களிலேயே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள் என்பதை இப்போது பார்த்தோம். காளிதாசனைப்போல் பாணன் என்ற கவி ஒருவன் இருந்தான். ஒரு வழியில் பாணன், காளிதாசனுக்கும் மேலே என்றுகூடச் சொல்லலாம். இவர்களை எல்லாம் ஸ்தோத்திரம் பண்ணுகிறபோது பழைய பழமொழி ஒன்று இருக்கிறது.

இப்போது நம் கையில் விரல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு விரலுக்கும் ஒரு பெயர். இந்த முதல் விரலுக்கு அங்குஷ்டம்

Koviloor Digital Library

என்று பெயர். அடுத்தது. தர்ஜனி. அடுத்த விரலுக்கு மத்யமா என்று பெயர். அதற்கு அடுத்ததற்கு அநாமிகா என்று பெயர். ஐந்தாவதற்குக் கனிஷ்டிகா என்று பெயர். தர்ப்பணம் பண்ணுகிறபோது, அங்கந்யாசம், கரந்யாசம் பண்ணுகிறபோது எல்லாம், 'அங்குஷ்டாப்யாம் நம:' தர்ஜநீப்யாம் நம:' 'மத்ய மாப்யாம் நம:' என்று சொல்கிறோம். கனிஷ்டிகா என்றால் எல்லாவற்றையும்விடச் சின்னது என்று அர்த்தம். மத்யமா என்றால் நடுவில் இருப்பது என்று அர்த்தம். அங்குஷ்டம் என்றால் குட்டையாக இருப்பது; ஈச்வரன் அங்குஷ்ட மாத்திரந் தான் எல்லோருடைய இருதயத்திற்குள்ளும் இருப்பதாகச் சொல்வர். தர்ஜனி என்றால் அதட்டுவது. நான்கு பெயர்களுக்கும் காரணம், அர்த்தம் சொல்லலாம். ஆனால் அநாமிகா என்று ஒரு விரலுக்குப் பெயர் சொன்னேன் இல்லையா? அப்படிப் பெயர் வந்ததற்குக் காரணம் தெரியவில்லை; அதனால் தான் பெயரில்லாதது-அநாமிகா-என்றே பெயர் வைத்துவிட்டார்கள். இதைப்பற்றி அநேக கவிகள் உட்கார்ந்து யோசித்தார்கள் ஒரே ஒருவர் மட்டும் ஒரு காரணம் சொன்னார். அவர் சொன்னதுதான் இதுவரைக்கும் உலகத்தில் பழமொழியாகவே வந்துகொண் டிருக்கிறது.

पुरा कवीनां गणनाप्रसङ्गे
कनिष्ठिकाधिष्ठितकालिदासा ।
अद्यापि तत्तुल्यकवेरभावात्
अनामिका सार्थवती बभूव ॥

புரா கவீநாம் கணநாப்ரஸங்கே
கநிஷ்டிகாதிஷ்டிதகாளிதாஸா |
அத்யாபி தத்துல்யகவேரபாவாத்
அநாமிகா ஸார்த்தவதீ பபூவ ||

முன்னொரு சமயத்தில் கவிகளை எண்ண ஆரம்பித்த பொழுது காளிதாசன் ஒன்று என்று சுண்டுவிரலை மடக்கினார்கள். அவனுக்குச் சமானமான வித்வான்கள் இல்லாததனால் இரண்டு என்று மடக்குவதற்கு இரண்டாவது கவி கிடைக்கவில்லை. எனவே அந்த விரலுக்கு அநாமிகை - பெயர் இல்லாதது - என்ற பெயர் ஏற்பட்டது.

சிறந்த கலாசார விஷயங்களைத் தெரிவிக்கும் காவியங்களை எழுதிய சிறந்த கவிகள் 'தீசம்' விஷயமாக என்ன சொல்கிறார்கள் என்று பார்க்கலாம். நம் நாட்டின் மிகச் சிறந்த கவிகளான

Koviloor Digital Library

காளிதாசனும் பாணனும் சொல்வதைப் பார்க்கலாம். பாணன் சொல்கிறார்.

रजोजुषे जन्मनि सत्त्ववृत्तये
स्थितौ प्रजानां प्रलये तमःस्पृशे ।
अजाय सर्गस्थितिनाशहेतवे
त्रयीमयाय त्रिगुणात्मने नमः ॥

ராஜோஜுஷே ஜந்மநி ஸத்வவ்ருத்தயே
ஸ்திதௌ ப்ரஜாநாம் ப்ரலயே தமஸ்ப்ருஶே |
அஜாய ஸர்கஸ்தி திநாஶஹேதவே
த்ரயீமயாய த்ரிகுணாத்மநே நம: ||

பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற திரிமூர்த்திகளைப் பற்றிப் பேசும்போது இவர்கள் மூன்று பேரும் ஒரே தெய்வந்தான். சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற மூன்று தொழில்களையும் செய்வதற்காக ரஜஸ், ஸத்வம், தமஸ் என்ற மூன்று குணத்தின் பிரதிநிதிகளாக அந்த ஒருவரே மூன்று உருவங்களாகத் தோன்றுகிறார். அந்த ஒன்றே-பிறவியில்லாதது; 'அஜ'-இந்த மூன்று உருவங்களுக்கும் தொழில்களுக்கும் குணங்களுக்கும் காரணமானது. இந்த ஒன்றே மேற்சொன்ன மூன்று குணங்களையும் கொண்டது, த்ரயீமய- ரிக், யஜுஸ், ஸாமம் என்ற மூன்று வேதங்களாலும் த்ரயீ - உபதேசிக்கப்படும் பொருள் இதுவே என்ற அர்த்தத்திலும் இது - தரயீமய' ஆகும்.

காளிதாசனும் இதே கருத்தில் இப்படிச் சொல்கிறான்:

एकैव मूर्तिर्बिभिदे त्रिधा सा
सामान्यमेषां प्रथमावरत्वम् ।
विष्णोर्हरस्तस्य हरिः कदाचित्
वेधास्तयोस्तावपि धातुराद्यौ ॥

ஏகைவ மூர்த்திர்பிபிதே த்ரிதா ஸா
ஸாமாந்யமேஷாம் ப்ரதமாவரத்வம் |
விஷ்ணோர் ஹரஸ்தஸ்ய ஹரி: கதாசித்
வேதாஸ்தயோஸ்தாவபி தாதுராத்யௌ ||

ஒரே மூர்த்திதான் இப்படி மூன்றாகத் தோன்றுகிறார். இவர்களுக்குள் உயர்வு தாழ்வு என்பது இல்லை. பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மூவருக்கும் மூலமூர்த்தி ஒன்றானால் இதே நியாயப்படி, முடிவான நோக்கில் ஹிந்து சமயத்தில் சொல்லப்படும் எல்லாத் தெய்வங்களும் ஒன்றேயாகும். இப்படி இருக்கும் போது ஒரு தெய்வம் இன்னொன்றைவிடப் பெரியது என்றும்,

Koviloor Digital Library

தாங்கள் தொழும் கடவுளே உயர்ந்தவர் என்றும் ஜனங்கள் ஏன் சண்டை போட்டுக்கொள்கிருர்கள்? ஒரு நதிக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்துக்குப் பல கண்கள் இருக்கின்றன. ஒரு கண்ணுக்குள் பால வளேவுக்கு அடியில் நிற்கும் ஒருவனுக்கு மற்றக் கண்களும் வளேவுகளும், தான் நிற்கும் கண்ணேயும் வளேவையும் விடச் சிறியனவாகவே தோன்றும். தான் நிற்கும் கண்ணும் வளேவுமே அவன் கண்களுக்குப் பெரியனவாகத் தோன்றும். இதே போல, பக்தன் ஒருவனுக்கு, தன் இஷ்ட தெய்வத்தினிடம் வைத்திருக்கும் பற்றுக் காரணமாக மற்றத் தெய்வங்களெல்லாம் தன் இஷ்ட தெய்வத்தை விடத் தாழ்வானவைகளாகவே தோன்றும். ஆனுல் எல்லாத் தெய்வங்களுமே ஒவ்வொரு வகையில், மூலமான ஒரே தெய்வத்தின் தோற்றங்களேயாகும் என்பதுதான் உண்மை. பாலத்தின் கண்களெல்லாம் ஒரே மாதிரியாக ஒரே அளவில் கட்டப்பட்டவையே.

பிரபஞ்சப் பொருள்கள் எல்லாவற்றுக்குள்ளும் மூலப் பொருளாக நிற்பவன் கடவுள்தான்; இதுதான் உண்மை. ஒரு மரத்தைப் பார்க்கலாம். மண்ணும் தண்ணீருந்தான் விதை, மரமாக வளர்வதற்குத் துணே செய்யும் சாதனங்கள். மண்ணும் தண்ணீருந்தான் மரத்தைக் காப்பாற்றுகின்றன. மரம் பட்டுப் போய் அழியும்போது அது வளர்வதற்குக் காரணமாக நின்ற மண்ணும் நீருமாகவே அது மாறிவிடுகிறது. மண்ணில் தோன்றி, மண்ணுல் காப்பாற்றப்பட்ட மரம் கடைசியில் மாய்ந்து மண்ணுகவே ஆகிவிடுகிறது. இது ஒரு மரத்தின் சரித்திரம். எல்லா மரங்களின் சரித்திரமும் இதுதான். மரங்களேப்போல் உலகில் தோன்றும் எல்லா ஜடப் பொருள்களுக்கும் இந்த வரலாறு பொருந்தும். ஒரே பொருள் காரணமான பிறப்பு, வளர்ப்பு, அழிவு என்ற இந்த வரலாறு ஜடப்பொருள்களின் விஷயத்தில் மட்டுமன்றி அறிவோடு கூடிய சித்துப் பொருள்களின் விஷயத்திலும் உண்மையேயாகும். ஒவ்வொரு மரத்தின் தோற்றம், வளர்ச்சி, மறைவு மூன்றுக்கும் ஆதாரமான மண்களுக்கெல்லாம் மூலமான பிருதுவி ஒன்று இருப்பது போலவே அறிவுள்ள ஒவ்வோர் உயிரின் அறிவுக்கும் மூலமான மூலஅறிவு அல்லது 'பேர் அறிவு' ஒன்று இருந்தே ஆகவேண்டும். இந்தப் பேர் அறிவு அல்லது 'சித்'தான் கடவுள் அல்லது இறைவன். இதுவே ஆனந்தம், அல்லது பேரின்பம். இதுவே மூலப் பொருள் அல்லது என்றும் உள்ள பொருள் - 'ஸத்' இந்தப் பொருளே, ரஜோகுண சம்பந்தத்தினுல் சிருஷ்டியையும், சத்துவ குண சம்பந்தத்தினுல் ஸ்திதி அல்லது காப்பையும், தமோகுண சம்பந்

Koviloor Digital Library

தத்தினுல் ஸம்ஹாரம் அல்லது அழிப்பையும் செய்கிறது. கடவுள் முக்குணத்தின் நிறைவு 'திரிகுணாத்மன்' என்பது இதனுல் விளங்குகிறது. ஒரே மூர்த்திதான் இப்படி மூன்று மூர்த்திகளாக விளங்குகிருர்.

நிர்க்குணனை அல்லது குணம் அற்றவனை, சுத்த 'சித்' ஆன பரப்ரஹ்மம் 'சுத்த ஸத்வத்'தின் சம்பந்தம் பெற்று, குணம் உள்ள தெய்வமான ஈச்வரனுக மாறுகிறது. சிருஷ்டி, பரிபாலனம், ஸம்ஹாரம் அல்லது ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற இந்த மூன்று தொழில்களையும் செய்யவேண்டியது இந்த ஈச்வரனின் கடமை ஆகிறது. சிருஷ்டி செய்வதற்கு இவன் தொழிற்பட வேண்டியது அவசியமாகிறது. தொழிற்படுவதற்கு வேண்டிய தூண்டுதலை அல்லது ஆற்றலை ரஜோகுணம் கொடுக்கிறது; எனவே ரஜோகுண சம்பந்தத்தினுல் மூல புருஷனை இறைவன் சிருஷ்டி கர்த்தாவான பிரம்மனுகிருன். இப்படிச் சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களைக் காத்து ரட்சிக்க வேண்டுமே. சாதாரண அல்லது மிச்ர ஸத்வகுண சம்பந்தத்தினுல் ஈச்வரன் இந்தத் தொழிலைச் செய்கிருன். இந்த அவசரத்தில், ஈச்வரன் செல்வத்துக்குத் தலைவியாகிய லக்ஷ்மியின் கணவனை விஷ்ணு ஆகிருன். சிருஷ்டித்தவற்றுக்கெல்லாம். அழிவை உண்டாக்க - வெளிப்பட்டிருப்பவைகளை மறுபடியும் உள்ளடக்கிக் கொள்ள, பிரபஞ்சத்துக்கு முடிவை உண்டாக்க - தமோகுண சம்பந்தம் அவசியமாகிறது. இப்படித் தமோகுண சம்பந்தத்தை மேற்கொண்ட ஈச்வரனே சிவனுகிருன். இங்கே சிவன் என்ற ரூபத்தின் தொழிலாகச் சொல்லப்பட்ட ஸம்ஹாரத்துக்கும் இரக்கமற்ற கொடுமைக்கும் சம்பந்தம் இல்லை என்பதைக் கவனிக்க வேண்டும். பலனை அநுபவிக்காத - சஞ்சித கர்மாக்களைக் கொண்ட-அஞ்ஞான சம்பந்தம் பெற்ற ஆத்மாக்கள், அடுத்த பிறவிக்கு, அந்தக் கர்மாநுபவங்களுக்காகத் தள்ளப்படுமுன் பிரளய கால முடிவு வரையில் அவற்றுக்கு ஒய்வு கொடுப்பதாகிய கருணைச் செயலே ஆகும் இது. ரஜஸ், ஸத்வம், தமஸ் என்ற இந்த மூன்று குணங்களுக்கும் சுத்தஸத்வ ஸ்வரூபனை ஈச்வரனுக்கும் உண்மையில் ஒரு வகையான சம்பந்தமும் இல்லை. குறிப்பிட்ட சில காரியங்களைச் செய்வதற்காக இந்தக் குணங்களை மேற்போட்டுக்கொண்டு ஈச்வரன் இப்படி மூன்று உருவங்களாகத் தோன்றுகிருன். தோற்றத்தில்தான் வேறுபாடே ஒழிய மூலதத்வத்தில் வேறுபாடு ஒன்றும் இல்லை.

பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளும் ரஜோகுண, ஸத்வகுண, தமோகுண' சம்பந்தம் உடையவர்கள் என்று சொல்வது முடிந்த முடிபல்ல. ஸத்வகுண சம்பந்தம் உடை

Koviloor Digital Library



Koviloor Digital Library



Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

யவன் என்று சொல்லப்படும் விஷ்ணு சில சந்தர்ப்பங்களில் தன் மேல் தமோகுணத்தை ஏற்றுக்கொண்டபோது, நரசிம்மாவதாரத்திலும், ராமாவதாரத்தில் கரன் தூஷணன் கும்பகர்ணன், ராவணன் இவர்களோடு போர் செய்த போதும் இலங்கைக்குத் தானும் சேனைகளும் செல்ல வழி மறுத்தபோது கடலை வற்றச் செய்துவிடுவதாகப் பயமுறுத்திய போதும், ஸம்ஹார அம்சம் வெளிப்படுகிறது. ராமன் இந்தச் சமயங்களில் குரோதத்தைத் (தமோகுணத்தை) தானுக ஏற்றுக் கொண்டதாகவே வால்மீகி சொல்கிறுர். குரோதம் அல்லது கோபம் தமோகுணத்தின் தொழில். இதே மாதிரி ஸம்ஹாரத்துக்காகத் தமோகுணஸ்பரிசத்தை ஏற்றுக்கொள்ளும் சிவன் நடராஜனுகவும் தக்ஷிணுமூர்த்தியாகவும் நிற்கும்பொழுது ஸத்வ குண சம்பந்தனுகத் தெரிகிறுன். நிர்க்குணப் பிரம்மம் தன் மேல் சுத்த ஸத்வகுணத்தைக் கொள்வதால் ஈச்வரனுகத் தோன்றுகிறது. சுத்தஸத்வ ஈச்வரன் மிச்ர ரஜோகுணத்தை ஏற்றுக்கொண்டு பிரம்மாவாகவும், மிச்ர ஸத்வகுணத்தை ஏற்றுக்கொண்டு விஷ்ணுவாகவும், மிச்ர தமோகுணத்தை ஏற்றுக்கொண்டு சிவனுகவும் தோற்றமளிக்கிறுன். இதுபோலவே விஷ்ணு தன்மேல் தமோகுணத்தை ஏற்றுக்கொள்வதால் நரசிம்மனுகவும், சிவன் தன்மேல் சத்வகுணத்தை ஏற்றுக்கொள்வதால் தக்ஷிணுமூர்த்தியாகவும் தோன்றுகிறுர்கள்.

எனவே பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற இந்தத் தெய்வ உருவங்கள் வேறுபாடும் தனிப்பண்பும் உடையவை அல்ல. பல்வேறு பிரபஞ்சத் தொழில்கள் நடைபெறுவதற்காகவும், பக்தர்களின் ஆசைகளையும் குறிக்கோள்களையும் பூர்த்தி செய்வதற்காகவும் மூலப்பொருளான ஒரே தெய்வம் பல வடிவங்களைப் பெற்றுத் தோன்றுவதுதான் இது. இந்த உருவத் தோற்றங்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பித்துப் பேசுவதோ, இவற்றை வேறுபடுத்திப் பேசுவதோ தவறு. இத்தகைய கற்பனுபேதங்களையே முடிவாகக்கொண்டு சமயங்களுக்குள் சண்டை சச்சரவுகள் நடப்பதற்கு இடமே இல்லை. ஆதியான ஒன்றேதான் மூன்றுகி, முப்பத்துமூன்றுகி, முப்பத்துமூன்று கோடியும் ஆகி விரிந்த தோற்றமளிக்கிறது; இறைவனின் பலவேறு தொழில்களையும் குறிக்கும் அடையாளங்களாக, ரூபங்கள் வேருக இருக்கலாம்; நாமங்கள் வேருக இருக்கலாம்; ஆனுல் முடிந்த முடிவில், 'இறைவன் ஒருவனே' என்பதுதான் உண்மை. மகாகவிகள் சொல்லும் அடிப்படைத் தத்துவம் இதுதான். இப்படித்தான் ப்ருஹதாரண்யக உபநிஷத், ருக்வேதம், யஜுர்வேதத்தின் ருத்ராத்யாயம் இவையெல்லாம் சொல்கின்றன.

Koviloor Digital Library

5
பழைய சாஸ்திரங்கள்

நம் பெரியவர்கள் எழுதிவைத்துள்ள சாஸ்திரங்களில் அநேகம் மறைந்துபோயிருக்கின்றன. இப்போது இருக்கிற சாஸ்திரங்களுக்கும் சரியாக அர்த்தம் தெரியவில்லை. கொஞ்சம் தெரிந்துகொண்டவர்களும் நிரம்பக் குறைவு.

வராகமிகிரர் என்று ஒருவர் இருந்தார். அவர் கிட்டத்தட்ட 1,50' வருஷங்களுக்கு முந்தி இருந்தவர். அவர் அநேக புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார்.

விக்கிரமாதித்தன் என்று ஒரு ராஜா இருந்திருக்கிறான். விக்கிரமாதித்தன் என்ற பெயரிலே இரண்டு மூன்று ராஜாக்கள் இருந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள், அந்தச் சரித்திரத்தை ஆராய்ச்சி பண்ணினவர்கள். அதிலே ஒரு ராஜாவுக்கு ஹர்ஷன் என்ற பெயரோடு விக்கிரமாதித்தன் என்ற பெயரும் உண்டென்று சொல்லுகிறார்கள். எப்படியோ விக்கிரமாதித்தன் என்ற ஒருவன் பெரிய ராஜாவாக இருந்தான். அவனது சபையில் நவரத்தினங்கள் இருந்தார்கள்: ஒன்பது வித்வான்கள் இருந்தார்கள். அவர்களைத்தான் நவரத்னங்கள் இருந்தார்கள் என்று சொல்லுகிற சுலோகம் ரொம்ப நாளாகப் பழக்கத்தில் இருந்துகொண் டிருக்கிறது.

धन्वन्तरिक्षपणकामरसिंहशङ्कुवेतालभट्टघटकर्परकालिदासाः ।
ख्यातो वराहमिहिरो नृपतेः सभायां रत्नानि वै वररुचिर्नव विक्रमस्य ॥

தந்வந்தரிக்ஷபணகாமரஸிம்ஹஶங்குவேதாலபட்டகடகர்ப்பர
[காளிதாஸா:]
க்யாதோ வராஹமிஹிரோ ந்ருபதே: ஸபாயாம் ரத்நாநி வை வரருசிர்
நவ விக்ரமஸ்ய ||

Koviloor Digital Library

கிருஷ்ணதேவராயர் என்று ஒருவர் 400 வருஷங்களுக்கு முன் விஜயநகர ராஜ்யத்தைப் பரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்தார். விஜயநகரம் என்ருல் விசாகப்பட்டணத்திற்குச் சமீபத்தில் உள்ளது என்று நினைப்பார்கள். இது ஒரு சிறிய ஜமீன்தாரி ஏரியா; இது இல்லை நான் சொல்வது. பெல்லாரி ஜில்லாவில் ஹாஸ்பெட் என்று ஓர் ஊர் இருக்கிறது. துங்கபத்ரா நதி தீரத்தில் ஹம்பி என்று இப்போது ஓர் ஊர் இருக்கிறது. பம்பாசரஸு, கிஷ்கிந்தை எல்லாம் அதன் பக்கத்தில்தான் என்று சொல்கிருர்கள். பம்பாசரஸு என்பதைத்தான் ஹம்பா ஸரஸ் என்று கன்னடர்கள் சொல்கிருர்கள். 'ப' எல்லாம் அவர்களுக்கு 'ஹ' தான்' நாம் 'பாலு' என்ருல் 'ஹாலு' என்று சொல்வார்கள். 'ஹம்பி ரூயின்ஸ்' என்று அங்கே சொல்கிருர்கள். அந்த இடத்திலே பெரிய ராஜ்யமாக, விஜயநகர சாம்ராஜ்யம் விளங்கிவந்தது. அதிலே கிருஷ்ணதேவராயர் மகத்தான தசையில் இருந்து தென்னுடு முழுவதையும் - அநேகமாகக் கன்னியாகுமரியிலிருந்து கிருஷ்ணுதீரம் உள்படப் - பரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்தார். இவருடைய ராஜ்யசபையில் அஷ்டதிக்கஜங்கள் இருந்தார்கள் என்று சொல்வர். எட்டுப் பேர் பெரிய மேதாவிகளாக அவருடைய ராஜ்யத்தில் இருந்தார்கள் என்பதுதான் இதன் பொருள். விக்கிரமாதித்தன் சபையில் ஒன்பது பேர் இருந்தார்கள். கிருஷ்ணதேவராயர் சபையில் இருந்த எட்டுப்பேர்களையும் அஷ்டதிக்கஜங்கள் என்றும், விக்கிரமாதித்தன் சபையில் இருந்த ஒன்பது பேரையும் நவரத்னங்கள் என்றும் சொல்வார்கள்.

धन्वन्तरिक्षपणकामरसिंहशङ्कुवेतालभट्टघटकर्परकालिदासाः ।
ख्यातो वराहमिहिरो नृपतेः सभायां रत्नानि वै वररुचिर्नव विक्रमस्य ।।

தந்வந்தரிக்ஷபணகாமரஸிம்ஹஶங்குவேதாலபட்டகடகர்ப்பர-
காளிதாஸா: |
க்யாதோ வராஹமிஹிரோ ந்ருபதே: ஸபாயாம் ரத்நாநி வை
வரருசிர்நவ விக்ரமஸ்ய ||

என்ற சுலோகம் பரம்பரையாக வந்துகொண்டிருக்கிறது. அந்தச் சுலோகத்தில்கூட வெவ்வேறு காலத்தில் இருந்தவர்களை எல்லாம் ஒரு காலத்தில் இருந்ததாக, விக்கிரமாதித்தன் ராஜ்ய சபையில் இருந்ததாகப் பண்ணிவிட்டார்கள் என்று ஆராய்ச்சிக்காரர்கள் சொல்கிருர்கள். எப்படியோ ஒரு பேர் வந்திருக்கிறது. 'இவர்கள் எல்லாம் விக்கிரமாதித்தன் ராஜ்யத்தில் இருந்தார்கள்' என்று. இந்தச் சுலோகத்திலும், தன்வந்தரி என்று பெயரை

Koviloor Digital Library

மாத்திரந்தான் சொல்லியிருக்கிறது. க்ஷபணகன் என்று ஜைன னுக்குப் பெயர்.

क्षपणकामरसिंह

க்ஷபணகாமரஸிம்ஹ

'ஜைனனாக இருக்கும்படியான அமரசிம்மன்' என்று அமர சிம்மனுக்கு ஒரு விசேஷம் போட்டிருக்கிறார்.

ख्यातो वराहमिहिरः

க்யாதோ வராஹமிஹிர:

என்று நிரம்பக் கீர்த்தி அடைந்த வராஹமிஹிரர் என்று-காளி தாசனுக்குக்கூட விசேஷம் போடவில்லை. இவருக்கு நிரம்பக் கியாதி பெற்றவர் என்று போட்டிருக்கிறார்கள். இதிலிருந்து இவர் ஒருவராவது விக்கிரமாதித்தன் ராஜ்யத்தில் நிச்சயமாக இருந்திருப்பார் என்று தெரிகிறது.

இந்த வராஹமிஹிரர் அநேக புஸ்தகங்கள் எழுதியிருக் கிறார். அதிலே ப்ருஹத் ஸம்ஹிதை என்பது ஒன்று. இதிலே ஏறக் குறைய 100 அத்யாயங்களுக்கும் மேலே இருக்கும். நிறைய இருக் கின்றன அத்யாயங்கள்; அவர் முதலிலே எழுதுகிறபோது, 'நான் ஒவ்வோர் அத்தியாயமாக எழுதியிருக்கிறேனே, இவைகள் எல் லாம் ஒவ்வொரு சாஸ்திரமாக இருந்திருக்கின்றன பழைய நாளில். இப்போது புஸ்தகம் படிக்கிற பழக்கம் எல்லாம் போய் விட்டது. சுருக்கமாக எழுதவேண்டும் என்பதற்காக அங்கங்கே ஒவ்வொரு சாஸ்திரமாகச் சிதறியிருப்பதை எல்லாம் ஒவ்வோர் அத்யாயமாகச் சேர்த்துப் படித்து, எழுதி இந்தப் புத்தகத்தை வைத்திருக்கிறேன்' என்று எழுதியிருக்கிறார்.

இந்தப் பிருஹத் ஸம்ஹிதை என்ற புத்தகத்தைப் பார்க்கிற போதே நமக்கு நிரம்பப் புதிதாக இருக்கிறது. அதில் உள்ள விஷயங்களை வேறு எங்கேயும் பார்க்க முடியாது. 'இன்ன மரம் இன்ன இடத்தில் இருந்தால் இன்ன இன்ன பக்கத்தில் தண்ணீர் ஓடும்' என்பதாக முழுக்க முழுக்கத் தாவர சாஸ்திரத்தைப் பற்றி; அப்புறம் பட்சிகளுடைய சாஸ்திரம், மிருகங்களுடைய சாஸ்திரம், தாதுக்களுடைய சாஸ்திரம், இன்னும் நமக்கு வேறு எங்கும் அகப்படாதது, நாடிகளுடைய சாஸ்திரம் இப்படி உல கத்திலுள்ள எல்லாம் அந்தப் பிருஹத் ஸம்ஹிதையில் அடங்கி யிருக்கின்றன. நான் எதற்காகச் சொன்னேன்: அதிகம் பேர் கேள் விப்படாத இப்பேர்ப்பட்ட அபூர்வமான விஷயங்கள் எல்லாம்

Koviloor Digital Library

அடங்கின புத்தகம் ஒன்று இருக்கிறது என்ற உதாரணத்திற்காகச் சொல்கிறேன். இவற்றுள் நாடி சாஸ்திரம் ஒன்று.

இப்படிப்பட்ட உயர்ந்த சாஸ்திரக் கிரந்தங்கள் எல்லாம் நமக்கு இல்லாமல் போய்விட்டன. இப்படிப் பெரிய சாஸ்திரங்களாக இருந்ததிலிருந்து அங்கங்கே துளித் துளியாக, ஒவ்வோர் அத்தியாயமாகப் பிருஹத் ஸம்ஹிதையில் வராஹமிஹிரர் சொல்லியிருக்கிறதைப் பார்த்தால் அந்த அந்தச் சாஸ்திரக் கிரந்தங்கள் எல்லாம் எப்படி இருந்திருக்கும் என்று ஆச்சரியமாக இருக்கிறது என்பதற்கு உதாரணமாகச் சொன்னேன்.

விக்கிரமாதித்தன் நாளில் அவன் வெகு புத்திசாலித்தனமாக ஏகசக்ராதிபதியாக, ராஜ்யபரிபாலனம் செய்தான் என்ற கீர்த்தியோடு நல்ல நல்ல பண்டிதர்களை, வித்துவான்களை எல்லாம் வைத்து ஆராய்ச்சி பண்ணி, தத்துவபூர்வமாக உயர்ந்த சாஸ்திரங்களையும் எழுதிவைத்தான் என்ற கீர்த்தியும் உண்டு. இந்தச் சாஸ்திரபலத்தின் பேரிலேதான், இதை ஆதாரமாக வைத்துத்தான், லோகமே ஆச்சரியப்படும்படியாக அநேக ராஜ்யங்கள் மிகமிக உன்னதமான நிலைமையில் இருந்திருக்கின்றன; தேசத்துக்கு அநேக நன்மைகளைச் செய்திருக்கின்றன என்று தெரிகிறது.

அப்படித்தான் சரித்திரங்களும் சொல்கின்றன. விஜயநகர ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னுல், முதல் முதல் மாலிக் காபூர் என்பவன் தட்சிண தேசத்தில் படையெடுத்து வந்து கோயில்களை எல்லாம் இடித்து, பசுக்களை எல்லாம் ஹிம்சை செய்து, பல ஜனங்களைக் கஷ்டப்படுத்தி, ஒரே ரணகளமாகப் பண்ணி, ராமேசுவரத்துக்குப் போய் அங்கே பெரிய மசூதியைக் கட்டி இப்படி அநேக கொடுமைகளைப் புரிந்திருக்கிறுன்; மதுரையில் தன்னுடைய மனிதர்களை வைத்து, திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே கண்ணனூரில் மாரியம்மன்கோயில் உள்ள சமயபுரத்திற்குப் பக்கம் தன்னுடைய பிரதிநிதி ஒருவனை நியமித்தான் என்றும் தெரிகிறது. இந்த இடத்தைத்தான் போஜேச்வரம் என்று சொல்வர்; இங்கே கர்நாடக ராஜாக்கள் இருந்திருக்கிறுர்கள்.

ஸ்ரீரங்கத்துக் கோயிலில் 700, 800 வருஷத்துச் சரித்திரத்தை எல்லாம் எழுதி வைத்திருக்கிறுர்கள், டைரியைப் போல. அந்தக் கோயிலில் வைஷ்ணவ சாஸ்திர காலக்ஷேபம் பண்ணிக்கொண்டிருக்கிற காலத்தில் கலகக்காரர்கள் வருகிற சத்தம் கேட்டு, அவர்கள் எல்லாரும் பயந்துகொண்டு ஸ்ரீரங்கநாதரைத் தூக்கிக்கொண்டு எங்கெங்கேயோ மலையாளத்துக்கும், இன்னும் வேறு தேசத்துக்கும் ஓடிப்போய்விட்டதாகவும்,

Koviloor Digital Library

செஞ்சிக்கோட்டைத் தளபதி கோபன்னன் உதவியினால் அப்புறம் ஐம்பது அறுபது வருஷங்கள் கழித்துத் திரும்பியும் ரங்கநாதரை ஸ்ரீரங்கத்துக்குக் கொண்டுவந்து வைத்ததாகவும் வரலாறு இருக்கிறது. கோபன்னராயர் செஞ்சிக்கோட்டைக்கு அதிபதியாக இருந்தார். இவர் பேரில்கூட வேதாந்ததேசிகர் இரண்டு சுலோகம் எழுதி ஸ்ரீரங்கத்துச் சுவரிலே பொறித்திருக்கிறார். ஸ்ரீரங்க நாதரைத் திரும்பியும் ஸ்ரீரங்கத்துக்குக் கொண்டுவந்து சேர்த்தாரே என்று வேதாந்த தேசிகர் எழுதியிருக்கிறார். மாலிக்காபூர் படையெடுப்பினால் அழிந்து போன ராஜ்யங்கள், கோயில்கள், பசுக்கள், தர்மங்கள் எல்லாம் வித்தியாரண்யர் காலத்தில்தான் புனருத்தாரணம் செய்யப்பட்டன.

வித்தியாரண்யர்தாம் நான்கு வேதத்துக்கும் சேர்த்துப் பாஷ்யம் பண்ணியிருக்கிறார். இதுவரையிலும் நான்கு வேதங்களுக்கும் பாஷ்யம் பண்ணினவர்கள் அவரைத் தவிர வேறு யாரும் இல்லை. ஒவ்வொரு வேதத்தில் ஒவ்வொரு பாகத்துக்குப் பாஷ்யம் பண்ணினவர்கள் இருக்கிறார்கள். ஆனால் வித்தியாரண்யர்தாம் நான்கு வேதத்துக்கும் முழுக்கப் பாஷ்யம் பண்ணியிருக்கிறார். வேதத்திற்கு மாத்திரம் இல்லை. அதை அனுசரித்து ஜோதிஷ சாஸ்திரத்திற்கு, தர்ம சாஸ்திரத்திற்கு, வைத்திய சாஸ்திரத்துக்கு, ராஜ்ய பரிபாலனம் பண்ணும்படியான அர்த்த சாஸ்திரத்துக்கு, இலக்கிய உலகத்துக்கு முதலியவற்றுக்கு இவர் தந்திருக்கும் புஸ்தகங்கள் கணக்கு வழக்கு இல்லாமல் இருக்கின்றன. வித்தையையே காடு - அரண்யம் - என்று சொல்வர். பெருத்த காடு; அதற்குள் புகுந்து வர முடியாது. வித்தியாரண்யர் அவ்வளவு புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார்!

இவரைப்பற்றி ஒரு கதை சொல்வர். சரித்திரத்தில் இதற்கு ஆதாரம் இருக்கிறதோ என்னவோ? இவர் பிரம்மசாரியாக இருந்த காலத்தில் மகாலட்சுமியைக் குறித்துக் கடுமையான தபஸ் பண்ணினாராம். ஆசார்யாள் சந்நியாசம் வாங்கிக் கொண்டதற்கு ஒரு கதை; அம்மாவோடு நதிக்கரைக்குப் போனார். முதலை காலைப் பிடித்துக்கொண்டுவிட்டது. 'இந்த ஜன்மாவிலே இனி ஆயுசு கிடையாது' என்றவுடன், 'அம்மா சந்நியாசம் வாங்கிக்கொள்ள அனுமதி கொடு. மறுஜன்மம் வந்துவிட்டது போல ஆகும். நான் பிழைத்துவிடுவேன்' என்று சொல்லிச் சந்நியாசம் வாங்கிக்கொண்டார். முதலை காலை விட்டது. அதுபோலவே வித்தியாரண்யர் சந்நியாசம் வாங்கிக்கொண்ட கதை இது:

வித்தியாரண்யர் மகாலட்சுமியை நோக்கித் தபஸ் பண்ணின காலத்தில் ஏகாக்கிர சித்தத்தோடு இவர் பண்ணுகிற தபசைப்

Koviloor Digital Library

பார்த்து, மகாலட்சுமி பிரத்தியட்சமானுள். இவர் பரம ஏழையாக இருந்தவர். மகாலட்சுமி, "உனக்கு என்ன வேண்டும்!" என்று கேட்டபோது, "எனக்கு நிறையச் செல்வத்தைக் கொடு. உலகத்தில் யாரிடத்திலும் இல்லாத அளவு ஐச்வர்யத்தை எனக்குக் கொடு" என்று இவர் கேட்டாராம். மகாலட்சுமி, "அப்பா, உனக்கு இந்த ஜன்மத்தில் ஐச்வர்யம் கொடுப்பதற்கு இல்லையே; வேண்டுமானுல் அடுத்த ஜன்மாவில் நிறைய ஐச்வர்யத்தைக் கொடுக்கிறேன்; இந்த ஜன்மாவில் கொடுக்க எனக்கு யோக்கியதை இல்லை" என்று சொன்னுளாம். அடுத்த ஜன்மாவில் தருகிறேன்" என்று சொன்னவுடன் வித்தியாரண்யர் எப்படியாவது ஐச்வர்யத்தைப் பெற்றுவிடவேண்டுமென்று உடனே சந்நியாசம் வாங்கிக்கொண்டு, "சந்நியாசம் வாங்கிக்கொண்டால், சாஸ்திரப்படி மறு ஜன்மமாகப் போய்விடாதா? நான் சந்நியாசம் வாங்கிக்கொண்டுவிட்டேன். இப்போது ஐச்வர்யத்தைக் கொடு" என்ருராம். உடனே மகாலட்சிமியும் சொர்ணத்தை வருஷித்தாளாம்.

நிலம் முழுக்க எங்கே பார்த்தாலும் ஒரே தங்கமாகத் தெரிந்தது; நவநிதியும் தெரிந்தது; இவற்றைப் பார்த்தவுடன் வித்தியாரண்யர் அழ ஆரம்பித்துவிட்டாராம். 'அடடா, என்ன முட்டாள் தனமாகக் கேட்டோம். ஆசிரமம் வாங்கிக்கொண்ட பின் நமக்குத் தங்கம் எதற்காக? சந்நியாச ஆசிரமத்தில் இதைத் தொடவும் கூடாதே. கேட்காமல் இருந்திருந்தால் அடுத்த ஜன்மாவிலாவது மகாலட்சுமி வேண்டிய ஐச்வர்யத்தைக் கொடுப்பாளே. இனி அடுத்த ஜன்மாவிலும் அவள் கொடுக்க மாட்டாள். சந்நியாச ஆசிரமத்தை வாங்கிக்கொண்டுவிட்ட நாம் இப்போது அவள் கொடுத்ததையும் தொட முடியாது' என்று அழுதாராம்.

அப்போதுதான் மாலிக்காபூர் தென்னுட்டுக்குப் படையெடுத்து வந்து, எல்லா ராஜ்யங்களும், எல்லாக் கோயில்களும் சிதறுண்டு போகும்படியாக, பசுக்கள், தர்மங்கள் எல்லாம் அழிந்து போகும்படியாக எல்லாவற்றையும் ரணகளமாகப் பண்ணிவிட்டுப் போயிருந்தான். 'சரி, இந்த ஐச்வர்யத்தைக் கொண்டு, இவற்றையெல்லாம் ஒழுங்கு செய்வது' என்று வித்தியாரண்யர் தீர்மானம் பண்ணிக்கொண்டாராம். ஆடு மேய்க்கிறவனுக்குக் குறும்பன் என்று பெயர். அப்போது அங்கே ஹரிஹரன், புக்கன் என்ற இரண்டு பேர் - அண்ணன் தம்பி - ஆடு மேய்த்துக்கொண் டிருந்தார்கள். அந்த இரண்டு குறும்பர்களையும் அழைத்து, அந்தத் துங்கபத்திரைப் பிரதேசத்திலேயே, ஒரு

Koviloor Digital Library

ராஜ்யத்தை ஸ்தாபித்து அதற்கு ராஜாக்களாக அவர்களை ஏற்படுத்தினர். முன்னடியே சகுனம் பார்த்து, சாஸ்திரம் பார்த்து, 'அந்த ராஜ்யத்தை எங்கே ஸ்தாபிப்பது? ஸ்தாபித்தால் அந்த ராஜ்யம் எவ்வளவுகாலம் இருக்கும்?' என்பதாக வித்தியாரண்யர் அதற்கு ஒரு ஜாதகத்தைக் கணித்திருக்கிறார். அந்த ராஜ்யந் தான் விஜயநகர சாம்ராஜ்யம். அப்போது ஹரிஹர புக்கனுடைய பந்துக்களிலேயே—அண்ணன் தம்பி பிள்ளை—கம்பன்னன் என்று ஒருத்தன்; இவனுக்கும் உபாஸனை பலம் உண்டு; மதுரா நகர தேவதையின் அருளினால் அவனுக்கு ஒரு வாள் கிடைத்தது. அவனை அந்த ராஜ்யத்தின் சேனாதிபதியாகப் போட்டார். கம்பன்னனுக்கு 'உடையார்' என்ற பட்டமும் உண்டு. கன்னட தேசத்தவர்களுக்கு இப்போதும் உடையார் என்ற பெயர். இருக்கிறது. மைசூர் ராஜாவுக்கு உடையார் என்று பெயர் இந்தச் சேனாதிபதி கம்பன்ன உடையாரைத்தான் தென்னாட்டுக்கு அனுப்பிவைத்து அங்கங்கே சிதறுண்டு போன ராஜ்யங்களை ஒன்று சேர்த்து, ஒவ்வோர் இடத்துக்கும் ஒவ்வொரு பிரதிநிதியை விஜயநகர சாம்ராஜ்யத்தின்கீழ் நிர்வாகம் நடத்தும்படி நியமித்து நிர்வாகம் நடக்கச் செய்திருக்கிறார். கம்பன்ன உடையார் ராமேசுவரம் வரைக்கும் திக்விஜயம் செய்திருக்கிறார்.

கம்பன்ன உடையாருடைய ஸ்திரிகளிலே கங்கா தேவி என்று ஒருத்தி. அந்தக் கங்காதேவி என்பவர் அவர் கூடவே அவர் படையெடுத்துச் சென்ற இடங்களுக்கெல்லாம் பின்னோடேயே போயிருக்கிறாள். அவளுக்கு ஸம்ஸ்கிருதத்தில் நல்ல பாண்டித்தியம் உண்டு. அவர் படையெடுத்துச் சென்றபோது அவர் கூடவே சென்ற கங்காதேவி அங்கங்கே நடந்த நிகழ்ச்சிகளை யெல்லாம், திரும்பி ஊர் வந்து சேருகிற வரையில் அப்படியே வரலாறாக எழுதியிருக்கிறாள். காளிதாசன்கூடத் தோற்றுப் போய்விடுவான்! அவ்வளவு நன்றாக அந்தக் குறிப்புகளை எல்லாம் நல்ல காவியமாக எழுதியிருக்கிறாள். அந்த உயர்ந்த காவியத்தை 'எபிக்ராபிகல் டிபார்ட்மென்டார்' அச்சுப் போட்டிருக்கிறார்கள். அதற்குக் 'கங்காதேவி மதுரா விஜயம்' என்று பெயர்.

டில்லியிலிருந்து வந்தவனுடைய பிரதிநிதிகளாக இங்கே இருந்தவர்களோடு 'கம்பன்ன உடையார்' ஐந்தாறு யுத்தம் செய்திருக்கிறார். மதுரையில்தான் பெரிய யுத்தம். நகர தேவதையே தோன்றி, ''நீ யுத்தம் பண்ணு. வெற்றி உனக்குத் தான்'' என்று கம்பன்ன உடையாருக்கு அநுக்கிரகம் பண்ணினளாம். அதன் பேரில் சண்டை போட்டுக் கம்பன்ன உடையார்

Koviloor Digital Library

பகைவர்களைத் தோற்கடித்தார் என்பதாகக் கதை. அவ்வளவை யும் காவியமாக, அழகாகக் கங்காதேவி எழுதியிருக்கிறாள்.

நான் கண்ணனூருக்கு நேரே போயிருந்தேன். அங்கே உள்ள சுவாமிக்குப் போஜேச்வரர் என்று நாமம். மைசூர் ராஜ்யத்தோடு சேர்ந்து கன்னடர்களுடைய ஆட்சியில் அந்தப் பிரதேசம் இருந்திருக்கிறது. போச்சலேசுவரர் என்ற பெயர் இப்போது போஜேச்வரர் என்று மாறியிருக்கிறது. அந்தக் கோயிலை நான் பார்த்தேன்.

வெளிப்பிராகாரம் இரண்டு பக்கத்திலும் கட்டிடம் எழுப்பி, நடுவில் செங்கல் ஜல்லி, கருங்கல் ஜல்லி, மண், சுண்ணும்பு எல்லாவற்றையும் கொட்டி அப்படியே சமப்படுத்தி வைத்திருக்கிறார்கள். இப்போது ஒரு பக்கம் வீணாகிவிட்டது. எலும்பு மாதிரி ஒரு பக்கத்தில் இருக்கும்படியான கல்தான் நிற்கிறது. நான்கு பக்கத்துப் பிராகாரமும் அப்படி இருந்தது, நான் பார்த்தபோது. கோயில் கோபுர வாசலில் எழுதியிருக்கிறது: 'இந்தக் கோயிலைத் துலுக்கர்கள் நாசம் பண்ணுகிற காலத்தில் கம்பன்ன உடையார் இந்தக் கோயிலை ரட்சித்தார்' என்று. காவியத்திலும் இந்த விஷயம் இருக்கிறது. இந்தக் கோயில் கல்வெட்டிலும் காணப்படுகிறது. திருச்சிராப்பள்ளிக்குப் பக்கத்தில் கம்பரசன்பேட்டை என்று ஓர் ஊரே இருக்கிறது. காவேரிக்கரையில், திருச்சிராப்பள்ளிக்குப் பக்கத்தில் ஓர் ஊர் இருக்கிறது. அங்கே கம்பராய சதுர்வேதி மங்கலம் என்றே பத்திரம் எழுதுகிறபோது அந்த ஊர்ப் பெயரை எழுதுகிறார்கள்.

இப்படி நடுவில் ஒரு நாற்பது ஐம்பது வருஷ காலந்தான் பிற மதஸ்தர்களால் தேசம் வீணாகப் போயிற்று. அப்புறம் வித்தியாரண்யர் காலத்தில் - விஜயநகர சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தி, பிற மதஸ்தர்களுடைய படையெடுப்பில் ஏற்பட்ட நாசங்களை நீக்கி, வேதம், கோயில், தர்மம், எல்லாம் நிலைக்கும்படியாக ஜனங்களுக்குக் கம்பன்ன உடையார் நன்மை செய்தார் என்று தெரிகிறது. தர்ம சாஸ்திரங்கள் எல்லாம் இவர் காலத்தில் தான் அபிவிருத்தி அடைந்தன. இப்படி நம்முடைய சாஸ்திரங்களை ஆதாரமாக வைத்தே விஜயநகர சாம்ராஜ்யம் சிருஷ்டிக்கப்பட்டு அநேக வருஷங்கள் வெகு கீர்த்தியோடு இருந்திருக்கிறது. இந்த வம்சத்தில் வந்தவர்தாம் கிருஷ்ணதேவராயர்.

இவர் சபையில் அஷ்ட திக்கஜங்கள் என்னும் எட்டு மகா வித்துவான்கள் இருந்திருக்கிறார்கள். தெலுங்கு பாஷையிலேயே உன்னதமான காவியங்கள் எல்லாம் இவர் காலத்தில்தான் உண்டாகியிருக்கின்றன. தெலுங்குக் காவியங்களுடைய உன்னத தசை அப்போதுதான் இருந்திருக்கிறது.

Koviloor Digital Library

விக்கிரமாதித்தன் காலத்திலும் அவன் சபையில் நவரத்தினங்கள் என்னும் ஒன்பது மகாவித்வான்கள், சாஸ்திரங்களை எல்லாம் கரைகண்டவர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்களில் ஒருவரான வராஹமிஹிரர் என்பவர்தாம் சிதறுண்டு போயிருந்த அநேக சாஸ்திரங்களை எல்லாம் அங்கங்கே துளித்துளியாக ஒன்று சேர்த்துப் பிருஹத் ஸம்ஹிதை செய்தார். அதில் வேதாந்த சாஸ்திரம் மட்டும் அல்ல; ஜனங்களுக்கு நேரே உபயோகப் படும்படியான சாஸ்திரங்கள் கணக்கு வழக்கு இல்லாமல் இருந்திருக்கின்றன.

அதேமாதிரி போஜராஜா காலத்தில் அவன் நிறையக் கவிகளை ஆதரித்திருக்கிறான் என்று கேட்டிருக்கிறோம், அவன் ராஜ்ய பரிபாலனம் செய்த பட்டணத்துக்கு, 'தாரா' என்று பெயர். அந்த நகரந்தான் 'தார்' என்று மத்திய மாகாணத்தில் ஒரு சம்ஸ்தானமாக இருந்தது. இப்போது இந்திய யூனியனோடு இணைந்துவிட்டது.

போஜ ராஜா காலத்தைப்பற்றிக் கதைகள் அநேகம் சொல்வது உண்டு. அந்தத் தாரா நகரத்தில் கவிகளைத் தவிர வேறு யாரும் இருக்கக் கூடாது. ''கவிகளாக இல்லாதவர்கள் கிராமங்களில் இருந்துவிட்டுப் போகட்டும். தாரா நகரத்திலேயே இருக்க வேண்டுமென்றால் கவிகளாகத்தான் இருக்கவேண்டும்' என்று போஜராஜன் சொல்லிவிட்டானும்.

இதற்காக ஊர்க் காவலர்களை விட்டுக் கவிகளைத் தவிர வேறு யாராவது இருந்தால் ராஜ சபைக்குப் பிடித்து இழுத்து வரும்படியாக உத்தரவு போட்டுவிட்டான். அவர்கள் நகரம் முழுவதும் தேடிக்கொண் டிருந்தார்களாம். எல்லாரும் கவிகள். எல்லாருக்கும் கவி பாடத் தெரிந்திருக்கிறது, ஆனால் ஒருவனுக்கு மட்டும் கவி பாடத் தெரியவில்லையாம். செங்குந்தர் என்ற துணி நெய்கிற சாதியைச் சேர்ந்தவன் அவன். அவனைப் பிடித்துப் போஜராஜனுடைய சதஸுக்கு இழுத்து வந்தார்களாம்.

போஜராஜன் அவனைப் பார்த்து, ''உனக்குக் கவி பாடத் தெரியுமா?'' என்று கேட்டானும். அதாவது கவிபாடத் தெரியாதவர்கள்கூடப் போஜராஜனுடைய சதஸுக்கு வந்து அவனை ஒரு க்ஷணம் பார்த்தால் போதும். கவிபாடுவார்கள்; அவ்வளவு கவித்துவம் வந்துவிடும் என்று சொல்வது உண்டு. அந்தமாதிரி, அந்தச் செங்குந்தனைப் பார்த்து, ''உனக்குக் காவியம் எழுதத் தெரியுமா?'' என்று போஜராஜன் கேட்டவுடனே; ''काव्यं करोमि-காவ்யம் கரோமி'', ''நான் காவியம் பண்ணுகிறேன்'' என்று செங்குந்தன் சொன்னானும். நான் காவியம் பண்ணுகிறேன் என்று

Koviloor Digital Library

சொன்னதோடு அவன் நிற்கவில்லை. 'காவியம் கரோமி' என்று சொன்னவுடன் அதை நிரூபிக்க ஒரு கவி சொல்லியாக வேண்டுமே. அதற்காக, "नहि चारुतरं करोमि- நஹி சாருதரம் கரோமி. (சாரு என்றால் அழகு.) நான் காவியம் பண்ணுகிறேன். ஆனால் நன்றாக அழகாகப் பண்ணத் தெரியாது" என்று முதல் அடி சொன்னானும். உடனேயே இரண்டாவது அடியில்,

यत्नात् करोमि यदि चारुतरं करोमि ।
யத்நாத் கரோமி யதி சாருதரம் கரோமி

"இன்னும் கொஞ்சம் பிரயத்னம் பண்ணினால் நன்றாகக் கூடப் பண்ணிவிடுவேன்" என்று சொன்னானும்.

काव्यं करोमि नहि चारुतरं करोमि
यत्नात् करोमि यदि चारुतरं करोमि ।

காவ்யம் கரோமி நஹி சாருதரம் கரோமி
யத்நாத் கரோமி யதி சாருதரம் கரோமி

இப்படி இரண்டு அடி பாடிவிட்டான், ஒரு சுலோகம் என்றால் நான்கடி சொல்லியாக வேண்டும். உடனே அடுத்த இரண்டடி,

भूपालमौलिमणिरंजितपादपीठ
हे साहसांक कवयामि वयामि यामि ॥

பூபாலமௌலிமணிரஞ்சிதபாதபீட
ஹே ஸாஹஸாங்க கவயாமி வயாமி யாமி ||

என்று பிராஸம் கீஸம் எல்லாம் போட்டுத் தடதடவென்று சொல்லிவிட்டான், "காவியம் பண்ணுகிறேன்" என்றவன் "ஆனால் அழகாகப் பண்ணத் தெரியாது" என்று சொல்லி, உடனேயே, "கொஞ்சம் பிரயத்தனம் பண்ணினால் அழகாகக் கூடப் பண்ணுவேன்" என்று சொல்லி, அப்புறம், பூபால என்று ஜம் என்று சுலோகத்தை முடித்துவிட்டான். "எத்தனையோ ராஜாக்களுடைய கிரீடங்களில் இருக்கும்படியான ரத்தினங்கள் இருக்கின்றனவே; அந்த ரத்தினங்களுடைய சிவப்பு, ஏ அரசே, உன் பாதத்தில் இருக்கும்படியான பீடமே சிவந்து போகும்படியாகச் செய்கிறது.

அந்த ராஜாக்கள் எல்லாம் தங்கள் கிரீடங்களோடேயே உங்களுடைய பாதத்தை நமஸ்காரம் பண்ணுகிறார்கள். அந்தக் கிரீடங்களில் புதைந்திருக்கும்படியான ரத்தினங்களின் சிவப்பினால், உங்களுடைய பாதபீடம் சிவந்திருக்கிறது.

Koviloor Digital Library

நீ எதை நினைத்தாலும் சாதிக்கிறவன். நினைத்ததைச் சாதிக்கிறவன் என்றால் நீதான். அப்பேர்ப்பட்ட உன்னுடைய சரணாரவிந்தங்களை நான் பணிகிறேன், நமஸ்காரம் செய்கிறேன்.

"சரி, நான் போய்வருகிறேன்" என்று கிளம்பிவிட்டானும். கவி பாடத் தெரியாது என்றுதானே இவனை இழுத்து வந்தார்கள்? கவிதான் பாடிவிட்டானே. இனி அங்கே என்ன வேலை? கவி பாடாவிட்டால் அவனுக்கு ராஜா தண்டனை விதிப்பார். கவிபாடத் தெரியும் என்பதை ஒரு சுலோகம் பாடியே காட்டிவிட்டான். அதனால், "यामि- யாமி- நான் போகிறேன் அப்பா" என்று சொல்லிக்கொண்டு போய்விட்டான் என்று கதை சொல்வது உண்டு. அப்படி அவன் சபையில் மாத்திரம் அல்ல, நகரத்தில் இருக்கும்படியான ஜனங்கள் அத்தனை பேரும் கவிகள், மகா வித்துவான்கள் என்று சொல்வர்.

இப்படி உலகத்தில் பெரிய ராஜாக்களாக, கீர்த்தியோடு பரிபாலனம் பண்ணி வந்திருப்பவர்கள் எல்லாரும் நம்முடைய தர்மங்களை, சாஸ்திரங்களை அநுசரித்தே ராஜ்யபரிபாலனம் செய்து வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

சரி, சிவாஜியை எடுத்துக்கொண்டால் அவர் சாமானியர். அவருடைய குருதான் சமர்த்த ராமதாஸ் ஸ்வாமி. ராமதாஸ் ஆஞ்சநேயருடைய அவதாரம் என்று சொல்வர். சர்வதா ராமநாம தியானந்தான் அவருக்கு. அவருடைய அநுக்கிரஹத்தினால்தான், மற்றக் குடியானவர்களையும் சேர்த்துக்கொண்டு, சிவாஜி டில்லி அரசாங்கத்தையே எதிர்த்து, தெற்கே அவர்கள் செய்து வந்த அக்கிரமங்களை எல்லாம் தடுத்து, தர்ம மார்க்கத்தில் ஒரு ராஜ்யத்தையே ஸ்தாபித்தார். எவ்வளவு வெற்றி கிடைத்தாலும், புதிது புதிதாக எத்தனை கிராமங்களை ஜயித்தாலும் அன்றன்றைக்குச் சமர்த்த ராமதாஸ ஸ்வாமியிடத்தில் வந்து, "ஸ்வாமி. இவ்வளவும் உங்களுக்கு" என்று அர்ப்பணம் செய்திருக்கிறார். "எனக்கு எதற்கப்பா இந்தக் கிராமங்கள். நீதான் இவற்றை ஆட்சி செய்யவேண்டும். என் பிரதிநிதியாக நீயே ராஜாவாக இரு" என்று அவர் அநுக்கிரகம் செய்து, சிவாஜீ ராஜ்யபரிபாலனம் பண்ணி வந்திருக்கிறார். பிறமதஸ்தர்களுடைய ஸ்திரீகளுக்குக்கூட ஒருவித ஹிம்சை இல்லாமல் அவர்களைப் பாதுகாப்பாக, அவர்களுடைய ஊர்களுக்கே சிவாஜீ அனுப்பி வைத்திருக்கிறார் என்றும் இன்றும் சரித்திரக்காரர்கள் சொல்கிறார்கள். இவருக்குக் குரு சமர்த்த ராமதாஸ் ஸ்வாமி. அங்கங்கே எழுபது எண்பது மடங்களை ஸ்தாபனம் பண்ணி, ஸ்ரீராம் ஜயராம் ஜய ஜயராம் என்கிற மந்திரத்தை உபதேசம்பண்ணி அவர்களுக்கெல்லாம் ஜோல்னுப்பை கொடுத்து

Koviloor Digital Library

அன்றன்று உஞ்சவிருத்தி வாங்குவது, ஜீவனம் செய்வது என்றெல்லாம் ஏற்படுத்தினுர். தஞ்சாவூரில்கூட - மகாராஷ்டிரர்களுடைய ஆட்சி அங்கே இருந்தபோது-நான்கைந்து மடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பாக்கி மகாராஷ்டிர தேசத்தில் அநேக மடங்கள். ராமதாசர் என்று அவர்களுக்கெல்லாம் பெயர். இவ்வளவுக்கும் மூலகாரணம் சமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகளுடைய மாருதிப் - ஆஞ்சநேயருடைய - பிரபாவந்தான். ஆஞ்சநேயர் என்ருல் அவருக்கு என்ன விசேஷம் என்ருல்,

बुद्धिर्बलं यशो धैर्यं निर्भयत्वमरोगता ।
अजाड्यं वाक्पटुत्वं च हनुमत्स्मरणाद् भवेत् ।

புத்திர்பலம் யஶோ தைர்யம்
நிர்பயத்வம் அரோகதா |
அஜாட்யம் வாக்படுத்வம் ச
ஹநுமத்ஸ்மரணாத் பவேத் ||

நிரம்ப வேதாந்த விஷயங்களையும் தத்துவங்களையும் அறிந்தவர்களாக இருப்பார்கள்; ஆனுல் உடம்பு சிம்பிப் போயிருக்கும். மனத்தில் தைரியம் இருக்கும், உடம்பில் வலு இருக்காது. சிலருக்கு உடம்பு கொழுத்து இருக்கும், மனத்தில் தைரியம் இருக்காது. இப்படி ஒன்றுக்கொன்று விரோதமாகவே இருக்கும். ஒருவனுக்குப் பரம வலு இருக்கும்; முரட்டு வழியில் கெட்ட வழியில் - போகிறவனுக இருப்பான்: பக்தி இருக்காது. சிலருக்குப் பக்தி இருக்கும்; ஞானம் இருக்காது; மூடபக்தியாகவோ, முரட்டுப் பக்தியாகவோ இருக்கும்.

ஆனுல் ஆஞ்சநேயர் எப்பேர்ப்பட்டவர்? ஒன்பது வியாகரணமும் தெரிந்தவர். அவரோடு பழகும்போது ராமர்,

नवव्याकरणवेत्ता

நவவ்யாகரணவேத்தா

என்று சொல்கிருர். அது மாத்திரம் அல்ல; தத்துவத்தை அறிவதிலும் சிறந்தவர். பைசாசம் என்று ஒரு பாஷை; அந்தப் பாஷையில் பகவத் கீதைக்கு ஒரு பாஷ்யமே பண்ணியிருக்கிருர். அதற்குப் பைசாச பாஷ்யம் என்று பெயர். இதை ஆஞ்சநேயர் பண்ணியிருக்கிருர் என்று சொல்வர். இவரை உபாசிக்கிருர் ஒருவர் என்ருல் அவருக்கு இவ்வளவும் உண்டாகும் என்று சொல்வர். பலத்தையும் ஆஞ்சநேயர் கொடுக்கிருர். தைரியத்தையும் கொடுக்கிருர். பலம் இருக்கிறது, தைரியம் இல்லையென்ருே, தைரியம் இருக்கிறது, பலம் இல்லை என்ருே இல்லை.

நம் ஊரில் அவருக்கு அனுமார் என்று பெயர். கன்னியா

Koviloor Digital Library

குமரி முதற்கொண்டு, அநேகமாகச் சித்தூர் வரைக்கும் தமிழ் பேசுகின்ற தேசங்களில் எல்லாம் அனுமார் என்றே பெயர். தெலுங்கு தேசத்துக்குப் போனால் 'ஆஞ்சநேயலு' என்று சொல்வது ஜாஸ்தி. கன்னடப் பிரேசத்தில் 'ஹனுமந்தையா' என்று சொல்வர். மஹாராஷ்டிர தேசம் முழுக்க, 'மாருதி, மாருதி' என்ற சப்தந்தான். மஹாராஷ்டிரம் தாண்டி வடக்கே வங்காளம், காச்மீரம், மத்திய இந்தியா-இப்படி இந்துஸ்தானி பேசுகிற இடங்களில் எல்லாம் 'மஹாவீர், மஹாவீர்' என்று பெயர். 'மஹாவீர்' என்றால் மகாவீரன் என்று பெயர். ஆஞ்சநேயருடைய வீரத்துக்குச் சமானமே கிடையாது. வீரம் மாத்திரம் அல்ல; பக்தி என்றால் அவருடைய பக்திக்கும் ஈடு கிடையாது.

यत्र यत्र रघुनाथकीर्तनं तत्र तत्र कृतमस्तकाञ्जलिम् ।
बाष्पवारिपरिपूर्णलोचनं मारुतिं नमत राक्षसान्तकम् ॥

யத்ர யத்ர ரகுநாதகீர்த்தநம் தத்ர தத்ர க்ருதமஸ்தகாஞ்சலிம் |
பாஷ்பவாரிபரிபூர்ணலோசநம் மாருதிம் நமத
ராக்ஷஸாந்தகம் ||

'ராம் ராம்' என்று எங்கெங்கே சொல்லிக்கொண்டிருந்தாலும் ரகுநாதனுடைய கீர்த்தனம் எங்கெங்கே நடந்தாலும் அங்கெல்லாம் நம் கண்ணுக்குத் தெரியாமல் தம்முடைய கண்களிலே ஜலம் தாரை தாரையாக வரும்படி கண்களை மூடிக்கொண்டு ஆஞ்சநேயர் கேட்டுக்கொண்டிருப்பாராம்.

यत्र यत्र रघुनाथकीर्तनं

யத்ர யத்ர ரகுநாதகீர்த்தநம்

ராமனிடத்தில் அவ்வளவு பக்தி. ஆஞ்சநேயர் என்றால் பலத்திலும் உச்சநிலை, பக்தியிலும் உச்சநிலை, வீரத்திலும் உச்சநிலை, கீர்த்தியிலும் உச்சநிலை.

தட்சிணாமூர்த்தி என்றால் சனகாதி முனிவர்களுக்கு உபதேசம் பண்ணிக்கொண்டிருக்கிறார் என்று சொல்வர், ராமர் யாரை முன்னிட்டு உபதேசம் பண்ணுகிறார்?

वैदेहीसहितं सुरद्रुमतले हैमे महामण्डपे
मध्येपुष्पकमासने मणिमये वीरासने संस्थितम् ।
अग्रे वाचयति प्रभञ्जनसुते तत्त्वं मुनिभ्यः परं
व्याख्यान्तं भरतादिभिः परिवृतं रामं भजे श्यामलम् ॥

Koviloor Digital Library

வைதேஹீஸஹிதம் ஸுரத்ருமதலே ஹைமே மஹாமண்டபே
மத்யேபுஷ்பகமாஸநே மணிமயே வீராஸநே ஸம்ஸ்திதம் |
அக்ரே வாசயதி ப்ரபஞ்ஜநஸுதே தத்வம் முநிப்ய: பரம்
வ்யாக்யாந்தம் பரதாதிபி: பரிவ்ருதம் ராமம் பஜே ஸ்யாமலம் ||

தட்சிணுமூர்த்தி ஞான உபதேசம் சனகாதி முனிவர்களுக்குப் பண்ணுகிறது போல, ராமர் மகரிஷிகளுக்கு, ஒருவரைப் பார்த்துக்கொண்டு உபதேசம் பண்ணுகிருர்.

अग्रे वाचयति प्रभञ्जनसुते तत्त्वं मुनिभ्यः परं

அக்ரே வாசயதி ப்ரபஞ்ஜநஸுதே தத்வம் முனிப்ய: பரம்

அப்படிச் சொல்லும்படியாகப் பண்ணினவர் ஆஞ்சநேயர். ஆஞ்சநேயரை முன்னிட்டு உபதேசம் செய்வது போல் மகரிஷிகளுக்கு எல்லாம் சீதாராமன் ஆத்மஞானத்தையும் பக்தி மார்க்கத்தையும் உபதேசம் செய்கிருர்.

சைவ சித்தாந்தம் என்ருல், அதைக் கைவல்ய நவநீதம், சிவஞான போதம் எல்லாம் சொல்லுகின்றன. இந்துஸ்தானியில் விசார ஸாகரம் என்று இருக்கிறது. அதுமாதிரி நூலைத் தெலுங்கில் ஸீதாராம ஆஞ்சநேயம் என்று சொல்வர். அந்த மாதிரி ஞானத்திலும் பக்தியிலும் பலத்திலும் தைரியத்திலும் வீரத்திலும் ச்ரேயஸிலும் மேல்நிலையை அநுக்கிரஹம் செய்பவர் ஆஞ்யநேயர். சகலத்திலும் நிறைந்து நின்றவர். அதேமாதிரி பிரம்மசரியம். ஒரு க்ஷணங்கூடக் காமம் என்கிற ஞாபகமே வராமல் இருக்கும்படியான ஆஞ்சநேய சுவாமியின் அவதாரம் சமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகள். இவர்களுடைய பலத்திஞல் தான் பெரிய மகாராஷ்டிர ராஜ்யம் ஏற்பட்டது. இங்கிலீஷ்காரர்கள்கூட இவர்களோடுதான் ஜாஸ்தி சண்டை போடும்படியாக இருந்தது.

அந்த மாதிரி எப்போதும் தத்துவம், சாஸ்திரம் இவற்றினுடைய அஸ்திவாரம் பலமாக இருந்த பெரிய ராஜ்யங்கள்தான் க்ஷேமமாக, வெகு கீர்த்தியோடு பல வருஷங்கள் நின்றிருக்கின்றன.

போஜனுடைய நகரமான தாரா - தார் - பட்டணத்தில் ஒரு மசூதி இருக்கிறது. அந்த மசூதியில் ஒரு பொந்துக்குள் ஏதோ ஸம்ஸ்கிருத எழுத்து இருந்ததாம். அந்நியருடைய இடம், அங்கே போய் ஒன்றும் செய்யமுடியாது என்று எபிக்கிராபிகல் டிபார்ட்மென்டார் பத்துப் பதினைந்து வருஷம் சும்மா இருந்துவிட்டார்கள். இப்போதுதான் ஏதோ கொஞ்சம் கொஞ்சமாக அது என்ன என்று பார்க்கப் போவதுபோல் போய், அப்புறம் அவர்களிடமே உத்தரவு வாங்கிக்கொண்டு

Koviloor Digital Library

அந்தப் பொந்தைக் கொஞ்சம் பிரித்துப் பார்த்தார்கள். அங்கே ஒரு பெரிய சக்கரம் - அநேக சுலோகங்களோடும் எழுத்துக்களோடும் இருந்ததாம். அந்தச் சக்கரத்தில்-வியாகரணம் எவ்வளவு உண்டோ அவ்வளவும் ஒரு சக்கரமாகப் போட்டு ஒரு சார்ட் (chart) மாதிரி பாடலாகப் போட்டிருக்கிறார்களாம். அப்புறம் அந்த இலாகா அதை எடுத்து அச்சுப் போட்டிருக்கிறார்கள். அந்த மசூதி கட்டியிருக்கக்கூடிய கோயில் போஜராஜன் காலத்தில், சரஸ்வதி ஆலயம். இப்படிப் போஜராஜன் காலத்தில் எழுதப்பட்ட ஒரு பெரிய சக்கரம் அகப்பட்டிருக்கிறது. அதை ஒரு பார்வை பார்த்தால் வியாகரணம் முழுக்கத் தெரிந்து போய்விடும். இப்படி எழுதிச் சரஸ்வதி ஆலயத்திலேயே பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். அந்தக் கோயில் மசூதியாகப் போய் அநேக வருஷங்கள் கழித்துத் திரும்ப அந்தச் சக்கரம் இப்போது நமக்குக் கிடைத்திருக்கிறது. அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

இதேமாதிரி போஜராஜா நாளிலே ஸமராங்கண ஸூத்திரம் என்பதை அவரே எழுதியிருக்கிறார். யந்திரம், மிஷின்கள் இவற்றைச் செய்வது எப்படி, ஆகாயவிமானம் பண்ணுவது எப்படி என்றெல்லாம் இதில் வருகிறது. விமானம் என்ற பெயர் அந்தக் காலத்திலேயே இருந்திருக்கிறது. அமரத்தில்கூட லெக்ஸிகன்-

व्योमयानं विमानोऽस्त्री

வ்யோமயாநம் விமாநோஸ்த்ரீ

என்று வருகிறது. ஆகாசத்தில் போகும்படியான வாகனத்துக்கு விமானம் என்று பெயர் இருக்கிறது. ராமாயணத்திலும் வருகிறது. அது கதை, நம்பமுடியாது என்று விட்டுவிட்டோம். அமரத்தில் இதற்கு,

व्योमयानं

வ்யோமயாநம்

ஆகாசத்தில் போகும் வாகனம் என்று அர்த்தம். போஜன் எழுதியுள்ள ஸமராங்கண ஸூத்திரத்தில் இந்த ஆகாய விமானம் எப்படி இருந்தது என்று எழுதியிருக்கிறது. அதை எப்படிப் பண்ணுவது என்ற முறையும் அங்கே சொல்லப்படுகிறது. அதை எழுதுகிறபோதே, 'ஆகாய விமானத்தைப் பற்றிய ஸ்தூலமான தத்வ முறையை (Theory)த்தான் சொல்கிறேன். நடைமுறையில் பண்ணக்கூடிய வழி தெரியாது என்ற காரணத்தினால் சொல்லாமல் விட்டுவிட்டதாக எண்ணக்கூடாது. இதனுடைய நடைமுறையைச் சொல்லாமல் விட்டிருப்பதற்குக்

Koviloor Digital Library

காரணம், தெரியாததனுல் அல்ல. இதைச் சொல்லிவிட்டால் சாமானிய ஜனங்களுக்கெல்லாம் இது தெரிந்துவிட்டால் இதனுல் ஜனங்களுக்குச் சௌகரியம் ஏற்படுவதற்குப் பதிலாக அதிகமான அசௌகரியந்தான் உண்டாகும். அதனுல்தான் சொல்லவில்லை'' என்று எழுதியிருக்கிருர்.

இப்போதோ நமக்கு அது தெரிகிறது. 'இந்த உலகம் இருக்குமா? ஒரு நிமிஷத்தில் அழிந்து போகுமா? எந்த நிமிஷத்தில் எல்லோரும் அழிவோம்?' என்ற பயத்தோடு இந்த ஆட்டம் பாம், ஹைட்ரஜன் பாம் வந்துவிட்ட காலத்தில் இருக்கிருேம். 'சித்த சுத்தி அடையாதவர்களுக்கு இவை எல்லாம் கிடைத்தால் குழந்தை கையில் விஷம் கிடைத்தால் எப்படியோ அப்படித் தான். அதனுல்தான் அதைச் சொல்லாமலே விட்டிருக்கிறேன்' என்று போஜராஜா எழுதியிருக்கிருர்.

அதைப்பற்றிக்கூடப் பத்து நாள் முந்தி வடக்கே இருந்து ஒரு கடிதம் வந்தது. 'விமானம் பண்ணுகிற முறை இதில் சொல்லியிருக்கிறதே, இதைப் பார்த்து ஏதாவது புரிகிறதா என்று எழுதவேண்டும்' என்று வந்தது. நான்கூடச் சில எஞ்சினீயர்களை விட்டு அதைப் படிக்கச் சொல்லிக் கேட்டேன். பலூன், ஜோர்டான் எஞ்சின் என்கிற மாதிரி ஏதோ ஒரு முறை அதில் இருக்கிறது என்று தெரிகிறது.

அநேக தேசங்களில் புதிது புதிதாகச் சாஸ்திரங்கள் எழுந்து கொண்டிருக்கின்றன. ஆனுல் நம் தேசத்தில் இருந்த சாஸ்திரங்கள்கூட இன்னது என்று தெரியாமல் இப்படிக் குறைந்திருக்கின்றன. வெளித் தேசங்களில் இன்னும் விருத்தியாகாத சாஸ்திரங்கள் எல்லாங்கூட இந்தத் தேசத்தில் அநேகம் இருந்திருக்கின்றன என்று தெரிகிறது. நம்மாலே ஒன்றையும் பிரயோஜனப் படுத்திக்கொள்ள முடியவில்லை.

நாடி சாஸ்திரம் என்று ஒன்று இருக்கிறது என்று சொன்னேன். நாடி சாஸ்திரம் என்ருல் கை பார்க்கிறது என்று அர்த்தம் அல்ல. இப்போது நாம் மூக்கில் கை வைத்துப் பார்த்தால் தெரியும். சில சமயம் வலது நாசியிலிருந்தும் சில சமயம் இடது நாசியிலிருந்தும் காற்று வரும். இரண்டு நாசியிலும் சேர்ந்து வராது. இப்படி இன்ன இன்ன நாசியிலிருந்து சுவாசம் வரக்கூடியதற்கு இன்ன இன்ன பெயர் என்று யோக சாஸ்திரத்தில் வைத்திருக்கிருர்கள். நாடி சாஸ்திரத்தில் வலது நாசியில் காற்று வந்தால் மனத்தின் விருத்தி இப்படி இருக்கும். இடது நாசியில் வந்தால் இப்படி இருக்கும், இன்ன இன்ன பக்கத்து நாசியில் காற்று வந்தால் லோகத்தில் இன்ன இன்ன சௌகர்யங்கள் உண்டாகும் என்பதாக எல்லாம் எழுதியிருக்

Koviloor Digital Library

கிறது. அதை இப்படி மாற்ற வேண்டும், மாற்றினால் இன்ன பிரகாரம் வரும், அதற்குப் பலன் இன்னது என்று இப்படி எல்லாம் இருக்கிறது. நல்ல சித்த விருத்தி, சாந்தம், ஆரோக்கியம் எல்லாம் வலது நாசியில் சுவாசம் வந்தால் உண்டாகும். இடது நாசியில் வந்தால் கோபம், ரோகம், துக்கம் எல்லாம் இருக்கும் என்பதாக எழுதியிருக்கிறது. நல்லதற்கு வலது, கெட்டதற்கு இடது. சோற்றுக் கை, பீச்சக் கை என்று சொல்கிறோம் அல்லவா? அதுமாதிரி சொல்லியிருக்கிறது. நாடி சாஸ்திரத்தைப்பற்றி இப்போதுகூட இரண்டொரு புஸ்தகங்கள் தமிழில் இருக்கின்றன.

அந்தமாதிரி சாஸ்திரத்தில், காசிக்குப் போய் அங்கேயே மரணம் அடைகிறவர்களுக்குச் சுவாமி வலது காதில் தாரக மந்திரத்தை உபதேசம் பண்ணுகிறார் என்று எழுதியிருக்கிறது. அதனால் மோட்சம் ஏற்படுகிறது, அந்த எல்லைக்குள் எவனுக்கு மரணம் ஏற்படுகிறதோ அவனுக்கு. தாரக மந்திரம் என்றால் பிரணவ மந்திரம் என்றும் சொல்லலாம். ராம நாமத்துக்கும் தாரக மந்திரம் என்று பெயர். ஞான பக்குவிகளுக்குப் பிரணவத்தையும், பக்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் ராம மந்திரத்தையும் சுவாமியே அந்த க்ஷேத்திரத்தில் மரணம் அடைகிறவர்களுடைய வலது காதில் உபதேசம் பண்ணுகிறார் என்பது தாத்பர்யம்.

காசி க்ஷேத்திரம் என்றால் வெகு தூரத்தில் இருக்கிறது. எல்லோரும் போக முடியாது. காசி க்ஷேத்திரத்துக்குச் சமானமாக வேறு க்ஷேத்திரம் எங்காவது இருக்கிறதா என்று கேட்கலாம். காசி க்ஷேத்திரத்துக்குச் சமானமான க்ஷேத்திரம் இந்தியாவில் இன்னும் ஆறு இருக்கின்றன. காசியையும் சேர்த்து இந்தியா முழுவதிலும் ஏழு க்ஷேத்திரங்கள். காசி என்றாலே மோட்சத்தை அடைகிற ஊர் என்று அர்த்தம்.

अयोध्या मथुरा माया काशी काञ्ची अवन्तिका ।
पुरी द्वारवती चैव सप्तैते मोक्षदायिकाः ॥

அயோத்யா மதுரா மாயா காஸீ காஞ்சீ அவந்திகா|
புரீ த்வாரவதீ சைவ ஸ்ப்தைதே மோக்ஷதாயிகா:||

இப்படி ஏழு க்ஷேத்திரம். இதேபோல ஏழு புண்ணிய நதிகள்—

गंगे च यमुने चैव गोदावरि सरस्वति
नर्मदे सिन्धु कावेरि

கங்கே ச யமுநே சைவ கோதாவரி ஸரஸ்வதி
நர்மதே ஸிந்து காவேரி.

Koviloor Digital Library

இப்படி ஏழு புண்ணிய நதிகள். மோட்சத்தைக் கொடுக்கும்படியான புண்ணிய க்ஷேத்திரங்கள் ஏழு. மரண காலத்தில் இந்த ஸ்தலங்களில் யார் யார் இருக்கிறார்களோ அவர்களுக்கு மோட்சம் கிடைக்கும்.

புரி என்றால் த்வாரகாபுரி என்று அர்த்தம். இங்கே பூரி, ஜகந்நாதம் என்று சொல்லுகிறார்களே இது அல்ல. இந்த மாதிரி ஏழு புண்ணிய க்ஷேத்திரங்கள் பாரதபூமி முழுவதிலும் இருக்கின்றன. ''நம் தென் தேசத்திலே காஞ்சி ஒன்றுதானே இருக்கிறது? காவேரி சப்த நதிகளில் ஒன்றாயிற்றே. காவேரி தீரத்திலேயே ஏதாவது ஏழு ஊர்கள் - க்ஷேத்திரங்கள் - சொல்ல வேண்டும்'' என்று கேட்டால் அந்த மாதிரி சொல்கிறபோது - காசிக்குச் சமானமாகக் காசியைத் தவிரக் காவேரி தீரத்தில் ஆறு ஊர்கள் சொல்வர்.

श्वेतारण्यं पञ्चनदं गौरीमायूरमर्जुनम् ।
छायावनं च श्रीवाञ्छ्यं काशीक्षेत्रसमानि षट् ॥

ஃவேதாரண்யம் பஞ்சநதம் கௌரீமாயூரமர்ஜுநம்।
சாயாவநம் ச ஸ்ரீவாஞ்ச்யம் காசீக்ஷேத்ரஸமாநி ஷட்॥

பஞ்சநதம் என்பதுதான் திருவையாறு. நதம் என்றால் ஆறு. சாயாவனம் என்பது பழைய காலத்துக் காவேரிப்பட்டினத்துக்குப் பக்கத்தில் இருக்கிறது. ஸ்ரீவாஞ்சியம் என்பது நன்னிலத்துக்குக் கிட்டே இருக்கிறது. மாயவரந்தான் கௌரி மாயூரம்.

இப்படிக் காசிக்குச் சமானமான ஆறு க்ஷேத்திரங்கள் காவேரி தீரத்தில் இருக்கின்றன. திருவையாற்றைப் பற்றிக்கூட ஒரு கதை சொல்வர். பாக்கி ஊர்களிலும் இருக்கலாம். அநேகமாகத் திருவையாற்றைப் பற்றிச் சொல்கிற இந்தக் கதையை எல்லோரும் கேட்டிருப்பார்கள். அதாவது அந்த ஊரிலே யார் செத்துப் போனாலும் வலது காது மேலே இருக்கும்படியாகப் படுத்திருக்கும்போதுதான் செத்துப் போவார்கள். என்று சொல்வார்கள். ஒரு மாடாக இருந்தாலும் இப்படித்தான் இருக்கும் என்பது கதை. அப்படிப் பாக்கி ஊரில் காது இருக்குமோ என்னவோ தெரியவில்லை. வலது பக்கக் காது மேலே இருக்க வேண்டுமென்றால் இடது பக்கமாகப் படுத்திருக்க வேண்டும். இடது பக்கமாகப் படுக்கிறபோது உடம்பு பாரம் அந்தப் பக்கத்தில் அழுத்துவதால் சுவாசம் வலது நாசியில்தான் வரும், இடது நாசியில் வராது. வலது நாசியில் சுவாசம் வந்தால் மனோவிருத்தி சாந்தமாக, நல்ல நினைப்புக்கள் உடையதாக - இப்படியெல்லாம் இருக்கும் என்று நாடி சாஸ்திரத்தில் வருகிறது. சுவாமியும் வலது காதில் அப்போதுதான் தாரக மந்திரம் உபதேசம் செய்கிறார் என்பதும், இந்தக் கதை

Koviloor Digital Library

யும் பொருத்தமாக இருக்கிறது. எப்படிப் பிறந்திருந்தாலுங் கூடச் சாகிற காலத்தில் அந்த க்ஷேத்திரங்களில் மரணம் அடைகிறவர்களுக்குச் சுவாமி வலது காதில் தாரக உபதேசம் செய்கிறார். அதே சமயத்தில் இடது பக்கம் படுத்து, வலது பக்கமாகச் சுவாசம் வரும்படி நல்ல சித்தவிருத்தியும் உண்டாகும்படி பண்ணுகிறார் என்று இப்படி ஊரார் பரம்பரையாகச் சொல்கிற கதையிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டி யிருக்கிறது.

இப்படி அநேக சாஸ்திரங்கள் நமக்குத் தெரியாமலே இருந்திருக்கின்றன. இந்தச் சாஸ்திரங்களிலிருந்து சிதிலம் சிதிலமாகக் கிடைத்த விஷயங்களை வராகமிஹிரர் பிருஹத் ஸம்ஹிதையில் ஒவ்வோர் அத்தியாயமாகக் கொடுத்திருக்கிறார். சாஸ்திரங்களுடைய ஆதாரங்களின் பேரில் பரிபாலனம் பண்ணின ராஜ்யங்கள் எல்லாம் வெகு கீர்த்தியாக விளங்கியிருக்கின்றன. ஆஞ்சநேயருடைய அவதாரமான சமர்த்த ராமதாஸ் ஸ்வாமியின் அநுக்கிரகத்தினால்தான் சிவாஜி, மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தையே ஏற்படுத்தினார் என்பதைச் சொல்லிக்கொண் டிருந்தேன். ஆஞ்சநேயருக்கு ஈடு கிடையாது. அவரை நினைத்த மாத்திரத்தில் தைரியம் வரும். அவரை நினைத்த மாத்திரத்தில் பயம் நிவர்த்தியாகும். அவரை நினைத்த மாத்திரத்தில் பக்தி வரும், ஞானம் வரும். காமம் எல்லாம் போய்விடும். அப்பேர்ப்பட்ட மகாவீரர் - ஆஞ்சநேயர்.

இந்தக் காலத்தில் இருக்கும்படியான சில சிற்பங்கள், கோபுரங்கள் இவற்றையெல்லாம் பார்க்கக் கூடிய எஞ்ஜினீயர்கள் முதற்கொண்டு, 'அந்தக் காலத்தில் எப்படி இவற்றைக் கட்டினார்கள்! என்ன கணக்குப் பண்ணிச் செய்தார்கள்!' என்பது தெரியாமல் ஆச்சரியப்படுகிறார்கள். டெல்லியிலே குதுப்மினார் என்று ஒரு தூண் இருக்கிறது. அதற்கு அடுத்தாற்போல் ஒரு சிவன் கோயில் இருக்கிறது. அதிலே இரும்பினாலே ஒரு துவஜ ஸ்தம்பம் இருக்கிறது. 'இந்தக் காலத்தில்தான் இரும்பு உருக்கப் பர்னஸ், டாடா உருக்குத் தொழிற்சாலை எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. அந்தக் காலத்தில் எப்படி அந்தத் தூணைச் செய்தார்கள். அவ்வளவு பெரிய தூணை எந்த உலையில் அடித்து நிறுத்தினார்கள் என்று புரிந்துகொள்ள முடியவில்லை' என்று சொல்கிறார்கள்.

சோழ ராஜாக்கள் காலத்திலும் அபூர்வமான வேலைப்பாடுகளோடு பல கோயில்கள் நிர்மாணம் செய்யப்பட்டிருக்கின்றன. உலகத்தில் 'ஏழு அற்புதங்கள்' என்று சொல்கிறார்கள். பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம், ஜிப்ரால்டர் பாறைகள் இரண்டிலும் கால் வைத்துக்கொண் டிருக்கும்படியான உருவம், எகிப்துப் பிரமிட், க்ரேட் வால் ஆப் சைனா (Great wall

Koviloor Digital Library

of China), மாஸ்கோ சர்ச்சில் உள்ள மணி - இப்படி ஏழு அதிசயங்கள் - எப்படிச் செய்தார்கள் என்று சொல்ல முடியாத அதிசயங்களாக இருக்கின்றன என்கிறார்கள்.

இவை மாத்திரம் அல்ல. இன்னும் எத்தனையோ? சோழ ராஜாக்கள் காலத்தில் ஸ்தபதிகளிடமிருந்து முச்சலிக்கா என்று எழுதி வாங்குவார்கள். அதிலே ஐந்து விஷயங்களைத் தவிரப் பாக்கி எது சொன்னாலும் செய்வதாக ஸ்தபதிகள் எழுதிக் கொடுப்பார்களாம்.

ஆவுடையார் கோயிலின் கொடுங்கை ஒன்று, அது அப் படிச் சரிந்து அபூர்வமாக எப்படிக் கட்டினார்கள் என்பது தெரி யாமல் போகிறது. அதற்கு மேலே கருங்கல், அதற்காக என்ன செய்திருக்கிறார்கள் என்றால் கடுதாசு மாதிரி லேசாகப் பாரம் உறைக்காமல் நீளமாக அதைக் கொண்டுபோய் இருக்கிறார்கள். குதிரை வாங்குவதற்காகப் பாண்டியனுடைய பணத்தை எடுத் துக்கொண்டு வந்த மாணிக்கவாசகர் இந்தக் கோயிலைத்தான் கட்டினார். அதற்காக ராஜா இவரை ஜெயிலில் போட்டது, ஈச்வரன் பிரம்படி வாங்கினது என்கிற கதையெல்லாம் உங்க ளுக்குத் தெரியும். இந்த ஆவுடையார் கோயில் கொடுங்கை உயரே எப்படி இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக இங்கிலீஷ்காரர்கள் காலத்தில் ஒருவன் ரிவால்வரை எடுத்துக் கொண்டு சுட்டிருக்கிறான். அந்த இடம் மாத்திரம் ஓட்டையாக இருக்கிறது. அதிலே பார்த்தால் கடுதாசி அட்டைமாதிரி அவ் வளவுதான் கனம். இந்த ஆவுடையார் கோயில் கொடுங்கை ஒன்று.

திருவலஞ்சுழி என்று ஓர் ஊர். அங்கே பிள்ளையார் கோயில் இருக்கிறது. அதிலே பதினாறு துளையுடைய ஜன்னல் கருங்கல்லிலே இருக்கிறது. நல்ல சிற்பங்கள். அங்கேயுள்ள ஜன்னலுக்குப் பலகணி என்று பெயர். அப்புறம் கடாரங் கொண்டான் மதில். சுண்ணாம்பு, மண், சிமெண்டு எதுவுமே வைக்காமல், செங்கல்லைக் கொண்டு, அப்படி அப்படி வைத்தே அந்த மதிலைக் கட்டியிருக்கிறார்கள். கருங்கல்கூட இல்லை. கடுதாசு வைக்கிற மாதிரி எப்படிச் செங்கல்லை வைத்துக் கட்டினார்கள் என்றே தெரியவில்லை. இன்னும் அப்படியே உறுதியாக இருக்கிறது; திருவான்மியூருக்கு அருகில் இருக் கிறது. தஞ்சாவூர்க் கோபுரம்: அதன் நிழல் அதன் மேலேயே விழுகிறது என்று சொல்வர். திருவீழிமிழலை என்று நன்னிலத் துக்குப் பக்கத்தில்: வௌவால் ஒட்டி மண்டபம் என்று செங்கல் லினாலேயே ஒட்டியிருக்கிறார்கள். கருங்கல் சம்பந்தமே இல்லை. வளைவை (Arch) எப்படிக் கட்டினார்கள் என்றே தெரியவில்லை.

Koviloor Digital Library

வௌவால்கள் நிறைய அங்கே இருக்க வசதி இருக்கிறது. வௌவால் ஒட்டி மண்டபம் என்றே அதற்குப் பெயர். அவ்வளவு வளைவு கொடுத்துக் கட்டக் கீழே எவ்வளவு ஆதாரம் இருக்கவேண்டும் என்பதாக எல்லாம் இந்தக் காலக் கணக்கைக் கொண்டு ஒன்றும் பார்க்க முடியாது. இருந்தாலும் இன்னும் உறுதியான நிலையிலேயே அது இருக்கிறது. இப்படி இருக்கும் படியான இந்த ஐந்து விஷயங்களையும் தவிர - ஆவுடையார் கோயில் கொடுங்கை, திருவலஞ்சுழிப் பலகணி, கடாரங்கொண்டான் மதில், தஞ்சாவூர்க் கோபுரம், திருவீழிமிழலை வௌவால் ஒட்டி மண்டபம் - இவைகளைத் தவிரப் பாக்கி எந்த வேலையையும் செய்யத் தயார் என்று ஸ்தபதிகளிடமிருந்து முச்சலிக்கா சோழ ராஜாக்கள் காலத்தில் எழுதி வாங்குவது வழக்கம். ஒரு சாஸ்திரமும் இல்லாது, ஒரு கணக்கும் இல்லாது இவைகளை எல்லாம் அந்தக் காலத்தில் கட்டினார்கள் என்று சொல்ல முடியாது. எல்லாவற்றுக்கும் நிறையச் சாஸ்திரங்கள் இருந்திருக்கின்றன. இப்போதுதான் ஒன்றும் இல்லாமல், நம்முடைய மதம் என்றால்கூட இப்போது இருக்கிற ஸயன்சுக்கு ஒத்து வந்தால்தான் ஒப்புக்கொள்ள முடியும் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். ஸயன்சுக்கு ஒத்து இருக்க வேண்டுமென்றால் முப்பது வருஷங்களுக்கு முந்தி இருந்த படியா? அறுபது வருஷங்களுக்கு முந்தி இருந்த ஸயன்சுப் படியா? அறுபது வருஷங்களுக்கு முந்தி இருந்த ஸயன்சு வேறே, இப்போது வேறே. மாறிக்கொண்டே இருக்கிறதே. என்றைக்கு இருந்த ஸயன்சுப்படி நம் மதத்தைப் பரீட்சை செய்து பார்ப்பது? இப்படி ஒவ்வொன்றையும் பார்த்தால் நாம்தான் அஞ்ஞானதசையில் இருக்கிறோம் என்று தெரிகிறது. நமக்குத் தெரியாதது எல்லாம் பொய், எல்லாவற்றையும் கொளுத்த வேண்டும் என்று சொல்வது பிதற்றல். இப்போது இருக்கும்படியான சாஸ்திரங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். நமக்கு ஒன்றும் புரியாமல், நமக்கு ஒன்றும் தெரியாமல் இருந்தாலும் அவற்றையும் ஜாக்கிரதையாக ரட்சிக்கவேண்டும். இன்றைக்குப் புரியாவிட்டாலும் பின்னொரு காலத்தில் உபயோகமாக இருக்கும். இன்றைக்கு எகிப்தில் இருக்கும்படியான 'பிரமிட்'களை எல்லாம் பார்க்கும்போது வெகு அதிசயமாக இருக்கிறது. நமக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இருந்திருக்கிறது என்று தெரிகிறது. ஆப்பிரிக்காப் பிரதேசங்களில் எல்லாம் மேரு, ராம என்று இப்போதும் பெயர்கள் இருக்கின்றன. இப்படி லோகம் முழுவதும் ஒரே தத்துவம், ஒரே நாகரிகம் ஒரு காலத்தில் இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

Koviloor Digital Library

ஆகவே இன்றைக்கு நமக்குக் கிடைக்கும்படியான சாஸ்திரங்களை எல்லாம் நிறைய ரட்சிக்கவேண்டும். நமக்குப் புரியவில்லை, உபயோகம் இல்லை என்று எதையும் ஒதுக்கிவிடக் கூடாது. நம்முடைய அசட்டுத்தனத்தினாலே, இருப்பதையும் இழந்துவிடக் கூடாது. அந்தக் காலம் என்றால் ராஜாக்களுக்கு அவற்றை ரட்சிப்பது பொறுப்பாக இருந்தது. இப்போது ராஜாக்கள் இல்லை. ராஜ்ய சர்க்கார்கள்தாம் இருக்கின்றன. அவர்களுக்கு நிம்மதியே இல்லை. ஒரு பக்கம் பாஷைச் சண்டை, இன்னொரு பக்கம் எல்லைச் சண்டை, இன்னொரு பக்கம் சாதிச் சண்டை. இப்படி ஒரே பூசல். குடும்பங்களுக்கும் ஒரே கஷ்டம். எப்படி வாழ்க்கை நடத்துவது, எப்படி ஜீவிப்பது என்று ஒரே கவலை. ராஜ்யம் என்றால் இப்படியெல்லாம் இருக்கத்தான் இருக்கும். அந்தக் காலத்தில் ஒரு ராஜாவுக்கும் இன்னொரு ராஜவுக்கும் சண்டை நடந்தது. இப்போது ஒரு சாதிக்கும் இன்னொரு சாதிக்கும், ஒரு ராஜ்யத்துக்கும் இன்னொரு ராஜ்யத்துக்கும் சண்டை. சண்டை இல்லாமல் மனிதன் இருக்க முடியாது. அலை ஓய்ந்துதான் ஸ்நானம் பண்ணுவது என்பது முடியாது. காட்டிலே சிங்கம் புலியை அடிக்கிறது. புலி மானை அடிக்கிறது. இருந்தாலும் அங்கே மான் குட்டி, புலிக் குட்டி எல்லாம் வளர்ந்துகொண்டும் விளையாடிக்கொண்டுந்தான் இருக்கின்றன. நாளைக்கு என்ன செய்வோம், அடுத்த நிமிஷம் என்ன செய்வோம் என்று மனிதர்களைப்போல் அவை மனக் கஷ்டப்படுவதே இல்லை. மனிதனுக்கு அறிவு இருப்பதனால்தான் நாளைக்கு என்ன வருமோ என்று எப்போதும் அழுதுகொண்டிருக்கிறான். இது கூடாது. நாமும் அந்த மாதிரி வைத்துக் கொள்ளவேண்டும். நேற்றைப்பற்றியும் நாளையைப்பற்றியும் எதற்காக அழுதுகொண் டிருக்கவேண்டும்? எல்லாம் ஈச்வர சங்கல்பப்படி நடக்கிறது; நடக்கட்டும். இப்போது என்ன செய்ய வேண்டுமோ அதைக் கவனித்துச் செய்ய வேண்டும். நாமாகவே ஒன்று சேர்ந்து தனியாகவோ கூட்டமாகவோ நம்முடைய சாஸ்திரங்களை எல்லாம் ரட்சித்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். ராஜ்யக் கஷ்டம் ஒரு பக்கம், குடும்பக் கஷ்டம் ஒரு பக்கம். இது எல்லாம் ஓய்ந்த பிறகு ஒரு காரியம் செய்யலாம் என்றால் முடியாது. நாம்தான் ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும். நிரம்பத் தத்துவமான சாஸ்திரங்கள், மறைந்துகொண் டிருக்கின்றன.

தமிழிலே பதினெண் சித்தர்களுடைய சித்தர் பாடல்கள் இருக்கின்றன. பாட்டைப் பார்த்தால் சில யோகமாக இருக்கின்றன. சில வைத்தியமாக இருக்கின்றன. அதனுடைய

Koviloor Digital Library

தத்துவங்களைக் கண்டுபிடிப்பதே கஷ்டமாக இருக்கிறது. இப்படி அநேக விஷயங்களைப் பாம்பாட்டிச் சித்தர், இடைக் காட்டுச் சித்தர் என்கிறவர்கள் எல்லாம் செய்திருக்கிறார்கள்.

இப்படி நமக்குத் தெரியாதது எவ்வளவோ இருக்கலாம். நமக்குத் தெரியாதது எல்லாம் பிரயோஜனம் இல்லை, அவற்றை அழிப்பதுதான் சரி என்று போகாது, தெரியாததை எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும். தெரிந்துகொள்ள முடியாவிட்டாலும் பின் சந்ததியாவது தெரிந்துகொள்ளும்படி அவற்றை ரட்சிக்க வேண்டும் என்கிற அறிவோடு நாம் அவற்றை ரட்சிக்க வேண்டும். அவற்றில் உல்ள 'டெக்னிக்' எல்லாம் நமக்குத் தெரியாவிட்டாலும் அந்த அந்தச் சாஸ்திர நிபுணர்களாக வருகிறவர்களுக்காகவாவது அவைகளை ரக்ஷித்து வைக்க வேண்டும்.

நாளைக்கு அமாவாசை என்று பஞ்சாங்கத்தில் போட்டிருக்கிறதே, இன்றைக்குக் கிரகணம் என்று போட்டிருக்கிறதே, எப்படிப் போட்டார்கள், இதற்கு என்ன ஆதாரம் என்று நாம் கேட்டால் நமக்கு அதைச் சொன்னாலும் புரிந்துகொள்ள முடியாது. இந்தக் கணக்கு வழக்கு எல்லாம் ஜன்மம் முழுக்க அதற்காகவே பிரயாசைப் படுகிறவர்களுக்குத்தான் தெரியும்.

ஆகவே நமக்குத் தெரிந்தது தெரியாதது ஆகிய எல்லாச் சாஸ்திர வித்தைகளையும் நாம் ரட்சித்தாக வேண்டும். எல்லா வித்தைகளுக்கும் மேலான வித்தை பிரம்ம வித்தை. இதை வெறும் அறிவினால் மாத்திரம் அடைய முடியாது. அநுபவத்தில் தான் வரும். இந்த ஆத்ம வித்தையை அநுபவத்தில் உணர வேண்டுமானால் மனத்தில் மனோவிருத்தி திடமாக இருக்க வேண்டும். இதர வித்தைகளினால் மனம் பக்குவப்பட்டு, நல்ல ஞானம் வந்தால்தான் ஆத்ம வித்தையே வரும்.

பாக்கித் தேசங்களைப் பார்க்கிறபோது கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்ப காலத்தில் கரடுமுரடாக இருந்து இப்போது அநேக வித்தைகள் அவர்களுக்கு வெகு நாஸூக்காக, அழகாக வந்துகொண்டிருக்கின்றன. நம் தேசத்தில் பார்த்தால் ஆரம்பத்தில்தான் மிக உயர்ந்த நிலையில் இருக்கிறதே தவிர இப்போது வர வர க்ஷீணித்துக்கொண்டு போயிருக்கிறது. அயர்ன் ஏஜிலிருந்து அவர்கள் கோல்டன் ஏஜுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். நாம் கோல்டன் ஏஜிலிருந்து அயர்ன் ஏஜுக்கு நழுவிக்கொண்டிருக்கிறோம். ஒரு கையெழுத்தை எடுத்துக் கொண்டால்கூட நூறு வருஷங்களுக்கு முந்திக் கல்லிலே எழுதப் பட்டுள்ள எழுத்துக்கள் மண்டை மண்டையாக இருக்கின்றன. கொஞ்சம் முன்னாடி பல்லவர் காலத்தில் பார்த்தால் சுமாராக

Koviloor Digital Library

இருக்கின்றன. அதற்கு முந்தி எழுதப்பட்ட எழுத்துக்கள் எல்லாம் அப்படியே மெஷினில் எழுதினதுபோல் அவ்வளவு அழகாக, சிறியதாக இருக்கின்றன.

ஆகவே இன்றைக்குப் பழைய சாஸ்திரங்கள் எல்லாம் மடத்தனமானவை தப்பானவை என்பதாகவெல்லாம் நாம் சொல்வது சரியல்ல. இப்படி முட்டாள்தனமாகத் தீர்மானம் பண்ணி விடலாம். அந்த விஷயங்களை யெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும், அறிந்துகொள்ள வேண்டும். எதையும் கண்டனம் பண்ண நமக்கு அதிகாரம் இருப்பதாக நினைக்காமல், எல்லா வற்றையும் தெரிந்துகொள்ளத்தான் நமக்கு அதிகாரம் உண்டு என்று நினைக்கவேண்டும். ஆஞ்சநேயர் நமக்கு இப்பேர்ப்பட்ட சக்திகளை எல்லாம் அநுக்கிரகம் பண்ணவேண்டும். அவரைப் பிரார்த்தனை செய்பவர்களுக்கு ஒரு குறைவும் இல்லை.

எல்லாவற்றையும் அவர்தாம் அநுக்கிரகம் செய்கிறார்.

Koviloor Digital Library

6
பக்தி

ஈச்வரனிடத்தில் பக்தி பண்ண வேண்டியது எப்படி என்றல்லவா சொல்லிக்கொண் டிருந்தேன்?

अङ्कोलं निजवीजसन्ततिः

அங்கோலம் நிஜபீஜஸந்ததி:

அப்படித் தன்னை அறியாமல் மனசானது பரமாத்மாவிடத்தில் போய்க் கலந்துகொள்ள வேண்டும். அந்த இடத்தை விட்டுவிட்டால் க்ஷணநேரங்கூட சாந்தி இல்லாது அலையும் படியான நிலை இருக்க வேண்டும். எப்படிக் காந்தக் கல்லோடு ஊசி போய் ஒட்டிக்கொள்கிறதோ, பதிவிரதையின் மனமானது நாதனிடத்தில் போய்க் கவிந்துகொள்கிறதோ, கொடியானது மரத்தைப் போய் அணைத்துக்கொள்கிறதோ, நதியானது மகா சமுத்திரத்தோடு போய்க் கலந்துவிடுகிறதோ அப்படி இந்த மனசினுடைய சித்தவிருத்தியானது எங்கும் போகாமல் எல்லாக் காலத்தும், காலத்திரயங்களிலும் நமக்குப் பந்துவாக இருக்கிற, நாம் எத்தனை அபசாரங்களைப் பண்ணினாலும் நம்மை க்ஷமித்துக்கொண்டு - ஒவ்வொரு க்ஷணமும் நினைத்துப் பார்த்தால் தெரியும் - நம்முடைய அபசாரங்களையும் நினைத்துப் பார்த்து, நமக்கு ஈச்வரன் செய்யும் உபகாரங்களையும் நினைத்துப் பார்த்தால், அவனைத் தவிர வேறு எதையுமே நினைக்க வேண்டாம் என்று தோன்றும் - நமக்கு அநுக்கிரகம் செய்கிற பரமாத்மாவினிடத்திலேயே தன்னை அறியாமல் போய் நிற்க வேண்டும். அதற்குக் காரணமே இருக்கக்கூடாது. காரணம் என்று வந்தால் வியாபாரம் ஆகிவிடும்; பக்தியானது, ஏதோ ஒன்றுக்கு ஒன்று கொடுப்பதுபோல், 'செல்வத்தைக் கொடு, பக்தி

Koviloor Digital Library

'செய்கிறேன்' என்பதுபோல் ஒன்றுக்கொன்று பரிமாறிக் கொள்வது வியாபாரம் ஆகிவிடும். அப்படி இல்லாது எதையுமே நினைக்காது, சதா ஈச்வரனிடத்தில் போய்ச் சேருவது ஒன்றையே நினைத்துத் தன்னை அறியாமல் ஓடுகிற சித்த வ்ருத்தி இருக்கிறதே, அதற்குத்தான் பக்தி என்று பெயர், என்று பக்தியைச் சொல்வதற்கு முன்னால் பக்தியின் லட்சணத்தை வரையறுக்க வரும்போது ஆசார்யாள் இதைச் சொல்கிறார்.

अङ्कोलं निजबीजसन्ततिः

அங்கோலம் நிஜபீஜஸந்ததி:

இந்த அங்கோல மரத்தினுடைய விதை இருக்கிறதே அது மரத்தோடு போய்ச் சேர்ந்துவிருகிறது. எப்படியோ மரத்திலிருந்து கீழே விழுந்தவுடன் மெள்ள மரத்தினிடத்தில் செல்கிறது. மேலே ஏறுகிறது. பட்டையோடு ஒட்டிக்கொள்கிறது. அப்புறம் கொஞ்ச நாளில் அப்படியே மரமாகப் போய்விடுகிறது. எப்படி அந்த மரத்திலிருந்து உண்டான விதை அந்த மரத்தோடேயே சேர்ந்து திரும்பியும் மரத்தில் ஐக்கியம் ஆகிவிடுகிறதோ அந்த மாதிரி பரமாத்மாவினிடத்திலிருந்து தோன்றுகிற ஜீவாத்மாக்களை முடிவில் பரமாத்மாவோடேயே கலக்கச் செய்வது பக்தி., இன்னொரு திருஷ்டாந்ததங்கூடச் சொல்வது உண்டு. அக்கினியின் ஸ்புலிங்கங்கள்போல் என்பார்கள். நெருப்பு எரிகிறபோது ஒரு பொறி அங்கே இருந்து தெறித்து வந்தாலும் எப்படி அதோடேயே ஐக்கியமாகிவிடுகிறதோ என்று திருஷ்டாந்தம் சொல்கிறது.

यथाब्धेस्तरङ्गाः लयं यान्ति भङ्गाः

யதாப்தேஸ்தரங்கா லயம் யாந்தி பங்கா:

ஒரு சமுத்திரத்தில் முதலில் அலை உண்டாகிறது. ஒரு நுரை உண்டாகிறது. ஒரு குமிழ் உண்டாகிறது. முடிவில் அந்த அலை, நுரை, குமிழ் எல்லாம் என்ன ஆகின்றன? சமுத்திரத்தோடேயே ஐக்கியமாகிவிடுகின்றன. ஒரு காற்று, ஓர் அழுக்கு ஏற்படுகிறபோது அலை, நுரை, குமிழ் உண்டாவதுபோல் பரமாத்மஸ்வரூபத்திலிருந்து ஜீவாத்மாக்கள் தோன்றினாலும், திரும்ப ஒரு காற்று அடிக்கும்போது அலை, நுரை, குமிழ் எல்லாம் சமுத்திரத்தோடு ஐக்கியமாவதைப் போல், கொஞ்சம் நல்ல காற்று - ஆசார்யருடைய கடாக்ஷம் - அடித்தால் ஜீவாத்மாக்கள் சாட்சாத் பரமாத்ம ஸ்வரூபத்தோடேயே கலந்துவிடுகின்றன. உன்னுடைய ஸ்வரூபமே ஆகிவிடுகிறது என்று திருஷ்டாந்தம் சொல்வர்.

இதேமாதிரிதான் நதி, சமுத்திரம் என்று சொல்கிற திருஷ்

Koviloor Digital Library

டாந்தமும். நதி மாத்திரம் எங்கே இருந்து வந்தது? கங்கை, காவேரி என்று தனித்தனிப் பெயரே தவிர எல்லாம் சமுத்திரத்திலிருந்துதான் உண்டாகின்றன. லோகத்தில் சிருஷ்டி காலத்தில் எத்தனை காலன் ஜலம் இருந்ததோ அதில் இம்மிகூட-க்ரெயின் கூடக் குறைவது இல்லை. நல்ல வெயில் நாள் என்றால், 'தண்ணியே இல்லாது வறண்டு போச்சாப்பா? குழாயிலே ஜலம் இல்லை, ரெட்ஹில்ஸில் ஜலம் இல்லை' என்று சொல்கிறோம். மழைக்காலத்திலோ சிலசில இடங்களில் ஒரே வெள்ளக் காடாகப் போய்விட்டது என்பர். இப்படித் தண்ணீர் இல்லை என்பதாகவோ, ஒரே வெள்ளம் என்பதாகவோ சொல்வது உண்டு. ஆனால் வாஸ்தவத்தில் கணக்குப் பார்த்தால் சிருஷ்டி காலத்தில் எத்தனை காலன் சிருஷ்டிக்கப்பட்டதோ (Natural water) அதில் இம்மிகூடக் குறைவது கிடையாது; கூடுவதும் கிடையாது. கணக்குப் பார்க்கிறபோது மாத்திரம் அது எங்கே இருக்கிறது என்று பார்க்கவேண்டும். அந்தப் பாங்கில் இருக்கிறது இந்தப் பாங்கில் இருக்கிறது. இத்தனை ஷேராக இருக்கிறது என்று மொத்தத்தில் கணக்குப் பார்த்துக் கட்டுவது போல் ஒன்று சமுத்திரத்தில் இருக்க வேண்டும், இல்லாவிட்டால் மேகத்தில் இருக்கவேண்டும். அல்லாது போனால் பனியாக இருக்கவேண்டும், மழையாக இருக்க வேண்டும், ஏரியாக இருக்க வேண்டும். இப்படி இங்கே இல்லாததனால் அங்கே, அங்கே இல்லாததனால் இங்கே என்று பார்க்கவேண்டும். நதி என்றால் எங்கே இருந்து வருகிறது? சமுத்திரத்திலிருந்து மேகமாக மாறி மலையில் போய் மழையாகப் பொழிந்து பின்னர் சமுத்திரத்துக்கேதான் வருகிறது. ஆனால் அதனதன் இடத்துக் கேற்ப, நாமரூபம் வேறாக இருக்கிறது. சோணம் என்றால் சிவப்பு, கிருஷ்ணா எல்றால் கறுப்பு, கங்கை என்றால் வெளுப்பு. இப்படி அந்த அந்தத் தேசத்து மண்ணை அநுசரித்து ரூபம், பேர் எல்லாம் இருக்கும்.

रसान्तराणि एकरसं यथा दिव्य पयोऽश्नुते ।

ரஸாந்தராணி ஏகரஸம் யதா திவ்யம் பயோஸ்நுதே|

ஒரே சமுத்திரத்தின் தீர்த்தம் அநேக நதிகளாகப் போய், முடிவில் சமுத்திரத்திலேயே வந்து கலக்கிறது. பிறகு சமுத்திரமாகத்தான் ஆகிறது. இப்படி நாமரூப பேதம் உடைய ஜீவாத்மாக்கள் எல்லாம் பரமாத்மாவோடேயேதான் ஐக்கியமாகின்றன என்று திருஷ்டாந்தம் சொல்கிறது.

இன்னொன்று: சையன்ஸ் முறைப்படி, தொடர்புடைய ஜலம் எங்கும் ஒரே மட்டமாகவே இருக்கும். (Water finds its level

Koviloor Digital Library

என்று சொல்வர். என்ன அர்த்தம்? ஆறு எங்கே உண்டாகிறது? சமுத்திர தீர்த்தம் மேகமாகப் போய் மலையின் உச்சியிலே மழையாகப் பொழிகிறது. கங்கை என்றால் அதன் உற்பத்தி ஸ்தானம் 15000 அடிக்கு மேல் இருக்கிறது. இப்படி உயரமான மலையின் மீது உற்பத்தியாகிற ஆறு, கனவேகமாக, மிகுந்த சத்தத்தோடு இறங்கி வருகிறது. தன் மட்டத்துக்கு (லெவலுக்கு) வந்தால் தான் அதன் வேகம், சத்தம் எல்லாம் அடங்குகிறது. சாந்தம் வர வேண்டும் என்றால் 'லெவல்' வரவேண்டும். லெவலுக்கு மீறி இருந்துவிட்டால் சாந்தம் இல்லை; சத்தந்தான். தாட்பூட் என்று இரைச்சல்தான். லெவலைக் காண்கிற வரைக்கும் தாட் பூட் என்று சத்தம், இரைச்சலோடுதான் ஓடும். லெவலைக் கண்டுவிட்டால், சமுத்திர லெவலைக் கண்டுவிட்டால், அப்புறம் சாந்தமாகிவிடும். சமுத்திர தீர்த்தமே மேகமாகி, நதியாகி, பிறகு தன் ஸ்தானத்தில் வந்தவுடன் சமுத்திரமாகவே மாறி அடங்கிப் போவதுபோல், பரமாத்ம ஸ்வரூபத்திலிருந்து ஜீவாத் மாக்கள் தோன்றி மறுபடியும் பரமாத்ம ஸ்வரூபத்தோடேயே ஐக்கியமாகிவிடுகின்றன என்று திருஷ்டாந்தம் சொல்வர். அதே மாதிரி திருஷ்டாந்தம்.

अङ्कोलं निजबीजसन्ततिः

அங்கோலம் நிஜபீஜஸந்ததி:

அங்கோலம் என்றால் அழிஞ்சில்மரம். அதிலிருந்து முளைத்த விதைதான் அதிலிருந்து கீழே விழுந்து, திரும்பவும் அதனோடு வந்து ஒட்டிக்கொள்கிறது. அதுவாகவே மாறிவிடுகிறது என்று இப்படி இன்னொரு திருஷ்டாந்தம், மரம் மண்ணிலிருந்து முளைத் தது, மரத்திலிருந்து விதை உண்டாயிற்று. மரம் மண்ணில் விழுந்தது, மண்ணாயிற்று. மண்ணிலிருந்து உண்டாகி மண்ணோ டேயே-ஸ்வரூபத்தோடேயே-கலந்தது. இப்படி ஜீவாத்மா, பரமாத்மாவோடு கலக்கிறது என்று சொல்வதும் உண்டு. ஆனால் இந்த அங்கோல விதை மண்ணில் விழுந்து, திரும்ப மரத்தோ டேயே போய் ஒட்டிக்கொண்டு, அந்த மரத்தோடேயே மட்கி மரமாகி, அப்புறம் மரம் விதை எல்லாம் மண்ணாகலாம். ஆனால் முதலில் மரத்தோடேயே இதன் விதைகள் கலந்துவிடுகின்றன.

இதிலே ஏறு அழிஞ்சில், இறங்கு அழிஞ்சில் என்று இரண்டு வகை. இறங்கு அழிஞ்சில் அதிகம் இருக்கிறது. ஏறு அழிஞ்சில் குறைவு. விதை மரத்தில் ஒட்டிக்கொண் டிருப்பதைத்தான் நான் பார்த்திருக்கிறேன். நகர்ந்து செல்வதைப் பார்த்ததில்லை. பாதி மட்கிப் போனது, சமீபத்தில் ஒட்டிக்கொண்டது, இதை யெல்லாம் பார்த்திருக்கிறேன். இப்படியே நகர்ந்து வந்து

Koviloor Digital Library

ஒட்டிக்கொள்வதாக அங்குள்ளவர்கள் சொல்கிருர்கள். இதைப் போல் ஆசார்யாள் இந்தச் சுலோகத்தில் ஐந்து திருஷ்டாந்தங் களைச் சொல்லி, பக்தி பக்தி என்ருல் பக்தனுடைய உள்ளம் வேறு எந்தப் பிரயோஜனத்தையும் கருதாது சதா பரமாத்ம ஸ்வரூபத்தையே அணைந்துகொள்வதாக, கவிந்துகொள்வதாக இருக்கவேண்டும் என்று லட்சணம் சொல்கிருர்கள். ஏதாவது காரணத்தோடு இருந்தால் பக்தியாகாது. காரணமில்லாமல் மனம் சதா அங்கேயே லயிக்க வேண்டும். காரணத்தோடு வரு வது அன்பு இல்லை. அன்பு என்ருல் காரணமே இல்லாது வருவது. இதைத்தான் பக்தி என்பர். நமக்குத் தனி ஸ்வரூபம் இல்லை. எல்லாம் பரமாத்ம ஸ்வரூபந்தான். பிரிந்து இருக்கிறவரையில் சாந்தி கிடையாது. அங்கே கலந்தால்தான் சாந்தி, ஆனந்தம். நாம் என்பதே இல்லை. எல்லாம் அந்தப் பரமாத்ம ஸ்வரூபந் தான்.

சதாசிவ ப்ரம்மேந்திராள் மானஸிக பூஜை என்று பண்ணி யிருக்கிருர்கள். அதில் ஒரு சுலோகம்; பக்தன் ஒருவன் ஈச்வர பூஜை பண்ண உட்காருகிருன். பூஜை பண்ண வேண்டுமல் லவா? ''ஈச்வரா, நான் உனக்கு உபசாரம் என்று அபசாரம் அல்லவா செய்கிறேன்? உனக்கு எப்படிப் பூசை பண்ணுவது? பண்ண முடியாது! பண்ண முடியாது!'' என்றே பூஜை பண்ணு கிருன். ''உனக்கு நான் எப்படி ஆராதனை பண்ணுவது? நமஸ்காரம் பண்ணவேண்டும் என்று இப்படிப் பண்ணிஞல் இந் தப் பக்கத்தில் மட்டுந்தாஞ நீ இருக்கிருய்? என் கால் பக்கத்தி லும் நீ இல்லையா? நீ இருக்கும் பக்கம் கால் நீட்டுவது அபசாரம் ஆயிற்றே. அந்தப் பக்கம் நீ இல்லை என்று நினைத்துப் பண்ணி ஞல் உன்னுடைய பூர்ணத்துவத்துக்கு ஒரு குறை ஏற்படுத்திய அபசாரத்துக்கு நான் ஆளாகும்படி நேரிடுமே. ஆகவே நான் நமஸ்காரம் பண்ண முடியாது.

''உன்னுடைய திருவடியை அலம்புவதாக நினைத்துச் செம் பிலோ, உத்தரணியிலோ ஜலம் எடுத்துவிட்டால் சரியா? நீ மூன்று லோகங்களையும் மூன்று அடியில் அளந்த திரிவிக்ரமன் ஆயிற்றே. உன் திருவடியில் ஒரு சிறிய இடத்தை அலம்பிவிட் டுப் பாக்கியை அலம்பாது விட்டால் அபசாரம் அல்லவா?

भूः पादौ यस्य नाभिः

பூ: பாதௌ யஸ்ய நாபி:

''ஒரு சிறிய வஸ்திரத்தை எடுத்து உனக்குக் கட்டிஞல் பாக்கி உன்னுடைய பூர்ணமான உருவத்தை அம்மணமாக விட்டதாக ஆகாதா?'' என்று இப்படியே பண்ண முடியாது,

Koviloor Digital Library

பண்ண முடியாது என்றே பூசை பண்ணுகிறார். உன்னிடத்தில் பிரார்த்தனை செய்துகொள்வது என்றால் உனக்குத் தெரியாததை நான் கேட்பதாக ஆகாதா? உனக்குத் தெரியாது போனால் அல்லவா பிரார்த்தனை? நீ சர்வக்ஞன். நான் பிரார்த்தனை என்று பண்ணினால் அது நீ சர்வக்ஞன் என்பதற்குக் குறைவு உண்டு பண்ணின அபசாரமாகாதா?

இருந்தாலும் உன்னிடத்தில் இல்லாததை நான் கேட்கவில்லை. புதிதாக ஒரு பொருளைக் கேட்டால் நீ கொடுப்பவன், நான் வாங்குகிறவன் என்று ஆகும.

அகண்டமான ஆனந்த ஸ்வரூபம் உன்னுடையது என்று சுருதி சொல்கிற காலத்தில் நான் இப்படிக் கோணலும் மாணலுமாகக் குறையோடு இருக்கிறேனே. இதை விலக்கி என் சொரூபத்தையே எனக்குக் கொடு.

என்னையே எனக்குக் கொடு

என்று பிரார்த்தனை செய்கிறார். ''என்னையே எனக்களித்த'' என்று வேறு ஒரு பக்தர்கூடச் சொல்லியிருக்கிறார்.

என்னையே எனக்குக் கொடு

என்றால் என்ன அர்த்தம்? என் சுவரூபமே நீதான்; உன்னையே எனக்குக் கொடு.

याचे नाभिनवं ते चन्द्रकुलोत्तंस किञ्चिदपि वस्तु ।
मह्यं देहि च भगवन् मदीयमेव स्वरूपमानन्दम् ॥

யாசே நாபிநவம் தே சந்த்ரகுலோத்தம்ஸ கிஞ்சிதபி வஸ்து|
மஹ்யம் தேஹி ச பகவந் மதீயமேவ ஸ்வரூபமாநந்தம்||

என்று பிராத்திக்கிறார்.

அப்படி நம் ஸ்வரூபத்தையே நாம் விட்டு விட்டு இருக்கிறபோது க்ஷணங்கூடச் சகிக்க முடியாத தவிப்பு நமக்கு வரவேண்டும். பரமாத்ம ஸ்வரூபத்தோடு எப்போது கலக்கப் போகிறோம், எப்போது அதைக் காணப்போகிறோம் என்கிற தவிப்பு, சதா அதைப்பற்றிய நினைப்பு நமக்கு இருக்கவேண்டும். நாம் நாமாக இருக்கிற ஸ்வரூபம் பரமாத்ம ஸ்வரூபத்தோடு கலந்திருப்பது தான். அதுதான் ஆனந்த ஸ்வரூபம்; பரமான ஆத்ம ஸ்வரூபம். மற்றத் தேக ஆத்ம ஸ்வரூபம் எல்லாம் பிராந்தி. பரமான ஆத்ம ஸ்வரூபம், பரமாத்ம ஸ்வரூபம், அந்தச் சத்தியமானதோடு கலந்திருப்பதுதான். அது இல்லாது குமிழிபோல, நுரைபோல், இன்னொன்று வந்துவிட்டால் தாங்க முடியாத, சகிக்க முடியாத ப்ரேமை எப்போது அதனோடு போய்க் கலப்போம் என்று ஏற்பட வேண்டும். அதற்குத்தான் பக்தி என்று பெயர்.

Koviloor Digital Library

7

சமய வளர்ச்சியும் நலிவும்

இமய மலைக்கும் கங்கைக்கும் நடுவிலுள்ள ஒரு தேசத்துக்கு விதேஹம் என்று பெயர். அதை ஆண்ட அரசர்களை எல்லாம் விதேஹ அரசர்கள் என்பர். அந்த ராஜ்யத்தில் ஜனக மகாராஜா ஒரு பற்றும் இல்லாமல் ராஜ்ய பரிபாலனம் பண்ணினார் என்று கேட்டிருக்கிறோம். ஜனகர் விதேஹ மகாராஜா ஆனதனால், இந்த ஜனகரின் பெண்ணுக்கு ஜானகி என்றும் வைதேஹி என்றும் பெயர். விதேஹபுரியில் பிறந்ததனால் வைதேஹி என்று பெயர் வந்தது. மைதிலி, வைதேஹி, ஜானகி என்ற பெயர்களை இன்றைக்கும் நாம் குழந்தைகளுக்கு வைத்து வழங்குகிறோம். இமயமலைக்கும் கங்கைக்கும் நடுவிலுள்ள அந்த விதேஹம் என்ற ராஜ்யத்தில்தான் ராமர், ஜனகர் வசம் இருந்த பெரிய வில்லைப்-தனுசைப்-பங்கம் செய்தார்; ஒடித்தார்; அதாவது தனுர்ப்பங்கம் செய்தார். அந்த இடத்தைத்தான் **'தர்பங்கா'** என்று இந்தக் காலத்தில் சொல்கிறார்கள். அதற்குக் கொஞ்சம் வடக்கே, நேபாள எல்லையின் அருகே ஜனகபுரம் என்று ஓர் ஊர் இருக்கிறது. ஜனகர் ஒருவிதப் பற்றும் இல்லாமல் ராஜ்ய பரிபாலனம் செய்த இடம் அது.

ஜனகர் என்பவர் ஒருவர் அல்ல; விதேஹ ராஜ்யத்தைப் பரிபாலனம் பண்ணினவர்கள், அந்த வம்சத்தில் வந்தவர்கள் எல்லோருக்குமே ஜனகர் என்றுதான் பெயர். விஷ்ணுபுராணத்தில் கடைசி அத்தியாயங்களில் காண்டிக்யர் எனக் கூடியவர் விதேஹ ராஜ்யத்தைப் பரிபாலனம் செய்துகொண்டு, பிரம்ம நிஷ்டராக இருந்ததாகவும், அவருக்கும் அவருடைய பங்காளிக்கும் மனஸ்தாபம் உண்டானதாகவும், அந்தச் சத்துருவே கடைசியாக அவரிடத்தில் பிரம்ம ஞான உபதேசத்துக்கு வந்த

Koviloor Digital Library

தாகவும், அந்தச் சத்துருத் தன்மையிலும் ஒருவர் ஞானசிரியராகவும், மற்றவர் அவரிடத்தில் உபதேசம் பெற்றுப் பிரம்ம நிஷ்டையில் இருந்ததாகவும் ஒரு கதை இருக்கிறது. இப்படி அந்த வம்சத்தில் வந்தவர்கள் எல்லோரும் பிரம்ம நிஷ்டர்களாகவும், ஜனகர் என்ற பெயர் உள்ளவர்களாகவும் இருந்திருக்கிறார்கள்.

அநேகமாய் அந்த ராஜ்யத்துக்கு இருநூறு முந்நூறு மைல்களுக்குள் இருக்கக் கூடிய கபிலவாஸ்து என்ற இடந்தான் புத்தர் பிறந்த இடம். புத்தருடைய சரித்திரத்தைக் கேட்கக் கேட்க நமக்குச் சாந்தமும் கருணையும் ஆனந்தமும் உண்டாகின்றன. அவருடைய விக்கிரகங்களை நாம் இப்போது பார்த்தாலும் பால் வடிகிறது முகத்தில். எண்பது வருஷங்களுக்கு முன்னாலே புத்தமதம் என்றால், 'பழைய நாளில் இருந்த நாஸ்திக மதம். அது இங்கிருந்து விரட்டப்பட்டுவிட்டது' என்பது மாத்திரந்தான் நமக்குத் தெரியும். அந்தப் புத்தமத சம்பந்தமான நூல்களில் சம்ஸ்கிருத நூல்கள், பிராகிருத பாஷையில் உள்ள நூல்கள், இன்னும் சிலைகள், அசோகனுடைய கல்வெட்டுக்கள் இவை எல்லாம் கிடைத்த பிறகுதான் புத்த மதத்தில் எல்லோருக்கும் ஓர் அன்பு, கௌரவம் இவை எல்லாம் உண்டாயின. 'எட்வின் ஆர்னல்டு' என்ற ஒரு வெள்ளைக்காரன் புத்தரைக் குறித்து ஆங்கிலத்தில் கவிதையாக ஒரு பெரிய நூல் இயற்றியிருக்கிறான். அதற்கு ஆசியச் சுடர் (Light of Asia) என்று பெயர். ஆசியா கண்டத்துக்கே ஒரு பிரகாசம், ஓர் ஒளி என்பது இதன் பொருள்.

நாம் சிறு வயதில் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும்போது, நம்முடைய பாட புத்தகத்தில் வரும் புத்தருடைய சரித்திரத்தைப் படிக்கிறபோது, 'இவ்வளவு கருணை, இவ்வளவு அன்பு, இவ்வளவு சாந்தம் எல்லாவற்றையும் போதிக்கும் புத்த மதம் ஏன் நம் நாட்டை விட்டுப் போய்விட்டது?' என்று சிற்சில சமயங்களில் சந்தேகப்பட்டிருப்போம்.

தமிழ் நாட்டிலுங்கூடச் சில காலம் புத்த மதம் பரவி இருந்திருக்கிறது. இப்போது அநேக இடங்களில் புத்தருடைய சிலைகள் கிடைக்கின்றன. பௌத்த தத்துவங்களைப் பற்றித் தமிழ் நூல்களிலும் அங்கங்கே எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டில் புத்த மதத்தைவிட ஜைன மதந்தான்-சமண மதந்தான்-இன்னும் அதிகமாக இருந்ததாகக் காணப்படுகிறது. புத்த மதப் பிரசாரம் குறைவாகவும், சமண மதப் பிரசாரம் அதிகமாகவும் இருந்திருக்கிறது. புத்த மதத்திலும்,

अहिंसा परमो धर्मः

அஹிம்ஸா பரமோ தர்ம:

Koviloor Digital Library

என்ற தத்துவம் உண்டு. சமணர்களுடைய கொள்கையிலும்-ஜைனர்களுடைய கொள்கையிலும்-இந்த 'அஹிம்ஸா பரமோதர்ம' என்கிற தத்துவம் உண்டு. ஆனால் அநுபவத்தில் புத்த மதத்தில், 'நாமாக ஒன்றைக் கொல்லக் கூடாது' என்ற பழக்கம் இருந்திருக்கிறதே தவிர, 'வேறு யாராவது கொன்றுவிட்டால் அதை நாம் சாப்பிடக்கூடாது' என்ற அவ்வளவு நிர்ப்பந்தம் இல்லை. ஜைன மதத்தில் கொல்லாமை, அஹிம்சை என்பன வெகு தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. ஆகாரத்திலோ, வஸ்திரத்திலோ, உபயோகப்படுத்தும் வேறு எந்தப் பொருளிலோ ஹிம்சை உள்ள பொருள் கிட்டே வரவே கூடாது. ஜைனர்களுடைய விக்கிரகங்களும் ஜைனர்களுடைய நூல்களும் தமிழிலே புத்தர்களுடைய நூல்கள், விக்கிரகங்கள் இவற்றைவிட வெகு அதிகம்.

மற்றொரு மதம்-சாங்கிய மதம் என்று பழைய காலங்களில் இருந்தது. புத்த ஜைன மதம் போல் அதற்குச் சிலைகளோ கதைகளோ பாட்டுப் புத்தகங்களோ அதிகமாக இல்லை. ஆனால் தத்துவ நூல்கள் மாத்திரம் அதிகமாக இருந்திருக்கின்றன. அந்த மதத்தைக் கடைப்பிடிக்கும் தபஸ்விகளும் ஞானிகளும் நாட்டில் அதிகமாக இருந்தனர். பௌத்தர்களைவிட, சமணர்களைவிட, நாட்டில் இவர்கள் அதிகமாக இருந்தனர் என்று சொல்லலாம். இப்போது நம்முடைய நாட்டில் சைவ சித்தாந்தம் என்று ஒரு மதம் இருக்கிறது. வைஷ்ணவ சித்தாந்தம் என்ற பெயருடன் இரண்டு மதங்கள் இருக்கின்றன. ஒன்று மாத்வ மதம், மற்றொன்று ராமாநுஜ மதம். தமிழ்நாட்டு வைஷ்ணவக் கோயில் ஒவ்வொன்றிலும் ராமாநுஜர், மணவாள மாமுனி, நம்மாழ்வார், தேசிகர், இன்னும் ஆழ்வார்கள் முதலியோருடைய விக்கிரகங்களை அநேகமாகக் காணலாம். சிவாலயங்களிலும் முக்கியமாக நால்வர்-நடராஜா சந்நிதியில் நிச்சயமாய் மாணிக்கவாசகர்-சற்று விசேஷமான ஆலயமாய் இருந்தால் அறுபத்துமூவர் இவர்களை எல்லாம் காணலாம். இப்படிச் சைவாசாரியர்களுக்கும் வைஷ்ணவாசாரியர்களுக்கும் எவ்வளவு சிலைகள் இருக்கின்றனவோ அதில் நூற்றில் ஒருபங்கு கூட அல்லது ஆயிரத்தில் ஒரு பங்குகூடச் சங்கராசாரியருக்கோ, அவர்களுடைய மரபில் வந்த வித்தியாரண்யர், ஸுரேச்வராசாரியர், அந்த மதத்தைச் சார்ந்த அப்பைய தீக்ஷிதர் முதலியவர்களுக்கோ இல்லவே இல்லை.

பிரபந்த பாராயணத்துக்காகவும், சைவ நாயன்மார்களுடைய திருமுறைகளின் பாராயணத்துக் காகவும் அநேக இடங்களில் மானியங்கள் விடப்பட்டு, பாராயண நிபந்தனைகள்

Koviloor Digital Library

ஒவ்வொரு கோயில் கல்வெட்டிலும் பொறிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். சிலாசாஸனப் பரிசோதனை இலாகாவைச் சேர்ந்த ஒரு பெரிய அதிகாரி ஒரு சமயம் என்னிடம் சொன்னார்: ''ஹிஸ்டரி அல்லது சரித்திரம் என்ற முறையில் கல் வெட்டுக்களும் சிலைகளும் ஆராயப்பட்டு அதன் மூலம் உண்மை அறிவது என்ற முறையில் பார்த்தால் சங்கராசாரியர் என்றோ; அத்வைத மதம் என்றோ நம் நாட்டில் இல்லை, கிடையவே கிடையாது என்று சொல்லிவிடலாம்'' என்று அவர் சொல்லியிருக்கிறார். அதுபோலவே பௌத்த மதத்துக்கும் ஜைன மதத்துக்கும் சிலைகளும் கல்வெட்டுக்களும், அவர்களைப்பற்றிய ஸ்தோத்திர புத்தகங்களும் எவ்வளவு இருக்கின்றனவோ அவற்றில் நூற்றில் ஒரு பங்குகூடச் சாங்கிய மதத்துக்கு இல்லை. ஆனாலும் பெரியவர்களுடைய, ஞானிகளுடைய தத்துவ விசாரக் கிரந்தங்களில் பௌத்த மதம், சமண மதம் இவைகளைப் பற்றிய பேச்சுகள் எவ்வளவு வந்திருக்கின்றனவோ அதைவிட நூறு மடங்கு அதிகமாகச் சாங்கிய மதத்தினுடைய பிரஸ்தாபம், மீமாம்ஸா-கர்மானுஷ்டானம்-என்ற மதத்தினுடைய பிரஸ்தாபம் அதிகமாக வந்திருக்கிறது. எங்கோ ஓரிடத்தில்தான் புத்த மதத்தைப்பற்றியும் சமணமதத்தைப் பற்றியும் பிரஸ்தாபம் வந்திருக்கும். ஆனால் கற்சிலைகளிலும் கல்வெட்டுக்களிலும் பார்த்தால் சாங்கிய மதத்தைப் பற்றியோ, மீமாம்சா மதத்தைப் பற்றியோ ஒன்றுமே இல்லை. எல்லாம் சமண மதத்துக்கும், புத்த மதத்துக்குந்தான் இருக்கின்றன. இப்போது வைஷ்ணவத்துக்கும் சைவத்துக்கும் எப்படிக் கற்சிலைகள், கல்வெட்டுகள் இவைகளுடைய சாட்சிகள், அத்வைத மதத்தைவிட அதிகமாக இருக்கின்றனவோ-இங்கே அத்வைத மதத்துக்குக் கிடையவே கிடையாது; சைபர் என்று சொல்லிவிடலாம்-அது போலத்தான் அங்கும் இருந்திருக்கிறது. ஆனால் சாங்கிய, மீமாம்ஸா மதங்களைப் பற்றிக் கிரந்தங்களில் பார்க்கிறபோது அவை பிரபலமான மதங்களாக இருந்திருப்பதாகத் தெரிகிறது.

அந்த அந்த மதங்களுடைய ஸ்தாபகர் வரும்போது நாட்டில் எல்லோரும் அவர்களிடத்தில் மிகுந்த மதிப்பு வைக்கின்றனர். அவர்களால் ஒரு சாந்தம் பெற்றோம். சில உண்மைகளை இப்போதுதான் நாம் தெரிந்துகொண்டோம்' என்ற நம்பிக்கையும் ஏற்படுகிறது. ஆனால் இந்த மதங்கள் எல்லாம் தமக்கு முன் இருந்த மதங்களைக் கண்டனம் செய்து புதிய மதங்களாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. சமணம் புத்த மதத்தை வெகுவாகக் கண்டித்திருக்கும். புத்தம் வைதிக மதத்தைக் கண்டித்திருக்கும். இவற்றின் கொள்கைகள் வெகு தூரம் வேறுபட்டிருக்கின்றன.

Koviloor Digital Library

அதேமாதிரிதான் பாலஸ்தீன தேசத்தில் கிறிஸ்துவ மதம் சாமான்யமாகப் பிறந்து கொஞ்ச தூரம் போயிருக்கிறது. அதற்கு அப்புறம் உலகத்தில் கிட்டத்தட்டப் பாதி ஜனங்கள் இப்போது அந்தக் கிறிஸ்துவ மதத்தை அனுசரித்து வருகிறவர்களாக இருக்கிறார்கள். அதுமாதிரி புத்தர் கபிலவாஸ்து என்ற இடத்தில், இமயமலைச் சாரலில் பிறந்தவர்; ஜனகருடைய ராஜ்யத்துக்குப் பக்கத்தில். இப்போது சீனா, ஜப்பான், பர்மா, சயாம், சிலோன் இப்படிக் கிழக்கத்திய நாடுகளிலுள்ள ஜனங்கள் எல்லாம் இந்த மதத்தைப் பின்பற்றுகிறார்கள். உலகத்திலுள்ள ஜனங்களில் கிட்டத்தட்ட - ஏறக்குறைய அல்ல, ஏறக்குறைய என்றால் அதிகமாகக்கூட என்றாகும் - கிட்டத்தட்ட என்றால்குறைச்சல்-கிட்டத்தட்டப் பாதி அந்த மதத்தை அனுசரிப்பவர்களாக இருக்கிறார்கள்.

இப்படி ஒவ்வொரு மதஸ்தர்கள் ஒவ்வொரு தத்துவத்தைச் சொன்னார்கள். புத்த மதம் ஒரு விதமான தத்துவத்தைச் சொல்கிறது. ஜைனமதம் வேறு விதமான ஒரு தத்துவத்தைச் சொல்கிறது. ராமாநுஜர் ஒருவிதமான தத்துவத்தைச் சொல்கிறார். அப்பர் சுவாமிகள் முதலானவர்கள் சைவத்தில் ஒருவிதமான தத்துவத்தைச் சொல்கிறார்கள். எல்லாம் வெவ்வேறு விதமாக இருக்கிறது.

விக்கிரக ஆராதனைதான் பிரதானம் என்று சொல்கிற மதங்கள் இருக்கின்றன. மூர்த்தி என்று வேண்டாம், லிங்காகாரமாக இருந்தால் போதும் என்று ஒரு பக்கம்; நிறைய விக்கிரகங்கள்தான் வேண்டும் என்று ஒரு பக்கம். 'விக்கிரகம் என்பதே கிட்ட வரக்கூடாது, விக்கிரக ஆராதனையே கூடாது' என்று ஒரு பக்கம்; இப்படிப் பல்வேறுபட்ட கொள்கைகள். ஜைன மதத்திலும் வைஷ்ணவ மதத்திலும் நிறைய விக்கிரகங்கள். இஸ்லாமிய மதம் விக்கிரகமே கூடாது என்கிறது. கிறிஸ்துவ மதத்திலும் இப்படித்தான். நம் தேசத்திலும் ஒரு மதம்-ஆர்ய சமாஜம் என்பது-அப்படிச் சொல்கிறது. தயானந்தர் என்பவர் இந்த ஆர்ய சமாஜத்தை ஸ்தாபித்தார். இதைத் தழுவியவர்களும் அநேகர் இருக்கிறார்கள். இதற்கு மாறாகக் கழுத்திலேயே லிங்கத்தைக் கட்டிப் போட்டுக்கொள்ளக் கூடிய வீர சைவம் என்று ஒரு மதம். இப்படி விக்கிரகங்கள் வைத்து ஆராதனை பண்ணவேண்டும் என்று சொல்கிற மதங்கள் ஒரு பக்கம். இதற்கு நேர்மாறாக, 'விக்கிரக ஆராதனையே கூடாது, விக்கிரகம் வைத்து ஆராதனம் செய்தால் நரகந்தான், பாவந்தான்' என்று சொல்லக் கூடிய மதங்கள் ஒரு பக்கம். 'இப்படி இரண்டு விதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றனவே; இதில் எது உண்மை,

Koviloor Digital Library

எது தப்பு? இரண்டிலுந்தான் நிறையப் பக்தர்கள் இருக்கிறார்கள். இரண்டுக்கும் ஜனங்கள் கூடுகிறார்களே?' என்பது ஒரு கேள்வி. இது ஒரு பக்கம் இருக்கட்டும்.

சில மதங்கள் பல நாள் நின்று வாழ்ந்து உலகத்திலுள்ள எல்லா மக்களையும் கவர்ந்திருக்கின்றன. பிறகு அந்த மதம் ஒரு காலத்தில் திடீரென்று அந்தத் தேசங்களை விட்டே போய் விடுகிறது. அப்படி விரிவாகப் பரவியதற்குக் காரணம் என்ன? அந்த மதத்திலுள்ள தத்துவங்கள் எல்லாம் உண்மை என்ற காரணத்தினால் அப்படி எல்லா ஜனங்களிடத்திலும் பரவியதா? தத்துவங்கள் உண்மை என்ற காரணத்தினால்தான் அப்படிப் பரவிற்று என்றால் திடீரென்று அந்த மதம் சில காலத்துக்குப் பிறகு ஏன் அழிந்து போயிற்று? தத்துவங்கள் உண்மையானவை என்றால் அவற்றுக்கு அழிவு உண்டா?

சிலர், 'எங்கள் மதந்தான் உயர்ந்தது; காரணம் இதைப் பின்பற்றுபவர்கள் பலர். உலகம். முழுவதும் எங்கள் மதந் தான் பரவியிருக்கிறது' என்கிறார்கள். ஜனங்கள் அதிகமாக வந்து சேருகிறார்கள்; அதனால் அதுதான் உயர்ந்தது என்றால், அதற்கு நேர்மாறான கருத்தை ஒருவர் சொன்னாலும் அதற்கும் ஏராள மான கூட்டம் கூடுகிறதே. அதற்கு எப்படி அதிக ஜனங்கள் கூடுகிறார்களோ அதுபோலவே இதற்கும் ஜனங்கள் அதிகமாகத் தான் கூடுகிறார்கள். ஆகவே அதிக ஜனங்கள் வந்துவிட்டார்கள் என்பதனால் அந்த மதத்தினுடைய தத்துவங்கள்தான் சத்திய மானவை என்று சொல்ல முடியுமா? வைகுண்ட ஏகாதசி என்றால் ஸ்ரீரங்கத்தில் கூடுகிற கூட்டம் கணக்கில்லை. திருப்பதியில் நித்தியம் வைகுண்ட ஏகாதசிதான். சிதம்பரத்தில் ஆருத்ரா தரிசனம் என்றால் கூடுகிற கூட்டம் கணக்கில்லை. கும்பகோணத்தில் மாமாங்கம் என்றால் உயிர் போனாலும் போகிறது என்று சேற்றில் விழுந்தாவது உடம்பை நனைத்துக்கொண்டு வந்துவிட ஜனங்கள் கூடுகிறார்கள். இதற்கு நேர்மாறான மதங்களிலுந் தான், மெக்கா என்றால் எத்தனை கூட்டம் கூடுகிறது என்று சொல்ல முடியாது. ஆகையால் கூட்டம் கூடுவதனால் மட்டும் ஒரு மதத்தினுடைய தத்துவந்தான் சரியானது, உண்மையானது என்று தீர்மானம் பண்ணுவதற்கில்லை. ஆனால் தத்துவம் என்றால் இரண்டு தினுசாக இருக்க முடியாது. உண்மையான தத்துவம் ஒன்றாகத்தான் இருக்க முடியும்.

இப்போது நம் நாட்டில் காந்திஜி இருந்தபோது காந்தீயம் என்றே ஒரு தத்துவம் தோன்றியது. அதற்கு எத்தனை பேர் சேர்ந்தார்கள், அடி வாங்கிக்கொண்டு, பட்டினி இருந்து கொண்டு, சிறைக்குச் சென்றுகொண்டு - எல்லாவற்றுக்கும்

Koviloor Digital Library

தயாராக ஏராளமான பேர் கூடினார்கள். அப்போது சநாதனி களைக்கூட அவர்கள் கண்டனம் பண்ணுவது உண்டு. சநாதனி சநாதனி என்கிறீர்களே, உங்களுக்குப் பட்டினி கிடக்க, ஜெயி லுக்குப் போக யாராவது வருவார்களா? காந்தீயந்தான் உண்மை யான தத்துவம் என்பதாகச் சொல்லிக்கொண் டிருந்தார்கள். இப்போது அந்தக் கொள்கைகள் எப்படி இருந்துகொண் டிருக் கின்றன என்பதையும் பார்க்கிறோம். மதங்கள் எப்படி வளருகின்றன? உண்மையான தத்துவங்களைச் சொல்வதனால் தான் ஒரு மதம் வளர வேண்டும் என்பது உண்டா? ''நான் சொல்வதுதான் உண்மை. பாக்கி எல்லாம் பொய். நீங்கள் நரகத்தை நோக்கிச் சென்றுகொண் டிருக்கிறீர்களே. அக்ஞானி களே! ஏசுநாதர் ஞானவொளி அளிக்கிறார். இந்தப் பக்கம் பாருங்கள்'' என்று ஒருவர் சொல்கிறார். அங்கேயும் ஏராள மான பேர் கூடியிருக்கிறார்கள். அப்படியானால் அந்த மதந்தான் உண்மையான மதமா?

இதையெல்லாம் பார்த்தால் வெகு சந்தேகமாக இருக் கிறது. விக்கிரங்களைக் கும்பிட்டால்தான் மோட்சம் என்றும், கும்பிட்டால் நரகந்தான் சம்பவிக்கும் என்றும் நேர்மாறாக இரண்டு மதங்கள் சொல்கின்றன என்றாலும் இரண்டிலும் கிட்டத்தட்ட உலகத்திலுள்ள ஜனங்களில் பாதிக்கு இருக்கி றார்கள். அப்படியென்றால் உண்மை என்ன? இதைப்பற்றிப் பல நாள் எனக்குச் சந்தேகம். அதற்கு என்ன சமாதானம் தோன்றி யது என்று சொல்லி முடித்துவிடுகிறேன்.

எந்த மதமும் அதிலுள்ள உண்மையினால் வளருவ தில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். பின் எதனால் வளர்ந்தது? அது தெரியவில்லை. ஒரு காலத்தில் மிக மிக உயர்ந்த நிலையில் எல்லாத் தேசங்களிலும், எல்லா மக்களிடத்தி லும் பரவியிருந்த மதங்கள் மற்றொரு காலத்தில் கடைசியில் இருக்கிற இடம் தெரியாமல் போய்விட்டன. போகிற காலத் தில் எதனால் போயின என்று பார்த்தால் வளர்ந்த காலத்தில் எதனால் வளர்ந்தன என்று தீர்மானம் பண்ணிவிடலாம்.

புத்த மதத்தை எடுத்துக்கொண்டால் அதைப்பற்றி நிறை யப் புஸ்தகங்கள் இருக்கின்றன. கல்வெட்டுக்கள் இருக்கின் றன. நம் தேசமெங்கும் அவை இருந்ததாகத் தெரிகிறது. தமி ழில்கூடப் புத்த மதத்தைப்பற்றி மணிமேகலை என்று ஒரு காவி யம் இருக்கிறது. ஜைன மதத்தைப்பற்றிச் சீவக சிந்தாமணி என்பது இருக்கிறது. இப்படி இன்னும் அநேக நூல்கள், புத்த ஜைன மதங்களைப்பற்றி இருக்கின்றன. திருவள்ளுவருக்கு முந் திய காலங்களில் உள்ள நூல் எல்லாம் சைவத்தையும் வைஷ்

Koviloor Digital Library

ணவத்தையும் வேதத்தையும் பற்றித்தான் சொல்கின்றன. சங்ககாலத்து நூல்களைப் பார்த்தாலும், சிவன், பார்வதி, முருகன், திருமால் ஆகிய எல்லாரும் வருகிறார்கள். இப்போது இருக்கிற மாதிரியேதான் அப்போதும் இருந்திருக்கின்றன. நடுவில் புத்த மதம் அதிகமாக இருந்ததாகத் தெரிகிறது. ஜைன மதமும் அதிகமாக இருந்திருக்கிறது. இதெல்லாம் இருந்த இடம் தெரியாமல் இப்போது போயிருக்கிறது.

இப்படிப் போகிற காலத்தில் காஞ்சீபுரத்தில் மஹேந்திர பல்லவன் என்ற ஒரு ராஜா இருந்திருக்கிறான்.

மஹேந்திர பல்லவனுக்கு அநேகம் பட்டப் பெயர்கள். இவன்தான் மகாபலிபுரத்தில் கற்கோயில்களைக் குடைந்திருக்கிறான். கட்டுவது என்றால் அழிவதும் உண்டு. இவன் அங்கே இருந்த கல்லையே குடைந்து கோயிலாக, சாசுவதமாக இருக்கும்படி செய்திருக்கிறான். இப்படிக் குடைந்த கோயில்கள் திருச்சிராப்பள்ளி, நாமக்கல், புதுக்கோட்டை இன்னும் அநேக இடங்களில் இருக்கின்றன. மகேந்திர பல்லவனுக்கு நிறையச் சிவாலயங்களையும், வைஷ்ணவ ஆலயங்களையும் குடைந்த பெருமை உண்டு. இப்போது நம் நாட்டில் கலைச் செல்வம் என்று சொல்வதெல்லாம் அவனுடைய பிரயத்தனத்தினால் ஏற்பட்டவைதான். அதற்கப்புறம் கொஞ்சம் கொஞ்சம் அவனுடைய வம்சத்தில் வந்தவர்களும் செய்திருக்கிறார்கள். பல்லவர் குகைகள், பல்லவர் கோயில்கள் என்பதற்கு எல்லாம் காரணமானவன் மகேந்திர பல்லவன். இவன் வீணை வாசிப்பதில் நிபுணன்; சிவ பக்தி உடையவன்; எப்போது பார்த்தாலும் கிரீடம் முதற்கொண்டு, சரீரத்திலுள்ள ஆபரணங்கள் முதற்கொண்டு ருத்திராட்சத்தினாலேயே பண்ணிப் போட்டுக்கொண்டு அரசாண்ட மகாசிவபக்தன். சிற்பத்திலும் அவனுக்கு இருந்த திறமை சொல்லவேண்டியதில்லை. அர்த்தசாஸ்திரத்திலும் நிபுணன். இப்படியெல்லாம் அவனுக்கு இருந்த திறமையினாலேயே அவனுக்கு ஏற்பட்டிருந்த டைட்டில் - பட்டம் - இருபது முப்பது இருக்கும். இவற்றுள் 'விசித்திர சித்தன்' என்று அவனுக்கு ஒரு பட்டம். நிமிஷத்துக்கு நிமிஷம் அவனுக்கு விசித்திரமான புதுப் புது உயர்ந்த எண்ணம் தோன்றிக்கொண்டே இருக்கும். அவன் மகாகவி. 'மத்த விலாஸப்ரஹஸனம்' என்று அவன் ஒரு நாடகம் எழுதியிருக்கிறான். நாடகங்களில் அநேக தினுசு.

அதிலே பிரஹஸனம் என்றால் பச்சையாக, மட்டமாக, மோசமாக இருக்கிற கெட்ட எண்ணங்களை எல்லாம் - ஹஸனம் என்றால் சிரிப்பு; பிரஹஸனம், அதிகச் சிரிப்பு - அதிகச் சிரிப்பை உண்டுபண்ணக்கூடிய வகையில் 'மத்தவிலாஸ ப்ரஹஸனம்'

Koviloor Digital Library

என்ற ஒரு நாடகத்தை எழுதியிருக்கிறான். மத்தம் என்றால் மதோந்மத்தம். 'டம்பாச்சாரி நாடகம்' என்று நாடகம் இருந்ததில்லையா? அதுபோல 'மத்தவிலாஸ ப்ரஹஸனம்' என்ற நாடகம் 1300 வருஷங்களுக்கு முன்பு தோன்றியது. ஏழாவது நூற்றாண்டில் இருக்கும்.

அந்த நாடகத்தில் ஒரு காபாலிகன், ஒரு புத்த பிட்சு, இவர்களை எல்லாம் பாத்திரமாகக் கொண்டுவந்துவிடுகிறான். இந்த நாட்டில் சைவர்களுக்குள் காபாலிகர்கள் என்று ஒரு பிரிவு இருந்தது. அவர்கள் மயானத்திலேயே எப்போதும் இருப்பார்கள். அங்கே வேகும்படியான பிணத்தின் மாமிசம் இருக்கிறதே, அதைச் சாப்பிடுவது, அது கிடைக்காவிட்டால், கபாலத்தை எடுத்துக்கொண்டு வந்து அதிலே பிட்சை வாங்கிச் சாப்பிடுவது, உடம்பு முழுவதும் சாம்பலைப் பூசிக்கொண் டிருப்பது, அவதூதர்களாகவே இருப்பது, இதெல்லாம் காபாலிகர்களுடைய வழக்கம். எல்லாவற்றுக்கும் துணிந்து, மானம், கௌரவம் எல்லாவற்றையும் விட்டு, அதிலே அவ்வளவு வெறியாக அவர்கள் இருந்தார்கள். அப்படிப்பட்ட காபாலிகர்களையும் மஹேந்திர பல்லவன் இந்த நாடகத்தின் பாத்திரமாக ஆக்கிக்கொண்டான்.

ஜைனர்களும் நிர்வாணமாக இருக்கிறார்கள். ஆனால் புத்தர்களெல்லாம் நிறைய மரவுரிகள் அணிந்துகொண் டிருப்பார்கள். புத்த விக்கிரகங்களைப் பார்த்தால் தெரியும். நிறைய மடிப்பு மடிப்பாக, இரண்டு மூன்று புடைவையைச் சுற்றிக்கொண் டிருப்பதுபோல் இருக்கும். இப்படிப்பட்ட புத்த பிட்சுக்களையும் இந்த நாடகத்தின் பாத்திரமாக ஆக்கிக்கொண்டான்.

புத்த மதத்தில் ஸ்திரீகளும் புத்த பிட்சுணிகளாக இருந்திருக்கிறார்கள். இதற்கு ஒரு காரணம் சொல்வது உண்டு. புத்தர் தம் ராஜ்யத்தை விட்டுப் போன பிறகு போதிமரத்தின் அடியில் ஞானம் பெற்றார் அல்லவா? அப்புறம் திரும்பித் தம் ராஜ்யத்துக்கு வந்தபோது அவரைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் அவருடைய சிஷ்யர்களாகிப் பிட்சுக்களாக மாறினார்களாம். புத்தருக்கு ஒரு சிறு தாயார் உண்டு. அவருடைய சிறு தாயாரும் தன்னைப் பிட்சுணியாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டபோது, ''ஸ்திரீகளுக்கு ப்ரவ்ரஜ்யை கொடுப்பது சரியில்லை'' என்று எவ்வளவோ மறுத்துப் பார்த்தார். சிறுதாயார் உரிமையோடு மிக வற்புறுத்தியதனால், ''சரி, கொடுக்கிறேன். ஆனால் உலகத்தில் என் மதம் ஆயிரம் வருஷங்கள் இருக்கும் என்றால் உங்களைச் சேர்ப்பதனால் அதற்கு ஐந்நூறு வருஷங்களுக்கு முந்தியே இந்த மதம் போய்விடும்'' என்று ஜோஸ்யம்

Koviloor Digital Library

சொல்லிவிட்டே ஸ்திரீகளையும் அப்போதையிலிருந்து பிட்சுணி யாக்குவது என்று ஏற்படுத்தினாராம்.

மஹேந்திர பல்லவன் முதலில் சமணனாக இருந்தான். திருநாவுக்கரசர் அப்போது ஜைன மதத்தில் இருந்தார். அவர் பெரிய சிவபக்தராக மாறிச் சிவாலயங்களை எல்லாம் தரிசனம் பண்ணிக்கொண்டு வரும்போது மஹேந்திர பல்லவனும் சிவ பக்தனாக மாறிவிட்டதாகத் தெரிகிறது. அப்போதுதான் அவன் புத்த மதம், காபாலிக மதம், ஜைன மதம் முதலியவற்றில் இருந்தவர்களைப்பற்றி, அவர்கள் நடந்துகொண்ட முறைகளைப் பற்றி, மிகவும் கேலியாக – 'மத்தவிலாஸ ப்ரஹஸனம்' என்ற நாடகத்தை எழுதினான். பிரஹஸனம் என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். அதுதான் பொருத்தமான வார்த்தை. உங்களுக்குப் புரிவதற்காக நாடகம் என்று சொல்கிறேன்.

மஹேந்திரபல்லவன் தன்னுடைய மத்தவிலாஸ ப்ரஹஸ னத்தில் இவர்கள் எல்லோரையும் கொண்டுவந்து பாத்திரங்க ளாகச் சேர்த்து எழுதியிருக்கிறான். புத்த பிட்சு தம் ஆடையில் ஒரு சாராயப் புட்டியை ஒளித்து வைத்திருக்கிறார். ஓரிடத்தில் கஞ்சா வைத்திருக்கிறார். அப்புறம் பிட்சுணிகளிடத்தில் பழக் கம். அவளுக்காக, வேறு சாராயப் புட்டி வைத்திருக்கிறார். இப்படித் திருட்டுப் பார்வை பார்த்துக்கொண்டு பிட்சு வருகிறார்.

அங்கே காபாலிகன் ஒருத்தன் ஒழுக்கம் கெட்ட காபாலினி ஒருத்தியுடன் குடித்து மயங்கிக் கிடக்கிறான். நாய் ஒன்று அவனுடைய கபாலத்தைத் தூக்கிக்கொண்டு போய்விடுகிறது. அது தெரியாத காபாலிகன் அவ்வழியே வந்த புத்த பிட்சுதான் தன் கபாலத்தை எடுத்துக்கொண்டுவிட்டார் என்று அவரை வழி மறித்துத் துணியைப் பிடித்து இழுக்கிறான். சாராயப் புட்டி கீழே விழுகிறது. உடனே, ''புத்தர் சொன்னார், புத்தர் சொன் னார் என்று சொல்கிறோமே. அவர் என்ன சொன்னார்? அவர் வேதத்தில் இருப்பதையும், மகாபாரதத்தில் இருப்பதையுந் தானே திருடிச் சொன்னார். அவர் ஒரு திருடர்; அந்த மதத் தில் வந்த இந்தப் பிட்சு ஒரு சாராயப் புட்டித் திருடர்'' என்று சொல்லிக் காபாலிகன், புத்த பிட்சுவைப் பழிப்பதாக அந்த நாடகத்தைப் பரிகாசமாக மஹேந்திரபல்லவன் எழுதியிருக்கி றான். அவன் காலத்தில்தான் புத்த மதமே அழிய ஆரம்பித்தது. இதிலிருந்து என்ன தெரிகிறது? ஒரு மதத்தின் மதிப்புக் குறை வதற்குக் காரணம் அந்த மதத்தினுடைய தத்துவம் உயர்ந்ததா தப்பானதா என்பதே அல்ல.

வடக்கே ஜைனர்கள் எல்லாம் வல்லபாசாரியார் காலத்

Koviloor Digital Library

தில் வைஷ்ணவர்களாக மாறினார்கள். இப்போது அநேக ஜைனர்கள் கன்னட தேசத்தில் வைஷ்ணவர்களாக இருக்கிறார்கள். வடக்கே இப்படி வைஷ்ணவர்களாக மாறினவர்களுக்குத்தான் புஷ்டிமார்கி பனியாக்கள் என்று பெயர். குங்குமப் பூவினால் நாமம் போட்டிருப்பார்கள். துளசி மாலை அணிந்திருப்பார்கள். காந்திகூட இப்படி வந்தவர்தான். அதனால்தான் காந்தியை ஜைனன் ஜைனன் என்று சொல்லிக்கொண் டிருப்பது. இன்னும் நம் பக்கத்தில் சில சைவ குடும்பத்தில் வைஷ்ணவர்களும் இருக்கிறார்கள். ஒரே வீட்டில் நாமம் போடுகிறவரும், விபூதி பூசுகிறவரும் இருக்கிறார்கள். ஆகவே மதம் மதம் என்பது அதனுடைய உண்மையான தத்துவங்களைப் பற்றிப் பரவுவதோ, அழிவதோ இல்லை என்பது என் அபிப்பிராயம்.

அதுவும் சாமானிய ஜனங்களுக்குத் தத்துவங்களைப் பற்றியே கவலை இல்லை. தத்துவங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பவர்கள் யாராவது இரண்டொருவர்தான். அவர்கள் எங்கேயாவது ஒரு மூலையில் உட்கார்ந்து ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பார்கள். பின்னே ஒரு மதத்தில் ஒரு காலத்தில் ஏராளமான பேர்கள் கூடுகிறார்கள். ஒரு காலத்தில் அந்த மதமே அழிந்துபோகிறதே, இதற்கும் அந்த மதங்களுடைய தத்துவங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் வேறு என்ன காரணம்?

யார் ஒரு தத்துவத்துக்கும் மதத்துக்கும் பிரதிநிதியாக, மக்களிடத்தில் அதைப்பற்றிச் சொல்வதற்கு முன்வருகிறார்களோ அவர்களுடைய தன்மையைப் பொறுத்துத்தான் மதம் வளருகிறது, அழிகிறது என்று நான் நினைக்கிறேன். நல்ல குணம், நல்ல சாந்தம், பழக்கம் இவை எல்லாம் உடைய ஒரு மகான் இருந்தால் அவர் எது சொன்னாலும் அதைச் சரி என்று நம்பித்தான் ஏராளமாக ஜனங்கள் அவர் சொல்வதையே கேட்க முன்வருகிறார்கள்.

ஒரு மதம் எவ்வளவு உண்மையான தத்துவங்களைச் சொல்வதாக இருந்தாலும், என்றைக்கு அந்த மதத்தைப் பற்றிச் சொல்வதற்குப் பிரதிநிதியாக இருக்கக் கூடியவர்களிடத்தில் ஒழுங்கு தப்பி, சாந்தம் இல்லாது, தப்பான காரியங்களில் ஈடுபடக் கூடிய குணம் வந்துவிடுகிறதோ, அன்றைக்கே அந்த மதம் அழிந்துவிட்டது என்று சொல்லிவிடலாம்.

ஆகையால் எந்த எந்த மதத்துக்கு, 'நான்தான் வாரிசு, நான்தான் வாரிசு' என்று சொல்லிக்கொண்டு எவன் எவன் வருகிறானோ அவனுக்கு ஒழுங்கு, சாந்தம், குணம் எல்லாம் இருக்க வேண்டும். அது இல்லாது எந்தத் தலைமுறையில் போகிறதோ,

Koviloor Digital Library

அந்தத் தலைமுறையில் நிச்சயமாக அந்த மதம் க்ஷீணித்துப்போகிறது. அந்த மதத்தினுடைய பிரதிநிதிகளுக்கு எவ்வளவு சாந்தம் எவ்வளவு குணம், ஒழுங்கு, பக்தி எல்லாம் இருக்கின்றனவோ அவற்றுக்குத் தகுந்தபடி அந்த மதத்தில் அதிகமான ஜனங்கள் இருக்கிறார்கள் என்பதுதான் என் அபிப்பிராயம். சாமான்ய ஜனங்கள் முதற்கொண்டு அதிகமாகச் சேர்வதற்கு அது தான் காரணம்; தத்துவங்களைப் பற்றிய அம்சங்களுக்கும் சாமானிய ஜனங்களுக்கும் சம்பந்தமே இல்லை. சாந்தம் உள்ளவர்களும், தன்னலம் கருதாது தனனடக்கத்தோடு இருப்பவர்களும், நேர்மை உள்ளவர்களும் தியாகம், இரக்கம் ஆகிய எல்லாக் குணங்களும் உடையவர்களும் ஆக மகான்கள் எப்போது தோன்றுகிறார்களோ அப்போது அவர்களிடத்தில் உள்ள குணங்களினால் எல்லா மக்களும் அவர்கள் சொல்வதையே கேட்கிறார்கள். அவர்கள் சொல்வதே மதமாகிவிடுகிறது. உண்மையான சாந்தம் உள்ளவர்கள் பொய் சொல்ல மாட்டார்கள். பொய் சொன்னாலுங்கூட அது பொய் என்று அவர்களுக்கே தெரியாது வேண்டுமானால் சொல்லலாமே தவிர, பொய் என்று உணர்ந்ததை ஒரு நாளும் சொல்லமாட்டார்கள். புத்த மதம் இந்நாட்டில் இல்லாது போயிற்று என்றால் அதற்குக் காரணம் புத்த மதத்தில் சொல்லப்பட்ட தத்துவங்கள் பொய் என்று சொல்ல முடியாது. அதே மாதிரி புத்த மதம் ஒரு காலத்தில் எங்கே பார்த்தாலும் பரவியிருந்தது என்றால் புத்த மதத்தில் சொன்ன அவ்வளவும் சரி என்றும் சொல்ல முடியாது. பரவியிருந்த காலத்தில் நல்ல மகான்கள், உண்மையான சாந்தமுடையவர்கள், ஒழுக்கம் உள்ளவர்கள், மகா தேஜஸ்விகள் இருந்திருக்க வேண்டும். அது அழிந்து போயிற்று என்றால் பின் வந்தவர்களுடைய ஒழுக்கம் கெட்டுப் போயிருக்கும். ஆகவே அழிந்து போய்விட்டது. ஆகவே ஒன்றை யாரும் அழிக்க வேண்டும், பரப்ப வேண்டும் என்பதே இல்லை. ஒரு காலத்தில் ஒரு மகான் தன்னலமற்று, சாந்தத்தோடு, ஒழுக்கத்தோடு, குணங்களோடு வந்துவிட்டால் அவர்கள் சொல்வது எதுவோ அதுவே மதமாகப் பரவிப் போய்விடும். கூட்டம் கூட்டமாக ஒரேயடியாகச் சேர்ந்துவிடும். கொள்கைகளைப் பற்றியே கவலை கிடையாது. அந்த மகான்களுக்கே ஒரு சமயம் சொன்னது இன்னொரு சமயம் தப்பாகவேகூடப் படலாம்.

காந்தி, சாபர்மதி ஆசிரமத்தை ஆரம்பித்தார். ''ஆண்களும் பெண்களும் சேர்ந்துதான் இருக்கவேண்டும். தனித் தனியாக இருக்கக்கூடாது'' என்று ஏற்படுத்தினார். அப்புறம், ''சீசீ! ஆண்களையும் பெண்களையும் சேர்ந்தே இருக்கும்படியாக

Koviloor Digital Library

விடக் கூடாது, அதுவே பெரிய ஆபத்து'' என்று பட்டினி கிடந்து, உண்ணுவிரதம் இருந்து அந்த ஆசிரமத்தையே கலைத்து விட்டார். அதனுல் முன்னுலே செய்தது தப்பு, பின்னுலே செய்ததுதான் சரி என்ருே பின்னுல் செய்தது தப்பு, முன்னுல் செய்ததுதான் சரி என்ருே இல்லை. சாந்தத்தோடேயும், தன்னலமற்ற, ஒழுக்க குணத்தோடேயும் காந்தி தோன்றினுர். அவர் சொன்னது அவர் காலத்திலே அப்படி ஒரு மதமாக, காந்தீயம், காந்தீயம் என்று கோடிக் கணக்கான ஜனங்கள் ஒன்று கூடி, பசி, பட்டினி, ஜெயில் என்று எந்தத் துன்பம் வந்தாலும் சரி என்று ஈடுபடக்கூடியதாக இருந்தது.

ஆகவே ஒரு மதம் நன்ருக விருத்தியாக வேண்டுமென்ருல் தத்துவம் எப்படி இருந்தாலும் இருக்கட்டும். தத்துவத்துக்கும் மதம் விருத்தியாவதற்கும் சம்பந்தமே கிடையாது. தத்துவம் உயர்ந்ததாக இருந்தாலுங்கூட அதன் பிரதிநிதியாக இருக்கிறவரிடத்தில் ஒழுக்கம், சாந்தம் ஒன்றும் இல்லையென்ருல் அந்த மதம் நிற்கவே நிற்காது; ஜனங்களிடத்தில் ஒன்றும் சாயாது. ஏமாந்து போனுல் கொஞ்ச நாள் வேண்டுமென்ருல் சாயும். அப்புறம் சாயம் வெளுத்துப் போகும். ஆகவே மதத்தினுடைய பிரதிநிதியாக இருக்கக் கூடியவர்களிடத்தில் வேஷம் மட்டும் இருந்தால் பயன் இல்லை. உண்மையான யோக்கியதை, சாந்தம், தபஸ், தன்னலமற்ற தன்மை, எல்லாம் இருக்க வேண்டும்.

நம்முடைய மதம் மிகுந்த கஷ்டங்களை எல்லாம் அநுபவித்து ஒரு காலத்தில் எங்கும் பரவியும், ஒரு காலத்தில் கொஞ்சம் குறைந்தும் எப்படியோ அழிந்து போகாமல் இன்றளவும் இருந்துகொண் டிருக்கிறது. அவ்வப்போது தோன்றின மகான்களுடைய அநுக்கிரஹந்தான் அது. ஆகவே நம் மதம் நன்ருக இருக்க வேண்டும். என்ற ஆசை உங்களுக்கு இருந்தால் நீங்கள் எல்லாம் தன்னலமற்றவர்களாக, சாந்தம் உள்ளவர்களாக, எப்போதும் நல்ல குணங்கள் உள்ளவர்களாக இருக்க வேண்டும். என்னிடத்தில் உள்ள குறைகூடப் போகும்படி நீங்கள் எல்லாரும் நன்ருக இருந்தால் போதும். நம்மில் யாராவது ஒரு மகான் உண்டானுல் அப்போது லோகமே க்ஷேமத்தை அடையும்.

Koviloor Digital Library

8

தெற்குப் பார்த்த ராஜாக்கள்

கோயில்களில் இருக்கிற சுவாமிகள் எல்லாம் அநேகமாகக் கிழக்கைப் பார்த்துக்கொண்டு இருப்பார்கள். பெருமாள் கோயிலாக இருந்தாலும் சரி, சிவன் கோயிலாக இருந்தாலும் சரி, கிழக்கே பார்த்துக்கொண் டிருக்கும்படியான சந்நிதிகள்தாம் அநேகமாக இருக்கும். சில இடங்களில் மாத்திரம் மேற்கே பார்த்த சந்நிதி இருக்கும். மேற்கே பார்த்துக் கொண்டிருக்கும்படியான சந்நிதிகள் இருக்கிற கோயில்களில் கிழக்குக் கோபுரத்தையாவது பலமாகக் கட்டியிருப்பார்கள். இங்கே கபாலி கோயிலில் அப்படித்தான் இருக்கிறது. பெருமாள் கோயில் என்று காஞ்சீபுரத்துக்குப் பெயர். பெருமாளுக்குத் தேவராஜப் பெருமாள், வரதராஜர் என்று பெயர். அவருக்கும் அப்படித்தான். அங்கே பெருமாள் மேற்கே பார்த்துக்கொண் டிருக்கிறார். கிழக்குக் கோபுரம் மிகவும் உயரமாக இருக்கிறது.

சுவாமி என்றால் பொதுவாக ஜனங்களுடைய வார்த்தையில் பகவான் என்று அர்த்தம். வைஷ்ணவ சம்பிரதாயத்தில் மிகவும் பெரியவர்களாக இருக்கிற மனுஷ்யர்களைச் சுவாமி என்று சொல்வார்கள். சுவாமி என்றால் அவர்களுடைய வழக்கத்தில் மனுஷ்யர்களைத்தான் குறிக்கும். பெருமாளைப் பெருமாள் என்றேதான் சொல்வார்கள். ஸ்மார்த்தர்கள் வைஷ்ணவர்களைக் கண்டாலேயே, 'பெருமாள் வந்திருக்கிறார்' என்று சொல்லிவிடுகிறார்கள். வைஷ்ணவர்கள் இன்னொரு வைஷ்ணவரைப் பார்க்கும்போது, 'சுவாமி எழுந்தருளியிருக்கிறார்' என்றுதான் சொல்வார்கள். பெருமாளை ஸ்வாமி என்று சொல்ல மாட்டார்கள். பொதுவாக ஸ்வாமி, பகவான் என்று சகல

Koviloor Digital Library

வர்ணத்தார்களும் சொல்வது கடவுளைக் குறிக்கும்போதுதான். பிராம்மணர்களிலேயே மிகவும் மரியாதைக்கு உரியவர்களாக, யோக்கியதை உடையவர்களாக இருக்கிறவர்களையும் இதர வர்ணத்தவர்கள், 'சாமி, ஸ்வாமி' என்றே அழைக்கிறார்கள். இப்படி ஒரு வார்த்தைக்குப் பொதுவாக லோகப் பழக்கித்தில் ஓர் அர்த்தமும், ஒவ்வொரு சம்பிரதாயப்படி ஒவ்வோர் அர்த்தமும் சிறப்பாக இருந்து வருகின்றன.

ஒவ்வொரு சம்பிரதாயத்திலும் சில சில பரிபாஷைகள் ஏற்பட்டிருக்கின்றன. ராமாநுஜாசாரியர் சம்பிரதாயத்தில்தான் அநேக பரிபாஷைகள் ஏற்பட்டிருக்கின்றன. சைவசித்தாந்தத்தில் மெய்கண்டார் சிவாகமப்படி-வேளாளர்கள் என்று சொல்லப்படுகிறவர்களிடத்திலும் சில சம்பிரதாயச் சொற்கள் இருக்கின்றன. வைஷ்ணவ பரிபாஷையும் சைவ பரிபாஷையும் ஒன்றாக இருந்திருக்கின்றன. ஸ்மார்த்தர்களிடையே பரிபாஷை என்பதே இல்லை. சில சைவக் கிரந்தங்களை எடுத்துப் பார்த்தால் வைஷ்ணவ பரிபாஷைக்கு அர்த்தம் தெரிகிறது. வைஷ்ணவ பரிபாஷையில் திருமஞ்சனம் பண்ணுவது என்பதற்கு, **'மெய் அஞ்சனம்'** பண்ணுவது என்று சொல்லியிருக்கிறார்கள். மெய் என்றால் திருமேனி. அஞ்சனம் என்றால் தைலாதிகளால் காப்புச் சாத்துவது என்று சொல்லியிருக்கிறார்கள். கண்ணுக்கு அஞ்சனம் இட்டுக் கொள்வது என்றால் மை இட்டுக் கொள்வது என்று அர்த்தம். மெய்க்கு அஞ்சனம் என்றால் தைலாதிகளால் மெழுகுவது என்று அர்த்தம். திருமெழுக்கிடுதல் என்று சொல்கிறார்கள்.

பூமி கரடுமுரடாக இருந்தால் சாணம் முதலியன போட்டுத் தரையை வெழுமூணுக்கிவிடுவதை மெழுகுதல் என்று சொல்கிறோம். வெழுமூணுக்கி விடுவதற்குச் செய்யும் சம்ஸ்காரங்கள் மெழுக்கிடுதல் என்று எழுதியிருக்கிறது. இதையெல்லாம் எதற்குச் சொல்ல வந்தேன்; வைஷ்ணவ பரிபாஷையில் சுவாமி என்றால் இன்னொரு வைஷ்ணவரைத்தான் குறிக்கும். ஆனால் நான் சுவாமி சுவாமி என்று சொல்வது ஆசாமியை இல்லை. பெருமானைத்தான் பொதுமக்களுடைய பாஷையில், சுவாமி என்று குறிப்பிடுகிறேன் என்பதைச் சொல்லத்தான் இவ்வளவு சொன்னேன்.

பொதுவாக எல்லாக் கோயில்களிலும் சுவாமி சந்நிதி கிழக்கையோ மேற்கையோதான் பார்த்துக்கொண் டிருக்கும். தெற்கே பார்க்கும் சுவாமிகள் இருவர்தாம். அவர்கள் இரண்டு பேரும் ராஜாக்கள். இரண்டு ராஜாக்களும் சிதம்பரம் கோயிலி

Koviloor Digital Library

லும் சரி, ஸ்ரீரங்கம் கோயிலிலும் சரி, தெற்கே பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். 'நடராஜா' ஒருவர். 'ரங்கராஜா' மற்றொருவர்.

இவர்கள் இரண்டு பேரும் கிழக்கையோ மேற்கையோ பார்த்துக்கொண் டிருக்கமாட்டார்கள். தெற்கே பார்த்துக் கொண்டிருக்கும்படியான இவர்கள் இரண்டு பேரும் கலா க்ஷேத்திரத்தைச் சேர்ந்தவர்கள்.

ரங்கம் என்றால் நாடகமேடை என்று அர்த்தம்.

पूर्वरङ्गप्रसङ्गाय नाटकीयस्य वस्तुनः ।

பூர்வரங்கப்ரஸங்காய நாடகீயஸ்ய வஸ்துந:|

என்று சொல்கிற மாகனுடைய காவ்யத்தில் ரங்கம் என்றால் சபையில் வந்து ஆடுகிறவர்களுக்குச் சற்று உயரமாகப் போடும் படியான மேடை என்று அர்த்தம். அதிலே ராஜாவாக இருப்ப வர் ரங்கராஜா; இன்னொருவர் நடராஜா: கூத்தாடுகிறவ னுக்கு ராஜா.

திருப்பதியில் இருக்கிற பெருமாளுக்கு ராஜா என்ற 'டைட்டில்' கிடையாது. ஈசுவரன் பெயரைச் சேர்த்து 'வேங்க டேசுவரர்' என்றுதான் சொல்கிறார்கள். மலையாளத்தில் வேங்க டேசுவரன் என்ற பெயர் அதிகம். தெலுங்கு தேசத்திலும் அப் படித்தான். ராஜா சப்தம் ராஜாக்கள் இரண்டு பேர்களுக்குத் தான்.

சிவன் கோயிலுக்குப் போனால் மகாலிங்கம் கிழக்கே பார்த் துக்கொண் டிருப்பார். அவருக்கு ஈசான்ய திக்கில் நடராஜா தெற்கே பார்த்துக்கொண் டிருப்பார். ஒரு காலை வேறு தூக்கிக் கொண்டு நிற்பார்.

அவரை எப்பொழுதும் நாம் இருதயத்தில் தியானம் பண்ணிப் பண்ணி; கொஞ்சம் கொஞ்சமாக அவரை நினைத்து அந்த ஆனந்த தாண்டவ மூர்த்தியின் ஸ்வருபம் மனத்தில் ஸ்புரிக்கும்படியாக ஆகிவிட்டால் அதைத்தான் சித்தியாகி விட்டது என்று சொல்வது. மிகவும் பிரியமான குழந்தை களையோ சிநேகிதர்களையோ நினைத்தவுடன் மனசில் அவர்க ளுடைய உருவம் நமக்கெல்லாம் வருகிறது. இவர்களை எல் லாம் நினைப்பது துக்கத்துக்குத்தான் காரணம். ஒன்று, நாம் அவர்களை விட்டு என்றைக்கோ போகப் போகிறோம்; அல்லது அவர்கள் நம்மை விட்டுப் போகப் போகிறார்கள்.

वियोगे को भेदः ?

வியோகே கோ பேத:?

Koviloor Digital Library

பிரிவதில் என்ன பேதம் இருக்கிறது? இரண்டு பேரும் ஒருவருக்கு ஒருவர் எவ்வளவு அபிமானம் வைத்து ஆனந்தமாக இருக்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு கடைசியில் யாராவது ஒருவர் அழுதுதான் ஆகவேண்டும். எவ்வளவுதான் ஒருவருக்கு ஒருவர் விலகாமல் இருந்தாலும் கடைசியில் ஒரு சுத்திரிப்பு ஏற்பட்டே தீருகிறது. இப்படிப்பட்ட கத்திரிப்பு, ஸ்வாமியிடம் வரப்போவது இல்லை. ஆகையால் துக்கத்துக்கு இடமே இல்லை. ஆகையால் ஆனந்த மூர்த்தியைத் தரிசனம் பண்ணிப் பண்ணி நினைத்தால் அவருடைய ஆனந்த ஸ்வரூபம் நம்முடைய மனக் கண்முன் வந்துவிட வேண்டும். இதற்குத்தான் மந்திர சித்தி யாவது என்று பெயர். தெற்கே பார்த்துக்கொண் டிருப்பவர் களுடைய உருவம் நமக்கு வந்தால் போதும். தெற்கேயிருந்து வரும்படியான யமனுடைய வாதனை - 'உபத்திரவம் - நமக்கு வராது. 'அவன் தொந்தரவு பண்ண வருகிறானா? வந்தால் என்ன செய்கிறேன் பார்' என்பது போலத்தான் நடராஜா தம் ஒரு காலைத் தூக்கிக் கொண்டு அந்தப் பக்கம் பார்த்துக்கொண்டே இருக்கிறார். தூக்கிக்கொண் டிருக்கும்படியான அவரது பாதத் துக்குக் குஞ்சிதபாதம் என்று பெயர். நம்மில் அநேகம் பேர் குஞ்சிதபாதம் என்று பெயர்கூட வைத்துக்கொள்கிறார்கள். தெற்கே இருக்கும்படியான எதிரியினால் நமக்கு உபத்திரவம் வரக்கூடாது என்பதற்காகத்தான் இந்த இரண்டு ராஜாக்களும் தெற்கே பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். இவர்கள் இரண்டு பேரும் செய்துகொண் டிருக்கும்படியான காரியமோ ஒன்றுக் கொன்று நேர் விரோதம்.

ஒருவர் ஆனந்தமாகத் தூங்கிக்கொண் டிருக்கிறார். இன் னொருவர் ஆனந்தமாகக் கூத்தாடிக்கொண் டிருக்கிறார். இவரது ஆனந்தம் கூத்து. அவரது ஆனந்தம் தூக்கம். கூத்து, தூக்கம் இரண்டிலும் ஆனந்தந்தான் ஸ்புரிக்கிறது.

''ஆனந்தம் அதிகமானால் கூத்தாடுவார்கள்ா?'' என்பது நமக்குச் சந்தேகமாக இருக்கலாம். ஆனால் நான் கேள்விப்பட் டிருக்கிறேன்; பார்த்ததில்லை. வெள்ளைக்காரர்கள் குஷி ஜாஸ்தி யாகப் போனவுடன் 'பால் டான்ஸ்' ஆட ஆரம்பித்துவிடுவார் களாம். அழுதுகொண்டே இருக்கிற நம் ஜாதிக்கு அது எங்கே தெரியப் போகிறது? நமக்குச் சுதந்திரம் இல்லை. ஆனந்தம் இல்லை. கண்கள் எல்லாம் உள்ளே போய் யாரைக் கண்டாலும் பயந்துகொண்டு, எப்போது பார்த்தாலும், 'சாப்பாட்டுக்கு இல்லையே, வேலை உயரவில்லையே, வேலை கிடைத்தாலும் சம்பளம் போதவில்லையே' என்று அழுதுகொண் டிருப்பவர்கள் நாம். ஆனந்தமும் இல்லை. கூத்தும் நமக்கு வருவதில்லை. வெள்ளைக்

Koviloor Digital Library

காரர்களைப்போல் நாம் கூத்தாடாது போனாலும் சிலசில சமயங்களில் உற்சாகம் வந்துவிட்டதானால் பாட ஆரம்பித்துவிடுகிறோம். பாட்டு, கூத்து இரண்டும் ஆனந்தத்தைச் சேர்ந்தவையே. ஆத்மஞானம் வந்தவர்கள் பிரம்மானுபவம் ஏற்படும்போது ஆனந்தமாகக் கானம் பண்ணிக்கொண் டிருப்பார்கள்.

இவர்கள் சாமத்தைப் பாடிக்கொண் டிருப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேதத்தில், 'ஹாவு, ஹாவு' என்று சாமகானம் பண்ணுகிற வழக்கம்.

இப்படிச் செய்கிறவர்கள் பிரம்மவித்துக்கள் என்று தைத்திரீய உபநிஷத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டு பேர்களோடு போகிறபோது மிகுந்த சந்தோஷம் வந்துவிட்டால் ஒருவன் பாட ஆரம்பித்துவிடுகிறான். 'என்னடா சங்கீதம்?" என்றாலுங்கூட நிறுத்தமாட்டேன் என்கிறான். அதே மாதிரி கொஞ்சம் விசனமாக, கவலையாக இருக்கிறபோது, எத்தனை பேர் சேர்ந்துகொண்டு, 'பாடு, பாடு' என்றாலும் அப்போது அவனுக்குப் பாட்டு வருவதில்லை. கொஞ்சம் சந்தோஷம், நிம்மதி ஏற்படும்போது தூக்கம் வரும். இன்னும் கொஞ்சம் அதிகமாகச் சந்தோஷம் வந்தால் பாட்டுக் கிளம்பும். அதுவே அதிகமானால் கூத்து ஆரம்பமாகிவிடுகிறது.

கொஞ்சம் கொஞ்சம் நம்மிடத்திலும் லோகத்திலும் இருக்கும்படியான ஒளி எப்படிச் சூரியனிடத்திலிருந்து உண்டாகிறதோ அப்படியே கொஞ்சம் கொஞ்சம்' ஆனந்தம் என்று இருந்தால் அது ஆனந்த சமுத்திரமாக இருக்கும்படியான மூர்த்திகளிடத்தில் பொங்கிக்கொண் டிருக்கும் ஆனந்தத்தின் ஒரு லேசந்தான்; திவலைதான். அறைக்குள் எவ்வளவு இருட்டு இருந்தாலும் ஒரு சின்ன ஓட்டை வழியாக உள்ளே வருகிற சூரிய கிரணம் எல்லா இருட்டையும் எப்படிப் போக்கிவிடுகிறதோ அப்படியே உள்ளத்தில் எவ்வளவு துக்கம், கவலை இருந்தாலும், ஒரு க்ஷணமாவது ஆனந்தம் வேண்டுமானால் ஆனந்தமாக யோக நித்திரையில் இருப்பவனை, ஆனந்தமாக நடனம் ஆடுபவனை நினைக்க வேண்டும். அந்த ஆனந்த சமுத்திரத்தினுடைய ஒரு திவலை உள்ளே விழுந்தால் போதும், இவ்வளவு துக்கமும் மறைந்துபோய் ஆனந்தம் பிரகாசிக்க ஆரம்பித்துவிடும். நடராஜனின் தாண்டவத்துக்கு ஆனந்த தாண்டவம் என்று பெயர். ஆனந்ததாண்டவபுரம் என்று ஓர் ஊருக்குப் பெயர் வைத்திருக்கிறார்கள். வரதராஜபுரம், தேவப்பெருமாள் கோயில் என்று இப்படிச் சுவாமியினுடைய பெயரை ஊர்களுக்கு வைத்திருக்கும்படியான க்ஷேத்திரங்கள் இருக்கின்றன.

Koviloor Digital Library

ஆனந்தத்திலே இரண்டு வகை இருக்கிறது. பொங்குகிற ஆனந்தம்; பொங்குகிற நிலை ஒன்று. அடங்கி அநுபவிக்கின்ற நிலை ஒன்று. பொங்குகிற ஆனந்தத் தாண்டவ மூர்த்தி- நடராஜா. அவர் சடையைப் பார்த்தாலே இது தெரியும். இப்படி இரண்டு பக்கமும் கிர்ர் என்று அவர் சுற்றுகிற வேகத்தினாலே சடை தூக்கிக்கொண்டு நிற்கிறது. 'விரித்த செஞ்சடையான்' ஆகிவிடுகிறான் அப்போது. அவன் கையில் இருக்கிற உடுக்கிலிருந்து, अइउण् ऋलृक् - அஇஉண், ருலுக் என்பதான 14 சூத்திரங்கள் வந்துகொண் டிருக்கின்றன. நந்திகேசுவர காரிகை என்று பரம கதியை அடைவதற்கு மார்க்கமாக 14 சுலோகங்களை அதிலிருந்து செய்திருக்கிறார்கள். சாண்டில்யர் அதற்குப் பாஷ்யம் எழுதியிருக்கிறார். ஆனந்தத் தாண்டவ மூர்த்தியின் கையிலிருந்து வரும்படியான அந்த 14 சூத்திரங்களுந்தாம்-அதிலிருந்து விரிந்த மஹாபாஷ்ய புஸ்தகத்தில் அடங்கியிருக்கின்றன. கூத்தாடும்போது பொங்கிவந்த சப்தங்கள் புஸ்தகத்தில் அடங்கியிருக்கின்றன. ஆனந்தக் கூத்தின் சப்தங்கள் அடங்கியிருக்கும்படியான இந்தப் புஸ்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு, சாந்தமாக அமைந்திருக்கும்படியான ஆனந்தத்தோடு உட்கார்ந்திருக்கும்படியான மூர்த்தி தட்சிணாமூர்த்தி. இவரும் தெற்குப் பக்கம் பார்த்துக்கொண்டுதான் ஈசுவரனுடைய தென்னண்டைப் பிராகாரத்தில் உட்கார்ந்திருக்கிறார். நடராஜரின் கோலத்தில் சடைகள் நான்கு பக்கமும் விரிந்து கிடக்கின்றன. தட்சிணாமூர்த்திக் கோலத்தில் அவை அமைந்து ஜடாமண்டலமாகத் தொங்கிக்கொண் டிருக்கின்றன. அங்கே சந்திரன் தெறித்துக்கொண் டிருக்கிறது. இங்கே ஆனந்தமாகப் பிரகாசித்துக்கொண் டிருக்கிறது. ஒரு கால் பூமியில் இருக்க, இன்னொரு காலைத் தூக்கிக்கொண்டு அங்கே கூத்தாடிக்கொண் டிருக்கிறார். ஒரு காலின்மேல் இன்னொரு காலைத் தூக்கிப் போட்டுக்கொண்டு இங்கே உட்கார்ந்துகொண் டிருக்கிறார். அங்கே ஆனந்தமூர்த்தி; இங்கே ஞானமூர்த்தி. 'ஸத் சித் ஆனந்தம்' என்று நாம் கேட்டிருக்கிறோம். சச்சிதானந்தம் என்று சொல்லிக்கொண்டும் இருக்கிறோம். இதற்கு அர்த்தம் என்ன என்று அநேகம் பேருக்குத் தெரிந்திருக்காது. தெரிந்திருந்தாலும் புரிந்துகொண் டிருப்பவர்கள் சில பேர்தான் இருப்பார்கள்.

ஸத் என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். சித் என்பதுதான் ஞானம். தட்சிணாமூர்த்தி காட்டிக்கொண் டிருக்கும்படியான முத்திரைக்குச் சின்முத்திரை என்று பெயர். ஆனந்தம் பொங்கி, அடங்கும்போது ஞானம் பூர்ணமாக நிறைந்திருந்

Koviloor Digital Library

தால், அதுதான் சாந்தம். ஞானம் நிறைந்தவனிடம் ஆனந்தமும் நிறைந்திருக்கிறது என்று அர்த்தம். ஞானம் நிறைந்து, ஆனந்தமும் நிறைந்து. அடங்கியிருக்கும்படியான தட்சிணுமூர்த்தி சந்நிதானத்தில்தான், அவரைப்போலவே உட்கார்ந்துகொண்டு கண்ணை மூடிக்கொண்டு பஞ்சாட்சர ஜபம் பண்ணுவார்கள் பெரியோர்கள். ஜபம் பண்ணுவது தட்சிணுமூர்த்தி சந்நிதானம். தரிசனம் பண்ணுவது ஆனந்தக் கூத்தன் சந்நிதானம். இங்கே கண்ணைத் திறந்துகொண்டு தரிசனம் பண்ணுவார்கள். அங்கே கண்ணை மூடிக்கொண்டு அந்தர்முகமாக ஜபம் பண்ணுவார்கள்.

பிக்ஷாடன மூர்த்தி அதோமுகமாக இரண்டு விரலைக் காட்டிக்கொண் டிருக்கும்படியான முத்திரையைச் சின்முத்திரை என்று சொல்கிருர்கள் என்று நினைக்கிறேன். பிக்ஷாடன மூர்த்தியின் ஒரு கையில் இரண்டு கால்களையும் தூக்கிக்கொண்டு ஒரு குட்டிமான் நிற்கும். இவர் கையை வைத்துக்கொண் டிருக்கும்படியான முத்திரையை அது பார்த்துக்கொண்டு நிற்கிருற்போல் இருக்கும். 'இதோ உனக்கு ஆகாரம் இருக்கிறது பார்' என்று சுவாமி சொல்வதுபோல் அந்த இரண்டு விரலையும் அதனிடம் காட்டிக்கொண் டிருப்பதுபோல இருக்கும். ஒரு புல்லை அதற்குக் காட்டுகிற மாதிரி, 'உனக்கு ஒரு வஸ்து இருக்கிறது' என்று சொல்கிறமாதிரி இருக்கிறது. ரங்கராஜா தான் ஒரே தூக்கத்தில் இருக்கிருர்.

निद्रामुद्रां निखिलजगतीरक्षणे जागरूकाम्

நித்ராமுத்ராம் நிகிலஜகதீரக்ஷணே ஜாகரூகாம்

என்று அவர் காட்டிக்கொண் டிருப்பது நித்திரா முத்திரை. தூக்கம் என்பது ஓர் அவஸ்தை. அந்த அவஸ்தையில் இருக்கும்படியான அடங்கின ஆனந்தத்தை வெளிப்படுத்துவது, நிந்திரா முத்திரை.

இப்படி அநேகம் மூர்த்திகள். ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒவ்வொரு வகையாகத் தனி விசேஷம் இருக்கும்.

दर्शनात् अभ्रसदसि

தர்ஸநாத் அப்ரஸதஸி

சிதம்பரம் நடராஜா தரிசனத்துக்கு உரிய மூர்த்தி. சிதம்பர தரிசனம் பண்ணிஞலே விசேஷம் என்று சொல்கிறது இந்தச் சுலோகம். சிதம்பரத்தில் நடராஜா விசேஷம். ஆலங்குடியில் தட்சிணுமூர்த்தி விசேஷம். திருவாரூரில் தியாகராஜா விசேஷம். ஸ்ரீரங்கத்தில் ரங்கராஜா விசேஷம். இப்படி ஒவ்வொரு மூர்த்தி ஒவ்வொரு க்ஷேத்திரத்துக்குப் பிரதானமாக இருக்கிறது.

Koviloor Digital Library

தட்சிணாமூர்த்தி, ஞானம் நிரம்பி, ஆனந்தம் அமுங்கி, சாந்தமாக இருக்கும்படியான மூர்த்தி. நடராஜா ஆனந்தம் பொங்கிக்கொண் டிருக்கும்படியான மூர்த்தி. ரங்கராஜா ஆனந்தத்தில் தூங்கிக்கொண் டிருக்கும்படியான நித்திரா முத்திரையை உடைய மூர்த்தி. இவர்கள் மூன்று பேரும் தெற்கே பார்த்துக்கொண் டிருக்கிறவர்கள். இந்த மூன்று மூர்த்திகளையும்-யார் யார் எந்த மூர்த்தியை ஆசிரயித்து உபாசனை செய்தாலும், தென்திசைத் தலைவனான யமனுடைய வாதனை இருக்காது. அவன் நம்மை உபத்திரவம் பண்ணுவதற்கு வராமல் இருக்கத்தான் இவர்கள், 'அவன் வருகிறானா?' என்று தெற்கு நோக்கிப் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். இவர்களுடைய பலம் நமக்கு இருக்கிறவரைக்கும் யமன் நம்மிடம் வரமாட்டான்.

'சரி இருக்கட்டும். இவ்வளவு மூர்த்திகள் எதற்காக? ஒரு மூர்த்தி இருந்தால் போதாதா? பாக்கி மதங்கள் எல்லாம் ஒரு ஸ்வாமியைத்தானே சொல்கின்றன? அநேக வகையில், அநேக ஸ்வாமிகளைச் சொல்லவில்லையே. நமக்கும் அந்த மாதிரி ஒரு ஸ்வாமி இருந்தால் போதாதா? எதற்காக இத்தனை ஸ்வாமிகள்?' என்று நமக்கெல்லாம் ஒரு சந்தேகம் ஏற்பட்டுக்கொண் டிருக்கிறது.

பசிக்காகத்தான் சாப்பிடுகிறோம். வயிறு நிரம்பிவிட்டால் பசி உபத்திரவம் இருக்காது. 'வயிறுதானே நிரம்ப வேண்டும்?' என்று ஒரேயடியாக அன்னத்தைமட்டும்சாப்பிட்டால் போதுமே. பாக்கி அநேகவிதமான பதார்த்தங்களை எல்லாம் நாம் எதற்காகச் சாப்பிட வேண்டும்?' என்கிற கேள்வியைக் கேட்டுக்கொள்ள வேண்டும். சாப்பிடுகிறபோது வயிற்றை நிரப்புவதற்காக மட்டும் சாப்பிடவில்லை. சாப்பிடுவது நாக்குக்கும் ருசியாக இருக்கவேண்டும் என்றுதான் நினைக்கிறோம். கண்ணுக்கும் அசிங்கம் இல்லாததாக இருப்பதைத்தான் சாப்பிடவேண்டும் என்று நினைக்கிறோம். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு பதார்த்தத்தில் ருசி இருக்கும்.

लोको भिन्नरुचिः

லோகோ பிந்நருசி:

என்று அவரவர்கள் அவரவர்களுக்கு ருசியாக இருப்பதைத்தான் சாப்பிடுகிறார்கள். வயிற்றை நிரப்பத்தானே என்று எல்லாரும் ஒரேவிதமான அன்னத்தைச் சாப்பிடுவது இல்லை. அப்படி, அநுக்கிரகம் என்பது ஒன்றாக இருந்தாலும் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு ஸ்வாமியிடத்தில் ருசி இருக்கிறது. அவரவர்கள் அவரவர்களுடைய மனம் எந்த மூர்த்தியிடத்தில் லயிக்கிறதோ

Koviloor Digital Library

அந்த மூர்த்தியை உபாசிக்கிறார்கள். பகவான் இதைப்பற்றிச் சொல்லும்போது,

योयो यां यां तनुं भक्त्या श्रद्धयार्चितुमिच्छति ।
तस्य तस्याचलां श्रद्धां तामेव विदधाम्यहम् ॥

யோ யோ யாம் யாம் தநும் பக்த்யா ஸ்ரத்தயார்ச்சிதுமிச்சதி |
தஸ்ய தஸ்யாசலாம் ஸ்ரத்தாம் தாமேவ விததாம்யஹம் ||

என்கிறார். லோகத்தில் எவன் எவன் எந்த எந்த மூர்த்தியைச் சிரத்தையுடன் பக்தனாக அர்ச்சிப்பதற்கு இச்சிக்கிறானோ, அவனவனுக்கு அந்தச் சிரத்தையையே நான் அசையாததாகச் செய்கிறேன் என்கிறார். இங்கே,

योयो यां यां तनुं भक्त्या श्रद्धयार्चितुमिच्छति ।

யோ யோ யாம் யாம் தநும் பக்த்யா ஸ்ரத்தயா அர்ச்சிதும் இச்சதி என்கிறார். இச்சதி என்றால் ஆசைப்படுகிறானோ என்று அர்த்தம்.

லோகத்தில் ஒருவனுக்கு ஒன்றின்மேல் ஆசை இருக்கிறது. இன்னொருவனுக்கு இன்னொன்றின் மேல் ஆசை இருக்கிறது. ஒருவனுக்கே இன்றைக்கு எதனிடத்தில் ஆசை இருக்கிறதோ அது நாளைக்கு மாறிப்போய், இன்னொன்றின்மேல் ஆசை விழுந்துவிடுகிறது. ஒரு நாளைக்கு இந்தப் பக்கமாகச் சென்றான் என்றால் மறுநாளைக்குக் கடற்கரையோடு போகலாம் என்று அவனுக்கே தோன்றுகிறது. அதேமாதிரி, பக்தர்களுக்கும் தங்களுக்கு மூர்த்தி, 'இப்படி இருந்தால் தேவலை, அப்படி இருந்தால் தேவலை' என்று அநேக .விதமான ஆசைகள் தோன்றுகின்றன. இதனால்தான் மதாந்தரங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

வைஷ்ணவர்கள் பெருமாளைக் கொண்டாடுகிறார்கள் என்றாலும் அதிலேயும் ஒரு வைஷ்ணவன் கண்ணனையே தெய்வமாகக் கொண்டு வழிபடுகிறான். இன்னொருவன் ராமனை ஆதர்சமாக வைத்துக்கொள்கிறான். ஒருவர் ருத்திர ஸ்வரூபியான, பயங்கர மூர்த்தியான நரசிம்மனிடத்தில் பக்தி செய்கிறார். இப்படியே பரமேசுவரனிடத்தில் பக்தி, சாந்த ஸ்வரூபியாகிய தட்சிணா மூர்த்தியிடத்தில் பக்தி, அம்பாளிடத்தில் பக்தி என்று அவரவர்கள் அவரவர்களுடைய மனசு எந்த ஸ்வரூபத்தினிடத்தில் சீக்கிரத்தில் சுலபமாக லயிக்கிறதோ அந்த ஸ்வரூபத்தை உபாசித்து மனோலயப்பட்டு நல்ல கதியை அடைந்திருக்கிறார்கள்.

योयो यां यां तनुं भक्त्या श्रद्धयार्चितुमिच्छति ।

யோ யோ யாம் யாம் தநும் பக்த்யா ஸ்ரத்தயரார்ச்சிதும் இச்சதி |

எந்த எந்தத் திருவுருவத்தை எவனெவன் பக்திசெய்து அர்ச்

Koviloor Digital Library

சிக்க விரும்புகிறானோ என்பதற்காகவே இச்சதி என்ற ஒரு சொல்லைப் பகவான் இங்கே போட்டிருக்கிறார்.

सांख्ययोगौ पृथग्बालाः प्रवदन्ति न पण्डिताः ।

ஸாங்க்யயோகௌ ப்ருதக்பாலா: ப்ரவதந்தி ந பண்டிதா: |

''சாங்கியம் யோகம் என்று வெவ்வேறாகச் சொல்கிறார்களே, அது வெவ்வேறு என்று பண்டிதர்கள் - அநுபூதிமான்கள்- சொல்லமாட்டார்கள்.''

एकमप्यास्थितः सम्यगुभयोर्विन्दते फलम् ।

ஏகமப்யாஸ்த்தித: ஸம்யகுபயோர் விந்ததே பலம் |

''ஒன்றை நன்றாகப் பற்றிக்கொண்டால் இந்த இரண்டிலேயிருந்தும் வருகிற பலனைத்தான் அவன் அடைகிறான்'' என்று இன்னோர் இடத்தில் பகவான் சொல்கிறார். இதையேதான் பாரதத்திலும் அனுசாஸன பர்வத்தில் பீஷ்ம பிதாமகர் உபதேசம் செய்கிறார்.

सांख्यं योगं पाञ्चरात्रं वेदाः पाशुपत

ஸாங்க்யம் யோகம் பாஞ்சராத்ரம் வேதா: பாஶுபதம்

என்று பிராசீனத்திலே பிரதானமாக இருந்த ஐந்து மதங்களைப் பற்றிச் சொல்கிறார்.

சிலர் சாங்கிய மார்க்கம் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வேறு சிலர் யோக மார்க்கம் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சிலர் பாஞ்சராத்திரம் என்று ஒரு மார்க்கத்தை வைத்துக்கொண் டிருக்கிறார்கள். பாஞ்சராத்திரம் என்பதுதான் வைஷ்ணவ மார்க்கம். பாசுபதம் என்பது சிவாகமத்தை அநுசரித்த மார்க்கம். சரியை, க்ரியை, யோகம், ஞானம் இவை இதைச் சேர்ந்தவை. சிலர் பாசுபத மார்க்கத்தை அநுசரிக்கிறார்கள். வேதத்தில் சொல்லியிருக்கும்படியான யக்ஞம் முதலான கர்மாநுஷ்டானங்களைப் பண்ணுவதைக் கர்மகாண்டத்தை அநுசரிப்பவர்கள் அநுசரிக்கிறார்கள்.

சாங்கியத்துக்கு வேதம் பிரமாணம். அசேதன வஸ்துக்கள், சேதன வஸ்துக்கள் இவற்றைப் பிரித்து அறிவதனால் மோட்சம் ஏற்படுகிறது என்று அது சொல்கிறது. (நித்திய அநித்திய வஸ்து விவேகம்.)

யோகம் என்பது மனோவிருத்திகளை அடக்கி நிரோதம் பண்ணுவது. இப்படியாக ஐந்து விதமான மார்க்கங்கள் இருந்தாலும், இவை எல்லாம் பகவானுடைய ஆக்ஞையினால்தான் ஏற்பட்டன என்பதை அறிவாய், கௌந்தேய! நீ எந்த வழியில்

Koviloor Digital Library

சென்றாலும் இதர வழிகளைப்பற்றி யுக்தியினால் ஆட்சேபம் பண்ண வேண்டாம் என்பதாகத் தர்மபுத்திரருக்கு உபதேசம் பண்ணுவதாக வருகிறது.

அதற்குப் பிறகு இன்னொரு திருஷ்டாந்தம்: பரமேசுவரன் பூதகணங்களோடு கைலாசத்தில் இருக்கும்போது புஷ்பதந்தன் என்பவனிடம், 'நீ மனிதனாகப் போகக் கடவாய்' என்பதான அம்பாளுடைய சாபம் வந்துவிட்டது. அவன் பணிந்து பிரார்த்தனை செய்து கேட்டுக்கொண்டதன் பேரில், ''பூலோகத்தில் நீ மனுஷ்யனாகப் பிறந்தாலும் ஈசுவர பக்தி உனக்கு மறக்காமல் இருக்கும். அதனால் பக்தி பண்ணி மறுபடியும் ஈசுவரனை நீ வந்து அடைவாய்'' என்று அநுக்கிரகம் செய்தாளம். அவன் மனுஷ்யனாக அவதாரம் பண்ணின காலத்தில்தான் 'சிவமஹிம்ன' ஸ்தோத்திரத்தைப் பண்ணினான் என்று சொல்வர்.

புனாவுக்கு அப்புறம் கொஞ்சம் வடக்கே-விந்தியமலைக்கு வடக்கே-போய்விட்டால் இந்தச் சிவமஹிம்ன ஸ்தோத்திரம் தெரியாதவர்களே இருக்கமாட்டார்கள். அதிலே ஒரு சுலோகம் வருகிறது. கீதையில் வரும்படியான சுலோகம், பாரதத்தில் வரும்படியான சுலோகம் ஆகியவற்றின் சாரந்தான் இது.

त्रयी सांख्यं योगः पशुपतिमतं वैष्णवमिति
प्रभिन्ने प्रस्थाने परमिदमदः पथ्यमिति च ।
रुचीनां वैचित्र्याद् ऋजुकुटिलनानापथजुषां
नृणामेको गम्यस्त्वमसि पयसामर्णव इव ॥

த்ரயீ ஸாங்க்யம் யோக: பசுபதிமதம் வைஷ்ணவமிதி
பிரபிந்நே ப்ரஸ்தாநே பரமிதமத: பத்யமிதி ச |
ருசீநாம் வைசித்ர்யாத் ருஜுகுடிலநாநாபதஜுஷாம்
ந்ருணாமேகோ கம்யஸ்த்வமஸி பயஸாமர்ணவ இவ ||

வேதத்தை அநுசரித்த மதங்களை - வேதப் பிரமாண மதங்களைப்-புஷ்பதந்தனும் இங்கே சொல்கிறான்.

त्रयी सांख्यं योगः पशुपतिमतं वैष्णवमिति

த்ரயீ ஸாங்க்யம் யோக: பசுபதிமதம் வைஷ்ணவமிதி

த்ரயீ என்றால் வேதமதம், த்ரயீ மதம், சாங்கிய மதம், யோக மதம், பசுபதி மதம், வைஷ்ணவ மதம் என்று, பிரபந்நே பிரஸ்தாநே-போகிற வழி அநேகம் இருந்தாலும். எல்லாம் ஒரே இடத்துக்குத்தான் போகின்றன. திருவல்லிக்கேணிக்குப் போகும் வழிகளில் ஒருவழி கடற்கரையோடு போகிறது. ஒருவழி ராயப்பேட்டை ரோடோடு போகிறது. இன்னொரு வழி குறுக்கே

Koviloor Digital Library

போகிறது. இப்படி ஓர் இடத்துக்குப் போவதற்கே நான்கைந்து வழிகள் இருக்கிற மாதிரி, உபாசனு மார்க்கத்தில் நாம் எந்த இடத்துக்குப் போய்ச் சேர வேண்டுமோ அதற்கு இந்த ஐந்து வழிகளும் இருக்கின்றன,

परमिदं अदः पथ्यमिति च

பரமிதம் அதঃ பத்யம் இதி ச

போகிற வழி இப்படி அநேகம் இருப்பதுபோல, 'இதுதான் உயர்ந்தது, இந்த வழிக்கு வா; இதுதான் அநுகூலம், இந்த வழிக்கு வா' என்று அழைத்துக்கொண்டு போகிறவர்களும் அநேகம் பேர் இருக்கலாம். எழும்பூர் ரெயில்வே ஸ்டேஷனில் வந்து இறங்கினுல் குதிரை வண்டிக்காரன், மாட்டு வண்டிக் காரன், ஆட்டோ ரிக்ஷாக்காரன், டாக்ஸிக்காரன் இப்படி ஒவ்வொருவரும் நம்முடைய மூட்டையைப் பிடித்து இழுக்க ஆரம்பித்துவிடுவதைப் பார்க்கிருேம். அவரவர்கள் அவரவர் களுடைய வாகனத்தைத்தான் ஸ்தோத்திரம் பண்ணுவார்கள். அந்தமாதிரிதான் இந்த மிஷனரிகளும், ''இந்த மதந்தான் உயர்ந் தது, இதற்கு வாருங்கள்'' என்று ஒருவன் சொல்வான். ''இதுதான் அநுகூலமானது. இதற்கு வாருங்கள்'' என்று இன்னெருவன் இழுப்பான். முன்காலத்தில் சிவ தீட்சை, வைஷ் ணவ தீட்சை என்று பண்ணிவிடுவதெல்லாம் இந்தமாதிரியாக வந்தவைதாம். எந்த மார்க்கத்தை அநுசரித்தாலும் போய்ச் சேருகிறவன் ஓர் இடத்துக்குத்தான் போய்ச் சேருகிருன்.

परमिदं अदः पथ्यमिति च

பரமிதம் அதঃ பத்யம் இதி ச

பத்யம் என்றுல் அநுகூலம் என்று அர்த்தம். உடம்புக்கு அநுகூலமானதைச் சாப்பிடுவதைப் பத்தியம் என்கிருேம். இப்படி அநேக மார்க்கம். அந்த அந்த மார்க்கத்தில் இழுத்துக் கொண்டு போகப்படுகிறவர்களும் அநேகர் என்பதாக இருப்பது எல்லாம் எதனுல்?

रुचीनां वैचित्र्याद् ऋजुकुटिलनानापथजुषाम्

ருசீநாம் வைசித்ர்யாத் ருஜுகுடிலநாநாபதஜுஷாம்

உலகத்தில் இருப்பவர்களுடைய ருசி ஒரே மாதிரியாக இல்லாததனுல்தான். ஒருவருக்கு ஒன்றில் ருசி இருக்கிறது. இன்னெருவருக்கு இன்னென்றில் இருக்கிறது. சாப்பிடு வது, உடை அணிவது போன்ற சாதாரண காரியங் களிலேயே ஒவ்வொருவருக்கு ஒருவொரு விதமான ருசி இருப்

Koviloor Digital Library

பதைப் பார்க்கிறோம். எல்லாருக்கும் ஒன்றாக இருப்பதில்லை. எல்லாருக்கும் ருசி ஒன்றுதான் என்றால் ஒரே ஆகாரம் எல்லாருக்கும், ஒரே உடை எல்லாருக்கும், அதே மாதிரி ஒரே கடவுள் தான் எல்லாருக்கும் என்று வைத்துவிடலாம். அது இல்லாததனாலேதான் அநேக விதமாக உணவுப் பதார்த்தங்கள், உடைகள், ஆபரணங்கள் அநேக விதமான ரூபங்களில் ஸவாமி இவற்றை வைத்துக்கொண் டிருக்கிறோம். அநேக விதமான மதாந்தரங்கள் உலகில் உண்டாகியிருக்கின்றன.

பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், தியாஸபி, பௌத்தம், காந்தீயம் என்பதாக ஒவ்வொருவர் ஒவ்வொரு கொள்கையைப் பிரதானமாக வைத்துக்கொண்டு அவரவர்களுக்கு ஏற்ற வகையில் அமைத்துக்கொள்கிறார்கள். வியாதி வருகிறபோது மருந்து சாப்பிடுகிறோம். அதுபோலத்தான் நம்முடைய மூலமான தத்துவங்கள் குறைந்துபோய் அநேக விதமான குறைகள் நம் மதத்தில் இருப்பதாக வெளியூர்க்காரர்கள் எடுத்துச் சொல்கிறபோது, அவற்றுக்கு ஏற்ற சமாதானத்தைச் சொல்ல நம்மால் முடியாது. உடனே, 'நம் மதம் ஆதியில் இப்படி இருக்கவில்லை. இதில் அநேகம் களைகள் (Weeds) மூண்டுவிட்டன. இவற்றையெல்லாம் களைந்துவிட்டால் நம் மதம் சரியானதுதான்' என்பதாகப் பேச ஆரம்பித்துவிட்டோம். 'வேதத்திலே சொல்லும்படியான கர்மகாண்டம் வேண்டியதில்லை. உபநிஷத்துக்கள் இருந்தால் போதும். அதுதான் மெய்யான தத்துவம்' என்பதாக ராம்மோகன் ராய் பிரம்ம சமாஜத்தை ஆரம்பித்தார். கர்மகாண்டந்தான் முக்கியமானது என்று ஆர்யசமாஜத்தை ஆரம்பித்தார் தயானந்தர். எதற்காகக் கோயில்களில் கல்லு ஸ்வாமியை வைத்து வழிபட வேண்டும் என்று சொன்னவர்களுக்குப் பதில் சொல்ல அந்தக் காலத்தில் தெரியவில்லை. உடனே, 'ஸ்வாமி என்பது விக்கிரக ஆராதனைக்கு அவசியம் இல்லை. இவற்றை எடுத்துவிட வேண்டும். விக்கிரகங்களை நாங்களே உடைக்கிறோம்' என்று அவர்கள் கிளம்பினார்கள். முஸ்லிம்களுடைய எதிர்ப்பைச் சமாளிக்க, அவர்கள் எதைக் குறைகள் என்று சொல்கிறார்களோ அதைக் குறை இல்லை என்று சமாதானம் சொல்வதற்குத் தெரியாமல், 'நம் மதம் பிழைத்தால் போதும்' என்று அந்தக் குறைகளை நாங்களே எடுத்துவிடுகிறோம் என்று அவர்கள் ஆர்ய சமாஜத்தை ஆரம்பித்தார்கள். கிறிஸ்துவர்களுடைய எதிர்ப்பைச் சமாளிக்கத் தான் தியாஸபி ஏற்பட்டது. அந்தக் காலத்தில் இவர்கள் அநேக நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அதை மறுக்க முடியாது.

Koviloor Digital Library

ராமகிருஷ்ண பரமஹம்சர், 'காளி, காளி' என்று காளியை வைத்து வழிபட்டபோது, அவரிடத்தில் ஒரு பக்தி, ஒரு மகிமை ஏற்பட்ட காலத்தில், 'விக்கிரக ஆராதனை அவசியத் தான்' என்பதை மறுபடியும் ஒப்புக்கொண்டார்கள். 'இவன் தீண்டாதவன், அவன் தீண்டாதவன் என்று ஒதுக்கி வைப்பது சரியல்ல' என்கிற ஓர் அளவோடு நம் மதத்தில் சொல்லி யிருக்கும்படியான மற்ற விஷயங்கள் எல்லாம் சரிதான் என் பதைக் காந்தி காலத்திலும் ஒப்புக்கொள்ள ஆரம்பித்தார்கள். சரீரத்துக்கு மாத்திரம் வர்ணுசிரமம் உண்டு என்று நாம் எண்ணிக்கொண் டிருந்தோம். ஆத்மாவுக்குங்கூட அது உண்டு என்பதாகத் தியாஸபியார் ஒரு படி மேலே போய் உபதேசம் செய்ய ஆரம்பித்தார்கள்.

ஒவ்வொரு சமயத்தில் நமக்கு ஒவ்வொரு வியாதி அதிக மாகும்போது அதற்கு ஏற்ற மருந்துகளை அவ்வப்போது அநேக மகான்கள் கொடுத்து வந்திருக்கிறுர்கள். வியாதி குண மானவுடன் மருந்து சாப்பிடுவதை நிறுத்திவிடுவதைப்போலத் தான் எந்தக் குறைகளை நிவர்த்திக்க அந்தத் தத்துவம் ஏற் பட்டதோ அந்தக் குறை நீங்கியவுடன், அதற்கு ஏற்ற சமா தானம் கிடைக்கிறபோது அவர்களுடைய தத்துவம் மங்கிப் போகிறது. நாற்பது வருஷத்துக்கு முந்தி எப். டி. எஸ். பட்டம் போட்டுக்கொள்ளாதவர்கள் இருக்கமாட்டார்கள். இப்போது பட்டம் இருக்கிறவர்கள்கூட அதைப் போட்டுக் கொள்வது இல்லை.

அநேக கர்மாநுஷ்டானங்களை அந்தக் காலத்தில் வெளிப் படையாகச் செய்துகொண் டிருந்தவர்கள் உள்ளுக்குள் சில பாவங்களை ரகசியமாகப் பண்ணிக்கொண்டுதான் இருந்தார் கள். என்றுலும் அப்போது அவர்களுடைய மனச்சாட்சியாவது அவர்களை உறுத்திக்கொண் டிருந்திருக்கும். இப்போது மனச் சாட்சி என்பதே இல்லை. பாவம் பண்ணுகிறவன்கூட ரகசிய மாகப் பண்ணுவதில்லை. இதைப் பண்ணுகிறுேமே என்று மனம் வருந்துவதும் இல்லை. ஒரு வகையில் அந்தக் காலத்தில் இருந்தவர்களுக்கு உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று செய்யும் அபசாரம் சம்பவித்திருக்கும் என்றுல், உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று செய்யும் அபசாரம் இப்போது இருக் கிறவர்களுக்கு இல்லை என்று சொல்லிவிடலாம். இப்போது ரகசியமாய் இல்லாமல் பிரகாசமாகவே அநேக அநாசாரங்கள் இருந்துவருகின்றன. ஆனுலும் பக்தி சிரத்தை இவை வளர்ந்து வருகின்றன என்றுதான் சொல்லவேண்டும்.

Koviloor Digital Library

பாரதத்தில் சொல்லப்பட்ட ஐந்துவித மதங்களையும், ''யோ யோ யாம் யாம் தநும் பக்த்யா' என்ற கீதா சுலோகத்தையும் அநுசரித்து, சிவமஹிம்ன ஸ்தோத்திரத்தில் சொல்லப்படுகிற இச்சதி என்ற கீதா வார்த்தைதான், 'ருசீநாம் வைசித்ர்யாத்' என்று இங்கு விவரணம் செய்யப்படுகிறது.

கீதையில் பகவான் சொல்லியிருப்பதும் ஆசார்யாள் சொல்லியிருப்பதும், புஷ்பதந்தன் சொல்லியிருப்பதும், எல்லாம் ஒன்றை ஒன்று அநுசரித்தே இருக்கின்றன,

त्रयी सांख्यं योगः पशुपतिमतं वैष्णवमिति

த்ரயீ ஸாங்க்யம் யோகः பஶுபதிமதம் வைஷ்ணவமிதி

இப்படி அநேக மார்க்கங்கள் பிரிந்திருக்கின்றன. இவை எல்லாம் எதனுல் என்ருல்,

रुचीनां वैचित्र्याद् ऋजुकुटिलनानापथजुषां

ருசீநாம் வைசித்ர்யாத் ருஜுகுடிலநாநாபதஜுஷாம்

ஒருவனுக்கு நேர்வழி பிடிக்கும். இன்னெருவனுக்குக் கொஞ்சம் வளைந்து போகும்படியான வழி பிடிக்கும். எப்படிப் போனுலும்,

नृणामेको गम्यः

ந்ருணும் ஏகோ கம்ய:

எல்லாரும் ஒரே இடத்துக்குத்தான் போகிருர்கள். கிழக்கே போனுலும், மேற்கே போனுலும், வடக்கே போனுலும் எல்லாரும் போய்ச் சேருகிற இடம் ஒன்றுதான். எந்த வழியில் போனுலும் பகவானிடத்தில் போய்ச் சேர்ந்துவிடுகிருர்கள்.

नृणामेको गम्यः

ந்ருணும் ஏகோ கம்ய:

அது சரி. பகவானிடத்தில்தான் போய்ச் சேருகிருர்கள் என்று எப்படிச் சொல்வது? 'அதைப்பற்றி நீ கவலைப்படாதே.' ஆனுல் ஒன்று. எந்த வழியில் போவது என்று நீ தீர்மானம் பண்ணிக்கொண்டு கிளம்பினுலும் சரி, வழியில் மாத்திரம் நின்றுவிடாதே. போய்க்கொண்டே இரு. போய்க்கொண்டே இருந்தால் நீ சென்று சேருகிற இடம் தானுக வந்து சேரும். இது எப்படித் தெரிகிறது?

ஒருவன் கிழக்குப் பக்கமாகப் போக ஆரம்பித்தான். ஒருவன் மேற்குப் பக்கமாகப் போக ஆரம்பித்தான். ஒருவன்

Koviloor Digital Library

தெற்குப் பக்கமாகவும், ஒருவன் வடக்குப் பக்கமாகவும் போக ஆரம்பித்தான். நான்கு பேரும் போய்க்கொண்டே இருக்கிறார்கள். கிழக்கே போகிறவன் வங்காளாக்குடாக்கடலின் கரைக்கு வந்துவிட்டான். அவனுக்கு முன்னே என்ன இருக்கிறது? சமுத்திரம் இருக்கிறது. மேற்கே போனவன் கள்ளிக்கோட்டையில் போய் நின்றான். அரபிக்கடலின் கரைக்கு வந்துவிட்டான். அவனுக்கு முன்னே என்ன இருக்கிறது? சமுந்திரந்தான் இருக்கிறது. தெற்கே போனவன் கன்னியாகுமரிக்கு வந்து இந்து மகா சமுத்திரத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கிறான். வடக்கே போனவன் வடதுருவ சமுத்திரக்கரையில் நிற்கிறான். ஒரே சமுத்திரந்தானே இப்படி வளைந்து வளைந்து நான்கு பக்கமும் சுற்றிக்கொண் டிருக்கிறது?

त्वमसि पयसामर्णव इव ।

த்வமஸி பயஸாம் அர்ணவ இவ |

அர்ணவம் என்றால் சமுத்திரம். 'நீதான் சமுத்திரம் மாதிரி நான்கு பக்கமும் சுற்றிக்கொண் டிருக்கிறாய்.'

வடக்கே போகிற நதி ஒன்று இருக்கிறது. கிழக்கே போகிற நதி ஒன்று இருக்கிறது. மேற்கே போகிற நதி ஒன்று இருக்கிறது. இந்த நதிகள் எல்லாம் எந்தப் பக்கம் போனால் என்ன? அதது எந்தப் பக்கம் ஓடுவதற்கு வாகாக இருக்கிறதோ அந்தப் பக்கம் ஓடுகிறது. ஆனால் எல்லாம் கடைசியில் எங்கே போய்ச் சேருகின்றன? சமுத்திரத்தில்தான் போய் விழுகின்றன. எந்தப் பக்கம் நதி ஓடினாலும் சரி. சமுத்திரம் நான்கு பக்கமுந்தான் சுற்றிக்கொண் டிருக்கிறது. வெறும் சமுத்திரமே இப்படிச் சுற்றிக்கொண் டிருக்கிறபோது, அந்தக் கிருபா சமுத்திரம், தயாசமுத்திரம் நாம் எந்த வழியில் சென்றாலும் நாம் போய்ச் சேருகிற இடத்தில் இல்லாமலா போகும்? நாம் எந்தப் பக்கம் போனாலும், எப்போது வந்து சேருவான் என்று நமக்காக அவன் காத்துக்கொண் டிருப்பான். "நீ உன் ருசிக்கு ஏற்ப எந்தப் பக்கம் போக வேண்டுமென்று நினைக்கிறாயோ அந்தப் பக்கம் போ. ஆனால் வழியில் நின்றுவிடாதே. போய்க் கொண்டே இரு."

எல்லாரும் ஓர் இடத்துக்குத்தான் போகிறார்கள். எந்தப் பக்கமாகப் போனாலும், நீ எப்போது வந்து சேருவாய் என்று காத்துக்கொண் டிருப்பவன் ஒருவன்தான். அந்தக் கிருபா சமுத்திரந்தான் நாலாபக்கமும் சுற்றிக்கொண் டிருக்கிறது. நீ சிரத்தை மாத்திரம் குறையாமல், ஆரம்பித்த காரியத்தை நிறுத்திவிடாமல், முயற்சி மாத்திரம் பண்ணிக்கொண்டே இரு..

Koviloor Digital Library

அநேகம் வழிகள் இருக்கின்றனவே என்றால் அவரவர்கள் அவரவர்களுடைய ருசியைப் பொறுத்து ஒரு வழியில் வரட்டும் என்றுதான் வைத்திருக்கிறார்கள்.

यत् सांख्यैः प्राप्यते स्थानं तद् योगैरपि गम्यते ।
एकं सांख्यं च योगं च यः पश्यति स पश्यति ॥

யத் ஸாங்க்யை: ப்ராப்யதே ஸ்தானம்தத் யோகைரபி கம்யதே |
ஏகம் ஸாங்க்யம் சயோகம் ச ய: பச்யதி ஸபச்யதி ||

என்கிற கீதா சுலோகத்தின் கருத்தை ஒட்டி, புஷ்பதந்தன் இந்தச் சுலோகத்தை 'சிவமஹிம்ன' ஸ்தோத்திரத்தில் பண்ணியிருக்கிறான்.

ஒவ்வொருவருக்கு ஓரொரு மூர்த்தியினிடத்தில் பக்தி விழுகிறது. அதனால் இன்னொரு மூர்த்தியைவிட இதுதான் உயர்ந்தது என்று சொல்கிறார்கள். அதற்காக அவர்களை நம்மில் வேறுபட்டவர்களாக எண்ணித் துவேஷம் கொள்ளக்கூடாது. ஒரு வைஷ்ணவர்-வைஷ்ணவர்கள் ஈசுவரனை நிந்திப்பது கிடக்கட்டும்-அரங்கநாதனைப் பாடுகிறார். அவரிடம் போய்த் திருப்பதியில் இருக்கும் பெருமாளைப் பாடு என்று யாரோ சொல்லியிருக்கிறார்கள்போல் இருக்கிறது. 'அரங்கனைப் பாடிய வாயால் அந்தக் குரங்கனைப் பாடுவேனோ?' என்பதாகச் சொல்லிவிட்டார் என்று சொல்வர். திருப்பதியில் குரங்குகள் அதிகம். இதனால் அவரைக் 'குரங்கன்' என்று சொல்லி, அவரைப் பாடமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார். அந்த மாதிரி வைஷ்ணவர் சிவனைக் கோபித்துக்கொண்டாலும், சைவர் பெருமாளைக் கோபித்துக்கொண்டாலும், அவர்கள் அப்படிக் கோபித்துக்கொள்வது அவர்கள் உபாசனை செய்கிற மூர்த்தியினிடத்தில் இருக்கும் அளவிலாத பக்தியைத்தான் குறிக்கும்.

नहि निन्दा।

நஹி நிந்தா

மற்றொன்றை நிந்தை செய்ததாக ஆகாது என்று சொல்வர். இவர் தம் ஸ்வாமியைப் பண்ணுகிற ஸ்தோத்திரம் எல்லாம்-இதர ஸ்வாமிகளைச் செய்கிற நிந்தை எல்லாம்-ஒன்றாகவேதான் ஆகிறது. ஆகவே அவரவர்களுக்கு எந்த எந்த ஸ்வரூபத்திடம் மனம் லயப்படுகிறதோ அந்த அந்த ஸ்வரூபத்தை உபாசித்து நல்ல கதியை அடையவேண்டும் என்பதற்காகத்தான் நம்முடைய மதத்தில் அநேகம் மூர்த்திகள், அநேகம் மார்க்கங்கள்-எல்லாம் வேதம் என்ற ஒரு மூலத்தை அநுசரித்து-எழுந்திருக்கின்றன.

Koviloor Digital Library

காலத்துக்கு உட்பட்ட நமக்குக் காலதேவனால்-யமனால் வருகிற உபாதைகளை நிவிருத்தி செய்வதற்காகத்தான் மூன்று மூர்த்திகள் தெற்கு முகமாகப் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். இவர்களில் எந்த மூர்த்தியை உபாசனை பண்ணி, தியானம் செய்து, நினைத்து அந்த மூர்த்தி நம்முடைய சித்தத்தில் வந்து ஆவாஹனம் ஆகும்படியாக, பிரகாசிக்கும்படியாகச் செய்துகொண்டாலும் அதனால் நமக்கு மரண உபாதை நிவிருத்தியாகும்; மரண பயம் நீங்கும். இப்படிப்பட்ட தத்துவத்தை வைத்துத்தான் ஆலயங்கள் கட்டி, ஆலயங்களிலும் இந்த மூர்த்திகளுடைய ஸ்வரூபத்தைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். தத்துவம் தெரிந்தால் இவற்றின் உண்மை நமக்குப் பிரகாசிக்கும். ஒருவர் ஞானமூர்த்தி, ஒருவர் ஆனந்த மூர்த்தி, ஒருவர் யோகநித்திரா மூர்த்தி. இந்த மூன்று மூர்த்திகளும் நமக்குத் தெற்குத் திக்கிலிருந்து வரும் விரோதியின் பயத்தை ஸம்ஹாரம் செய்வதற்காகத்தான் தெற்கே பார்த்துக்கொண் டிருக்கிறார்கள்.

வைஷ்ணவர்களாக இருந்தாலும் சரி, சைவர்களாக இருந்தாலும் சரி, மாத்துவர்களாக இருத்தாலும் சரி; வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட எல்லாருக்கும் பஸ்மதாரணம் உண்டு. பாஞ்சராத்ர தீக்ஷையில் ஹோமபஸ்மதாரணம் உண்டு. பஸ்மதாரணம் பண்ணிக்கொள்ளும்போது அநேகம் பேர் ஒரு மந்திரத்தைச் சொல்லிக்கொள்வார்கள். அதற்கு, 'த்ர்யம்பக மந்திரம்' என்று பெயர். ஜல சம்பந்தம் இல்லாமல் உத்தூளனமாக விபூதியை எடுத்துப் பூசிக்கொள்கிறவர்களுங்கூட இந்த மந்திரத்தைச் சொல்லிக்கொள்வார்கள். ஸௌகந்தம், ச்ரேயஸ், புஷ்டி, கல்யாண குணங்கள் எல்லாம் நிரம்பிய ஒருவனுக்கு 'த்ர்யம்பகன்' என்று பெயர். அவன்தான் ஈச்வரன்.

त्र्यम्बकं यजामहे सुगन्धिं पुष्टिवर्द्धनम् ।

த்ர்யம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டிவர்த்தநம் |

என்பதுதான் மந்திரம். அவன் என்ன பண்ணுவான்? மிருத்யு இல்லாத தன்மையை நமக்குக் கொடுப்பான். இப்போது பிறந்துவிட்டதனாலே இனிப் பிறப்பு இல்லாமல் மிருத்யுவின் வசம் ஆகாமல் ஆனந்தமாக இருக்கச் செய்யும்படியான பரமேசுவரனுடைய திருவடிகளில் நாம் நம் ஆத்மா லயமாகும்படியாகச் செய்துவிட வேண்டும்.

ம்ருதம் என்று ஈசுவரன் அல்லாத பாக்கி எல்லாவற்றுக்கும் பெயர். ம்ருதம் என்றால் சாகிறது என்று அர்த்தம். சாகிறதெல்லாம் மறுபடியும் பிறப்பதற்கு விதை என்று அர்த்தம்,

Koviloor Digital Library

பிறப்பதற்கு விதை இல்லாமல் சாகிறதற்கு அம்ருதம் என்று பெயர். அம்ருதமாக இருப்பவன்தான் மிருதமாக இருக்கக் கூடியவற்றுக்குச் சாகாத தன்மையைக் கொடுப்பான்; அம்ருதத்தைக் கொடுப்பான். இந்த மாதிரியான அர்த்தத்தில் த்ர்யம்பக ஸ்தோத்திரத்தைச் சொல்லிப் பஸ்மதாரணம் பண்ணிக்கொள்ள வேண்டும்.

பஸ்மம் என்பது எல்லா வஸ்துக்களும் எரிந்துவிட்ட பிறகு மிஞ்சுகிற சத்தான ஒரு வஸ்து. சிவப்பு, மஞ்சள், கறுப்பு ஆகிய எல்லா வர்ணங்களும் போய்விட்ட பிறகு மிஞ்சும்படியான வெளுப்பாக இருக்கும் வஸ்து. இதை மறுபடி நெருப்பில் போட்டால் அதுதான் மிஞ்சும். பிரபஞ்சம் முழுக்க ஒழிந்து போன பிறகும் மிஞ்சுவது இது ஒன்றுதான். ஆகவே த்ர்யம்பகனைத் தியானம் பண்ணிக்கொண்டு இந்தப் பஸ்மத்தைப் எல்லோரும் தாரணம் பண்ணிக்கொள்வார்கள்.

நான் முன்பு சொன்ன மூன்று மூர்த்திகளும் மோட்சத்தைக் கொடுக்கிறார்கள் என்றாலும் முக்கண்ணன் கொடுக்கும்படியான மோட்சம் இருக்கிறதே, அது ஒரு தினுசு, இதை அந்த வேத மந்திரத்திலேயே த்ர்யம்பக மந்திரத்திலேயே சொல்லியிருக்கிறது.

துக்கப்பட்டுக்கொண்டே செத்தால் திரும்பவும் துக்கப்படுகிற ஜன்மாவே வந்து சேருகிறது. ஆனந்தமாக, கொஞ்சங்கூடத் துக்கம் என்பதே இல்லாமல் உயிர் உடலை விட்டுப் பிரிந்தால் அதற்கு 'அம்ருதம்' என்று பெயர். மிருதம் இல்லாமல் அம்ருதத்தைக் கொடுக்கிறவர்கள் முக்கண்ணன், ரங்கநாதன் இவர்கள்தாம். ஆனால் இவர்களுள் முக்கண்ணன் கொடுக்கிற அம்ருதம் - மோட்சம் - ஒரு தினுசு என்று சொல்லியிருக்கிறது என்றேன். நமக்கு இப்போது மோட்சம் என்றால் என்ன என்ற சந்தேகம் வந்துவிட்டது.

மோட்சம் என்றால் என்ன? மோட்சம் என்கிற தாதுவுக்கு முச் - முஞ்சதி - முச்யதே என்று பொருள். விடுபடுகிற தன்மை மோட்சம். மோட்சம் என்றால் விடுபடுவது என்று அர்த்தம். அகப்பட்டுக்கொண்டவன் எந்த இடத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறானோ அதிலிருந்து விடுபடுவது மோட்சம். நமக்கு இருக்கும்படியான கட்டுக்கள் பந்தம். பந்தங்களிலிருந்து விடுபடுவது மோட்சம். அதனால் தமிழ் இலக்கணப்படி மோட்சம் என்பதை 'வீடு' என்று சொன்னார்கள். அறம், பொருள், இன்பம், வீடு என்று சொல்வதில் வீடு என்றால் மோட்சம். ஜெயிலிலிருந்து ஒருவனை விட்டால் அவன் வீட்டுக்கு வந்து சேருகிறான். விட்ட

Koviloor Digital Library

வுடன் வந்து சேர வேண்டியது வீடு. சம்சார பந்தத்திலிருந்து விடுபட்டால் வீட்டுக்குப் போய்ச் சேருவான்.

நாம் நினைத்தபடி பண்ண முடியாதது சம்சார பந்தம். ஒருவனைப் பந்தப்படுத்திவிட்டால், கட்டிப் போட்டுவிட்டால் அவனால் தான் நினைத்தபடி, தன் இஷ்டப்படி ஒன்றும் செய்ய முடியாது. நாம் கட்டுப்படுத்தப்பட்டிகிறோம் என்பது எப்படித் தெரிகிறது? எப்படி நடக்க வேண்டுமென்று நாம் நினைத்துக்கொள்கிறோமோ அந்த மாதிரி நம்மாலேயே முதலில் நடக்க முடியவில்லை. ஊர் எல்லாம் நம்மிடத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நினைக்கிறோமோ அப்படியும் நடப்பதில்லை. வெளியிலும் நம் இஷ்டப்படி நடக்கிறதில்லை; உள்ளுக்குள்ளும் நம் இஷ்டப்படி நடக்க முடிவதில்லை. யாரோ நம்மைக் கட்டிப் போட்டிருக்கிறதுபோல் இருக்கிறது. ரொம்ப விஷமம் பண்ணுகிற குழந்தையைக் கட்டிப் போடு கிறோம், எதற்காக? அது தனக்கே கெடுதியைப் பண்ணிக் கொள்கிறது. ஊருக்கும் உபத்திரவத்தை விளைவிக்கிறது. ஆகவே கட்டிப்போடுகிறோம். மாடு ஊர்வயலில் மேய்ந்து விடுகிறது என்றால், அந்தக் கொண்டி மாட்டைப் பட்டியில் அடைக்கிறோம். இல்லாதுபோனால் கட்டிப்போடுகிறோம். எப் போது கட்டுக்களை அவிழ்த்துவிடுகிறோம்? கட்டை அவிழ்த்து விட்டால் அது தனக்கும் கெடுதியை உண்டு பண்ணிக்கொள் ளாது, ஊருக்கும் உபத்திரவத்தை விளைவிக்காது என்று எப் போது தோன்றுகிறதோ அப்போது கட்டுக்களை நாமே அவிழ்த்து விட்டுவிடுகிறோம். அப்படி நம்மைக் கட்டியிருக்கும்படியான பந்தம் எப்போது விடுபடுகிறது? எப்போது நம்முடைய மனம் பக்குவம் அடைந்துவிடுகிறதோ, எவ்வளவு துக்கமாக இருந்தா லும், கவலையாக இருந்தாலும் அதனால் கோபமோ, வேறு பொருள்களிடத்தில் காமமோ குரோதமோ உண்டாகாமல் சதா ஆனந்தமாக இருக்கும்படியான பக்குவம் உண்டாகிறதோ, அப்போது கட்டுக்கள் விடுபட்டுப் போகின்றன. இம்மாதிரி விடுபடுவதற்கு மோட்சம் என்று பெயர். மோட்சம் என்றால் கட்டுக்களிலிருந்து விடுபடுதல்.

அநேக மரங்கள் இருக்கின்றன. மரத்தில் இருக்கும்படியான காய்கள் கசப்பாக, புளிப்பாக, துவர்ப்பாக இருக்கும்போதெல் லாம் மரத்திலிருந்து அவை விடுபடுவதில்லை. ஆனால் அவைகளே பக்குவம் ஆகிவிட்டால், மதுரம் ஆகிவிட்டால், அதிக நாள் மரமே அதை வைத்துக்கொள்ளமாட்டேன் என்கிறது. மரமே தானாக அதை விட்டுவிடுகிறது. கசப்பு, புளிப்பு, துவர்ப்பு ஆகிய சுவைகள் எல்லாம் மாறி எப்படி எல்லாப் பழங்

Koviloor Digital Library

களுக்கும் ஒரு மதுரம் வந்துவிடுகிறதோ அப்படியே எல்லா ஜனங்களும் கோபம் உடையவர்களாக, காமம் உடையவர்களாக, துவேஷ எண்ணம் உடையவர்களாக ஆதியில் இருந்தாலும் மனம் பக்குவம் அடைந்தவுடன் யார் எப்படி நடந்தாலும் அவர்களிடம் கோபமோ துக்கமோ வராமல் சதா கருணையோடு ஆனந்தமாக இருக்கும்படியான தன்மையை அடைந்துவிடுகிறார்கள். கசப்பு, புளிப்பு, துவர்ப்பு ஆக இருக்கும்போது மரத்திலேதான் இருக்கிறது காய். காமம், கோபம், துக்கம் எல்லாம் இருக்கிறபோது நாம் சம்சார விருக்ஷத்தில்தான் ஒட்டிக்கொண்டு கிடக்கிறோம்; பந்தப்பட்டுக் கிடக்கிறோம். நல்ல பக்குவம் ஆகிற சமயத்தில் மதுரத்தன்மை வந்து விட்டவுடன் மரத்தைவிட்டுப் பழம் கீழே விழுந்துவிடுவதுபோல மனம் பக்குவமாகும். காமம், கோபம், குரோதம், லோபம் எல்லாம் போய் ஆனந்தமாக இருக்கும்படியான தன்மை வந்து விட்டவுடன் ஆத்மா தானாகவே சம்சாரம் என்கிற விருக்ஷத்திலிருந்து விழுந்துவிடும். அதற்குத்தான் மோட்சம் என்று பெயர். பாக்கி மரங்களுடைய காய்கள் பழுக்கும்போது மதுரமாக ஆகிவிடுகின்றன என்பது வாஸ்தவந்தான். ஆனால் புளிய மரமும் வேப்ப மரமும் வேர் முதற்கொண்டு பழம் வரையில் கசப்பும் புளிப்புமாகத்தானே இருக்கின்றன?

நன்றாகப் பார்த்தால் அந்த வேப்பம்பழக் கசப்பிலும் ஒரு விதமான தித்திப்பு இருக்கும். புளியம்பழத்திலும் ஒருவிதமான தித்திப்பு இருக்கும். அதனால்தான் பழுக்கிறபோது சில குழந்தைகள் அதைத் தின்கின்றன. தித்திப்பு - மதுரம்-என்பதுதான் நம் மனத்திலே உண்டாகும்படியான ஆனந்தம். கசப்பு, புளிப்பு, துவர்ப்புப் போன்ற காமம், மோகம், கோபம் எல்லாம் நம் மனத்திலே காய்களில் இருப்பதுபோல ஆரம்பத்தில் இருக்கத்தான் வேண்டும். இருப்பதால் கெடுதி இல்லை. ஆனால் அப்போதெல்லாம் காய்கள் மரத்திலே - காம்பிலே - இருக்கத்தான் வேண்டும் என்பதுபோல நாமும் சம்சார விருக்ஷத்தில் இருக்கத் தான் வேண்டும். பகவானே அதனால்தான்,

तस्माद् युद्ध्यस्व भारत

தஸ்மாத் யுத்யஸ்வ பாரத

'உம், சண்டை போடு' என்று அர்ஜுனனுக்கு உபதேசம் செய்கிறார். ஆனால் காமம், கோபம், மோகம் எல்லாம் தவறான வழியில் போகாதபடி சரியான தர்ம வழியில் போக வேண்டும். இல்லாது போனால் வெம்பிப் போய்விடும். பழுப்பதற்கு,

Koviloor Digital Library

பக்குவம் ஆவதற்கு, மதுரமான ஆனந்தத்தைப் பெறுவதற்கே வழி இல்லாமல் போய்விடும். பக்குவம் ஆகிற வரைக்கும் இவ்வளவு விதமான சுவைகளோடு காய்கள் மரத்தில் இருக்கத்தான் வேண்டும். பக்குவம் ஆனவுடன் அந்தச் சமயத்தில் அது தானகவே விழுந்துவிடும். அந்த மாதிரியான விடுதலைதான் உண்மையான விடுதலை.

மாமரம், மாம்பழம் இவை எல்லாம் நமக்கு நன்ருக ஸ்தூலமாகத் தெரிகின்றன. அரச மரத்திலும் அப்படித்தான். பழுத்தவுடன் அவை கீழே விழுந்திருக்கும். அநேகம் பேர் அதை மிதித்துக்கொண்டே காவேரிக்குப் போவார்கள். அவை எல்லாம் பக்குவம் ஆனவுடன் கீழே விழுகின்றன. 'பதனம்' ஆகின்றன. 'அந்த மாதிரி நாமும் பக்குவம் அடைவது, மாதுரியத்தைப் பெறுவது - கீழே விழுவதற்காகவா? இது நன்ருக இல்லையே? கீழே விழுவதுதான் மோட்சம் என்ருல் அது நமக்கு எதற்கு?' என்பதாக ஒரு சந்தேகம் வந்தது. அர்ஜுனனுக்குத் தோன்றியது. அர்ஜுனனுக்கு அந்தச் சந்தேகம் தோன்றியிருக்கிறது என்பது கிருஷ்ண பரமாத்மாவுக்குத் தெரிந்தது.

இந்த அரசமரத்துக்கு வேர் பூமியில் இருக்கிறது. கிளைகள், இலைகள் எல்லாம் மேல்நோக்கி இருக்கின்றன. பழம் மூலத்தை நோக்கி விழுகிறது. மூலமாகிய வேர் கீழேதானே இருக்கிறது?

இப்போது நமக்குப் பூமி உருண்டை என்று தெரியும். அமெரிக்காவில் இருக்கிற மரம் எப்படி இருக்கும்? நமக்கு அவை தலைகீழாகத்தானே இருக்கும்? அங்கே உள்ள ஒரு மரத்திலிருந்து விழுகிற பழம் நமக்கு எப்படித் தெரியும்? மேல்நோக்கி விழுவதுபோலத்தானே தோன்றும்? அப்படிச் சம்சார விருக்ஷம் என்கிறது அமெரிக்காவில் இருக்கிற ஒரு மரம் போன்றது. இந்த விருக்ஷத்தின் மூலம் அதைப்போலவே நமக்கு மேல் நோக்கி இருக்கிறது.

ஊர்த்வ மூலம். ஆகவே நாம் பழுக்கிறபோது, பக்குவம் அடைகிறபோது கீழே விழுவதில்லை. மூலத்தை நோக்கி மேலே போகிறேம் என்று ஒரு சமாதானம் சொன்னர்.

சரி, இருக்கட்டும். நாம் எதற்காக அங்கே போக வேண்டும்? நாம் அங்கே போவது என்று வந்தால் ஸ்வாமி இங்கே இல்லை என்றுதானே ஆகிறது?

अन्तर्बहिश्च तत् सर्वं व्याप्य नारायणः स्थितः ।

அந்தர்பஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித: |

என்று, பகவான்தான் எங்கும் இருக்கிருர். மேலும் இருக்கிருர்; கீழும் இருக்கிருர். வெளியிலும் இருக்கிருர். உள்ளும் இருக்

Koviloor Digital Library

கிறுர். அவர் இல்லாத இடமே கிடையாது' என்று சொல்லி யிருக்கிறதே.

நாம் மேலே போவது என்று வந்தால் இங்கே இல்லை என்று தானே அர்த்தமாகிறது? இங்கே இல்லை, அவர் இருக்கிற இடத்துக்குப் போகிறேம் என்று வந்தால் அந்த ஸ்வாமிக்கே அதனுல் ஒரு குறைபாடுதானே?

'அங்கிங் கெனுதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது'

என்று அந்தப் பரம்பொருளைச் சொல்வதில் ஒரு குறை வந்து விடாதா? இப்படி ஒரு சந்தேகம் வந்துவிடும்.

பழுத்துவிட்டால் காம்பிலேயிருந்து எல்லாப் பழங்களும் கீழேதான் விழுகின்றன என்று சொல்வதற்கு இல்லை. இலவம் பழம் இருக்கிறதே. அது நன்ருகப் பழுக்கும்போது அதைச் சாப்பிடலாம் என்று கிளிகள் காத்துக்கொண் டிருக்கின்றன. ஆனுல் பழுத்துவிட்டால் அது படார் என்று வெடித்துக் காற் றிலே அப்படியே பறந்து போகிறது. இதுவும் காம்பை விட்டுத் தானே போகிறது என்று சொல்லலாம். ஆனுல் இன்னேர் உதாரணத்தை த்ர்யம்பக மந்திரத்திலே சொல்லியிருக்கிறர்கள். அதைத்தான் சொல்ல வருகிறேன். வேத மந்திரத்திலேயே இந்தத் திருஷ்டாந்தம் சொல்லப்படுகிறது.

ஜன்மாஷ்டமி, பிள்ளையார் சதுர்த்தி வந்தால் வெள்ளரிக் காய் விசேஷமாகக் கிடைக்கும். வெள்ளரிபழத்துக்குப் உர் வாருகம் என்று பெயர். த்ர்யம்பக மந்திரத்திலே வெள்ளரிப் பழம்போல மோட்சம் தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. வெள்ளரிப் பழம் தன்னுடைய காம்பிலிருந்தே எப்படி மோக்ஷம் அடைகிறதோ அந்தமாதிரி மோக்ஷத்தை அடையவேண்டும். மேலே போகிற மோக்ஷமும் வேண்டாம்; கீழே விழுகிற மோக்ஷ மும் வேண்டாம். வெள்ளரிப்பழ மோக்ஷம் வேண்டும்.

வெள்ளரிப்பழ மோக்ஷம் என்றுல் என்ன என்ற கேள்வி நமக்குள் எழுகிறது. மாம்பழம் முதலியன பழுத்துவிட்டால் காம்பை விட்டுக் கீழே விழுகின்றன. ஆனுல் வெள்ளரிப்பழம் பழுத்துவிட்டது என்ருலும் இருக்கிற இடத்தில்தான் இருக்கும். அது எங்கும் போவதில்லை. காம்புதான் அதை விட்டுவிடுகிறது. என்றைக்குக் காம்பு அதை விட்டது என்றே சொல்ல முடியாது. ஒரு காற்று அடிக்கிறபோதுதான், அந்தக் கொடி காய்ந்து நகரும் போதுதான், காம்பு அதை விட்டுவிட்டது என்பது தெரியும்.

அப்படி நாம் எந்த இடத்தில் இருக்கிறேயோ அந்த இடத் திலேயே இருக்கவேண்டும். சம்சாரமாகிய விருக்ஷத்தின் காம்பு

Koviloor Digital Library

தானுகவே நம்மை விட்டுவிட வேண்டும். நாம் அதை விட்டுப் போவது என்பது கிடையாது. சம்சாரம் நம்மை விட்டுப் போக வேண்டும். அதனுல் ஏற்படுகிற கவலை, துக்கம் என்பது ஒன்றும் நம்மை எதுவும் செய்யக்கூடாது. இருக்கிற இடத்திலேயே ஆனந்தமாக இருந்துகொண் டிருக்கவேண்டும். இதுதான் உண்மையான விடுதலை. இதை யார் கொடுப்பார்? முக்கண்ணன் தான் கொடுப்பான். அவன் கொடுக்கிற மோக்ஷந்தான் உண்மை யான அம்ருதம். அதனுல்தான் பஸ்மதாரணம் பண்ணிக் கொள்கிறபோது, 'இந்த மாதிரியான மோக்ஷத்தை எனக்குக் கொடுக்கவேண்டும்' என்று த்ர்யம்பகனைப் பார்த்துப் பிரார்த் தனை செய்துகொண்டே தாரணை செய்துகொள்வது வழக்கம்.

ஆடுமாடுகளைப்போல் நாமும் செத்தால் இந்த மதத்தில் இருந்து பிரயோஜனம் இல்லை. அழுதுகொண்டே செத்தாலும் அழுகிற பிறப்பு வந்துவிடும். உயிர் உடலை விட்டுப் பிரிகிற காலத்தில் இருதயத்தில் அந்த முக்கண்ணனது உருவத்தைத் தீட்டிக்கொண்டு அப்படியே ஆனந்தமாக இருக்கும்படியான நிலையில் பிரியவேண்டும். சித்திரம் எழுதுகிறவர்களுக்கு அதனுல் தான் மோக்ஷம் சுலபத்தில் சித்தியாகிறது என்று சொல்வர். அவர்கள் மனம் அப்படியே லயப்பட்டுவிடுகிறது. சித்தத்தி னுடைய ஸ்வபாவம் சஞ்சலந்தான். அது லயப்பட்டு ஓர் இடத் தில் நிற்க வேண்டும் என்ருல் ஈசுவரனுடைய கடாக்ஷந்தான் வேண்டும்-

அதற்காகத்தான் லோகத்தில் அநேக விதமான உருவத்தை எடுத்துக்கொண்டு அவன் விளையாடுகிருன். தத்துவத்தைப் புரிந்துகொண்டால் பேதமே தோன்ருது. ரங்கராஜா தூங்கிக் கொண் டிருக்கிருர். நடராஜா நர்த்தனம் பண்ணிக்கொண் டிருக்கிருர். தட்சிணமூர்த்தி ஞானயோகத்திலே உட்கார்ந்து கொண் டிருக்கிருர். லோகம் என்பதே வாஸ்தவத்தில் விளையாட்டுத்தான்,

माया ह्येषा मया सृष्टा यन्मां पश्यसि नारद ।
सर्वभूतगुणैर्युक्तं नैवं मां ज्ञातुमर्हसि ॥

மாயா ஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யந்மாம் பஶ்யஸி நாரத |
ஸர்வபூதகுணைர்யுக்தம் நைவம் மாம் ஜ்ஞாதுமர்ஹஸி ||

''என்னை நீ பார்க்கிருயே, அதுவே மாயை. எல்லை இல்லாத ஸ்வரூபத்தை உடைய நான் உன் கண்ணுக்குத் தெரிகிற உருவத் தோடு இருப்பதுதான் மாயை என்று தெரிந்துகொள். என் னுடைய மாயையினுல்தான் இந்த ரூபத்தை எடுத்துக்கொள்

Koviloor Digital Library

கிறேன். உனக்கு அநுக்கிரகம் பண்ணுகிறேன்'' என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லியிருக்கிறுர்.

இந்த மூன்று சுவாமிகளும் தெற்கே பார்த்துக்கொண் டிருக்கிறுர்கள். நமக்கு ஜன்மம் இல்லாமல் அநுக்கிரகம் பண்ணுவதற்கே அவர்கள் தெற்கே பார்த்துக்கொண் டிருக்கிறுர்கள். அவர்களைச் சரணுகதி அடைந்துவிட்டால் தெற்கே இருக்கிறவனின் வாலாட்டம் நம்மிடம் ஒன்றும் சாயாது. அவர்களுடைய சித்திரம் நம்முடைய இருதயத்திலே நினைத்தவுடன்வருவதற்குத் தினமும் பிரார்த்தனை பண்ணவேண்டும். அவர்களுடைய ஸ்வரூபம் நம்முடைய இருதயத்திலே வருவதுகூட நம்முடைய முயற்சியினுல் அல்ல. அவர்களுடைய கடாக்ஷத்தினுலேதான் அதுவும் வரவேண்டும். நாம் அவர்களைச் சதா பஜித்துக் கொண்டே இருந்தால் சித்தமலம் நீங்கிச் சித்தசுத்தி ஏற்பட்டு, ஸ்வரூபதரிசனம் வந்து, காலஜயம் பண்ணும்படியான சக்தியையும் அவர்கள் அநுக்கிரகம் செய்கிறுர்கள். நாம் தினமும் சரணுகதி அடையவேண்டியது, அவர்களைத்தான்.

Koviloor Digital Library

9

அம்பாள் தத்துவம்

அம்பாளுடைய ஸெளந்தர்யலஹரி சுலோகங்களில்,

शरीरं त्वं शम्भोः

ஶரீரம் த்வம் ஶம்போ:

என்கிற சுலோகம் 34-ஆவது.

मनस्त्वं व्योम त्वम् ।

மநஸ்த்வம் வ்யோம த்வம்

என்கிற சுலோகம் 35-ஆவது.

அமெரிக்காவில் பிலடெல்பியா (Philadelphia) என்று ஒரு பெரிய நகரம் இருக்கிறது. அந்த நகரத்திலே பென்சில்வேனியா யூனிவர்ஸிடி என்று ஒரு பெரிய ஸர்வகலாசாலை. அந்த நகரத்திலேயே உள்ள நற்கலைக் காட்சிச்சாலையில் (Philadelphia Museum of Art) உள்ள ஏட்டுச் சுவடி ஒன்றில் ஸௌந்தர்ய லஹரியில் இருக்கும்படியான சுலோகம் ஒவ்வொன்றுக்கும் அம்பாளின் ஒவ்வொரு சித்திரம் அவற்றினுடைய கருத்துக்கு ஏற்றபடி எழுதியிருக்கிறதாம். அந்தச் சுவடியில் இருக்கும்படியான மூன்று ஏடுகளை அந்த யூனிவர்ஸிடியில் பிரதான ஸம்ஸ்கிருதப் பேராசிரியராக இருப்பவர், இங்கேயுள்ள சென்னை யூனிவர்ஸிடி ஸம்ஸ்க்ருதப் பேராசிரியருக்கு, போட்டோ எடுத்து அனுப்பி இருக்கிறாராம். நான் யூனிவர்ஸிடிக்குப் போனபோது அதைச் சொன்னார்கள். இன்று அதைக் கொண்டுவந்து காட்டினார்கள். நான் அம் மூன்று ஏடுகளையும் பார்த்தேன். ஒவ்வோர் ஏட்டிலே ஒவ்வொரு சுலோகமும் அதற்கு ஒரு சித்திரமும் இருக்கின்றன. இதுமாதிரியாக அங்குள்ள சுவடியில் ஒவ்வோர்

Koviloor Digital Library

ஏட்டிலும் ஒரு சுலோகமும் சித்திரமும் இருக்கின்றன. இம் மூன்றில் ஓர் ஏட்டிலே இருக்கும்படியான சித்திரத்தின் தாத்பர்யம் என்ன என்பதாகக் கேட்டு அவர்கள் இங்குள்ள யூனிவர்ஸிடியில் ஸம்ஸ்கிருதத்துக்குப் பிரதானமாக இருக்கிறவர்களுக்கு அனுப்பி இருக்கிறார்கள். அந்த ஏட்டில் இருக்கும்படியான சித்திரத்தின் சுலோகந்தான், 'மநஸ்த்வம்' என்று நான் முன்பு சொன்னது. அதற்கு முந்தின சுலோகம்—

शरीरं त्वं शम्भोः शशिमिहिरवक्षोरुहयुगम् ।

ஶரீரம் த்வம் ஶம்போ: ஶஶிமிஹிரவக்ஷோருஹயுகம் |

அம்பாளுக்கும் பரமேசுவரனுக்கும் உள்ள சம்பந்தம் எப்பேர்ப்பட்டது என்றால் சரீர சரீரி பாவ சம்பந்தம், அல்லது சேஷசேஷி பாவ சம்பந்தம். உடலும் உயிரும் எப்படியோ அப்படித்தான் சரீர சரீரி பாவமும்.

இந்த உடலுக்கு உயிர் இருக்கிறது. இந்த உயிருக்கு இன்னோர் உயிர் ஆதாரமாக இருந்தால் அதைத்தான் உயிருக்கு உயிராய் இருப்பது என்று சொல்வர். பரமேசுவரன் உயிர் என்றால் அந்த உயிருக்கு உடம்பு எது? அம்பாள்தான்.

शरीरं त्वं शम्भोः

ஶரீரம் த்வம் ஶம்போ:

'சம்புவுக்குச் சரீரமாக இருப்பவள் நீதான்' என்று ஆசார்யாள் அம்பாளைப் பார்த்துச் சொல்கிறார். சம்புவினுடைய சரீரமாக இருக்கிற அம்பாளுக்கு - அகண்ட ஸ்வரூபியாகிய அவளுக்குச் சூரியன் சந்திரன் ஆகிய இரண்டும் இரண்டு ஸ்தனங்களாக இருக்கின்றன. சர்வ ப்ரபஞ்சாகாரியாக இருக்கிறாள் அந்தப் பரதேவதை.

குழந்தைகளுக்கு ஸ்தன்யபானம் பண்ணி வைக்கிறவள் தாய். இந்த ஸர்வ ப்ரபஞ்சமும் அம்பாளுடைய குழந்தைகள். சூரியன் சந்திரன் ஆகிய இரண்டு ஸ்தனங்களைக் கொண்டு அவற்றின் அமுத தாரைகளினால் இந்த லோகத்தை எல்லாம் ரட்சிக்கிறாள் அம்பிகை. அவற்றின் கிரணங்கள்தான் ஸமஸ்த பிரபஞ்சத்தையும், ஸமஸ்த பிராணிகளையும் ரட்சிக்கின்றன.

शरीरं त्वं शम्भोः

ஶரீரம் த்வம் ஶம்போ:

அதனால் சரீர சரீரி பாவம், சேஷ சேஷிபாவம் என்பதையும் ஆதி ஆசார்யாள் ஸௌந்தர்யலஹரியில் முதலிலேயே அநுக்கிரகம் பண்ணியிருக்கிறார்.

Koviloor Digital Library

ஸர்வ ஜகத்தும் ஸாக்ஷாத் பரமேசுவரனுடைய சரீரம். அப்படிச் சொல்வதற்கு,

शशिमिहिरवक्षोरुहयुगम् ।

ஶஶிமிஹிரவக்ஷோருஹயுகம்

என்று சொல்லியிருக்கிறார். அடுத்த சுலோகத்திலும் சர்வஜகத்தும் பரமேசுவரன்தான், அதற்கு அப்படியே கவசம் மாதிரியாக இருப்பது அம்பிகை சரீரம். அப்படி இருக்கும்படியான நிலையில்,

मनस्त्वं व्योम त्वं मरुदसि मरुत्सारथिरसि ।

மநஸ்த்வம் வ்யோம த்வம் மருதஸி மருத்ஸாரதிரஸி |

பஞ்சபூதங்களும் நீதான். பஞ்சபூதங்களுக்கும் மேலே மனசு என்று ஒன்று இருக்கிறதே. அந்த மனசும் நீதான்.

मनस्त्वं

மநஸ்த்வம்

ஆகாசத்தை வ்யோமம் என்று சொல்லுவர். ஆகாசமும் நீதான்.

व्योम त्वं

வ்யோம த்வம்

மருத் என்றால் காற்று. அக்கினியை நாலுபக்கமும் அடித்துக் கொண்டு போவது காற்று. அதனால் மருத்ஸாரதி என்று அக்கினியைச் சொல்வர். 'அக்கினியும் நீதான். அக்கினியை நாலுபக்கமும் கொண்டுபோகும்படியான காற்றும் நீதான்.

मरुदसि, मरुत्सारथिरसि त्वम्

மருதஸி, மருத்ஸாரதிரஸி த்வம்

ஆப: என்றால் ஜலம். ஜலமும் நீதான், பூமியும் நீதான்.

आपस्त्वं भूमिस्त्वम्

ஆபஸ்த்வம் பூமிஸ்த்வம்

நீ அல்லால் வேறு கிடையாது.

त्वयि परिणतायां नहि परम्

த்வயி பரிணதாயாம் நஹி பரம்

நீயே எல்லா ஸ்வரூபமாகவும் ஆகியிருக்கிறாய்.

त्वमेव स्वात्मानं परिणमयितुं विश्ववपुषा

த்வமேவ ஸ்வாத்மாநம் பரிணமயிதும் விஶ்வவபுஷா

Koviloor Digital Library

கொஞ்சம் கொஞ்சம் எங்களிடத்தில் இருக்கும்படியான ஞானம், ஆனந்தம் எல்லாவற்றுக்கும் ஆதாரமாக, சித் ஆனந்த ஸ்வரூபமாக இருப்பதும் நீதான். ஸமஸ்த பிரபஞ்சமும் உன் பரிணமத்தைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது.

चिदानन्दाकारं शिवयुवतिभावेन विभृषे ॥

சிதாநந்தாகாரம் ஶிவயுவதிபாவேந பிப்ருஷே ||

சிவன் சரீரி. நீ அவனுக்குச் சரீரம். சிவயுவதிபாவம் உங்கள் இரண்டு பேர்களிடத்திலும் இருக்கிறது.

இப்படி இருக்கும்படியான இந்தச் சுலோகம் அந்தப் படத்தைப் பார்த்தபோது பொதுவாக ஞாபகத்திற்கு வந்தது.

மூகபஞ்சசதியில் ஒரு சுலோகம்—

लीये पुरहरजाये माये तव तरुणपल्लवच्छाये ।
चरणे चान्द्राभरणे काञ्चीशरणे नतार्तिसंहरणे ॥

லீயே புரஹரஜாயே மாயே தவ தருணபல்லவச்சாயே |
சரணே சந்த்ராபரணே காஞ்சீஶரணே நதார்த்திஸம்ஹரணே ||

உன்னுடைய சரணரவிந்தத்திலே நமஸ்காரம் பண்ணுகிறவர்களுடைய துக்கங்களை எல்லாம் ஸம்ஹரிக்கும்படியான

लीये पुरहरजाये माये तव तरुणपल्लवच्छाये ।

லீயே புரஹரஜாயே மாயே தவ தருண பல்லவச்சாயே |

செந்தளிரின் சாயை எப்படி இருக்கிறதோ அதேபோல் இருக்கும்படியான

तरुणपल्लवच्छाये चरणे

தருணபல்லவச்சாயே சரணே

சரணங்களில் என் சித்தமானது, சித்தம் தவிர ஆத்மாவும் அங்கேயே ஐக்கியம் அடைகிறது என்று சொல்கிறார்.

माये तव तरुणपल्लवच्छाये चरणे

மாயே தவ தருணபல்லவச்சாயே சரணே

என்பதில் மாயே என்று இருக்கிறது.

மாயே என்பதற்குப் புராணங்களில் அர்த்தம் சொல்கிற போது அந்தச் சப்தத்தையே திருப்பி யாமா என்பதுதான் மாயா என்று சொல்லப்படுகிறது. யாமா - எது இல்லையோ - அதுதான் மாயை. எது இல்லையோ அதுதான் மாயை என்றால் இல்லாது இருப்பதற்குப் பெயர் கொடுப்பானேன்? மாயா ஸ்வரூபிணியான இளம் தளிரைப்போன்ற நிறமும் எழிலும் உடையவளான

Koviloor Digital Library

அம்பிகையின் சரணாரவிந்தத்திலே போய் ஐக்கியமாகச் சேர்வானேன்?

माये तव तरुणपल्लवच्छाये चरणे लीये

மாயே தவ தருணபல்லவச்சாயே சரணே லீயே

இப்படிச் சொல்வானேன் என்று ஒரு சந்தேகம் வருகிறது. இருக்கிறதா இல்லையா என்ற யோசனை பண்ணுவது எப்போது? ஏதோ ஒன்று இருக்கிறதுபோலத் தோன்றினால்தானே இருக்கிறதா இல்லையா என்ற சந்தேகம் வரும்? ஒன்று தோன்றி அது நமக்குத் தெரிந்த அப்புறம், விசாரிக்கிற காலத்தில் மா-காணோம். மா என்றால் லட்சுமிக்குப் பெயர். லட்சுமி கடாட்சம் என்கிறோம். வருகிறது போல இருக்கிறது. நம்மிடம் இருக்கிறது போல இருக்கிறது; ஆனால் இருப்பதில்லை.

विद्युच्चपला लक्ष्मीः

வித்யுச்சபலா லக்ஷ்மீ:

என்று சொல்வது. மின்னல்போல் தோன்றி மறைந்துவிடுகிறது மா; ஐச்வர்யம். ஆனால் தோன்றுகிறது. அப்படித் தோன்றுவானேன்? இல்லாதது ஒன்று எதற்காகத் தோன்றவேண்டும் என்ற சந்தேகம் எழுகிறது. அது தோன்றவில்லை என்றால் நமக்கு ஆனந்தம் இல்லை: ஊக்கம், உற்சாகம் ஒன்றுமே இல்லை. அப்படி அகண்ட ஆனந்த ஸ்வரூபமாக, கண்ணுக்கும் தெரியாமல், காதுக்கும் தெரியாமல் மிகமிகச் சூக்ஷ்மமாக நிராகாரமாக இருக்கும்படியானது நமக்கு ஆனந்தம் கொடுப்பதற்காகத்தான் உருவம் உடையதாகத் தோன்றுகிறது. அதுதான் அம்பிகையின் ஸ்வரூபம். ஓர் இடத்தில் மாத்திரம் இருக்கும்படியான உருவ வஸ்துவா அது? அப்படி இருந்தால் அது கண்ணுக்குத் தெரியும். எங்கும் நிறைந்து இருந்துவிட்டால், பரம சூக்ஷ்மமாக இருந்தால், எப்படித் தெரியும்? காற்றே கண்ணுக்குத் தெரியவில்லை. அதைக் காட்டிலும் சூக்ஷ்மமானது ஆகாசம். அதைக்காட்டிலும் சூக்ஷ்மமாக அம்பாளுடைய ஸ்வரூபம் இருப்பதால் அது நமக்குத் தெரிவதில்லை. இல்லாதது தோன்றாமலே இருந்துவிடட்டுமே? இல்லாத வஸ்துவைத் தோன்ற வைப்பானேன்? தோன்றாமலேயே இருக்கலாம். ஆனால் இந்த அல்பமான மனசுக்கு ஒரு பிடிப்பு வேண்டுமல்லவா? தோன்றினால்தான் ஆனந்தம் உண்டாகிறது.

தாயார் உள்ளே இருக்கிறாள் என்றாலும் குழந்தை அழுகிறது. உள்ளே இருக்கிறாள் என்றாலும் அதன் கண்ணுக்குத் தெரிகிறபோதுதானே அது அழுகையை நிறுத்துகிறது?

Koviloor Digital Library

எங்கும் நிறைந்திருக்கும்படியான வஸ்து கொஞ்சம் குறைந்திருந்தால்தான் கண்ணுக்குத் தெரியும். அது - குறை என்பது - இல்லாததுதான்.

இதற்குச் சின்ன உதாரணம் ஒன்றை ஆசாரியாள் சொல்லியிருக்கிறூர்.

घृतकाठिन्यवत्

க்ருதகாடிந்யவத்

என்று சொல்லியிருக்கிறூர். நெய் திரவமாக இருக்கிறது. அதற்கு வர்ணம் இல்லை. கொஞ்சம் சீதளம் ஆகிவிட்டால் வெளுப்பு வர்ணம் உண்டாகிறது. கொஞ்சம் மாறி, குளிர் அதிகமாகிச் சீதளம் அதிகமாகிவிட்டால் கையிலே அப்படியே தூக்கிவிடலாம்; ஒட்டுவதுகூட இல்லை. கையில் ஒட்டாமல் அப்படியே பாளம் பாளமாக எடுக்க முடிகிறது.

அப்படிப் பக்தர்களுடைய இருதயத்தில் அன்புச் சீதளம் அதிகமாகிவிட்டால் அகண்டாகாரமாக, உருவம் இல்லாததாக இருக்கும்படியான பரமாத்ம ஸ்வரூபம், நமக்காகக் 'காடின் யத்தை' அடைந்து ஓர் உருவத்தை எடுத்துக்கொண்டு அநுக்கிரகம் பண்ணுகிறது என்று சொல்கிறூர்.

யாமா என்ற அந்த இல்லாதது ஒன்றுக்குத்தான் மாயை என்று பெயர்.

இல்லாதது ஒன்று இருந்தால், இல்லாத உருவத்தை அது எடுத்துக்கொள்ள வேண்டுமானுல் அதற்கு ஆதாரமாக, இருக்கிற தத்துவம் ஒன்று இருக்க வேண்டும். அது இருந்தால்தான் இல்லாதது என்ற ஒன்று தோன்றும். ஆகையால் நமக்காகச் சூட்சுமமாக, எங்கும் அகண்டாகாரமாக இருக்கும்படியான பர தேவதை, எங்கும் நிறைந்திருக்கும்படியான ஒரு பரதேவதை, ஓர் உருவத்தை எடுத்துக்கொண்டு அநுக்கிரகம் பண்ணுகிறுள். அப்பேர்ப்பட்ட பரதேவதைதான் திரிமூர்த்தி ஸ்வரூபிணி யாகவும் இருக்கிறுள். 'ஸ்ருஷ்டிகர்த்ரீ ப்ரஹ்மரூபா, கோப்த்ரீ கோவிந்தரூபிணீ | ஸம்ஹாரிணீ ருத்திரரூபா திரோதாநகரீஸ்வரீ | ஸதாஶிவாநுக்ரஹதா பஞ்சக்ருத்ய பராயணு |' என்று லலிதா ஸஹஸ்ரநாமத்தில் வருகிறது. (மூன்று மூர்த்தி என்று ஒரு கணக்கு. ஐந்து மூர்த்தி என்று ஒரு கணக்கு.) அதுமாதிரிதான் லக்ஷ்மி அஷ்டோத்த ரத்திலும் ப்ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாயை நம: என்று ஒரு நாமம் வருகிறது. சரஸ்வதி அஷ்டோத்தரத்திலும் ப்ரஹ்மவிஷ்ணு ஶிவாத்மிகாயை நம: என்று வருகிறது. எல்லாம் ஒரே ஸ்வரூபந் தான். ஒவ்வொரு காரியத்தை உத்தேசித்து அநேக ஆகாரமாக இருந்து அநுக்கிரகம் பண்ணிக்கொண் டிருக்கிறுள்.

Koviloor Digital Library

ப்ரஹ்ம விஷ்ணு சிவாத்மிகமாக - த்ரிமூர்த்தி சொரூபமாக இருப்பவர்தான் அனந்தபத்மநாப சுவாமி. திருவனந்தபுரத்திலே இவர் அனந்தசயனத்தில் பள்ளிகொண் டிருக்கிறார். அவரது நாபியில் இருக்கும்படியான தாமரைப் புஷ்பத்தில் ப்ரஹ்மா இருக்கிறார். அவருடைய தலைப் பக்கத்தில் லிங்காகாரமாகச் சிவபெருமான் இருக்கிறார் என்று சொல்வர். இதை அப்படியே அரசமரத்தைப் பற்றிச் செல்லும்போது தலைகீழாகச் சொல்கிறார்கள்.

मूलतो ब्रह्मरूपाय मध्यतो विष्णुरूपिणे ।
अग्रतश्शिवरूपाय वृक्षराजाय ते नमः ।।

மூலதோ ப்ரஹ்மரூபாய மத்யதோ விஷ்ணுரூபிணே |
அக்ரதஸ்ஸிவரூபாய வ்ருக்ஷராஜாய தே நம: ||

என்று சொல்வர். அரச மரத்துக்கு விருக்ஷராஜா என்று பெயர். இங்கே அடிப்பக்கத்தில் பிரம்மா இருக்கிறார். நடுவில் விஷ்ணு இருக்கிறார். மேல் பக்கத்தில் நுனியில் சிவன் இருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. இதிலிருந்து ப்ரம்மா, விஷ்ணு, சிவன் என்று சொன்னாலும் எல்லாம் ஒன்றுதான். உமை என்று சொன்னாலும், சரஸ்வதி என்று சொன்னாலும், லட்சுமி என்று சொன்னாலும் ஒன்றுதான். அநேக விதமாகப் பிரகாசித்துக் கொண் டிருக்கும்படியான தத்துவம் ஒன்றுதான் என்று தெரிகிறது.

அம்பாளுக்கு மாயை என்று பெயர். 'ஏதாவது ரூபம் எடுத்துக்கொண்டால், எனக்கு அநுக்கிரகம் பண்ணுவதற்காகத்தான் அந்த ரூபத்தையும் எடுத்துக்கொள்கிறாய். நிராகார ஸ்வரூபியாகிய நீ என்னிடத்தில் இருக்கும் கிருபையினால் ரூபம் உடையவளாகிறாய். ஒன்றாக இருப்பதுபோல் எனக்கு நீ தோன்றினாலும் நீ அனந்தம்; எல்லை இல்லாத வஸ்து' என்று ஆசாரியாள் சொல்கிறார்.

அனந்தன் என்று பரமாத்மாவுக்கு ஒரு பெயர். அந்தம் இல்லாதவன் அனந்தன். அனந்தம் என்பதற்கு அர்த்தம் 'இன்பினிடி' (Infinity), ந அந்தம் - முடிவு இல்லாதது. ஒன்று, இரண்டு, மூன்று என்று வந்தால் எண்ணிக்கை ஆகிறது. இன்பினிடி என்பதற்கு எந்த எண்ணிக்கையைப் போட்டுக் காட்டுவது? சைபர் என்று போட்டால் சூன்யம் ஆகிவிடும். ஒன்றும் இல்லை என்றால் 0 என்று போட்டுவிடலாம். இன்பினிடி என்பதற்கு எதைப் போடுவது? கணித சாஸ்திரத்தில் இதை எப்படிக் குறிக்கிறார்கள் என்று சந்தேகம் வந்துவிட்டது.

Koviloor Digital Library

பாஸ்கராசாரியார்தான் பூர்ணமாகக் கணித சாஸ்திரம் எழுதியிருக்கிறார். அந்தக் கணித சாஸ்திரத்துக்கு - பீஜகணித நூலுக்கு - மங்கள சுலோகமாக ஒன்று எழுதியிருக்கிறார்.

'அனந்தமாக இருக்கும்படியான பரமாத்ம ஸ்வரூபம் ஒன்று இருக்கிறதே, அந்தப் பரமாத்ம ஸ்வரூபம் எப்பேர்ப்பட்டது என்றால் எவ்வளவு பிரபஞ்சம் பிரளய காலத்தில் அதோடு வந்து கலந்தபோதிலும், சிருஷ்டி காலத்தில் எவ்வளவு பிரபஞ்சம் அதனிடத்திலிருந்து உண்டாகிச் சென்றாலும் அதன் அளவு ஓர் இம்மிகூட மாறாமல் இருக்கிறது. இம்மிகூடக் குறைவதும் இல்லை இம்மிகூட ஏறுவதும் இல்லை; சமஸ்தமும் அந்தப் பரமாத்ம ஸ்வரூபத்தினிடமிருந்துதான் உண்டாகின்றன. அதனால் அது குறைவதில்லை. சமஸ்தமும் அதனிடத்தில்தான் போய்ச் சேருகின்றன. அதனால் அது ஏறுவதும் இல்லை. அவன்தான் அனந்தன்.

இதைத்தான் உபநிஷத்திலும் சொல்லியிருக்கிறது. பத்து உபநிஷத்துகளில் பிருஹதாரண்யம் என்று ஒன்றுக்குப் பெயர். அரண்யம் என்றால் காடு. தத்துவத்தில் பெரிய காடாக இருக்கும் உபநிஷத்து என்று அதற்கு அர்த்தம். இதற்குத்தான் ஆசார்யாள் நிறையப் பாஷ்யம் பண்ணியிருக்கிறார். இருந்தாலும், 'வெகு சுருக்கமாகப் பண்ணியிருக்கிறேன்' என்பதாகச் சொல்லியிருக்கிறார். அப்பேர்ப்பட்ட பிரஹதாரண்ய உபநிஷத்தில் மங்கள சுலோகமாக, சாந்தி மந்திரம் ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. 'அதுவும் பூர்ணம்: இதுவும் பூர்ணம்' என்று வருகிறது. அது என்றால் பரமாத்ம என்கிற வஸ்து: இது என்றால் பாக்கியெல்லாம்; பிரபஞ்சத்திற்கு எல்லை இல்லை என்றால் அந்த எல்லை இல்லாத பிரபஞ்சத்தைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும்படியான பரமாத்ம ஸ்வரூபத்திற்கும் எல்லை இல்லை. அந்தப் பூர்ணத்திலிருந்து இந்தப் பூர்ணத்தை எடுத்தாலும், இந்தப் பூர்ணத்தை அந்தப் பூர்ணத்தோடு கொண்டுபோய்ச் சேர்த்தாலும் அதற்குக் கூடுதலோ குறைச்சலோ இல்லை. அது எல்லை இல்லாதது. இதுவும் எல்லை இல்லாதது. எல்லை இல்லாத அதிலிருந்து எல்லை இல்லாத இதை எடுத்தாலும், எல்லையில்லாததைக் கொண்டுபோய்ச் சேர்த்தாலும் அந்த எல்லை இல்லாத வஸ்து கூடுவதோ, குறைவதோ கிடையாது. பூர்ணத்திலிருந்து பூர்ணத்தை எடுத்துவிட்டாலும் பூர்ணத்தோடு பூர்ணத்தைக் கொண்டு போய்ச் சேர்த்தாலும் பூர்ணம்தான் மிச்சம் என்று ஒரு மந்திரம் இருக்கிறது. அதுதான் மங்கள சுலோகம்;

ॐ पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥

Koviloor Digital Library

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே |
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா வசிஷ்யதே ||

'என்ன ஐயா? பூர்ணத்திலேயிருந்து பூர்ணத்தை எடுத்தால் பூர்ணம் எப்படி இருக்கும்? நிறைந்த இடத்திலிருந்து நிறைந்த வஸ்துவை எடுத்துவிட்டால் எப்படி நிறைந்து இருக்கும்?' உபநிஷத்து இப்படிச் சொல்லியிருக்கிறதே என்று நமக்குச் சந்தேகம் தோன்றும்.

அதற்கு ஒரு திருஷ்டாந்தம்: காவேரி, கங்கை, யமுனை என்று அநேக நதிகள் சமுத்திரத்திலே போய் விழுகின்றன. இவ்வளவு நதிகளும் சமுத்திரத்தில் போய்ச் சேருவதனால் சமுத்திர மட்டம் உயருகிறதா? திரும்பவும் சூரிய வெப்பத்தால் அதன் தண்ணீர் நீராவியாகி மேகமாகிக்கொண்டே இருக்கிறதே; அதனால் சமுத்திர மட்டம் குறைகிறதா? சமுத்திரத்தினுடைய அகண்டாகாரத்தைப் பார்த்துவிட்டு, அதில் ஒரு மயிர் இழை என்றால் எத்தனையோ காலன் ஜலம் ஆகுமே; இவ்வளவு நதிகளும் அதில் போய் விழுந்தாலும் அதில் ஒரு மயிரிழை உயர்ந்தது என்றாலும் அது எப்படி நமக்குச் சரியாகத் தெரியும்? அப்படியே மேகமாகப்போகிற ஜலத்தினால் அது மட்டம் குறைந்தது என்றாலும் அது நமக்கு எப்படித் தெரியும்? சமுத்திரத்திலே கூடினாலும் குறைந்தாலும் அவ்வளவு சரியாக நம்மால் பார்க்கமுடியாது என்று சொல்லிவிடலாம்.

இதற்குத்தான் ஆசார்யரவர்கள் சமாதானம் சொல்கிற போது ஒரு தினுசாகச் சொல்லிவிட்டார்.

அகண்டாகாரமாக இருக்கும்படியானது பரமாத்ம ஸ்வரூபம். மாயை என்றால் என்ன? யா மா.—எது இல்லையோ அது மாயை. மாயி என்று பரமேசுவரனுக்குப் பெயர். ஜகத்துக்கும் பிரகிருதிக்கும் மாயை என்றுதான் பெயர். அதை உடையவன் மாயி-மஹேச்வரன். அதுவும் இல்லாதது, இதுவும் இல்லாதது. சைபரிலிருந்து சைபர் போனாலும், சைபரோடு சைபர் சேர்ந்தாலும் சைபர்தான். அது இறங்கவும் இறங்காது, ஏறவும் ஏறாது எனச் சொன்னார். அப்படிச் சொன்னால் பரமேசுவரனே மாயை 'இல்லாதது,' என்றால் நம்மை மாயாவாதிகள் என்று பரிகாசம் பண்ணமாட்டார்களா என்று கேட்ட போது, 'பரமேசுவரனைப் பரிகாசம் பண்ணினால் நம்மையும் பரிகாசம் பண்ணிவிட்டுப் போகட்டுமே' என்று சமாதானம் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

கம்பன் ஓர் உதாரணம் சொல்லியிருக்கிறான். ஒரு மாலை; அதைப் பார்த்துப் பாம்பு என்று பிரமம் அடைகிறபோது மாலை

Koviloor Digital Library

பாம்பாக இருக்கிறது. பாம்பு இல்லை என்று தெளிந்துவிட்டால் மாலையாக இருக்கிறது. மாலையில் பாம்பு ஏறி இருக்கிறபோது அந்த மாலை ஒரு டன் கூடியிருந்ததா? இல்லை, பாம்பை இறக்கி விட்ட பிறகு மாலையில் ஒரு டன்தான் குறைந்ததா? இரண்டும் இல்லை.

நிறைந்த இடத்தில் இருக்கிற வஸ்துவும் எல்லை இல்லாதது. இல்லாத வஸ்துவும் எல்லை இல்லாதது. அந்தப் பூர்ணத்திலிருந்து இந்தப் பூர்ணத்தை எடுத்தாலும், இந்தப் பூர்ணத்திதைக் கொண்டுபோய்ச் சேர்த்தாலும் அந்தப் பூர்ணம் குறைவதும் இல்லை, கூடுவதும் இல்லை என்று முடித்துவிட்டார்.

देवमायेव निर्मिता

தேவமாயேவ நிர்மிதா

என்று ராமாயணத்திலே சொல்கிறபோது சர்க்ஷாத் சீதா தேவி யார் என்று கேட்டால் தேவ மாயை போல இருக்கிறது என்று சொன்னார்கள்.

'இல்லாதது போல இருக்கிறாளா? நேரே இருக்கிறாளே? இல்லாததுபோல என்று எப்படிச் சொல்வது?' இல்லாத வஸ்து ஒன்று தோன்றினால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறாள். அது எப்படி? ஒரு 'ஸீன்' (scene) எழுதினால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறாள். ஸீன் நிஜமோ? இல்லை. அப்படி இவள் இருக்கிறாள் என்றால் ஸீன் பொய்; இருக்கிறது மெய். இதுவும் உண்மையில் பார்த்தால் மாயா ஸ்வரூபம்தான். ஸாகாரமாக இருப்பது இல்லாததுதான் என்று அர்த்தம். அது அனந்தமாக இருப்பது.

இந்த அனந்தம் என்பதை-இன்பினிடி என்பதை-எப்படிக் காட்டுவது என்பதைப்பற்றிப் பாஸ்கராசார்யாள் கணித சாஸ்திரத்தில் எழுதும்போது மேலே ஓர் எண்ணிக்கையைப் போட்டு, கீழே ஒரு சைபரைப் போட்டு, வகுத்தால் என்ன ஈவு வருமோ அந்த ஈவுதான் அனந்தம் என்று எழுதியிருக்கிறார்.

நான்கு என்று மேலே போட்டுக் கீழே இரண்டை எழுதி வகுத்தால் ஈவு இரண்டு என்று வரும். இரண்டு என்று போட்டுக் கீழேயும் இரண்டைப் போட்டு வகுத்தால் ஈவு ஒன்று என்று வரும். மேலே ஒன்றைப்போட்டு கீழே $\frac{1}{2}$ என்பதைப்போட்டு வகுத்தால் ஈவு 2 ஆகிவிடும். மேலே 4 என்பதைப் போட்டு கீழே $\frac{1}{4}$ என்பதைப் போட்டு வகுத்தால் ஈவு 16 ஆகிவிடும். மேலே 16 என்பதைப் போட்டு கீழே $\frac{1}{8}$ என்பதைப் போட்டு வகுத்தால் ஈவு 128 என்று ஆகிவிடும். கீழே இருக்கும் எண் எத்தனைக்கு எத்தனை குறைகிறதோ அத்தனைக்கு அத்தனை ஈவு அதிகமா

Koviloor Digital Library

கிறது, மேலே எத்தனை பெரிய எண்ணுக இருந்தாலும் இருக்கட்டும்; கீழேயும் எத்தனைக்கு எத்தனை சிறிய எண்ணோ அதைப் போட்டு வகுத்தால்-சைபரைப் போட்டு வகுத்தால்- ஈவு என்ன? அதுதான் இன்பினிடி; அனந்தம். எல்லை இல்லாதது. இதற்கு 'க'ஹரம் என்று பெயர் வைத்திருக்கிருர். கம் என்ருல் பூஜ்யம். ஹரம் என்ருல் வகுத்தல். பூஜ்யத்தை வகுக்கும் எண்ணுக (Divisor) வைத்துக்கொண்டு எத்தனை பெரிய எண்ணை வகுத்தாலும் 'ஈவு எல்லை இல்லாத ஒன்ருக வருகிறது. 'கணக்குப் (மாதமாடிக்ஸ்) பிரகாரம் வரும்படியான அந்த எல்லையில்லாத பரமாத்மாவுக்கு நமஸ்காரம் பண்ணுகிறேன்' என்று பாஸ்கராசார்யாள் கணிதசாஸ்திரத்தின் மங்களசுலோகத்தில் எழுதியிருக்கிருர். சங்கேதத்திலிருந்து வரும்படியான அந்தப் பரமாத்மாவுக்குச் சாங்கியன் என்று பெயர். அனந்தமாய்ச் சாங்கியமாக இருக்கும் படியான ஒரு த்த்துவம் எல்லை இல்லாதது. அதிலிருந்து பத்தைக் குறைத்தாலும், பத்தைப் பெருக்கினுலும் அது மாறுவதில்லை. இதுதான் அந்தப் பரமாத்ம தத்துவம், அத்வைத தத்துவம் என்பது அவர் காட்டி இருக்கும்படியான கணித உண்மை (Methematical truth).

ஒன்று, இரண்டு, மூன்று என வரும்போது ஒவ்வொன்றும் வெவ்வேறுதான். அது பேதசங்கியை; த்வைதம். இப்படி அனந்தமாக இருக்கும்படியான ஒரு வஸ்துதான் அநேக வஸ்துக்களாகப் பிரகாசிக்கிறது. இதற்குப் பஹுகரணம் என்று பெயர். ஆனுல் ப்ரம்மம் என்பது ஏகம். எல்லை இல்லாத ஒன்ருக இருக்கிறதுதான், தான் அநேகமாக ஆகவேண்டுமென்று நினைத்து அநேகமாக ஆகிவிட்டது. எப்படி என்று கேட்டால் மாயையினுல் நாஞ ரூபமாக ஆகிவிட்டது. அனந்தமாக இருக்கக்கூடிய வஸ்து மாயையினுல் தன்னைத்தானே பெருக்கிக் கொள்கிறது; வகுத்துக்கொள்கிறது. ஒன்று, இரண்டு என்று நாஞ எண்களாக இருக்கக் கூடியது த்வைதம்; சூன்யமாக பூஜ்யமாக இருக்கக்கூடியது பௌத்தம். த்வைதத்தைப் பௌத்தத்தால் பெருக்கினுல் வருவது அத்வைதம். வகுப்பது என்பதுதான் மாயா கார்யம். வகுப்பது-விலக்குவது. சத்தியமான அனந்தத்தோடு பொய்யான பூஜ்யத்தை எவ்வளவு கூட்டினுலும் கழித்தாலும் அது மாறுவது இல்லை. அதனுல்தான் ஸத்யம், ஞானம், ப்ரம்மம் என்று சொல்லிவிட்டார்கள்.

அத்வைதமான ஒரு தத்துவம் அநேக விதமாக அநுக்கிரஹம் செய்வதற்காகத் தன்னுடைய மாயா சக்தியினுல் த்வைதமாகிறது. நாம் கண் காது போன்ற பொறிகளை உடையவர்கள்; ஆதலினுல் நமக்கு ஆனந்தத்தைக் கொடுக்க

Koviloor Digital Library

உருவம் உடையதாக, நாமரூபம் உடையதாக வருகிறது. எங்கும் நிறைந்திருக்கும்படியான அந்த வஸ்து இப்படிக் குறையுடையதும் அல்ல. அது அனந்தம். நிராகாரமான வஸ்து நமக்கு அநுக்கிரஹம் பண்ணுவதற்காக ஆகாரம் (ரூபம்) உடையதாக வருகிறதே அதுதான் மாயை.

लीये पुरहरजाये माये तव तरुणपल्लवच्छाये । चरणे

லீயே புரஹரஜாயே மாயே தவ தருணபல்லவச்சாயே சரணே

என்று மூகன் ஆர்யா சதகத்தில் சொல்லுவதுபோலவே ஆசார்யாள் சௌந்தர்யலஹரியில்

मनस्त्वं व्योम त्वं मरुदसि मरुत्सारथिरसि

त्वमापस्त्वं भूमिस्त्वयि परिणतायां नहि परम् ।

மனஸ்த்வம் வ்யோம த்வம் மருதஸிமருத்ஸாரதிரஸி

த்வமாபஸ்த்வம் பூமிஸ்த்வயி பரிணதாயாம் நஹி பரம்

எல்லா வஸ்துவும் உன்னுடைய பரிணாமத்தைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. அல்பமான மனசை உடைய எங்களுக்கு அநுக்கிரஹம் பண்ணி ஆனந்தத்தை உண்டாக்குவதற்காக நீ எல்லாமாய் இருக்கிறாய் என்று ஸ்தோத்திரம் செய்கிறார். அவளுடைய கடாக்ஷந்தான் நாம் ப்ரார்த்திக்க வேண்டியது.

Koviloor Digital Library

10
அபரிக்ரஹம்

உண்மையை நாம் அறிவதுதான் மனுஷ்யப் பிறவிக்குப் பிரயோஜனம். மனுஷ்யப் பிறவியையும் எடுத்துவிட்டு, உண்மையை அறியாமல் உடலை விட்டு நாம் பிரிந்தோமானால் அப்போது இந்த மனுஷ்ய உடலை எடுத்ததன் பிரயோஜனத்தை நாம் அடையவில்லை என்று அர்த்தம்.

'உண்மை' என்கிற வார்த்தையைக் கொஞ்சம் கொஞ்சமாக நாம் ஆராய்ந்து பார்த்துக்கொண்டே போனால் கடைசியில் சாக்ஷாத் ஈச்வரன்தான் - பரமாத்மாதான் - உண்மையான வஸ்து என்பது புலப்படும். அந்தப் பரமாத்மஸ்வரூபத்தைத் தெரிந்துகொண்டுவிட்டால் அப்புறம் 'நான்', 'நாம்' என்பது இருக்காது. நதிகள் எல்லாம் சமுத்திரத்தில் போய்ச் சேர்ந்தவுடன், அந்த அந்த நதிகளுக்குள்ள தனிப் பெயர்கள் மறைந்து போய் எல்லாம் சமுத்திரமாகவே ஆகிவிடுகிறதைப்போல், பரமாத்ம ஸ்வரூபமாகவே ஆகிவிடுகிறது. 'நான்,' என்கிற அகம்பாவமே இல்லாமல் அதுவும் பரமாத்மாவோடு கலந்து போய்விடும். இந்த உண்மையை நாம் அறியாமல் இந்த மனுஷ்ய உடலைவிட்டுப் போகக்கூடாது. இதற்கு உடல்தான் ஆதாரமாக இருக்கவேண்டும். இந்த உடலைத் துணையாக வைத்துக்கொண்டு ஆயுசு இருக்கும்போதே பரமாத்ம ஸ்வரூபத்தோடு இரண்டறக் கலந்துவிடப் பிரயத்தனப்படவேண்டும். மனுஷ்ய ஜன்மாவை எடுத்திருப்பதன் பயனே இதுதான். இதற்குத்தான் வேதாந்தம் என்று பெயர். இது சிலசமயம் புரியும். சிலசமயம் நாம் இருக்கிற நிலைமையில் புரியாது.

வேதாந்தத்தைப் புரிந்துகொள்வதற்கு, மனுஷ்ய ஜன்மா

Koviloor Digital Library

வின் பலனை அடைவதற்கு, பிரதானமான காரியங்கள் அநேகம் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமாக அஷ்டாங்கயோகம் என்று எட்டு அங்கங்களைச் சிறப்பாகச் சொல்வர்.

யமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி—இப்படி எட்டு அங்கங்கள் பிரதானமாக வந்திருக்கின்றன. அஷ்டாங்க யோகத்தின் முதல்படி யமம். அந்த யமத்தில் சொல்லப்பட்டிருப்பன ஐந்து படிகள். முதல் படியையே மிதிக்காதவர்களுக்கு மேல்படியில் இருக்கும்படியான வேதாந்தமே புரியாது. நான் என்பது இல்லாமல் போகிறது, பரமாத்வ ஸ்வரூபத்தோடு கலந்துவிடுகிறது, ஆத்ம சாக்ஷாத்காரம்; ப்ரம்ம சாக்ஷாத்காரம் என்பதைப்பற்றியெல்லாம் பேசுவதற்குக்கூட முடியாது. உண்மையைப் புரிந்து கொண்டு, பரமாத்ம ஸ்வரூபத்தோடு கலப்பது ஒன்றுதான் ஜன்மாவின் பயன். அந்தப் பயனை இந்த மனுஷ்ய உடம்பைத் துணையாகக் கொண்டே அடையவேண்டும் என்கிற இச்சை உள்ளவர்கள் ஒவ்வொரு படியாகப் பிரயத்தனம் பண்ணித்தான் ஏறவேண்டும். அஷ்டாங்க யோகத்தின் முதல்படி, யமம், அதிலே உள்ள ஐந்து படிகள், அஹிம்ஸா, ஸத்யம், அஸ்தேயம், ப்ரஹ்மசரியம், அபரிக்ரஹம் என்பன. இன்றைக்கு யமத்தில் சொல்லப்படுகிற ஐந்தாவது படியாகிய 'அபரிக்ரஹம்' என்பதைப்பற்றி மட்டும் பார்க்கலாம் என்பது உத்தேசம். க்ரஹம் என்றால் க்ரஹிப்பது என்று அர்த்தம். அபரிக்ரஹம் என்றால் க்ரஹித்துக்கொள்ளாமை என்று அர்த்தம்? அதாவது நம்முடைய உடலுக்கு இந்த உலகில் இருப்பதற்கு எவ்வளவு சாமான்கள் அவசியமோ அதற்கும் மேலே நாம் எடுத்துக் கொண்டால் அது திருட்டு என்று ஆகிவிடுகிறது. நம்முடைய தேவைக்கு அதிகமாக ஒரு சிறு துரும்பையுங்கூட எடுத்து உபயோகப்படுத்திக் கொள்ளாமல் இருப்பதுதான் அபரிக்ரஹம். இப்படிப்பட்ட கட்டுப்பாடு வந்தால்தான் உண்மையை அறிந்துகொள்வது சுலபமாகும். இவை இருந்தால்தான் பகவானின் அநுக்கிரஹம் கிடைக்கும். நல்ல குணங்களுக்கு 'எதிக்ஸ்' (Ethics) என்று பெயர். காரெக்டர், (Chatacter) மொராலிடி (Morality) இவற்றையே பிற மதங்களில் முடிந்த முடிவாகச் சொன்னாலும், நம்முடைய சாஸ்திரங்கள் எல்லாம் பரமாத்ம ஸ்வரூப சாக்ஷாத்காரத்திற்கு-உண்மையை உள்ளபடி அறிவதற்கு-இவை எல்லாவற்றையும் சாதனமாகத்தான் சொல்லியிருக்கிறது. ஒவ்வொரு, தேசத்தில், ஒவ்வொரு மதத்தில் மொராலிடி (Morality) தான் முடிவு, பக்திதான் முடிவு, தியாலஜி (Theolegy) தான் முடிவு என்று சொல்லியிருக்கலாம். உண்மையை உள்ளபடி

Koviloor Digital Library

அறிந்துகொள்வதாகிய ப்ரம்ம சாக்ஷாத்காரத்திற்கு, 'பொய் சொல்லக் கூடாது, திருடக் கூடாது, அகம்பாவப்படக்கூடாது' போன்ற அநேக விஷயங்களைச் சாதனமாக, துணையாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று நம் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

நாட்டிலே இப்படிப்பட்ட நல்ல குணங்கள் வளர்வதற்கு ஈச்வர பக்தி பெருகுவதற்கு, அரசாங்கம் பணத்தைச் செலவழித்தால், மக்களுடைய பண்பாடு, மொராலிடி இவையெல்லாம் கெட்டுப்போய்விட்டன; அதனாலே அநேகம் கலகம், போலீஸ் கொண்டு அடக்கவேண்டும்' என்பதாக ஏராளமாகப் பணத்தைச் செலவிட அவசியமே ஏற்படாது. தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கிற மாதிரி-சுதந்திரம் என்றால் என்ன என்றே புரிந்து கொள்ளாமல்-சுதந்திரம் வந்துவிட்டது! குடியரசு சர்க்கார்! மதசம்பந்தமான விஷயங்கள் எப்படி வேண்டுமானாலும் போகட்டும்-ஈச்வர பக்தியை வளர்ப்பதற்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று நினைத்துவிட்டால்-இதர சிரமங்கள், செலவுகள் எல்லாம் ஜாஸ்தியாகத்தான் போய்விடும்.

ஜனங்களுக்கு ஈச்வர பக்தி வரவேண்டும் என்பதற்கு அவர்கள் பல காரியங்களைச் செய்தால் செய்கிறார்கள்; செய்யாவிட்டால் போகிறார்கள். நான் ஈச்வர பக்தி அவசியம் வேண்டும் என்று சொல்ல வருவதற்கு முக்கியமான காரணம் ஒவ்வோர் ஆத்மாவும் ஆத்மாநுபவத்தை அடைந்து ஜனன நிவர்த்தியைத் தேடிக்கொள்ளவேண்டும் என்பதுதான். ப்ரம்ம ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்வதற்கு அடிப்படையாகச் சில குணங்கள், பண்புகள் இருக்கவேண்டும். அதிலே முக்கியமாக யமம் என்பதில், 'அபரிக்ரஹம்' என்கிற பண்பு நமக்கு வரவேண்டும் என்று சொல்வதற்கு வந்தேன். மனுஷ்யர்கள் தங்கள் தேவைக்கு அதிகமாக ஒரு சிறு துரும்பைக்கூட உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடாது. அபரிக்ரஹம் என்கிற குணம் இல்லாமற் போனால் ப்ரம்மசாக்ஷாத்காரம், ஆத்மசாக்ஷாத்காரம் என்பதைப் பற்றியே பேசமுடியாது போய்விடும்.

'சரி, மனுஷ்யர்களுக்கு மிகவும் தேவை என்பது என்ன என்ற அடுத்த கேள்வி வரும்.

छाया तोयं वसनमशनम्

சாயா தோயம் வஸநம் அஶநம்

சாயா என்றால் நிழல். தோயம் என்பதுதான் ஜலம். வஸநம் உடுத்துக்கொள்கிற வஸ்திரம். அசநம் என்றால் ஆகாரம்.

மனுஷ்யர்களுடைய மானம், உயிர் இரண்டையும் காப்

Koviloor Digital Library

பாற்றிக்கொள்ள இந்த நான்கும் மிகவும் அவசியமானவை. நிழல் கொடுப்பது இந்தப் பூமிதான். பூமியில் இருந்து மண், கல், சுண்ணும்பு எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு வீடு கட்டிக்கொள்கிறோம். பூமியில் இருந்து ஜலம் வருகிறது. ஆகாரமும் பூமியில் இருந்துதான் கிடைக்கிறது. வஸ்திரமும் பூமியில் இருந்து வரும்படியான பருத்தியினுல்தான் கிடைக்கிறது. முடிந்த முடிவில் நாம் பூமியில்தான் மடிந்து போகிறோம். நமக்குத் தேவையானவற்றை எல்லாம் பூமிதான் கொடுக்கிறது. என்றுலும் பூமியில் இருந்து கிடைக்கும்படியான பொருள்களில் நமக்கு மிகவும் குறைச்சலாக எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு தான் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள ஆடை கட்டிக்கொள்ளவேண்டும். நமக்கு ஒரு வருஷத்திற்குக் குறைந்தது எவ்வளவு ஆடை வேண்டுமோ அவ்வளவுதான் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில்தான் நாம் கவனம் செலுத்துவதில்லை. ஆடை எதற்கு? மானத்தை ரக்ஷித்துக்கொள்ளுவதற்காக. அதற்கு நல்ல கெட்டித் துணியாக, பருத்தி ஆடையாக இருந்தால் போதும். பகட்டாக இருக்கவேண்டும் என்பதற்காக மிகமிக விலை உயர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டால், சன்னமான துணிகளை, பட்டுத் துணிகளை அணிந்து கொண்டால், மற்றவர்கள் கௌரவமாக நினைப்பார்கள் என்று தப்பாக எண்ணிக்கொண்டு அவ்வாறு செய்கிறோம். அதனுல் மானத்தையும் ரக்ஷிப்பதாக நினைக்க முடியாது. 'பாருடா எவ்வளவு இறுமாப்பு!' என்றுதான் பார்க்கிறவர்களுக்குத் தோன்றும். இந்த விஷயத்தில் ஒரு குடும்பம் செலவழிக்கிற பணத்தைக் கணக்கு எடுத்தால் அந்தக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு மானத்தை ரக்ஷித்துக்கொள்ளத் தேவைப்படும் துணி போக, பாக்கியை வைத்துக்கொண்டு ஐந்து குடும்பங்களுக்கு வேண்டிய துணியைக்கூடச் சப்ளை பண்ணலாம். இரண்டாவது 'பட்டுப்புடைவை பட்டுப்புடைவை' என்று வாங்குகிறுர்களே தவிர அதனுல் பாபம் நிறைய வருகிறது. பட்டுப் புடைவை, பட்டு வேஷ்டி இவற்றுல் எத்தனையோ ஜீவன்களுக்கு ஹிம்சை ஏற்படுகிறது. செலவும் இதில் அபாரமாக ஆகிறது. அஹிம்சை அஹிம்சை என்று சொல்லிக்கொண்டு மாமிசமே சாப்பிடுவது இல்லை என்று நாம் சொல்லிக்கொள்கிறோம். ஆனுல் கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் நமக்கு இந்தப் பட்டுப் புடைவை, பட்டு வேஷ்டி இவற்றினுல் வருகிற பாபம் மாமிசம் சாப்பிடுகிறவர்களுக்குக்கூட வராது. ஒரு ஆடோ இரண்டு ஆடோ அங்கே உயிரை இழக்கின்றன என்றுல் இங்கே

Koviloor Digital Library

கணக்கு வழக்கு இல்லாத ஜீவன்களுக்கு ஹிம்சை ஏற்பட்டு விடுகிறது. கூடியவரைக்கும் நாம் உடுத்துக்கொள்கிற வஸ்திரம் ஹிம்சை இல்லாத வஸ்திரமாக இருக்கவேண்டும். கெட்டியான வஸ்திரமாகவும் சாதாரண ஜனங்கள் எல்லாம் உடுத்துக் கொள்ளும்படியானதாகவும் இருக்கவேண்டும்.

மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவேண்டும் என்பதற்காக அரசாங்கத்தார் அநேக திட்டங்களைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாட்டிலும் தரித்திரம் நாளுக்கு நாள் பெருகிக்கொண் டிருக்கிறது. வாழ்க்கைத்தரம் உயர்வது என்றால் ஒருவன் இரண்டு வேளை காபி சாப்பிடுவது, நான்கு வேளையாகவேண்டும்; குடிசையில் இருப்பவன் மாடமாளிகையில் இருக்கவேண்டும்; இரண்டு வேஷ்டி வைத்துக்கொண் டிருப்பவன் இருபது வேஷ்டி வைத்துக்கொள்ளவேண்டும் என்கிற அபிப்பிராயம் வளர்ந்தால் அது பெரிய தப்பு. வாழ்க்கைத்தரம் உயர்வது என்கிற வார்த்தைக்கே அர்த்தமில்லை. வாழ்க்கைத் தரம் உயர்வது என்று சொல்லிக்கொண்டு வாழ்க்கைத் தேவைகள் நாளுக்கு நாள் மனுஷ்யர்களுக்கு அதிகமாகிக்கொண்டே போனால் நாட்டில் தரித்திரந்தான் மிஞ்சும். மனுஷ்யர்களுக்கு மானம், உயிர் இரண்டையும் காப்பாற்றிக்கொள்ள மிகமிக அத்தியாவசியமானவை எவையோ அவை நாட்டில் உள்ள அத்தனை ஜனங்களுக்கும் கிடைக்கவேண்டும். அதற்குத்தான் திட்டம், ஒழுங்கு எல்லாம் வேண்டும். அப்படி வரவேண்டுமானால் வசதி உள்ளவர்கள் கூட நாட்டில் இருக்கும்படியான பரம ஏழை எப்படி வசிக்கிறானோ அப்படி வசிக்கப் பிரயத்தனம் பண்ணவேண்டும். அவன் குடிசையில் இருந்தால் இவனும் குடிசையில் இருப்பது, அவன் காலையில் கஞ்சி குடித்தால் இவனும் கஞ்சி குடிப்பது என்று சௌகர்யம் இருக்கிறவர்களும் கூடத் தங்களிடம் பணம் இருக்கிறது என்று தேவைக்கு மேல் அதிகமான வசதிகளையெல்லாம் பெருக்கிக்கொள்ள முயலாமல் இருக்க வேண்டும். வசதி இருக்கிறது என்று இவர்கள் பண்ணுகிற காரியங்கள் எல்லாம் அபரிக்ரஹம் என்பதற்கு விரோதம் தான். இந்தத் தோஷம் வந்துவிட்டால் ஈசுவரானுக்கிரஹம் கிடைக்காது! மனுஷ்ய ஜன்மா பிரயோஜனம் உள்ளதாக ஆக வேண்டுமானால் நமக்கு எவ்வளவு தேவையோ அதற்குமேல் ஒரு இம்மிகூட விரும்பக்கூடாது. வசதி இருக்கிறது என்றால் அதைக் கொண்டு கஷ்டப்படுகிற இதர குடும்பங்களுக்கு-அந்தக் குறைச்சலான வசதியைக்கூடப் பெறமுடியாதவர்களுக்கு-உதவி செய்வது தான் புண்ணியம். அதுதான் இவனுக்கு மோக்ஷத்தை அளிக்கும்.

இது தெரியாமல் வசதி இருக்கிறவர்கள் தேவைக்கு மேல்

Koviloor Digital Library

பட்டுப்புடைவை, பட்டு வேஷ்டி என்கிற தோஷத்தை அதிகமாக இப்போது பண்ணிக்கொண்டிருக்கிறது ஒரு பக்கம். அதே சமயம் இவர்களைப் பார்த்து வசதி இல்லாதவர்களுங்கூடக் கடன் வாங்கியாவது அவைகளை வாங்கவேண்டும் என்று கடனாளியாகி அநேக உபத்திரவங்களுக்கு உள்ளாகி வருகிறார்கள். பட்டுப் புடைவையைப் போலத்தான் வைர ஆபரணங்களில் உள்ள ஆசை. இதில் போடுகிற பணம் வீண். 'கந்யாம் கநக ஸம்பந்நாம்- कन्यां कनकसंपन्नाम्' என்று பெண்ணைக் கொடுக்கும்போது ஸ்வர்ணம் கொடுப்பது என்கிற வழக்கம் இருந்திருக்கிறது. தங்கத்தில் போடுகிற பணமாவது பின்னால் பிரயோஜனப் படுகிறது. வைரத்தினால் பிரயோஜனம் இல்லை. உபத்ரவம் இருக்கிறது. ஐம்பது நூறு வருஷங்களுக்கு முன்னால் எல்லாம் யாரும் காபி சாப்பிட்டது இல்லை. குடிசையில்தான் இருந்தார்கள். காதில் பனை ஓலைதான் போட்டுக்கொண்டிருந்தார்கள், கேழ்வரகுக் கூழோ, கஞ்சியோதான் சாப்பிட்டார்கள். ஏழைகளோ, பணக்காரர்களோ எல்லோரும் ஒரேமாதிரியாகத்தான் இருந்தார்கள். நாம் பட்டுத்துணி உடுப்பது இல்லை, காபி குடிப்பது இல்லை என்று சங்கல்பம் செய்துகொண்டுவிட்டால், இப்போது ஒரு குடும்பத்துக்குச் செலவாகிற பணத்தைக்கொண்டு ஐந்து குடும்பங்கள் வாழ முடியும். தேவையை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகப்படுத்திக்கொள்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு சாந்தி ஏற்படாது; சௌக்கியம் ஏற்படாது. தரித்திரம், துக்கம் எல்லாந்தான் உண்டாகும்.

பட்டுப்புடைவையில் காசு போடவில்லை என்றால், காபிக் கொட்டையில் காசு போடவில்லை என்றால் எல்லாக் குடும்பங்களும் முன்னுக்கு வந்துவிடும். குடும்ப சௌக்கியத்திற்காக மட்டும் சொல்லவில்லை. பட்டுப்புடைவையினால் வருகிற பாபங்கள் நமக்கு இல்லை என்றால் மோக்ஷத்திற்குச் சிரமங்களே இல்லாமல் போகும்; அஷ்டாங்க யோகத்தின் முதல் அங்கமே அஹிம்ஸை, அபரிக்ரஹம் இவை எல்லாம்தான். ஒரு பிராணிக்கும் நம்மால் ஹிம்சை உண்டாகக் கூடாது. நம்முடைய தேவைக்கு மேல் ஒரு துரும்பைக்கூட-வசதி இருக்கிறது, பணம் இருக்கிறது என்பதற்காக-வாங்கிக்கொள்ளக்கூடாது. பணம் இருக்கிறது என்றால் இன்னும் சில குடும்பங்களுக்கு உதவி செய்யலாம். இப்படிச் செய்தால்தான் - செய்வதற்குப் பிரயத்தனமாவது செய்தால்தான் - சீக்கிரத்திலே ப்ரம்மசாக்ஷாத்காரத்தைப் பெற முடியும். அஷ்டாங்க யோகத்தின் முதல்படியே இதுதான். முதல்படியை மிதிக்காமல் மேல் படிக்குப் போக முடியாது என்பதற்காக இதைச் சொன்னேன்.

Koviloor Digital Library

11

எது மோட்சம் ?

इन्दिरा लोकमाता मा क्षीरोदतनया रमा ।
भार्गवी लोकजननी क्षीरसागरकन्यका ॥

இந்திரா லோகமாதா மாக்ஷீரோததநயா ரமா |
பார்கவீ லோகஜநநீ க்ஷீரஸாகரகந்யகா ||

டிக்ஷனரி, அகராதி என்று சொல்வதையெல்லாம் தமிழில் நிகண்டு என்று சொல்வது உண்டு. ஸம்ஸ்கிருதத்திலும் நிகண்டு என்று சொல்வது உண்டு. அதிலே இன்ன இன்ன பொருள்களுக்கு இன்ன இன்ன பெயர்கள் என்று ஒவ்வொரு பொருளுக்கும் உள்ள அநேகம் பெயர்களை வரிசையாகச் சொல்லியிருக்கும். அதில் மஹாலக்ஷ்மிக்கு,

लक्ष्मीः पद्मालया पद्मा कमला श्रीर्हरिप्रिया ।

லக்ஷ்மீ: பத்மாலயா பத்மா கமலா ஸ்ரீ: ஹரிப்யா |

என்று வருகிறது. மா என்று ஒரு பெயர். தவன் என்றால் புருஷன் என்று அர்த்தம், மா என்றால் லக்ஷ்மி. மகாலக்ஷ்மியின் புருஷன் என்பதற்காக மஹாவிஷ்ணுவுக்கு மாதவன் என்று பெயர் வந்தது. மஹாலக்ஷ்மிக்கு ரமா என்று ஒரு பெயர்.

इन्दिरा लोकमाता मा क्षीरोदतनया रमा ।
भार्गवी लोकजननी क्षीरसागरकन्यका ॥

இந்திரா லோகமாதா மாக்ஷீரோததநயா ரமா |
பார்கவீ லோகஜநநீ க்ஷீரஸாகரகந்யகா ||

பார்கவி என்று ஒரு பெயர். ஒரு காலத்தில் ப்ருகு மகரிஷியின் புத்திரியாக அவள் ஆவிர்ப்பவித்து மஹாவிஷ்ணுவை

Koviloor Digital Library

விவாகம் செய்துகொள்கிருள். ப்ருகு மகரிஷி சாக்ஷாத் மஹாலக்ஷ்மியைப் பிரார்த்தித்துக்கொள்ளும்போது, "அம்மா நீ எனக்குக் குழந்தையாக அவதாரம் செய்ய வேண்டும். உன்னை என் குழந்தையாகப் பெற்றெடுத்து லாலனம் பண்ணி வளர்க்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டதாகவும், அதனுல் மஹாலக்ஷ்மி ப்ருகு மஹரிஷியின் புத்திரியாகப் பிறந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அதனுல்தான் அவளுக்குப் பார்கவி என்று ஒரு பெயர் வந்திருக்கிறது.

ரரஜராஜேச்வரி, காத்யாயன மகரிஷியின் புத்ரியாகப் பிறந்திருக்கிருள். அதனுல் அம்பாளுக்குக் காத்யாயனி என்று ஒரு பெயர்,

கிராம தேவதைகள் அநேகத்திற்குக் காத்தாயி, பேச்சியாயி, பிடாரி என்பதான சப்தங்கள் வழங்கி வருகின்றன. காத்யாயனி என்பதுதான் காத்தாயி என்று வந்துவிட்டது. பிடாரி என்கிற சப்தந்தான் பட்டாரிகா என்பது.

आर्या भट्टारिका

ஆர்யா பட்டாரிகா

என்று சொல்வதுண்டு. பேச்சியாயி என்பது - பேச்சுக்கு ஆயி -- சரஸ்வதி என்பதைக் குறிக்கிறது.

ब्राह्मी तु भारती भाषा गीर्वाग् वाणी सरस्वती ।

ப்ராஹ்மீ து பாரதீ பாஷா கீர்வாக் வாணீ ஸரஸ்வதீ |

என்ற இவையெல்லாம் பேச்சுக்கு ஆயி ஆக இருக்கிறவளைத்தான் குறிக்கின்றன.

இப்படிப் பாமர மக்களுடைய வார்த்தைகளிலுங்கூடப் புராணத்தில் இருக்கும்படியான தத்துவங்கள்தான் வழங்கி வருகின்றன.

பொதுவாக ராஜராஜேச்வரிக்கு மலைமகள் என்று பெயர். மஹாலக்ஷ்மிக்கு அலைமகள் என்று பெயர். அலைகளை உடையது சமுத்திரம், சமுத்திரத்தினுடைய புத்ரி என்பதால் இவளுக்கு அலைமகள் என்று பெயர் வந்தது. பர்வத ராஜனுடைய புத்ரி, ஹைமவதி - என்ற சப்தத்தினுலே அவளுக்கு மலைமகள் என்று பெயர் வந்தது. மலைமகள், காத்யாயன மகரிஷியினுடைய புத்ரியாக ஆவிர்ப்பவித்திருக்கிருள். மகாலக்ஷ்மி ப்ருகு மகரிஷியினுடைய புத்திரியாக ஆவிர்ப்பலித்திருக்கிருள். அதனுல்தான் அம்பாளுக்கு,

Koviloor Digital Library

उमा कात्यायनी गौरी

உமா காத்யாயனீ கௌரீ

என்று சொல்லும்போது காத்யாயனீ என்ற பெயரைச் சொல்வர்.

भार्गवी लोकजननी क्षीरसागरकन्यका ।

பார்கவீ லோகஜநநீ க்ஷீரஸாகரகந்யகா |

என்று சொல்லும்போது 'பார்கவீ' என்று சொல்லப்படுகிறது.

இந்த இரண்டு மகரிஷிகளும் தபஸ் பண்ணி, சாக்ஷாத் அம்பாளையே குழந்தையாகப் பெற்றெடுத்து லாலனம் பண்ணி ஈச்வரனுக்கே திரும்பவும் அர்ப்பணம் பண்ணியிருக்கிறார்கள். அனசூயைக்குத் திரிமூர்த்திகளும் குழந்தைகளாக வந்தார்கள். அவர்கள் வேறு ஏதோ காரியமாக அவதாரம் செய்தார்கள் என்றாலும் அனசூயைக்குத் தத்தாத்ரேயர்களாக அவர்களைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்தது.

ஒரு சம்பந்தமும் இல்லாமல் கிருஷ்ணபரமாத்மாவைக் குழந்தையாக எடுத்து வளர்க்கக்கூடிய பாக்கியம் யசோதைக்குக் கிடைத்தது.

நமக்கு ரொம்பப் பிரியம் குழந்தைகளிடம்தான். குழந்தையும் தெய்வமும் கொண்டாடுகிற இடத்தில்தான் என்று சொல்வது உண்டு. குழந்தைக்கு அறிவு வளராததனால் காமக் குரோதாதிகள் இல்லாமல் இருக்கிறது. அவற்றுக்குக் கோபம் வரும். அழுகை வரும். உடனே இரண்டு நிமிஷத்துக்கெல்லாம் சிரிக்கும், விளையாடும். அழுகை, கோபம் எல்லாம் குழந்தைக்கு வேர் ஊன்றுவது இல்லை. நாம் கோபித்துக்கொள்வது, அழுவது என்று ஆரம்பித்துவிட்டால் அழுகை, கோபம் எல்லாம் ஆயிசு பூராவும் இருக்கும். காரணம், அவை நமக்கு வேர் ஊன்றிப் போய்விடுகின்றன. துவேஷமும் அதுமாதிரிதான்.

அறிவு வளராததனாலே குழந்தைக்குக் கோபம், அழுகை எல்லாம் அந்த க்ஷணத்தோடு போய்விடுறது. அடுத்த க்ஷணம் சந்தோஷமாக விளையாட ஆரம்பித்துவிடும். அந்தமாதிரி நமக்கும் இருந்துவிட்டால் அதுதான் உண்மையான ஞானம். காமமோ கோபமோ அழுகையோ எல்லாம் நமக்கு மேலெழுந்தவாரியாகத்தான் இருக்க வேண்டும். வேர் ஊன்றிவிடக்கூடாது. அதுதான் அம்பாள் கிருபையை நாம் பெற்றிருக்கிறோம் என்பதற்கு அடையாளம். பகவான் கீதையில் சொல்கிறபோது,

Koviloor Digital Library

शक्नोतीहैव यः सोढुं प्राक् शरीरविमोक्षणात् ।
कामक्रोधोद्भवं वेगं स युक्तः स सुखी नरः ॥

ஶக்னோதீஹைவ ய: ஸோடும் ப்ராக் ஶரீரவிமோக்ஷணாத் ||
காமக்ரோதோத்பவம் வேகம் ஸ யுக்த: ஸ ஸுகீ நர: ||

என்று சொல்கிறார்.

மோக்ஷம் என்பது செத்துப் போன பிறகு வேறு எந்த லோகத்திற்கோ போய் அநுபவிப்பது என்பது அல்ல. கைகண்ட பலனாக இந்த லோகத்தில் இருக்கும்போதே நமக்குக் கிடைக்க வேண்டும். இப்போது கிடைத்தால்தான் அப்போதும் கிடைக்கும்.

இப்பொழுதெல்லாம் கஷ்டம், துக்கம் என்று அழுது கொண்டே இருந்துவிட்டு, செத்துப் போன பிறகு மோட்சம் என்பது கிடைக்கிறது என்றாலும் பிரயோஜனம் இல்லை.

சொல்ப காரணமாக இருந்தாலும் நாம் அழ ஆரம்பித்து விடுகிறோம். பயமும் அந்த மாதிரிதான் வருகிறது; சொல்ப காரணங்களினாலும் காமம் வந்துவிடுகிறது. பயம், காமம், சோகம் இவை எல்லாம் நமக்கு எவ்வளவு சீக்கிரம் வருகின்றனவோ அவ்வளவு சீக்கிரம் நம்மிலேயே இன்னும் சிலருக்கு உண்டாவதில்லை. நம்மைக் காட்டிலும், 'எது வந்தாலும் வரட்டும்' என்பதாகக் காமம். துக்கம், பயம் இவற்றை எதிர்த்து நிற்கக்கூடிய சக்தி உடையவர்களாகச் சிலர் இருக்கிறார்கள்; ஆனால் இன்னும் கொஞ்சம் அதிகமானால் அவர்கள் உள்ளமும் காமத்திற்கு, கோபத்திற்கு, துக்கத்திற்கு அசைந்து கொடுத்து விடுகிறது. ஆனால் ஞானிகளுடைய உள்ளம் கொஞ்சங்கூட எது வந்தாலும் அசைந்து கொடுப்பதில்லை.

பயம், சோகம், காமம், அழுகை ஆகிய இந்த நான்கையும் மரணத்திற்கு முக்கிய காரணமாகச் சொல்லலாம். காமக் குரோதாதிகளை ஆறு பகையாகச் சொல்வது உண்டு. இவற்றைத்தான் அறுபகை என்கிறோம். அநுபவத்தில் பயம், சோகம், காமம், அழுகை ஆகிய இந்த நான்கையும் ஜயித்துவிட்டாலே போதும். அதுதான் மோட்சம். ஒருவனுடைய ஆயுட்காலத்தில் பால்யம் முதல் இந் நான்கும் ஏற்படாமலிருந்தால் அவன் சிரஞ்சீவியாகவே இருப்பான். எவ்வளவு மழை பெய்தாலும் கொஞ்சங்கூட ஜலம் சொட்டாமல் இருக்கிற குடைத்துணிக்கு வாட்டர் புரூப் என்று பெயர். காம ப்ரூப், க்ரோத ப்ரூப், சோக ப்ரூப், ஆக நாம் ஆகிவிட்டால் அதுதான் முக்தி, அதுதான் மோட்சம். அது செத்துப்போன பிறகு வேறு எங்கேயோ நாம் போகப்

Koviloor Digital Library

போகிறோம், அங்கே வருகிறது என்பது இல்லை. இந்த லோகத்திலேயே நாம் ஒவ்வொரு நாளும் அப்படிப்பட்ட மனநிலை நமக்கு வந்துவிட்டதா என்று சோதித்துப் பார்க்க வேண்டும். இந்த லோகந்தான் அதற்கு உறைகல். நாம் எல்லாம் குழந்தைகளைப் போல முதலில் ஆகவேண்டும். அதாவது எவ்வளவு பயம், துக்கம் போன்றவை வந்தாலும் அவை நம் மனத்தில் வேர் ஊன்றுதவாறு செய்துவிட வேண்டும். இந்தப் பக்குவம் இன்னும் கொஞ்சம் முற்றும்போது சாக்ஷாத் தட்சிணாமூர்த்தி மாதிரியாக இருந்துவிடுவோம்.

மோக்ஷம் என்றால் என்ன என்று புருஷஸூக்தம்,- வேதம்- சொல்கிறபோது, 'அம்ருதனாக இருப்பதுதான்' என்று சொல்கிறது. அழுகொண்டே உயிரை விடுவதற்கு மரணம் என்று பெயர். துக்கப்படாமல், அழாமல் உடம்பைவிட்டுப் போவதற்கு மோட்சம் என்று பெயர்.

துக்கம் வேறு. வலி வேறு. உடம்பில் வலி இருக்கலாம். மிக அதிகமான வலி இருக்கக்கூடியவர்கள்கூட சில சமயங்களில் வலியே இல்லாதவர்களைப்போல 'உம்' என்று முக்குவதோடு நின்றுவிடுகிறார்கள். வலி ரொம்பக் குறைச்சலாக இருக்கக்கூடியவர்கள், 'ஐயோ, அப்பா!' என்று ரொம்பப் பெரிதாக அழுவதையும் பார்க்கிறோம். வலியே இல்லாமல் இருப்பது என்பது நம்மால் முடியக்கூடிய காரியம் அல்ல. எத்தனை வலி இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல், அழாமல் இருப்பது என்பது நமக்குச் சாத்தியம். ஆகவே அழுதுகொண்டே உயிரை விடுவதை மரணம் என்றும், துக்கமே இல்லாமல் அழுகையே இல்லாமல் கொஞ்சங்கூடச் சோகமே இலலாமல் உடலைவிட்டுப் பிரிவதை மோட்சம் என்றும் சொல்வர். இந்த மாதிரியான நிலைமைக்குத்தான் அம்ருதம் என்று பெயர். இந்த மாதிரி இருக்கும்படியான அம்ருதத்தை இஹஇவ - இங்கேயே - பெற்றுவிட வேண்டும், அதற்கு என்ன வழி என்றால் நாம் முதலில் குழந்தைகள் ஆக வேண்டும். குழந்தையே தெய்வமாகிவிடவேண்டும். நாம் சதா எதனோடு பழகுகிறோமோ அதுவாகவே மாறிவிடுவோம். அதனால்தான் பெரிய மஹரிஷிகள் எல்லாம் சாக்ஷாத் அம்பாளையே, 'அம்மா, நீ எனக்குக் குழந்தையாக வரவேண்டும். நான் உன்னை எடுத்து வளர்த்து லாலனம் பண்ணித் திரும்பவும் ஈச்வரனிடத்திலேயே அர்ப்பணம் செய்ய வேண்டும்' என்பதாகப் பிரார்த்தித்துக்கொண்டார்கள்.

வெறும் குழந்தையே முக்கால் பகவானாக இருக்கிறது. வாஸ்தவத்தில் பகவானே குழந்தையாக வந்துவிட்டால் அந்தக் குழந்தையை எடுத்து வளர்த்து லாலனம் பண்ணிச் சீராட்டிக்

Koviloor Digital Library

கொண்டிருக்கும்படியான பாக்கியம் பெற்றவர்கள் குழந்தைகளாகவே ஆகிவிடுவார்கள். காமக் குரோதாதிகளினுல் அவர்கள் மனம் கொஞ்சங்கூட அலைப்புருது. காத்யாயன மகரிஷிக்கும் ப்ருகு மகரிஷிக்கும் அப்பேர்ப்பட்ட பாக்கியம் கிடைத்தது.

वालोन्मत्तपिशाचवत्

பாலோங்மத்தப் பிஸாசவத்

நீ வயசுவந்தவனுக இருக்கிறபோது பாலனுக இருக்க வேண்டும். குழந்தையாகப் போனவுடன் சாமியாகப் போக வேண்டும் என்று உபநிஷத்திலே சொல்லியிருக்கிறது. குழந்தையாக இருக்கிறபோது காமம் தோன்றுவதில்லை. பயம், சோகம், குரோதம் எல்லாம் இருக்கும். ஆனல் வேர் ஊன்ருமல் மேலெழுந்தவாரியாகத்தான் இருக்கும். அந்த மாதிரி நம்முடைய மனநிலை முதலில் மாறியாக வேண்டும். அப்புறம் அந்த நான்கும் இல்லாமலேயே போய்விட வேண்டும். இந்த மனநிலை நமக்கு இங்கேயே உண்டாகிவிட வேண்டும். எவ்வளவு துக்கம் வந்தாலும், கஷ்டம் வந்தாலும் சாச்வதமான ஆனந்த நிலையில் எப்போதும் இருந்துகொண் டிருக்கும்படியான அம்ருதத்வம் வருவதுதான் மோட்சம் என்று உபநிஷத்துக்களில் சொல்லியிருக்கிறது. கீதையிலும் அதைத்தான் பகவான் சொல்கிருர்.

शक्नोतीहैव यः सोढुं प्राक् शरीरविमोक्षणात् ।
कामक्रोधोद्भवं वेगं स युक्तः स सुखी नरः ॥

ஶக்னோதீஹைவ யஃ ஸோடும் ப்ராக் ஶரீரவிமோக்ஷணத் |
காமக்ரோதோத்பவம் வேகம் ஸ யுக்தஸ் ஸ ஸுகீ நரஃ ||

அத்ய என்ருல் இப்பொழுதே என்று அர்த்தம். இஹ ஏவ என்ருல் 'இங்கிருக்கும்போதே, இங்கேயே என்று அர்த்தம். இஹ ஏவ-இங்கிருக்கும்போதே. யஹ-எவன், சக்னோதி-வலிமை பெற்றவனே-எவனுக்கு முடிகிறதோ? எந்த விஷயத்தில் வலிமை பெற்றவனுக இருக்கவேண்டும்?

कामक्रोधोद्भवं वेगं सोढुं शक्नोति ।

காமக்ரோதோத்பவம் வேகம் ஸோடும் ஶக்னோதி |

காமம், குரோதம் இந்த இரண்டினுக்குள் பயம், சோகம் எல்லாம் சேர்ந்திருக்கிறது? காமம், குரோதம் இவற்றினுடைய வேகம் இருக்கிறதே அதை அடக்குவது சாமான்யமாக முடியாது. அவற்றின் வேகம் நம்மை இழுத்துக்கொண்டே போய்விடும். நிரம்ப வேகமாகப் போகிற ரயிலின் பக்கத்தில் போய் நின்ருல்

Koviloor Digital Library

அதன் வேகம் நம்மை இழுத்துக்கொள்வதுபோலத்தான் இதுவும். காமம், கோபம் இவற்றை அடக்கவேண்டும், அடக்கவேண்டும் என்று நாம் எவ்வளவு நினைத்தாலும் நம்மை அறியாமல் நமக்குள் ஒரு வேகம் வந்துவிடுகிறது. நம் விருப்பம் இல்லாமலேயே அந்த வேகம் நம்மை அந்த வழியே இழுத்துக்கொண்டும் போய்விடுகிறது.

எவன் காமம், குரோதம் இவற்றினால் எழும் வேகத்தை, மனக்கிளர்ச்சியை, ஸோடும்-தாங்குவதற்கு - அப்படியே ப்ரேக் போட்டு நிறுத்துவதற்கு-சக்னோதி-வலிமை பெற்றவனோ. அவன் தான் சுகீநர:—சுகபுருஷன் என்று சொல்கிறார். அவனைத்தான் யோகயுக்தன், யோகயுக்தாத்மா என்றெல்லாம் சொல்வது. துக்கம், பயம் இவை இருந்தால் சுகம் இல்லை. காமம் குரோதம் இரண்டுக்கும் ப்ரேக் போட முடிந்தால் அவனுக்குத் துக்கம் கிடையாது, சோகம் கிடையாது. அதன் பலன் சுகம்தான். அதனால்தான் அவனை சுகீநர: என்று பகவான் சொல்கிறார். இஹைவ என்றால் இங்கேயே என்று சொன்னேன். இங்கேயே என்றால் என்ன அர்த்தம் என்பதற்கு அவருடைய வாக்கியத்திலேயே

प्राक् शरीरविमोक्षणात्

ப்ராக் சரீரவிமோக்ஷணாத்

என்று வருகிறது. இந்தச் சரீரம் நம்மை விடுவதற்கு முந்தி, இந்தச் சரீரத்திற்குள் நாம் இருக்கிறபோதே,- அதாவது இந்த லோகத்தில் உயிருடன் இருக்கிற காலத்திலேயே காமக்ரோதங்களினால் உண்டாகிற வேகத்தைத் தாங்குவதற்கு, - ப்ரேக் போட்டு நிறுத்துவதற்கு - வலிமை உடையவர்களாக நாம் ஆக வேண்டும். குழந்தைக்குக் கோபம் வருகிறபோது, அழுகை வருகிறபோது எப்படி இருக்கிறதோ அப்படி இருக்க முதலில் பழகவேண்டும். கிருஷ்ண பகவானுக்கு உண்டான காமம், கோபம் எல்லாம் எப்படி அவருக்கு ஒரு விளையாட்டாகவே இருந்தனவோ அந்த மாதிரியாகவே நமக்கும் இருக்கவேண்டும். நம்முடைய மனநிலை ஒரு குழந்தையுடையது போல ஆவதற்கு நாம் ஸ்வாமியைக் குழந்தையாகவே பாவித்துப் போற்ற வேண்டும், எந்த மாதிரியாக நாம் ஆகவேண்டும் என்று நினைக்கிறோமோ அந்த மாதிரியாகவே தெய்வத்தைப் பாவிக்க வேண்டும்.

இந்த லோகத்திலே அப்படிப்பட்ட மனநிலை வராது; செத்தபிறகு வைகுண்டத்திலோ கைலாசத்திலோ நமக்குக் கிடைக்கப் போகிறது என்பதாக நினைப்பது தப்பு. லோகம் என்று வந்தால் சுகமோ துக்கமோதான் இருக்கும். ரொம்பப்

Koviloor Digital Library

புண்ணியம் பண்ணிவிட்டு வைகுண்டத்திற்கே போனாலும் புண்ணியம் கரைந்தவுடன் திரும்பவும் எந்தச் சாபத்தையாவது வாங்கிக்கொண்டு இந்த லோகத்திற்குத்தான் வந்துவிடும்படி ஆகும். இந்த லோகத்திலேயே சாக்ஷாத் அம்பாளை, சாக்ஷாத் பகவானை, குழந்தையாகப் பாவித்து நம்முடைய மனநிலையைக் கோபம், காமம், துக்கம் இவற்றினால் பாதிக்கப்படாததாக வைத்துக்கொள்ளவேண்டும். அப்புறம் அவர்களே ஆகிவிட வேண்டும் என்பதன் தாத்பர்யம்தான் காத்யாயனி என்ற பதத்திற்கும், பார்க்கவி என்கிற பதத்திற்கும் என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். அம்பாளைக் குழந்தையாக வைத்து வழிபட்டால் முதலில் நாமும் குழந்தையாகிறோம். அப்புறம் அந்தச் சாக்ஷாத்காரமாகவே ஆகிவிடுகிறோம். அதற்குத்தான் அம்ருதம் என்று பெயர். அந்த நிலை நமக்குச் சாக்ஷாத் அம்பாளுடைய அருளினால் கிடைப்பதால், 'அவள் நமக்குத் தேவாம்ருதம் கொடுக்கிறாள்' என்று சொல்வதன் தாத்பர்யமும் அது தான். நல்ல ஞானந்தான் அம்ருதம். சாமான்யத் தாய்மார்கள் உடலுக்குப் புஷ்டி அளிக்கிற பாலைக் கொடுக்கிறார்கள். அம்பாளுக்கு ஸ்ரீமாதா என்று ஒரு பெயர். மஹாலக்ஷ்மிக்கு லோகமாதா, லோகஜனனி என்று பெயர். இவர்கள் ஆத்மாவுக்குப் புஷ்டியான ஞானப்பாலைக் கொடுக்கிறார்கள். அம்பாளுக்குச் சர்வமங்களா, என்று பெயர். லக்ஷ்மிக்கு மங்கள தேவதா என்று பெயர். பார்வதியாக ஆவிர்ப்பவித்த அவசரத்திலே சொல்கிறபோது

सर्वमङ्गलमाङ्गल्ये शिवे सर्वार्थसाधिके ।
शरण्ये त्र्यम्बके देवि नारायणि नमोऽस्तु ते ॥

ஸர்வமங்கலமாங்கல்யே ஶிவே ஸர்வார்த்தஸாதிகே |
ஶரண்யே த்ர்யம்பகே தேவி நாராயணி நமோஸ்து தே ||

என்று தேவிமாகாத்மியத்தில் முடிவில் த்ரயம்பகியாக சிவ ஸ்வரூபத்தோடு சேர்ந்த ஒரே ஸ்வரூபமாகச் சொல்லப்படுகிறது. அவளேதான் நாராயணி, சர்வமங்களா, மங்கள தேவதை என்றாலும் ஒன்றுதான். அவள்தான் குழந்தையாக இருந்துகொண்டு நமக்கு இருக்கும்படியான காமம், மோகம். பயம், சோகம், துக்கம் எல்லாவற்றையும் போக்கி நம்மையும் குழந்தையாகவே ஆகும்படி செய்து, முடிவில் எப்படிப்பட்ட பகை வந்தாலும் கொஞ்சங்கூட அசையாத மனம் உடையவர்களாச் செய்து, ஆனந்தமாக எப்போதும் இருக்கும்படியான அம்ருதத்தை நமக்குக் கொடுத்துச் சர்வ மங்களமாக, க்ஷேமமாக இருக்கும்படியாக அநுக்ரஹம் பண்ணுகிறாள்.

Koviloor Digital Library

இது சமத்காரமாகச் சொன்னது. அம்பாள் வேறு சிவன் வேறு அல்ல. சக்தி இல்லாவிட்டால் சிவன் இல்லை. சிவனோடு ஒன்றியிருக்கும் சக்தியின் அனுக்கிரகத்தினால்தான் ஜனன நிவர்த்தி ஏற்படுகிறது. மாதா பிதாவாகிய சிவசக்தி இரண்டு பேருடைய கடாக்ஷத்தினாலும் காமஜயம் பண்ணலாம், அம்பாளுடைய அநுக்கிரகத்தினால் காலஜயம் பண்ணலாம், ஜன்மத்தின் பலன் ஜனன நிவ்ருத்திதான்.

Koviloor Digital Library

12

இஷ்டம், பூர்த்தம்

இஷ்டம் பூர்த்தம் என்ற இரண்டு பதங்கள் உபநிஷத்துக்களிலேயும் தர்மநூல்களிலேயும் அடிக்கடி காதில் விழுகின்றன; பார்க்கிறோம். இஷ்டம் என்பதற்கு யக்ஞானுஷ்டானங்கள் என்று பெயர். அக்னி முகமாக ஹோம ஆஹுதிகள் செய்வதைத் தான் இஷ்டம் என்று சொல்வர்.

பூர்த்தம் என்கிறது கிணறு வெட்டுதல், குளம் வெட்டுதல், ரோடு போடுதல், மரம் நடுதல், நந்தவனம் விருத்தி பண்ணுதல், ஒரு கோயிலைக் கட்டுதல் இந்தமாதிரிக் காரியங்களுக்கெல்லாம் பெயர். இந்த இரண்டுக்கும் ஸம்ஸ்க்ருத பாஷைக்காக ஏற்பட்டிருக்கும் நிகண்டான அமரத்தில்

த்ரிஷ்வத க்ரதுகர்மேஷ்டம் பூர்த்தம் காதாதீகர்மயத்

என்று சொல்லப்படுகிறது.

காதம் என்பதற்கு வெட்டுவது என்று அர்த்தம். இந்தப் பூர்த்த தர்மம் என்கிறது பெரிய தர்மம். எல்லாரும் சேர்ந்து செய்யக்கூடிய தர்மம். இஷ்டம் என்பது பல யக்ஞாதிகள் பண்ண வேண்டி இருப்பதால் பத்து வருஷம், இருபது வருஷம் கஷ்டந்த அத்யயனம் பண்ணி, ஆசாரசீலர்களாக இருந்துகொண்டு, சாஸ்திர ஞானம் பூர்ணமாக நிறைந்திருக்கும்படியான ச்ரௌதிகளால்தான் செய்வதற்கு முடியும். சிறு தவறுகள் ஏற்பட்டாலுங்கூட ஆபத்துக்கள் உண்டாகிவிடும். அநேக பாபங்கள் சம்பவித்துவிடும். வெகு ஜாக்ரதையாக இருந்துகொண்டு இஷ்டம் செய்யவேண்டும். உடம்பைச் சொறியக்கூடக் கூடாது. அரித்தால் மான் கொம்பை வைத்துக்கொண்டு சொரியவேண்டும். அழுந்தச் சொறிந்தால் ரத்தம் வந்துவிடும். இப்படி

Koviloor Digital Library

அநேக நியமங்களோடு இருந்தாக வேண்டும். பாமர மக்கள் முதற்கொண்டு, அதிகம் படித்த சாஸ்திரிகள் வரையில், ஏழை, பணக்காரன், உயர் ஜாதிக்காரன், கீழ்ஜாதிக்காரன் என்கிற பேதம் கொஞ்சங்கூட இல்லாமல் சர்வஜனங்களும் சேர்ந்து பண்ணவேண்டிய தர்மம் பூர்த்தம் என்பதுதான். இதற்கு

காதாதிகர்மயத்

என்று நிகண்டுவில் சொல்லப்படுகிறது. காதம் முதலியன' என்று சொல்வதில் இருந்தே வெட்டுவது என்பதில் அநேகம் சேர்ந்து விடும்.

யாரையாவது பார்த்து, 'அவனைக் கூட்டிக்கொண்டு வா' என்று அனுப்பி வைக்கிறோம். அவன் திரும்பி வந்து, 'அவன் கொஞ்சம் வேலையாய் இருக்கானும்; சற்று நேரம் கழித்து வருகிறேன் என்றான்' எனச் சொன்னால் உடனே, ''அவன் அங்கே வெட்டுகிறானோ?'' என்று கேட்கிறோம். வெட்டுவது என்பது பெரிய காரியம். அதைச் செய்துகொண் டிருந்தால் அவனைக் கூப்பிடக்கூடாது. வெட்டவில்லை என்றால் அவன் கூப்பிட்டவுடன் வருவதற்கு என்ன? என்கிற அர்த்தத்தில் அப் படிச் சொல்கிறோம்.

அந்தக் காலத்தில் இப்படி-குளம் வெட்டினாலும், வாய்க் கால் வெட்டினாலும், வரப்பு வெட்டினாலும், பெரிய கிணறு வெட்டினாலும்-வெட்டுவது என்பதை ஒரு பெரிய காரியமாக வைத்துக்கொண் டிருந்திருக்கிறார்கள். இப்போது வெட்டுகிற காரியத்தை நிறுத்திவிட்டோம். பள்ளமாக இருப்பதைத் தூர்ப்பதுதான் இப்போது முக்கியமான காரியமாக இருக்கிறது. சில சமயங்களில் குழாயில் தண்ணீர் வராமல் போய்விட்டால்—ஒரே அசுத்தமாகப் புழுபூச்சியோடு வந்தால்—'ஏண்டா குளத் தைத் தூர்த்துவிட்டோம், கிணற்றை மூடிவிட்டோம்?' என்று கூடத் தோன்றுகிறது. கிணறு வெட்டுகிறது, குளம் வெட்டு கிறது இவைகளைத்தான் பழைய காலங்களில் பெரிய தர்மமாக வைத்துக்கொண் டிருந்தார்கள்.

நல்ல வளப்பமான நம்முடைய தேசத்திலே கோயில் கட்டு வது பெரிய தர்மமாக மதிக்கப்பட்டு வந்திருக்கிறது. அந்தக் கோயில்களில் எல்லாம் நிறைய யார் யார் அந்தத் தர்மத்தைச் செய்வதற்குக் காரணமாக இருந்தார்கள் என்கிற கல்வெட்டுகள் இருக்கின்றன. ராஜபுதனம் எல்லாம் இப்போது ராஜஸ்தானோடு சேர்ந்திருக்கிறது. ராஜஸ்தானுக்கு மார்வார் என்று பெயர். மருவாதி என்றும் சொல்வர்; மரு என்றால் பாலைவனம் (Desert) ஜலம் இல்லாத பிரதேசம் - மருவாதி. அங்கேயுள்ளவர்களுக்கு மார்வாரி என்று பெயர்.

Koviloor Digital Library

எந்த இடத்தில் தண்ணீர் அகப்படாதோ அந்த இடத்தில் உள்ளவர்கள் பெரிய பணக்காரர்கள் ஆகிவிடுகிறுர்கள். தண்ணீர் நிறையக் கிடைக்கிற இடத்தில் உள்ளவர்கள் அநேகமாக ஏழைகளாகத்தான் இருப்பார்கள். அதற்குக் காரணம் என்னவென்ருல் நிறைய ஏரி, குளம், கால்வாய் எல்லாம் இருந்து, வளமான பூமியாகவும் இருந்து சாகுபடி செய்கிற சிரமம் குறைவாய் உள்ள இடத்தில் உள்ளவர்கள் ஏதோ சில நாள் வேலை செய்கிறுர்கள். தானியங்களை உற்பத்தி பண்ணி அதைச் சாப்பிட்டுக்கொண்டு சுகமாகப் பல நாள் எந்த வேலையும் செய்யாமல் இருக்கிறுர்கள். ஜலம் இல்லாமல் இருக்கிற இடத்திலே உள்ளவர்களுக்கு ஆகாரத்திற்காகச் சொந்த ஊரிலே ஒன்றையும் விளைவிக்க முடியாமல் இருப்பதால் வெளியூர்கள் எல்லாம் சுற்றவேண்டி யிருக்கிறது. வெளியூர்களுக்குப் பிழைப்பை நாடிப் போவதனுல் ராத்திரி, பகல் என்றுகூடப் பார்க்காமல் உழைக்கிறுர்கள். அவர்கள் கடுமையான உழைப்பாளிகளாக இருப்பதற்குக் காரணமே அவர்களுடைய ஊர் மணல்காடாக இருப்பதுதான். அதனுல்தான் வெளியூர்களுக்குப் போய்க் கடுமையாக உழைத்து, வியாபாரம் செய்து இவர்கள் மிச்சப்படுத்துகிற பணம், நல்ல வளப்பமான ஊரிலே—ஜலவசதி உடைய பிராந்தியங்களிலேயே - உள்ளவர்கள் மிச்சப்படுத்துவதைவிட அதிகமாக இருக்கிறது.

ராஜபுதனத்தில் ஏழு எட்டு மைல்களுக்கு ஓர் இடத்தில்தான் கிணறு இருக்கும். அந்தக் கிணற்றிலும் தண்ணீருக்கு ரொம்ப தூரம் - பாதாளத்திற்குப் - போகவேண்டும். ஒரு கிணற்றுக்கு இரண்டு லக்ஷம், மூன்று லக்ஷம் செலவழிக்கவேண்டும். அந்தக் கிணற்றுக் கட்டைகளில் நிறைய ஸம்ஸ்கிருதக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இன்னுர் வெட்டினுர், இன்ன அரசன் காலத்தில் வெட்டப்பட்டது, அவன் பெருமை-இவை எல்லாம் அந்தக் கல்வெட்டுக்களில் இருக்கின்றன. நம் ஊர்க் கோயில்களில் இருக்கிற மாதிரிதான்.

ஆகையால் கிணறுவெட்டுவதையும் கோவில் கட்டுவதையும் பெரிய தர்மமாகவே மார்வாரிகள் வைத்துக்கொண் டிருக்கிறுர்கள் என்று தெரிகிறது.

ஒரு குளம் என்ருல் பாய்கால்கள், வடிகால்கள், என்றெல்லாம் வைத்துக்கொண்டு அதை வெகு சுத்தமாக வைத்துக்கொள்வார்கள். வாயில்லாப் பிராணிகள்-காக்காய் குருவி முதற்கொண்டு-சகல ஜீவராசிகளுக்கும் அந்தக் குளம் பயன்படும். கிணறு என்ருல் இழுக்கிறவனுக்குத்தான் அது பயன்

Koviloor Digital Library

படும். சகல ஜீவன்களுக்கும் பயன்படும்படியான தர்மம் குளம் வெட்டுவதுதான்.

இதேமாதிரியாகப் பாதை போடுவதும் ஒரு தர்மம்தான். நந்தவனங்களில் விருக்ஷம் வைப்பது, புஷ்பச் செடிகளுக்குத் தண்ணீர் விடுவது இவைகள் எல்லாம் தர்மம்தான். புதிதாக வைப்பதைவிட, இருக்கும் விருக்ஷங்களுக்கு நீர் வார்ப்பது வெகு விசேஷமானது.

மனசைச் சுத்தம் பண்ணிக்கொள்ளத் தியானம் செய்கிறோம். நாமாவைச் சொல்லி நாக்கைச் சுத்தப்படுத்திக்கொள்கிறோம். விஷயத்தை அறிய மூளை இருக்கிறது. அதனால் தத்துவத்தை ஆராய வேண்டியதுதான். சரீரம் இருக்கிறதோ அல்லவோ? சரீர சுத்திக்குச் சரீரத்தினாலே செய்யும்படியான பிரயாசை அவசியம் வேண்டும். சரீரத்தினாலே செய்யும்படியான பொதுக்காரியங்கள்தாம் பூர்த்த தர்மங்கள்.

தயை என்பது ஒவ்வொருவர் மனத்திலும் இருக்க வேண்டிய ஓர் உயர்ந்த குணம். அந்தத் தயைக்கு உருக் கொடுக்கும்படியான ஒரு காரியத்தைச் சரீரத்தினாலும் அவசியம் செய்ய வேண்டும்.

அங்கங்கே நான்கு கிராமங்களை ஒன்றாகச் - ஒரு தொகுதி ஆகச் - சேர்த்துக்கொள்ளலாம்.

இந்த நான்கு கிராமத்தவர்களும் சேர்ந்துகொண்டு-வரிசையாக ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு குளத்தை வெட்டலாம். இருக்கிற குளத்தையும் சுத்தப்படுத்தலாம். இது தீர்த்த தர்மம். கோடீச்வரனாக இருந்தாலும் கிராமப் பொதுக்குளம் வெட்டுகிறபோது எல்லா ஜனங்களோடும் சேர்ந்துகொண்டு அவனும் ஒருவனாகத்தான், மண் வெட்டிக் கொண்டுவந்து போடவேண்டும். சாஸ்திரங்களில் அப்படித்தான் எழுதியிருக்கிறது. அஸ்திவாரக் கல் நாட்டிவிட்டு வந்துவிடுவது, டேப் வெட்டுவது போன்ற காரியங்கள் கிடையாது, ரதோத்ஸவத்திலே எல்லா ஜாதிக்காரர்களும் ஒன்றாகச் சேர்ந்து வடம் பிடித்து இழுப்பது போலத்தான் இதுவும்.

ஸ்ரீவினோபாஜிகூடச் 'சிரமதானம்' செய்யவேண்டும் என்பதாகச் சொல்லி வருகிறாரே, அதுதான் பூர்த்தம் என்று நம்முடைய சாஸ்திரங்களிலேயே சொல்லப்படுகிறது.

நாம் இருக்கிற இடம் முழுக்கச் சிமென்ட் போட்டிருக்கிறது. அநேக குடும்பங்கள், ஃபிளாட்டி (flat) லேயே ஜன்மம் முழுக்கக் காலம் தள்ளியாகிறது. சரீரத்தினாலே ஒரு கைங்கர்யமும் செய்வதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கிறது.

Koviloor Digital Library

வாரத்திற்கு ஒரு நாளாவது விடுமுறை அநேகமாக இருக்கிறது. கோர்ட்டு, பள்ளிக்கூடம் முதலியவற்றில் உள்ளவர்களுக்கு சனி ஞாயிறு இரண்டுநாள் கிடைக்கும். இந்த விடுமுறைகளிலும் குடும்பக் காரியங்கள் இருக்கும். இருந்தாலுங்கூடச் சரீரத்தினுலே கொஞ்ச நேரமாவது அன்றைக்கு ஒரு கைங்கர்யம் -சந்தர்ப்பத்திற்கு ஏற்ருற்போல் - செய்ய வேண்டும். இது உடம்புக்கும் ஓர் அப்பியாசமாக இருக்கும்.

எனக்குத் தெரிந்து எண்பது வயது, எண்பத்தைந்து வயது ஆன ஒரு பிராம்மணன் காலையில் எழுந்திருந்து பூஜை ஹோமம் எல்லாம் பண்ணிவிட்டுத் தென்னந் தோப்புக்குச் சென்று மண்வெட்டியைப் பிடித்து வெட்டுவார். அப்புறந்தான் மத்தியான்ன ஸ்னனம் பண்ணிவிட்டுக் கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு சாப்பிடுவார். இரண்டு தென்னமரம் உள்ள பூமியை வைத்துக்கொண்டு அப்படி உழைத்து நிறையப் பூமி வாங்கினுர். குழந்தைகளுக்கு நிறையச் செல்வத்தைத் தேடிவைத்தார். இருந்தாலும் எந்தத் தொழிலினுல் அவர் விருத்திக்கு வந்தாரோ அந்தத் தொழிலைச் சாகும் வரையில் விடக்கூடாது என்று செய்துகொண்டிருந்தார். அதேமாதிரியாக எல்லோரும் கொஞ்ச நேரமாவது மண்வெட்டியினுலே மண் வெட்டிப்போடுகிற தொழிலைச் சாஸ்திரப்படியே செய்யவேண்டும். சொந்தத் தோட்டத்திலே வேலை செய்வதைவிட விசேஷமானது கோயில் தோட்டத்தில், நந்தவனத்தில் கொஞ்சநேரமாவது வேலை செய்வது. அநேக கிராமங்களில் இந்தமாதிரியாகக் குளங்கள் வெட்டியிருக்கிருர்கள்.

காதாதி

காதம் முதலிய காரியங்களைச் செய்வதுதான் பூர்த்தம்.

ஜயிலில் இருக்கிறவர்களுக்கு, ஆஸ்பத்திரியில் நீண்ட காலம் இருக்கும்படியான டி. பி. போன்ற நோயினுல் அவதிப்பட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு, மஹான்களுடைய புஸ்தகங்களை எல்லாம் அச்சிட்டு இலவசமாகப் படிக்கக்கொடுக்க வேண்டும். அவர்கள் அனுமதித்தால் அங்கேயே போய் மஹான்களுடைய சரித்திரங்கள், மத சம்பந்தமான விஷயங்கள் இவைகளைப் பற்றியெல்லாம் சொல்லலாம் என்பதாக அன்று சொன்னேன். புத்தியினுலே, பணத்தினுலே செய்யப்படவேண்டிய காரியங்கள் அவை.

சரீரத்திற்கு ஒரு சுத்தியை ஏற்படுத்தச் சரீரப் பிரயாசை உள்ள காரியங்களைச் செய்யவேண்டும் என்பதைத்தான் இன்று வற்புறுத்த வந்தேன். இதனுல் என்ன பயன் வரப்போகிறது என்று

Koviloor Digital Library

நினைக்கக்கூடாது. இந்த மாதிரியான கைங்கர்யங்களினாலே மனசிலுள்ள அகங்காரமாவது கரையும். ஒருவருக்கொருவர் உதவி புரிந்துகொள்வது என்கிற மனப்பான்மை வளரும்.

அன்றைக்கே சொன்னேன்: கல்யாணம் என்றால் அநேக குடும்பங்களுக்குப் பலவிதமான சிரமங்கள் உண்டாகின்றன. நமக்கு இரண்டு பெண்கள் இருக்கின்றனர். நமக்கு உள்ள ஒரு பிள்ளைக்காவது கொஞ்சம் வரதட்சிணை வாங்கினால் அதைக்கொண்டு ஒரு பெண்ணுக்காவது கல்யாணத்தைப் பண்ணலாம் என்று நினைக்கிறார்கள். கடைசியில் மிஞ்சுவது ஒன்றும் இல்லை. இதுபாட்டுக்குச் செலவாகிப்போகிறது. சில பேர் வரதட்சிணை வேண்டாம் என்றால் பிள்ளைக்கு என்னவோ ஏதோ என்று கதைகட்டிவிடப் போகிறார்களே என்பதற்காகவும், 'அந்தப் பிள்ளைக்கே இவ்வளவு வந்திருக்கும்போது, நம்ம பிள்ளை என்ன படிப்பில் குறைந்தவனா, கொஞ்சமாவது வாங்காவிட்டால் அவமானம் இல்லையா?' என்பது போன்ற நினைப்பினாலும், இந்த மாதிரி அநாவசியமான பல எண்ணங்களை வளர்த்துக்கொண்டு விட்டதனாலும் அநேக கஷ்டங்கள் வருகின்றன. நாலு பெண் பிறந்துவிட்டால், 'ஏதோ படிக்க வைத்துவிடுவோம். அவர்கள் இஷ்டப்படி மானம் போனாலும் சரி, கௌரவம் போனாலும் சரி, வேலைக்காவது போய்ப் பிழைத்துக்கொள்ளட்டும்' என்று நினைக்கும்படியான நிலைமை வளர்ந்துவிட்டது. பிள்ளையைப் பெற்றவர்கள் தங்களுக்குப் பெண்தான் பிறந்திருக்கிறது என்று நினைத்துக்கொள்ள வேண்டும்.

முன்பு பிள்ளைகள் அதிகமாகப் பிறந்தார்கள். அதனால் பெண்களுக்குக் கொண்டுபோய்ப் பணத்தைக் கொடுத்துக் கல்யாணம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். இப்பொழுது பெண்கள்தான் ஜாஸ்தி பிறக்கிறது. அதனால் பிள்ளைகளுக்கு வரதட்சிணை கொடுக்கிறது வளர்ந்துவிட்டது. கூடுமானவரைக்கும் இதை அடியோடு ஒழித்துவிடப் பிரயத்தனம் பண்ண வேண்டும். 'நல்ல பிள்ளை, படித்திருக்கிறான்' என்றால் பெண்ணைப் பெற்றவர்களுக்கும் தங்கள் பெண்ணை அந்தப் பிள்ளைக்குத்தான் கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம் வர வேண்டும். 'பெண் நல்ல குலத்தில் பிறந்தவளா, குணம் உடையவளா?' என்பதை மாத்திரம் பார்த்துக்கொண்டு, 'சரி: நீங்கள் செய்வதைச் செய்யுங்கள்' என்று பணத்தைப் பற்றிப் பேசாமல் பிள்ளையைப் பெற்றவர்களும் அந்தப் பெண்ணைத் தம் பிள்ளைக்குக் கல்யாணம் செய்துவைக்க முன்வரவேண்டும்.

இதேமாதிரிதான், கல்யாணத்திற்குப் போனால், போகிறவர்கள் தங்களால் முடிந்த அளவு ஐந்தோ, பத்தோ அவர்

Koviloor Digital Library

களுக்கு உதவி செய்யவேண்டும் என்கிற நினைப்பு வரவேண்டும். பந்துக்கள் என்று சண்டை போடுவதற்காகக் கல்யாணங்களுக்குப் போகவே கூடாது, இதனுல்தான், 'ஐயோ நம்ம பந்துக்கள் எல்லாம் வந்து தொல்லைகளைக் கொடுத்துவிடுகிருர்களே!' என்று பயந்துகொண்டு கோயில்களுக்குப் போய்க் கல்யாணத்தைப் பண்ணிக்கொண்டு வந்துவிடலாம் என்று ஓட ஆரம்பித்து விட்டார்கள்.

கணஸ்ய தாதா ஹீயேத கணுத்க்ருஹ்ணன் நஹீயதே |

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு கூட்டத்திலே வாங்குகிறவன் விருத்திக்கு வந்துவிடுவான். ஆனுல் ஒரு கூட்டத்திலே கொடுக்கிறது என்று ஆரம்பித்தால் ஒவ்வொருத்தருக்கும் ஒரு ரூபாய், அரை ரூபாய் கிடைக்கிறது என்ருலும் கொடுக்கிறவனுக்கு லக்ஷம் ரூபாய் செலவழிந்துவிடும். மங்கள காரியங்களாக இருந்தாலும், அபர காரியங்களாக இருந்தாலும் பத்துப் பேராகச் சேர்ந்து ஒருவனுக்குக் கொடுப்பது என்பது வரவேண்டும். ஒவ்வொருவரும் கொஞ்சம் கொஞ்சம் கொடுப்பதனுல் கொடுக்கிறவர்களுக்கு வெகு சிரமம் வந்துவிடப் போவதில்லை. வாங்கிக்கொள்கிறவனுக்குக் கஷ்டம் இல்லாமல் சந்தோஷமாக ஒரு காரியத்தைச் செய்ய முடியும். அதே மாதிரி அவன் இன்னெருவனுக்குக் கொடுப்பான். பந்துக்களுள் பணக்காரன், ஏழை என்கிற அகம்பாவமே இல்லாமல் போக வேண்டும். ஏழைகளுக்குத்தான் அதிகமான உதவியைப் பந்துக்களும் சரி, சிநேகிதர்களும் சரி செய்ய வேண்டும். 'பார்ட்டி, பீஸ்ட்' என்பது போல் வைப்பது எல்லாம் துவேஷம், வெறுப்பு போன்ற உணர்ச்சிகளையே உண்டாக்கிவிடுகின்றன. கொடுக்கிறவனும் ஒரு பார்ட்டி கொடுத்து எல்லாரையும் ஏமாற்றிவிடுவதுபோல் நினைக்கிருன். சாப்பிட்டவர்களும், சாப்பிட்டுவிட்டு அவனை ஏமாற்றிவிட்டது போல் நினைக்கிருர்கள். இவை பொதுவாக ஏமாற்றுவித்தையாகவே ஆகிவிடுகின்றன. சித்தசுத்திக்குப் பயன்படவில்லை.

இவை எல்லாம் சின்னச் சின்ன விஷயங்கள். நம்முடைய பெரியவர்கள் எப்படிச் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள் என்பதைப் பார்த்து அவர்கள் நடந்துகொண்ட மாதிரியாக நடந்தால் போதும். புதிதாக ஒரு கொள்கையும் வேண்டியதில்லை.

வனமகோற்சவம் என்று செய்கிருர்கள். அதிகாரிகள் வந்து செடிகளை நட்டுவிட்டுப் போகிருர்கள். மறு நாளைக்கு அதற்குத் தண்ணீர் விடுகிறவர்கள் யார்? அப்படியே பட்டுப் போகின்றன.

Koviloor Digital Library

இதுமாதிரி 'டெமான்ஸ்ட்ரேஷன்' பண்ணுவதனால் வெளி வேஷத்தால் எல்லாம் பிரயோஜனமே இல்லை.

ஒவ்வொருத்தரும் - பிறருக்குக்கூடத் தெரிய வேண்டாம் - இந்தப் பட்டணத்திற்கு வெளியே உள்ள ஓர் இடத்திற்குப் போய் ஒற்றையடிப்பாதையில் உள்ள முள்ளை, கண்ணாடியை எடுத்து வந்தால்கூட ஆத்மார்த்தமாகச் சித்தசுத்திக்குப் பயன் பட்டுவிடும்.

எல்லோரும் சேர்ந்து ஓர் இடத்தில் கிணறு வெட்டுகிறோம். வெட்டுவதனாலே அகம்பாவம் கரையும். அதில் தண்ணீர் வருவதைக்காட்டிலும் நம் நெஞ்சிலே கொஞ்சம் ஈரம் வருகிறதே அது போதும். இது பரமாத்ம ஸ்வரூபத்தை உணர்ந்துகொள்ளப் பயன்படும். பகவானிடத்தில் பக்தி வரவேண்டும். அவனுடைய அநுக்கிரகம் கிடைக்கவேண்டும் என்றால் எப்படி வரும்? நல்ல குணங்கள் உண்டாகி உண்டாகிச் சித்த சுத்தி ஏற்படும்போது தான், நல்ல காரியங்களைச் செய்து மனசு பக்குவப்படும்போது தான் ஈச்வரானுக்கிரகமும் கிடைக்கிறது.

நம்மிடத்தில் இருக்கும்படியான எல்லாச் சக்திகளையும் ஈச்வரன்தான் கொடுத்தான். அந்தச் சக்திகளை ஈச்வரனுக்கே தான் அர்ப்பணிக்க வேண்டும் என்கிற நினைப்போடு ஆடம்பரம் இல்லாமல் நாவினாலே அவன் நாமாவைச் சொல்வது, மனசினாலே தியானம் பண்ணுவது, சரீரத்தினாலே கொஞ்சநேரமாவது வெட்டி, கொத்தி வேலை செய்வது - அதுவும் ஈச்வர கைங்கர்யமாகவே வைத்துக்கொள்வது - இதுதான் நம்முடைய பெரியவர்கள் போன வழி. சாஸ்திரத்தை அனுசரித்த மார்க்கந்தான் அது. புதிதாக ஒரு தனி வழியில் நாம் போக வேண்டும் என்கிற அவசியமே இல்லை. அந்த வழியிலேயே நாமும் போனால் சகல ஸ்ரேயஸுகளும் உண்டாகும். நம; பார்வதி பதயே!

Koviloor Digital Library

13

திருவெம்பாவை திருப்பாவை

நமது தேசத்திற்குக் கிழக்கே கீழ்ப்பாகத்தில் ஸயாம் என்ற ஒரு தேசம் இருக்கிறது. அதையொட்டிக் கம்போடியா என்ற தேசம் இருக்கிறது; ஜாக்ரபி வாசித்தவர்களுக்கு இது தெரிந்திருக்கும். அந்தக் கம்போடியாவிற்குப் பழைய நாளில் காம்புஜம், காம்போஜம் என்ற இரண்டு பெயர்கள் இருந்துவந்தன என்று சரித்திரப் புத்தகங்களில் எழுதப்பட்டிருக்கிறது. அந்தத் தேசத்தில் அனேக இடங்கள் இப்போது காடுகளாக இருக்கின்றன. அந்தக் காடுகளில் சில இடங்களில் விஷ்ணு ஆலயங்களும் சிவாலயங்களும் நிறைய இருக்கின்றன. அவைகளில் அனேகம் ஜீர்ணமாகி இன்னதென்ற ஸ்வரூபமே தெரியாமல் இருக்கின்றன, அந்த ஆலயங்களின் சுவரில் மாத்திரம் சில விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. நம் ஊர்களிலுள்ள இடிந்த கோயில்களிலும் இடியாத கோவில்களிலும் உள்ள சுவரில் எழுதப்பட்டிருப்பது போல் அந்தக் கோவில்களின் சுவர்களிலும் எழுதப்பட்டிருக்கின்றன. அந்தத் தேசம் சமீப காலம் வரையில் பிரெஞ்சுத் தேசத்தைச் சேர்ந்திருந்தது; சிரத்தையுள்ள பிரெஞ்சுத் தேசக் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்கள் அவைகளைப் பரிசீலனை செய்திருக்கிறார்கள். அந்தக் காடுகளில் 800 சிலாசாசனங்கள் ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. நம் நாட்டில், ஸம்ஸ்கிருதத்தில் அனேக கல்வெட்டுக்கள் இருக்கின்றன; தமிழிலும் தெலுங்கிலும் கன்னடத்திலுங்கூடக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. ஆனால் ஸம்ஸ்கிருதத்தில்தான் நிறைய இருக்கின்றன.

வடநாட்டில் இருக்கும்படியான பாஷைகளில் குஜராத்தியில் கல்வெட்டுக் கிடையாது. வடநாட்டுக் கல்வெட்டு ஸம்ஸ்

Koviloor Digital Library

கிருதத்தில் இருக்கும். வெகு பழசாக இருப்பது பிராகிருதத்திலே இருக்கும். 1,000 - 1,500 வருஷங்களுக்கு முந்திய கல்வெட்டுக்கள் ப்ராக்ருத பாஷையில் இருக்கும். தென்னுட்டில் கன்னடம், தெலுங்கு, தமிழ், மலையாளம் முதலிய பாஷைகளில் கல்வெட்டுக்கள் இருக்கின்றன; மலையாளத்தில் அதிகமாக இல்லை; ஸம்ஸ்கிருதத்தில் நிறைய இருக்கின்றன.

கம்போடியாவிலுள்ள ஸம்ஸ்கிருதக் கல்வெட்டுகளுக்கு ஈடாக நம் நாட்டில் ஸம்ஸ்கிருதக் கல்வெட்டுக்கள் இல்லை; அங்குள்ள கல்வெட்டுக்சளிலுள்ள வாக்கியங்களும் பதங்களும் தாத்பர்யங்களும் இங்குள்ள கல்வெட்டுக்களில் உள்ளவைகளைவிட உயர்ந்தவைகளாக இருக்கின்றன. அங்கே சிவாலயங்கள்தான் நிறைய இருக்கின்றன. அவைகளில் கல்வெட்டுக்கள் நிறைய இருக்கின்றன. ஸயாம் தேசத்தில் மாத்திரம் ஒரு தமிழ்க் கல்வெட்டுக் கிடைத்திருக்கிறது. அந்தக் காலத்தில் மக்கள் கடல் கடந்து வாணிபம் செய்து வந்ததால், சில தேசங்களில் பிறதேச பாஷையில் கல்வெட்டுக்கள் அமைக்கப்பட்டன. நம் தேசத்தில் நகரத்தார் எனப்படுபவர்கள் இருக்கிருர்கள். நாட்டுக்கோட்டை நகரத்தாரைப்பற்றி மாத்திரந்தான் நமக்குத் தெரியும். பட்டுக்கோட்டைத் தாலூகாவிலும் பல வணிகர்கள் இருக்கின்றனர். அவர்களைப்போல் பேரிசெட்டிகள் எனப்படும் வணிகர்கள் உண்டு. பாண்டியநாடு, சேரநாடு முதலிய ராஜ்யங்களில் ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு பல வர்த்தகக் கூட்டங்கள் இருந்தன. அவர்கள் கப்பலில் பிறநாடுகளுக்குச் சென்று வியாபாரம் செய்துவந்தனர். வெள்ளையர்களும் கப்பல் மூலம் வியாபாரம் செய்துவந்தனர். அவர்கள் கப்பல் மூலம் வியாபாரம் செய்த போது கிழக்கிந்தியத் தீவுகளுக்கு வந்தனர்.

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்கிற வசனம் வைசியர்களுக்காகவே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே வைசியர்கள் தோன்றிக் கடல் கடந்து வியாபாரம் செய்திருக்கிருர்கள். வர்த்தகக் கூட்டத்தாரால் ஏற்பட்ட கல்வெட்டுகள் நம் நாட்டில் நிறைய இருக்கின்றன. ஸயாமில் தமிழில் ஒன்று கிடைத்திருக்கிறது. 20—30 வருஷங்களுக்கு முன்பு வெள்ளைக்காரர்கள் ஸயாமிற்குச் சென்றிருக்கிருர்கள்; அங்குள்ள விஷயங்களை அவர்கள் பார்த்திருக்கிருர்கள். வெள்ளைக்காரர்கள், ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஒவ்வொரு சமூகத்தாரின் வாழ்க்கை முறைகளையும் அனுஷ்டானங்களையும் நன்ருக ஊடுருவிப் பார்த்து, விஷயங்களை அறிவதற்காக ஆயுள் முழுவதும் பாடுபட்டு, புஸ்தகங்கள் எழுதிவைத்திருக்கிருர்கள். எறும்பு, செடிகள், பட்சிகள் முதலியவைகளைப்பற்றி யெல்லாம் ஆராய்ந்து அநேகம் பேர்

Koviloor Digital Library

புஸ்தகங்கள் எழுதியிருக்கிறதைப் போலத்தான்! அங்குள்ள சமூகத்தாரின் உடலமைப்பு, பாஷை முதலியவைகளைப்பற்றி ஆராய்ந்தும் வெள்ளைக்காரர்கள் புத்தகங்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு துறையில் ஈடுபட்டு ஆயுள் பூராவும் ஆராய்ச்சிகள் செய்து புத்தகங்கள் எழுதி வைத்திருக்கிறது போலத்தான் இதுவும். அவர்கள் பல காடுகளுக்கெல்லாம் சென்று அங்குள்ள மக்களின் பாஷைகளைப்பற்றியும் அவர்களுடைய பழக்கவழக்கங்களைப் பற்றியும் ஆராய்ந்தறிந்து புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். அத்துடன் பிறமதமக்களைத் தங்கள் மதத்தில் சேர்த்துக்கொள்வதற்கும் முயன்றிருக்கிறார்கள்; அதற்காக மக்களுக்குக் கல்வியளிக்கிறார்கள். அப்படி மக்களின் கல்விக்காகவும் பாடுபடுகிறார்கள். பாடுபட்டால் பிரயோஜனம் இருக்கும். மதத்தை மாற்றுவது நமக்குப் பிடிக்காவிட்டாலும், மதத்தை மாற்றுவதற்காக அவர்கள் இரவும் பகலும் பாடுபட்டால் அதில் அவர்களுக்குக் கொஞ்சம் ஜயம் கிட்டும்; அதற்காகப் பணம் செலவழித்தால் ஜயித்துவிடலாம். மதத்திற்காக மட்டும் அல்லாமல் எல்லா விஷயங்களுக்காகவும் அவர்கள் பாடுபட்டிருக்கிறார்கள். மற்றக் காரியங்களால் செய்த நன்மைகள், மதத்தை மாற்றும் காரியத்தால் போய்விடுகின்றன.

ஒரு வெள்ளைக்காரன் ஸயாமிற்குச் சென்று அந்த நாட்டு மக்களின் பழக்கவழக்கங்களையும் அவர்களுடைய திருவிழாக்களையும் பற்றி எழுதியிருக்கிறான். அந்தப் புத்தகத்திலிருந்து அங்கே நடக்கும் ஒரு திருவிழாவைப்பற்றி அறிந்தேன். நவம்பர், டிசம்பர் மாதத்தில் அங்கே ஒரு திருவிழாக் கொண்டாடுகிறார்களாம்; அங்குள்ள ராஜாக்களும் சகல ஜனங்களும் அதைக் கொண்டாடுகிறார்கள். அந்தத் திருவிழா அங்கே 4-5 நகரங்களில் நடக்கிறது. அப்போது பிரதான நகரில் இந்தக் கொட்டகையைவிடப் பெரியதாக உள்ள ஒரு கொட்டகையில் ஓர் ஊஞ்சல் தொங்கும். அந்த ஊஞ்சலில் ஒருவன் உட்கார்ந்துகொண்டு ஆடவேண்டும். அவன் மிக உயரத்தில் சென்று கீழே வரும்படி ஆடவேண்டும். அதாவது ஈச்வரன் இருக்கும் நகரத்திற்குச் சென்று வருவதாகத் தாத்பர்யம். அப்படி அவன் வரும்போது தக்ஷிணாமூர்த்தி ரூபத்தில் வரவேண்டும். அதாவது நாம் 'சாமி வருவது' என்றும் 'ஆவேசம் வருவது' என்றும் சொல்கிறோம் அல்லவா? அந்த மாதிரி அவன் தக்ஷிணாமூர்த்தி ரூபத்தில் வரவேண்டும். அந்த உத்ஸவம் 10 நாட்கள் நடக்கும். அவன் ஊஞ்சலில் ஆடும்போது அவனுடைய கால் பூமியில் படக்கூடாது. ஆனால் அவனுடைய கால் பூமியில் எளிதில் பட்டுவிடக்கூடிய அளவுக்கு அவ்வளவு தாழ்த்தி ஊஞ்சலைக் கட்டுவார்கள். அவனு

Koviloor Digital Library

டைய கால் பூமியில் பட்டுவிட்டால் அவனுடைய வீடுவாசல், சொத்து முதலியவைகள் பறிமுதல் செய்யப்பட்டு அரசாங்கத்தில் சேர்க்கப்படும். இப்போதும் அந்தத் திருவிழா அங்கே நடக்கிறது. திருவிழா நடக்கும்போது அந்த நாட்டு ராஜாக்களின் சைனியங்களும் ஆயுதங்களும் பத்து நாட்களும் அங்கே கொண்டுவந்து நிறுத்தப்படும்.

ராஜாக்கள் முதல் ஏழைகள்வரை திருவிழாவில் பங்கெடுத்துக்கொள்வார்கள். இப்போதெல்லாம் அங்கே அந்தத் திருவிழா நடக்கும் இடத்திற்கு ஏரோப்ளேன் முதலியவைகளைக் கொண்டுவருகிறார்கள். எல்லா வாகனங்களையும் ஆயுதங்களையும் சைனியங்களையும் அங்கே கொண்டுவந்து விளையாட்டுக் காட்டுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த ஊஞ்சலில் ஆடுபவன் தட்சிணாமூர்த்தி ரூபத்தில் வருகிறான் என்று அந்த வெள்ளைக்காரர் எழுதியிருக்கிறார். நம் நாட்டிலுள்ள தட்சிணாமூர்த்தி விக்கிரகத்தை அவர் பார்த்துவிட்டு அவனுடைய ரூபம் அந்த மாதிரி ஆகின்றது என்று எழுதியிருக்கிறார். ஊஞ்சலில் ஆடுபவனுக்குப் பக்கத்தில் இருப்பவர்கள் ஒரு மந்திரம் சொல்கிறார்களாம். அந்த மந்திரத்தின் அர்த்தம் இன்னதென்று அவர்களுக்கே தெரியவில்லை; ஆனால் அதை அவர்களுடைய பாஷையில் எழுதிவைத்துக்கொண்டு சொல்கிறார்கள். அந்த மந்திரம் கடைசியில் 'ட்ரியெம்பாவா' என்று முடிகிறது என்று அந்த வெள்ளைக்காரன் எழுதியிருக்கிறான். அந்த உத்ஸவம் முடிந்த 5-6 நாட்களில் பக்கத்திலுள்ள புத்தர் கோவிலில் ஓர் உத்ஸவம் நடக்கிறதாம். கல்வெட்டுக்களில் இந்த விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றனவாம். 'ட்ரியெம்பாவா' என்பதற்கு என்ன அர்த்தம் இருக்கும் என்று நான் ஆராய்ந்து பார்த்தேன். அந்தத் திருவிழா எப்போது முடிகிறது என்று பார்த்தேன். மார்கழி மாதப் பௌர்ணமியுடன் அது முடிகிறது. மார்கழி மாதத்தில் அந்தக் காலத்தில் நம் கோவில்களில் பத்துநாட்கள் ஊஞ்சல் திருவிழா நடக்கும். சில சமயங்களில் 20 நாட்கள்கூட நடக்கும். அப்போது 'தேவாரம் ஓதுவார்' அங்கே வந்து பாடுவார். அப்போது திருவெம்பாவை பாடப்படும். பகவானை ஊஞ்சலில் எழுந்தருளச் செய்யும் அந்தச் சமயத்தில்தான் திருவெம்பாவையைச் சொல்ல வேண்டும், மற்றச் சமயங்களில் சொல்லக்கூடாது. இந்தச் சமயத்தில் இன்னும் சில ஊர்களில் இது சொல்லப்பட்டு வருகிறது; அந்த உத்ஸவம் இன்னும் சில ஊர்களில் நடக்கிறது. சில இடங்களில் திருவெம்பாவை சொல்வது மறைந்து போய்விட்டது.

அது நம் நாட்டைத் தாண்டி அந்த நாட்டிற்குப்

Koviloor Digital Library

போயிருக்கிறதென்று தெரிகிறது, இந்தப் புத்தகத்தைப் படித்து ஆராய்ந்ததிலிருந்து. அந்த உத்ஸவத்திற்குப் பிறகு திருப்பாவை உத்ஸவம் நடப்பதாக எழுதப்பட்டிருக்கிறது. அது வைஷ்ணவக் கோயில்களில் நடக்கிறது. மார்கழி மாதத்தில், மலையாள தேசத்தில், எல்லாப் பெண் குழந்தைகளும் காலையில் 5 மணிக்கு எழுந்து குளத்திற்கோ ஆற்றிற்கோ சென்று ஸ்நானம் பண்ணிவிட்டுக் கையில் தென்ன மட்டை போன்ற இயற்கையான அலங்காரப் பொருள்களை எடுத்துக்கொண்டு கிருஷ்ணபகவானைப்பற்றிப் பாடிக்கொண்டு வருகிறார்கள்.

மாணிக்கவாசகர் திருவெம்பாவை எழுதியபோது திருவண்ணாமலையில் பெண்கள் சுனையில் நீராடியதைக் கண்டார். அந்தப் பெண்களைப் பார்த்து — 'பாவாய்' என்று பாடினார். சக்தி ஸ்வரூபமாக நம் உடலுக்குள்ளேயே இருக்கும் ஆத்ம சக்தியானது நம் ஒவ்வொருவருக்கும் ஒரு சக்தியைப் பிறக்கச் செய்கிறது. அது மனோன்மணீயம் என்ற நவசக்திகளை எழுப்புவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் குறிப்பிட்ட 'பாவாய்' என்ற பதம் சக்தி, பெண், பொம்மை, துர்க்கை ஆகிய எல்லாவற்றையும் குறிக்கிறது. ஆகவே அது எதற்கும் பொருந்தும். எந்த அர்த்தத்தையும் கொள்ளலாம். கிருஷ்ண ஸ்தோத்திரத்திலும் 'எம்பாவை' என்ற பதம் வருகிறது. 'எம்' என்ற பதத்தை எடுத்துவிட்டுத் திருப்பாவை என்ற பெயரை அதற்கு வைஷ்ணவர்கள் வைத்துக்கொண் டிருக்கிறார்கள். திருப்பாவை, திருவெம்பாவை ஆகிய இரண்டு திருவிழாக்களிலும் பெண்களை எழுப்புவது உண்டு. திருவெம்பாவையில் சக்தி தேவியை எழுப்புகிறார்கள். திருப்பாவையில் கிருஷ்ணபகவானைக் கோபிகள் எழுப்புகிறார்கள். கிருஷ்ண பரமாத்மாவே தங்களுக்குப் பர்த்தாவாக வரவேண்டுமென்பதற்காக அவர்கள் பிரார்த்தித்தார்கள்.

பகவானே பர்த்தாவாக வரவேண்டும் என்பதற்காகக் காத்தியாயனியை — அதாவது துர்க்கையை — 'காத்தியாயனி மகாமாயை' என்று சொல்லிக் கோபிகைகள் யமுனை ஆற்றங்கரையில் மார்கழி மாதத்தில் காலை நேரங்களில் பாடியதாகவும் அவர்களுக்குக் கிருஷ்ணபகவான் அனுக்கிரகித்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. சங்கநூல்களிலும் இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போதும் கோவில்களில் மார்கழி மாதத்தில் காலையில் இப்பாடல்களைச் சொல்லி வருகிறார்கள். மலையாள நாட்டில் இன்றைக்கும் இந்தப் பாடல்களைப் பாடிவருகிறார்கள்: கோவில்களில் திருப்பள்ளியெழுச்சி நடக்கும். அது திருப்பக்ஷி என்று திரிந்துவிட்டது. அப்படிச் சொல்லக்கூடாது. திருப்பள்ளியெழுச்சி என்று சொல்லவேண்டும். அதேமாதிரி திருமஞ்சனம்

Koviloor Digital Library

என்பதும் தவறு. திருமெய்அஞ்சனம் என்று சொல்லவேண்டும். அஞ்சனம் என்றால் தேய்த்தல். திருப்பள்ளியெழுச்சி என்பது திருப்பக்ஷி என்று மாறிவிட்டது. திருப்பக்ஷி என்றால் பொங்கல் என்று அர்த்தம் வைத்துக்கொண் டிருக்கிறோம். அது தவறு.

நாம் சாப்பிடும் பொருள்களைப் பகவானுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இயற்கையின் சக்தியில்லாமல் நாம் அவைகளைப் பெற முடியாது. நாம் அவ்வாறு செய்யாமல் அவைகளைச் சாப்பிட்டால் அவைகளை நாம் திருடியவர்கள் ஆவோம். முன்பெல்லாம் கோவிலில் மணி அடித்த பிறகுதான்—கோவிலில் பூஜை ஆனபிறகு தான்—வீட்டில் சாப்பிடுவது என்ற வழக்கத்தைப் பலர் வைத்துக் கொண்டிருந்தார்கள். நாம் இயற்கையின் உதவியில்லாமல் ஒரு மழையைப் பெய்விக்க முடியுமா? ஒரு பருத்திக்கொட்டையையோ, ஒரு வாழை இலையையோகூட நாம் செய்ய முடியாது. ஆகவே நாம் சாப்பிடும் பொருள்களை அப்பேர்ப்பட்ட சக்திக்கு நிவேதனம் செய்துவிட்டுச் சாப்பிட வேண்டும்.

நாம் நித்திரை செய்கின்றோம். அதே மாதிரி, பகவானை நித்திரை செய்விப்பதாகக் கருதி, காலை வேளையில் அவரைச் சுபசகுனத்துடனும் மங்கள உச்சரிப்புடனும் எழுப்பவேண்டும். வருஷத்தை நான்கு பாகமாகப் பிரித்தால், உத்தராயணத்திற்கு முந்திய உஷத் காலத்தில் மார்கழி மாதம் வருகிறது. உஷத் காலத்தில் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும். ஆகவேதான் 'வைகறைத் துயிலெழு' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் காலத்தில் சூரியோதயத்திற்கு முன்னதாகவே எழுந்து குளித்து விடவேண்டும். ஆனைச்சாத்தன் என்று ஒரு பக்ஷி உண்டு. மார்கழி மாதத்தில், 'ஆனைச்சாத்தனின் சத்தம் கேட்டுவிட்டது, எழுந்திரு' என்று சொல்வதுண்டு. இரவு 3-3½ மணிக்குக் கீச்சுக் கீச்சு என்று ஒரு சாத்தன் கத்தும். பிறகு நான்கு ஐந்து மணிக்கு ஒரு பட்சி கத்தும். 6 மணிக்கு ஒரு பட்சி கத்தும். 5¾ மணிக்குக் காக்கை கத்தும். அதற்கு முன்பு ஒரு பக்ஷி கத்தும். 2½-3 மணிக்கு ஒரு பக்ஷி கத்தும். அதற்கு முன் 12 மணிக்கு ஆந்தையும் கோட்டானும் கத்தும், ஒரு மணிக்கு ஒரு பக்ஷி கத்தும். அவைகள்கூட ஒரு குறிப்பிட்ட காலத்தில் எழுந் திருக்கவேண்டும் என்ற நியமத்தை வைத்துக்கொண் டிருக் கின்றன. நாம்தான் நியமமில்லாமல் செய்கிறோம்.

திருப்பாவை, திருவெம்பாவை முதலிய பாடல்கள் பாடப் படுவதற்கு முன்பே, மார்கழி மாதத்தில் அதிகாலையில் நீராடிப் பகவானைப் பிரார்த்திக்கும் வழக்கம் இருந்திருக்கிறது என்று தெரிகிறது. அந்த வழக்கம் தமிழ்நாட்டில் மட்டுமின்றி வட

Koviloor Digital Library

நாட்டிலும் இருந்திருப்பதாகத் தெரிகிறது. அந்த வழக்கம் பாரத தேசத்தில் இருந்ததாகப் பாகவதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, குழந்தைகளைத் திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களை நெட்டுருப்பண்ணச் செய்து, அவர்களை மார்கழி மாதத்தில் விடியற்காலையில் எழுப்பி ஸ்நானம் செய்வித்து அந்தப் பாடல்களைப் பாடச்சொல்லிப் பகவானைப் பூஜை செய்யும்படி செய்தால் அவர்களுக்கு அம்பாளின் அனுக்கிரகம் கிடைக்கும். அதிகாலையில் அவர்கள் பச்சைத் தண்ணீரில் குளிப்பது அவர்களுடைய உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாதென்றால் அவர்கள் வெந்நீரில் குளிக்கலாம். அவர்கள் பச்சைத் தண்ணீரில் குளித்து உடம்பிற்கு வந்தால் அந்தத் தோஷம் நம்மைச் சாரும். ஆகவே அவர்கள் வேண்டுமானால் வெந்நீரில் குளிக்கலாம்.

விடியற்காலையில் நல்ல காரியத்தைச் செய்தால் அது ஸ்திரமாக இருக்கும். விடியற்காலையில் படிக்கும் விஷயங்கள் மனத்தில் நன்றாகப் பதியும். ஆகவே விடியற்காலையில் ஈசுவர பூஜையில் ஈடுபட்டால் நல்ல பலன் கிடைக்கும். இன்றைக்கும் ஸயாமில் மார்கழி மாதத்தில் அவர்கள் அர்த்தம் தெரியாமல் மந்திரத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்வதற்கு அர்த்தம் என்ன என்றும், அவர்கள் சொல்வதற்கும் நம் பாடலுக்கும் ஒற்றுமை இருக்கிறதா என்றும் அறிவதற்கு எனக்கு ஆவல் இருக்கிறது. இதற்காகச் சிலர் அங்கே போய்வந்தார்கள். நானே அங்கே போய் அறிந்து வரவேண்டும் என்று இருக்கிறது. இங்கே திருவெம்பாவையும் திருப்பாவையும் திகழ்ந்தோங்கவேண்டும்.

அந்தப் பாடல் புத்தகங்களை அச்சிட்டு, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் 10-20 குழந்தைகளுக்கு அவைகளை வழங்கி, உபாத்தியாயர்கள் மூலம், குறிப்பாகச் சங்கீத உபாத்தியாயர்கள் மூலம், அவர்களுக்கு அப்பாடல்களைக் கற்றுக்கொடுத்துவந்ததால். அது மிகவும் விசேஷமான காரியம் ஆகும் என்று தோன்றியது. திருப்பள்ளியெழுச்சி என்ற பத்துப் பாடல்கள், பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் நடுவிலுள்ள ஆவுடையார் கோவில் என்ற திருப்பெருந்துறையில் பாடப்பட்டன. திருவெம்பாவை திருவண்ணுமலையில் எழுதப்பட்டது. ராமநாதபுரம் ஜில்லாவிலுவள ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள் கிருஷ்ண பரமாத்மாவைக் குறித்துப் பாடிய பாடல்கள் திருப்பாவை. இந்தப் புத்தகங்களைக் குழந்தைகளுக்குக் கொடுத்து அவைகளிலுள்ள பாடல்களை அவர்கள் மனப்பாடம் பண்ணி மார்கழி மாதத்தில் காலையில் அவைகளைச் சொல்லிப் பிரார்த்தனை செய்யும்படி செய்யவேண்டும்.

Koviloor Digital Library

14

ஆருத்திரா தரிசனம்

मौलौ गङ्गाशशाङ्कौ करचरणतले शीतलाङ्गा भुजाङ्गा
वामे भगे दयार्द्रा हिमगिरिदुहिता चन्दनं सर्वगात्रे ।
इत्थं शीतं प्रभूतं तव कनकसभानाथ सोढुं क्व शक्तिः
चित्ते निर्वेदतप्ते यदि भवति न ते नित्यवासो मदीये ॥

மௌளௌ கங்காஶஶாங்கௌ கரசரணதலே ஶீதலாங்கா
புஜங்கா:
வாமே பாகே தயார்த்ரா ஹிமகிரிதுஹிதா சந்தநம் ஸர்வகாத்ரே |
இத்தம் ஶீதம் ப்ரபூதம் தவ கநகஸபாநாத ஸோடும் க்வ ஶக்தி:
சித்தே நிர்வேததப்தே யதி பவதி ந தே நித்யவாஸோ மதீயே ||

இது ஒரு சுலோகம். ''மௌளௌ கங்காஶஶாங்கௌ (मौलौ गङ्गाशशाङ्कौ)' என்று இந்தச் சுலோகம் ஆரம்பிக்கிறது. மௌளௌ என்றால் மௌளியில் என்று அர்த்தம். சிரஸில் - தலையில் - செய்துகொள்ளும் அலங்காரத்தை மௌளி என்று சொல்வர். பொதுவாகத் தலையினுடைய மேல் பாகம் என்று அர்த்தம். ஈச்வரனுடைய தலையின் மேல்பாகத்தில் சந்திரன், கங்கை இரண்டும் இருக்கின்றன என்பது அநேகமாக நமக்குத் தெரியும்.

மடத்தில் பூஜைபண்ணப்படுகிற ஸ்வாமிக்குச் சந்திரமௌளி என்று பெயர். அதை வைத்துக்கொண்டுதான் சந்திர மௌளி என்று சிலர் பெயரும் வைத்துக்கொண் டிருக்கிறார்கள். சில க்ஷேத்திரங்களில் உள்ள ஸ்வாமிக்குச் சந்திரமௌளீசுவரர் என்ற நாமமும் உண்டு.

Koviloor Digital Library

மௌளி என்பதற்குத் தலையின் உச்சி என்பதுதான் நேர் அர்த்தம். 'அந்த மௌளியில் உனக்கு என்ன இருக்கிறது?' என்று நேராக ஸ்வாமியைப் பார்த்துச் சொல்கிறார்.

गङ्गाशशाङ्कौ

கங்காஶஶாங்கௌ

'தலையின் உச்சியில் உனக்கு இரண்டு சாமான்கள் இருக்கின்றன. ஒன்று கங்கை. கங்கையை வைத்துக்கொண் டிருக்கிறாய்.' அவருடைய சடையில் கங்கை இருக்கிறது. கங்கா என்றால் கங்கை என்று அர்த்தம். சசாங்க என்றால் முயலை அடையாளமாக உடைய பொருள் என்று அர்த்தம். சசம் என்றால் முயல். அங்கம் என்றால் அடையாளம், முயலை அடையாளமாக உடையது சந்திரன்.

சந்திரனுக்கு நடுவில் இருக்கும்படியான கறுப்பைப் பார்த்தால் முயல் மாதிரி இருக்கும். சில பேர் மான் இருக்கிறது என்று சொல்வார்கள். தூக்கிக்கொண் டிருப்பது மான் என்றால் கொம்பு என்று வைத்துக்கொள்ள வேண்டும்- முயல் என்றால் காது என்று வைத்துக்கொள்ள வேண்டும். சமீப காலத்தில் அங்கேயே போய் அதைப் பார்த்துவிட்டுக்கூட வந்துவிடப் போகிறார்கள். இங்கே முயல் என்று சொல்லப்படுகிறது.

ஆகையால் உன்னுடைய சிரசில், உன் மௌளியில், கங்கை நதி, சந்திரன் இவை இரண்டும் இருக்கின்றன. இவை இரண்டும் வெகு அநுகூல நிலையில் இருந்தாலுங்கூட இரண்டுமே பரம சீதளமாக இருக்கின்றன, அப்படி இருக்கிறபோது, 'எப்போது பார்த்தாலும் பெரிய கங்கா நதியையும்; ஜலத்தையும் - சந்திரனுடைய கீற்றையும் தலையில் வைத்துக்கொண் டிருக்கிற உனக்கு ஜலதோஷம் ஏன் பிடிக்கவில்லை?' என்கிற கேள்வியைப் போடுகிறமாதிரி - கேள்வியைப் போடவில்லை-இந்த இரண்டும் உன் தலையில் இருக்கின்றன'' என்று சொல்கிறார்.

இன்னொருத்தர் பக்கத்தில் வந்தார். தம் கையிலும், காலிலும், தோள்பட்டையிலும், பாதங்களைச் சுற்றிக்கொண்டும் ஈச்வரன் போட்டுக்கொண் டிருக்கிற ஆபரணங்களைப் பார்த்தார். 'இவர்கள் எல்லாம் காலுக்குக் காப்பு, கைக்கு ஆபரணம் இதெல்லாம் தங்கத்தினாலும், வெள்ளியினாலும் பண்ணிப் போட்டுக்கொள்கிறார்களே! நீ கால், கை, தோள்பட்டை முதலிய இடங்களில் போட்டுக்கொண் டிருக்கும் ஆபரணம் எப்படி இருக்கிறது?

Koviloor Digital Library

करचरणतले शीतलाङ्गा भुजङ्गाः

கரசரணதலே ஶீதலாங்கா புஜங்கா:

இரவு நேரங்களில் வயற்காட்டுப் பக்கம் நடந்து போகும்போது பாம்பை மிதித்துவிட்டால் 'பாம்பு' என்று சொல்லமாட்டார்கள். 'என்னமோ தெரியலே. மிதித்தேன். ஜில்லென்று இருந்தது' என்று சொல்வார்கள். பாம்பினுடைய அங்கம் முழுக்கச் சீதளமாக இருக்கும்; தொட்டால் ஜில்லென்று இருக்கும். அதற்கும் சீதளம் உண்டு.

புஜங்கம் என்றால் பாம்பு. 'நீ கை கால் எங்கே பார்த்தாலும் சீதளமான அங்கத்தை உடைய பாம்பை அல்லவா தூக்கிப் போட்டுக்கொண் டிருக்கிறாய்!'

करचरणतले शीतलाङ्गा भुजङ्गाः

கரசரணதலே ஶீதலாங்கா புஜங்கா,

கரசணங்களிலே கைகால்களிலே சீதளமாய் இருக்கும்படியான பாம்புகள் அல்லவா இருக்கின்றன?

இது போதாதென்று உன் பாதி உடம்பிலே யாரை வைத்துக்கொண் டிருக்கிறாய்? பனிக்கட்டியின் பெண்ணை அல்லலா வைத்துக்கொண் டிருக்கிறாய்,

वामे भागे दयार्द्रा हिमगिरिदुहिता

வாமே பாகே தயார்த்ரா ஹிமகிரிதுஹிதா

ஹிமம் என்றால் பனி; கிரி என்றால் மலை; பனிக்கட்டி மலையினுடைய பெண்ணை இடது பாகத்தில் ஒரு பாதி உடம்பிலேயே வைத்துக்கொண் டிருக்கிறாய். துஹிதா என்றால் பெண் என்று அர்த்தம்; துஹித்ரு என்கிற சப்தம்தான் Daughter என்பது.

இவ்வளவும் போதா என்று மார்கழி மாசம் வரப் போகிறது. மார்கழி மாசம் பூராவும் விடியற்காலையில் எல்லோரும் ஜில்லென்ற தண்ணீரை உன் தலையில் கொட்டிக்கொண் டிருக்கப் போகிறார்கள். வெறும் தண்ணீரைக் கொட்டுவது போதாதென்று சந்தனத்தை நிறைய அரைத்து, உன் மேல் எல்லாம் அதை அப்பி, விடியற் காலை வேளையில் ஆருத்திரா தரிசனம் என்று சிதம்பரத்தில் உன்னை நிறுத்தி வைக்கிறார்களே! இவ்வளவு சீதளத்தையும் நீ எப்படித் தாங்குகிறாய்? வேறு எவனாலும் தாங்க முடியாத இவ்வளவு சீதளத்தையும் தாங்கும் சக்தி உனக்கு எங்கிருந்து வந்தத?

Koviloor Digital Library

चन्दनं सर्वगात्रे ।
इत्थं शीतं प्रभूतं तव कनकसभानाथ सोढुं क्व शक्तिः ?

சந்தநம் ஸர்வகாத்ரே
இத்தம் ஶீதம் ப்ரபூதம் தவகநகஸபாநாத ஸோடும் க்வ ஶக்தி:?

மார்கழி மாசம் என்ருல் எல்லாரும் கணப்புப் போடுவர். சித்திரை மாதத்தில் சந்தனத்தை நிறையப் பூசிவிட்டாலும் தாங்கலாம். உனக்கு வேண்டுமென்றே மார்கழி மாசத்தில் சந்தனத்தைக் கொண்டுவந்து பூசுகிருர்களே இது என்ன உபசாரம் என்று பேரா?

பழைய நாளில் குட்டி ராஜாக்கள்; மிராசுதார்கள் இவர்கள் எல்லாம் கலெக்டர், தாசீல்தார் இவர்களிடம் விரோதம் இருந்தால் ஒரு காரியம் பண்ணுவது வழக்கம், விரோதத்தை வெளியில் காட்டிக்கொள்ளாதபடி, அவர்களைக் கார்த்திகை மாசம், மார்கழி மாச வாக்கில் தங்கள் பங்களாவுக்கு அழைத்து நிறையச் சாப்பாடெல்லாம் போட்டு, உடம்பு பூராவும் சந்தனத்தைப் பூசி நாலு பேரை விட்டு விசிறச் சொல்வார்கள், அவர்களுக்கு, 'போதும் போதும் இந்த உபசாரம்' என்று சொல்லும்படியாக ஆகிவிடும்.

ஈச்வரா! உனக்கு அந்தமாதிரி இவர்கள் உபசாரம் செய்கிருர்களா? உன் உடம்பிலேயே பாதியாக உன்னுேடு ஒருத்தி பக்கத்திலேயே இருக்கிருளே! அவள் பிறந்த இடம் பனி மலை என்கிறது மாத்திரம் அல்ல. அவள் எப்படி இருக்கிருள்? எங்கே பார்த்தாலும் அவளுக்குத் தயை ஒழுகிக்கொண் டிருக்கிறது. 'எல்லாரும் நம்முடைய குழந்தைகளாயிற்றே! நம்முடைய குழந்தைகள் எல்லாம் நிறையக் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கிருர்களே' என்று அவள் மனம் உருகிக்கொண் டிருக்கிறது. எந்தக் குழந்தையைப் பார்த்தாலும் அவள் மனம் தயையினுல் உருகுகிறது; அவள் பிறந்த இடமும் பனிக்கட்டி மலை; இரண்டு வகையிலும் சீதளமாக இருக்கிற அப்பேர்ப்பட்டவளை வாம பாகத்திலேயே நீ வைத்துக்கொண் டிருக்கிருய்!

वामे भागे दयार्द्रा हिमगिरितनया, चन्दनं सर्वगात्रे ।

வாம பாகே தயார்த்ரா ஹிமகிரி தநயா சந்தநம் ஸர்வகாத்ரே |

காத்ரம் என்ருல் உடல் என்று அர்த்தம். சர்வகாத்ரே என்ருல் உடம்பு முழுவதும். உடம்பு முழுவதும் சந்தனம் வேறு; சந்தனத்தை அப்பி வைத்திருக்கிருர்கள்.

ஆருத்திராதரிசனம் சிதம்பரத்தில் வெகு விசேஷமாக இருக்கும். ஆருத்ரா என்ருல் நனைந்தது என்று அர்த்தம்.

Koviloor Digital Library

உலகம் பூராவும் என்றைக்கு நனைந்து இருக்குமோ அன்றைக்குத் தான் ஆருத்ராதரிசனம் என்று வவத்துக்கொண் டிருக்கிறோம். ஆருத்ரா தரிசனத்திற்குப் போயிருந்தால் தெரியும். அன்றைக் குத்தான் பனி ஜாஸ்தி. மரத்தடியில் போய் நின்றால்கூட மழை பெய்கிறதுபோல் பனி ஜலம் சொட்டும். ஓட்டில் இருந் தெல்லாம் தண்ணீர் ஒழுகிக்கொண் டிருக்கும். அன்றைக்குப் பௌர்ணமியாக வேறு இருக்கும். ஆருத்ரா என்றாலே ஸம்ஸ் கிருதத்தில், நனைந்தது என்று அர்த்தம். திருவாதிரை நக்ஷத்திரத் தில் ஆருத்ராதரிசனம் என்று சிதம்பரத்திலே மிக விசேஷமாக உத்ஸவம் நடத்துவார்கள்.

சிவனுக்கு ஆதிரை நக்ஷத்திரம் விசேஷம். சிரவண நக்ஷத்திரம் பெருமாளுக்கு விசேஷம். ச்ரவணம். ச்ரவணம், என்று அன்றைக்கு விசேஷமாகப் பெருமாளுக்குப் புறப்பாடு எல்லாம் செய்வார்கள்; சுவாமிக்கு ஆதிரைதான்.

இதில் ஒரு வேடிக்கை, தமிழிலும் அஸ்வினி, பரணி, கார்த்திகை, இப்படி நீளமாக இருபத்தேழு நக்ஷத்திரங்களுக்கும் பெயர் இருக்கிறது. ஆனால் திருஅஸ்வினி, திருபரணி என்று சொல்வது இல்லை. சிரவணம் என்பதுதான் மலையாளத்திலே ஓணம் என்கிறார்களே அது. ஓணம் என்பதைத் தமிழ்ப் பாஷை யில் மாத்திரம் திருவோணம் என்று சொல்கிறார்கள். ஸம்ஸ் கிருதத்தில் சிரவணம் என்று சொல்கிறார்கள். அதுபோல் ஸம்ஸ்கிருதத்தில் ஆர்த்ரா என்று சொல்வதைத் தமிழில் திருவாதிரை என்று சொல்கிறோம். இந்த இரண்டு நக்ஷத்திரங் களுக்கு மாத்திரந்தான் திருவாதிரை, திருவோணம் என்று திரு என்பதைச் சேர்த்துத் தமிழில் சொல்கிறார்களே தவிர பாக்கி நக்ஷத்திரங்களுக்குக் கிடையாது.

"திருமாலுக்கு அடிமை செய், அரனை மறவேல்" என்று ஔவை பாடிய பாட்டை வைத்துக்கொண்டு பார்த்தால் அநாதி காலம் தொட்டுத் தமிழ்நாட்டவர்கள் இவர்கள் இரண்டு பேரையும் வழிபட்டிருக்கிறார்கள். அரனுடைய நக்ஷத்திரத் திற்கும் திருமாலினுடைய நக்ஷத்திரத்திற்கும் திரு என்ற ஒரு சொல்லைச் சேர்த்துப் போட்டுச் சொல்கிறார்கள். 'இந்த இரண்டு தெய்வமும் நமக்கு இரண்டு கண்களாக இருக்கும்படி யான தெய்வங்கள். 'ஒரே பரமாத்மா இந்த இரண்டு ரூபமாக வும் இருந்துகொண்டு நமக்கு அநுக்கிரஹம் பண்ணுகிறார்' என் கிற தத்துவத்தை நன்றாகப் புரிந்துகொண் டிருந்தார்கள்.

திரு ஒற்றியூர், திரு ஆன்மியூர், திரு அல்லிக்கேணி என்ப தாக ஈச்வரனுடைய க்ஷேத்திரங்களுக்கும் திரு என்பதைச் சேர்த்து வந்தார்கள். பட்டினத்தில் திரு என்பது சேர்க்கப்

Koviloor Digital Library

பட்ட இரண்டு மூன்று ஊர்கள் இருக்கின்றன. திருவல்லிக்கேணியில் முன்பு ஒரு கேணி இருந்தது. அதில் அல்லி பூத்தது. அதனாலே 'திரு அல்லிக் கேணி' என்று பெயர் வந்து அது இன்றைக்குத் திருவல்லிக்கேணியாக இருக்கிறது. அங்கேயே திருவேட்டீச்வரன்பேட்டை என்று ஒன்று இருக்கிறது. அங்கே திருவேட்டீச்வரர் ஆலயமும் இருக்கிறது. அர்ஜுனனுக்கு அநுக்கிரஹம் பண்ணவேண்டுமென்று ஈச்வரன் வேடனாக வந்தார். அர்ஜுனன் தன் வில்லினால் அந்த வேடனை அடித்தான். இவன் அடிக்க அவர் அடிக்க இப்படிக் குஸ்தி பண்ணிவிட்டுக் கடைசியில் அடியை வாங்கிக்கொண்டு வேடனாக வந்த ஈச்வரன் அர்ஜுனனுக்கு அநுக்கிரஹம் பண்ணினார் என்பது புராணம். அங்கேயுள்ள ஈச்வரருக்குத் திருவேட்டீசுவரர் என்று அதனால் பெயர் வந்தது.

இப்படி ஸ்வாமி சம்பந்தமான பெயர்களுக்கே இந்த நாட்டில் 'திரு' என்பதை முன்பு சேர்த்துக்கொண்டு வந்தார்கள். இப்போது அநேகமாக ஸ்வாமிக்குச் சொல்கிறார்களோ இல்லையோ? ஆசாமிகளுக்கு, மனுஷ்யர்களுக்கு, சேர்த்து உபயோகப்படுத்திக்கொண் டிருக்கிறார்கள்.

தொன்றுதொட்டு இதரநாட்டில் இல்லாத வழக்கமாகத் தமிழ்நாட்டில் மாத்திரம் சிறப்பாகச் சிவனுடைய நக்ஷத்திரத்திற்கும், பெருமாளுடைய நக்ஷத்திரத்திற்கும் முன்னால் திரு என்பதைச் சேர்த்துத் திருவாதிரை, திருவோணம் என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். சில சமயங்களில் முருக பக்தர்கள் திருக்கார்த்திகை என்று சொல்வது உண்டு. ஓர் ஊர் என்று அமைந்தால் பெருமாளுக்கும் சிவனுக்கும் கோவில் கட்டாமல் வீடுகள் கட்டமாட்டார்கள். சிவன் திருவாதிரைக்காரர். பெருமாள் திருவோணக்காரர். சிவன் கோயில் என்றால் ஸ்வாமி இருக்கும்படியான கர்ப்பக் கிருஹத்தில் பெரிய பாத்திரமாக வைத்து அதில் நீரைக் கொட்டி அந்தப் பாத்திரத்தின் அடியில் இருக்கும்படியான சின்னத் துவாரத்தின் வழியாகச் சிவன் தலையில் இருபத்து நான்கு மணி நேரமும் ஜலம் விழுந்துகொண்டிருக்கும்படியாகச் செய்திருக்கிறார்கள்.

வடக்கே போனால் ஒவ்வொருத்தரும் ஸ்னானம் செய்துவிட்டு ஒரு சின்னப் பாத்திரத்தில் தண்ணீரை மொண்டுகொண்டு போய்ச் சிவன் தலையில் கொட்டிவிட்டுத்தான் போவார்கள். அதற்கு 'சடானு' என்று பெயர். வடக்கே அம்பாள் கோயிலாக இருந்தாலும், ராமன் கோயிலாக இருந்தாலும், காளி கோயிலாக இருந்தாலும் எல்லாக் கோயில்களிலும் ஒரு சிவலிங்கம்; இங்கே ஆற்றங்கரையில் அரசமரத்தடியில் நாகப்

Koviloor Digital Library

பிரதிஷ்டை, லிங்கம் இருப்பதுபோல் பிரதிஷ்டை பண்ணி வைத்திருப்பார்கள். சில காளி கோயில்களில் பன்னிரண்டு சிவலிங்கங்கள் பிரஷ்டை பண்ணப்பட்டிருக்கும்! இந்தப் பன்னிரண்டு லிங்கங்களுக்கும் 'ஜோதிர் லிங்கங்கள்' என்று பெயர். நாயன்மார்களால், ஆழ்வார்களால் பாடல்பெற்ற ஸ்தலங்கள்போல இந்தப் பன்னிரண்டு லிங்கங்களும் ஆசார்யாள் அவர்களால் பாடல் பெற்றவை: ஹிமாலயத்தில் இருக்கும்படியான கேதாரம், சௌராஷ்டிரத்தில் இருக்கும்படியான சோமநாதம், காசியில் விஸ்வநாதம், கோதாவரியில் திரயம்பகம்.

மஹாபலிபுரம் மாதிரியாகவே வடக்கே எல்லோராக் குகை இருக்கிறது. அந்த மலையையே குடைந்து கோயிலாகப் பண்ணியிருக்கிறார்கள். அதைப் பார்த்துவிட்டால் மஹாபலிபுரம் ஒன்றும் இல்லை. மஹாபலிபுரத்தில் பனைமரம், வைக்கோல் போர் மாதிரியாக இருந்த மலைகளையே கோபுரம் மாதிரி செய்து, ரதம் மாதிரியாக எல்லாம் பண்ணிவிட்டான். எல்லோராவில் ஒரு பெரிய மலை. அந்த மலையை அப்படியே குடைந்து கோபுரமாகவும், பிராகாரமாகவும்—தஞ்சாவூர்க் கோயிலுக்கு இருக்கும்படியான பிராகாரம் மாதிரி பெரிய பிராகாரம்—அப்படியே குடைந்து எடுத்துவிட்டிருக்கிறார்கள். அந்தக் கோயிலைக் கட்டக் கல்லே கொண்டுபோகவில்லை. இருக்கிற கல்லைக் குடைந்து குடைந்து கொண்டுவந்து கொட்டியே கோயிலாக்கிவிட்டார்கள். அதைப் பண்ணினவன்கூட நம் தேசத்தில் இருந்து போனவன்தான்.

பல்லவ ராஜாக்கள், சோழர்கள் காலத்தில் அவன் அங்கே போயிருக்கிறான். எல்லோராக் குகையைக் குடைந்து வெகு அழகாக அந்தக் கோயிலை நிர்மாணித்திருக்கும்படியான சிற்பி ஒரு சுலோகத்தையும் ஸம்ஸ்கிருதத்திலேயே கவனம் பண்ணி அதில் எழுதி வைத்திருக்கிறான். 'இந்தக் கோயிலை நிர்மாணித்துவிட்டுப் பார்த்தால் இதை நான் பண்ணினேனா என்று தோன்றுகிறது. இனி இதுமாதிரியாக வேறு எங்காவது எத்தனை ஜன்மம் எடுத்தாலும் என்னாலேயே பண்ண முடியுமா என்று யோசித்துப் பார்த்தாலும் பண்ண முடியாது என்றுதான் தோன்றுகிறது. எனக்குள் இருந்து இதை யார் பண்ணினார்களோ தெரியாது. எனக்கு முன்னும் இதுமாதிரி பண்ணினவர்கள் இல்லை. பிந்தியும் பண்ணப்போகிறவர்கள் இல்லை; என்னாலேயும் இனி பண்ண முடியாது' என்று எழுதியிருக்கிறான். அந்த எல்லோராதான் நாகேசம். பீமேசுவரம், நர்மதா நதிக்கரையில் உள்ள ஒரு நகரம், பாணலிங்கம், மஹாராஷ்டிரத்தில் இருக்கும்படியான ஓங்காரம், ஸ்ரீசைலம், ராமேசுவரம் இப்படிப் பன்னிரண்டு இடங்

Koviloor Digital Library

களில் உள்ள லிங்கங்கள் ஆசார்யர் அவர்களால் பாடல் பெற்றவை.

நான்கு நான்கு அடிகள் உள்ள மூன்று சுலோகங்களில்

सौराष्ट्रे सोमनाथं च च श्रीशैले मल्लिकार्जुनम् ।
उज्जयिन्यां महाकालमोङ्कारममलेश्वरे ॥ ॥ १ ॥
परल्यां वैद्यनाथं च डकिन्यां भीमशंकरम् ।
सेतुमध्ये तु रामेशं नागेशं दारुकावने ॥ ॥ २ ॥
वाराणस्यां तु विश्वेशं त्र्यम्बकं गौतमीतटे ।
हिमालये तु केदारं घुसृणेशं शिवालये ॥ ॥ ३ ॥

ஸெளராஷ்ட்ரே ஸோமநாதஞ்ச ஶ்ரீஶைலே மல்லிகார்ஜுநம் |
உஜ்ஜயிந்யாம் மஹாகாலம் ஓங்காரம் அமலேஸ்வரே ||
பால்யாம் வைத்யநாதம்ச டாகின்யாம் பீமஶங்கரம் |
ஸேதுமத்யே து ராமேஶம் நாகேஶம் தாருகாவநே ||
வாராணஸ்யாம் து விஶ்வேஶம் த்ர்யம்பகம் கௌதமீதடே |
ஹிமாலயே து கேதாரம் குஸ்ருணேஶம் ஶிவாலயே ||

என்பதாக இந்தப் பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களைப்பற்றியும் ஆசார்யாள் சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு ஷேத்திரத்திலும் தனித்தனியாகச் சில சுலோகங்கள் பாடியிருக்கிறார். பல்லவர் நாளில் ஆயிரம் வருஷத்திற்கு முந்தி கட்டின காஞ்சீபுரம் கோயில் ஒன்றிலும் பன்னிரண்டு லிங்கங்கள் பிரஷ்டை செய்யப் பட்டிருக்கின்றன. நம்முடைய தேசத்தில் அதுமாதிரியாக வேறு எங்கும் கிடையாது.

சிவன் கோயில் என்றால் அபிஷேகந்தான். சதா, சிவன் தலையில் ஜலம் கொட்டிக்கொண் டிருக்கும். உலகம் பூராவும் நனைந்து இருக்கும்படியான ஆருத்திரா தினத்தன்று சிதம்பரம் கனகசபேசனைப் போய் இந்தக் கவி தரிசனம் பண்ணினார்.

மார்கழி மாதத்தில், இந்தப் பௌர்ணமியில் தலையில் சந்திரன் வேறு, கங்கை வேறு, உடம்பெல்லாம் பாம்பு ஆபரணம், இடது பாகத்திலே அம்பாள் வேறு, உடம்பு முழுக்கச் சந்தன அபிஷேகம் வேறு - இவ்வளவு சீதளத்தையும் தங்குவதற்கு உனக்கு எங்கே இருந்து வந்தது சக்தி?

इत्थं शीतं प्रभूतं तव कनकसभानाथ सोढुं क्व शक्तिः ?

இத்தம் ஶீதம் ப்ரபூதம் தவ கநகஸபாநாத ஸோடும் க்வசக்தி:?

ப்ரபூதம் என்றால் நிறைய என்று அர்த்தம். அபரகாரியங்கள் பண்ணும்போது நிறையச் சோற்றைக்கொட்டிச் செய்யும்படி

Koviloor Digital Library

யான ஒரு கர்மாவைப் ப்ரபூத பலி என்று சொல்வது வழக்கம். நிறைய இருக்கும்படியான - ப்ரபூதமாக இருக்கும்படியான - சீதளத்தை, ஸோடும் என்றால் தாங்குவதற்குச்-சகித்துக்கொள்வதற்குக் - கனக சபைக்கு நாதன் ஆக இருக்கிற ஈச்வரனே, தவ - உனக்கு. க்வ சக்தி: - சக்தி ஏது?

இவ்வளவு சீதளத்தை வேறு எவனாலும் தாங்க முடியாதே! இவ்வளவு ப்ரபூதமாக இருக்கும்படியான சீதளத்தை நீர் எப்படித் தாங்குவீர்? ஏற்கனவே மிகவும் சீதளமாக இருக்கும்படியான கங்கை, சந்திரன், பாம்பு, அம்பாள் எல்லாவற்றையும் வைத்துக்கொண் டிருக்கிறீர். உமக்கு மார்கழி மாதத்தில், பௌர்ணமி அன்றைக்கே - மத்தியான்னமாக இருந்தாலும் கொஞ்சம் பரவாயில்லை; விடியற்கால வேளையில்-சந்தனத்தையும் குழம்பாகக் கரைத்துக்கொண்டு அபிஷேகம் பண்ணி ஆருத்திரா தரிசனம் என்பதாக வைக்கிறார்களே; ப்ரபூதமான சீதளத்தை உம்மால் தாங்க முடிகிறதா? நீங்கள் சொல்லி இப்படிச் செய்கிறார்களா? அவர்களாகவே செய்கிறார்களா? ப்ரபூதமான சீதளத்தைத் தாங்கிக்கொண் டிருப்பவர்போல் இருக்கிறீர்களே, அப்படித் தாங்கத்தான் உமக்குச் சக்தி ஏது?

इत्थं शीतं प्रभूतं तव कनकसभानाथ सोढुं क्व शक्तिः ?

இத்தம் ஶீதம் ப்ரபூதம் தவ கநகஸபாநாத ஸோடும் க்வசக்தி:?

''பாக்கி ஊரில் இருக்கிற ஸ்வாமிக்கு, பெருமாளுக்கு எல்லாம் திருஊறல் உத்சவம் என்பதாக நல்ல கோடைக்காலத்தில், வெயிற்காலத்தில் ஆற்றங்கரைக்கு எழுந்தருளச் செய்து, ஒரு கால்வாய் மாதிரியாக வெட்டி நடுவில் இருக்கும்படியான நீர் ஊற்றத்தில் சுவாமியை இறக்கித் தாபசாந்தி உபசாரம் செய்வது வழக்கம். சைத்தியோபசாரம் பண்ணுவது வழக்கம். உங்களுக்கு மாத்திரம் விபரீதமாக இப்படிப் பண்ணுகிறார்களே! அதுவும் மார்கழி மாதத்தில் இப்படிப் பண்ணலாமா? அது கிடக்கட்டும். ப்ரபூதமாக இருக்கும்படியான சீதளத்தை நீரும் தாங்கிக் கொண்டுதான் இருக்கிறீர். உமக்கு இந்தச் சக்தி எப்படி வந்தது?''

सोढुं क्व शक्तिः ?

ஸோடும் க்வ ஶக்தி:?

இந்தக் கேள்விக்கு ஸ்வாமி என்ன பதில் சொல்லப் போகிறார்? அவர் அப்படியே ஆனந்தமூர்த்தியாக நர்த்தனக் கோலத்திலே நிற்கிறார். அந்தக் கோலத்தை க்ஷணமாத்திரம் பார்த்தவுடனேயே இந்தக் கவிக்கு அந்தக் கேள்விக்கு உரிய

Koviloor Digital Library

பதில் கிடைத்துவிட்டது. 'உம்மைப் போய்க் கேட்கிறேனே! பரம சீதளத்தைத் தாங்கும்படியான சக்தி உமக்கு ஏது என்று. அது உமக்குத் தெரியாது. அந்தச் சக்தி உம்மிடம் இல்லை. என்னிடந்தான் இருக்கிறது. நானே தெரிந்துகொண்டுவிட்டேன். நீர் எங்கும் இருக்கிறீர். நீர் இல்லாத இடமே இல்லை என்று சொல்கிறீர்கள்.'

''சுவாமி எங்கே இருக்கிறார் என்று சொல்லு; ஒரு பழம் தருகிறேன்'' என்று ஒருவன் கேட்டானும். 'சுவாமி எங்கே இல்லை என்று முதலில் சொல்லு. நான் இரண்டு பழம் தரு கிறேன்' என்று இன்னொருவன் சொன்னான் என்பதாகத் தத்துவக் கதையில் சொல்லிக்கொண் டிருக்கிறார்கள்.

நீர் எங்கும் இருக்கிறீர். எனக்கு உள்ளும் இருக்கிறீர். என் உள்ளத்திற்கு உள்ளும் இருக்கிறீர் அல்லவா? என் உள்ளம் எப்படி இருக்கிறதென்று தெரியுமே! என்னுடைய உள்ளத்தில் நீர் ஒரு நிமிஷம் இருந்தால் போதும். எவ்வளவு ப்ரபூதமான சீதளம் கட்டினாலுங்கூட அந்தத் தாபம் போகாது!

என்னுடைய உள்ளத்தில் எவ்வளவு தாபம் இருக்கிறது. தெரியுமா? அப்படியே உள்ளம் கொதித்துக்கொண் டிருக்கிறது. எப்போது பார்த்தாலும் எனக்குக் கொதிக்கிறாற்போல் வேறு எவனுக்கும் கொதிக்கும் என்று சொல்லமுடியுமா? அப்படிக் கொதித்துக்கொண் டிருக்கிறது என் உள்ளம், இதிலே நீர் ஒரு நிமிஷம் இருந்தால் போதுமே! உமக்குக் கொடுக்கும் படியான இவ்வளவு சீதளமும் போதாது. இன்னும் போட வேண்டும். இந்தச் சீதளத்தைத் தாங்கும்படியான சக்தி உமக்கு என்னால் அல்லவா கிடைக்கிறது?

चित्ते निर्वेदतप्ते यदि भवति न ते नित्यवासो मदीये ।

சித்தே நிர்வேததப்தே யதி பவதி நதே நித்யவாஸோ மதீயே |

என்னுடைய சித்தம் துக்கத்தினாலும் தாபத்தினாலும் அநா வசியமான மனோவிகாரத்தினாலும் சதா கொதித்துக்கொண் டிருக்கிறது. மதீயே என்றால் என்னுடைய என்று அர்த்தம். என்னுடைய சித்தே - சித்தத்தில் ஒரே கவலைத் தீயிலே, துக்கத் திலே கொதித்துக்கொண் டிருக்கும்படியான இதிலே நீர் இருக் கிறீர் அல்லவா?

நிர்வேததப்தே என்றால் கவலைத் தீயினால் எரிந்துகொண் டிருக்கும்படியான என்று அர்த்தம். நானும் அநாதியாக இருக் கிறேன். நீரும் அநாதியாக இருந்துகொண் டிருக்கிறீர். நான் பல பல ஜன்மாக்களை எடுத்துக்கொண்டே இருக்கிறேன். எனக்குத் துக்கம் போகவே இல்லை. இந்த உள்ளத்தில் நீர் ஒரு நிமிஷம்

Koviloor Digital Library

வந்து இருந்தாலும் போதும், ஒரு யுகம் இவ்வளவு சீதளத்தில் இருந்தாலும் உமக்கு ஏற்பட்ட தாபம் போகாதே.

चित्त निर्वेदतप्ते यदि भवति न ते नित्यवासो मदीये ।

சித்தே நிர்வேததப்தே யதி பவதி நதே நித்யவாஸோ மதீயே |

தப்தம் என்றால் தாபம்; கவலை. என் இருதயத்தில் இருக்கும்படியான கவலை இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. இந்த உள்ளத்தில்

यदि भवति न ते

யதி பவதி நதே

நீர் இல்லாமல் இருந்திருந்தால், இவ்வளவு ப்ரபூதமான சீதளத்தையும் தாங்கும்படியான, சகித்துக்கொள்ளும்படியான சக்தி உமக்கு ஏது?

तव कनकसभानाथ सोढुं क्व शक्तिः ?

தவ கநகஸபாநாத ஸோடும் க்வ ஶக்திः?

என்பதாக அந்தக் கவி மிக அழகாக நயம்பொருந்தச் சொல்லியிருக்கிறார். தமிழில் இருக்கும்படியான சங்ககால நூல்களில் உள்ள செய்யுள்கள் நமக்குப் புரியுமோ புரியாதோ? ஸம்ஸ்கிருத சுலோகத்தை ஒரு முறைக்கு இரண்டுமுறை சொன்னால் அப்படியே புரிந்துவிடும்.

ஜீவர்களுடைய இருதயத்தில் இருக்கும்படியான தாபத்தை, தாபமே இல்லாமல் நனைந்திருக்கும்படியான ஈச்வரன்தான் போக்க முடியும். நம்முடைய தாப இருதயத்திலே அவர் இருக்கிற காரணத்தால், அவருக்கு உண்டாகிற தாபத்தை நீக்குவதற்காக, அபசார க்ஷமாபணார்த்தம் நாம் அவருக்குப் பரிபூர்ணமாகச் சீதளமான சைத்தியோபசாரம் நிறையப் பண்ணி, குளிர்ந்த சுவாமியாக அவரைப் பாவனை பண்ணிக் கொண்டு, அவரை நம்முடைய இருதயத்தில் வைத்துக் கொண்டால் நம்முடைய தாபம் எல்லாம் நிவிர்த்தி ஆகிவிடும். நம்முடைய தாபம் மிகுந்த இருதயத்தில் அவர் வசிக்கிற காரணத்தினால் அந்தத் தாபத்திற்கு நிவர்த்தியாகிய பரம சீதளமான உபசாரத்தை அவருக்குச் செய்வதுதான் இந்த ஆருத்ரா தரிசனத்தின் தத்துவமே என்பதை விளக்குவதுபோல் இருக்கிறது இந்தச் சுலோகம்.

Koviloor Digital Library

मौलौ गङ्गाशशाङ्कौ करचरणतले शीतलाङ्गा भुजङ्गाः
वामे भागे दयार्द्रा हिमगिरितनया चन्दनं सर्वगात्रे ।
इत्थं शीतं प्रसूतं तव कनकसभानाथ सोढुं क्व शक्तिः
चित्ते निर्वेदतप्ते यदि भवति न ते नित्यवासो मदीये ॥

மௌளௌ கங்காஶஶாங்கௌ கரசரணதலே ஶீதலாங்கா புஜங்கா
வாமேபாகே தயார்த்ரா ஹிமகிரிதநயா சந்தநம் ஸர்வகாத்ரே |
இத்தம் ஶீதம் ப்ரஸூதம் தவ கநகஸபாநாத ஸோடும் க்வ ஶக்தி:?
சித்தே நிர்வேததப்தே யதிபவதி ந தே நித்யவாஸோ மதீயே ||

மார்கழி மாதம் வரப்போகிறது. அந்தச் சமயத்தில் நாம் பூஜை பண்ணினாலும் பண்ணாதுபோனாலும் விடியற்கால வேளையில் நாம் தூங்காமலாவது, சிவபூசை பண்ணுகிறதைப் பார்க்க வேண்டும். உஷத் காலத்தில் திருப்பள்ளி எழுச்சி பண்ணுவார்கள். பஜனை செய்துகொண்டு திருவீதி வலம் வருவார்கள். சட்டையைப் போட்டுக்கொண்டு, மப்ளர் கட்டிக்கொண்டு, பெரிய கம்பளியால் போர்த்துக்கொண்டு பஜனைக்கோஷ்டியில் அநேகம் பேர் போவார்கள். இதுவெல்லம் வெறும் அநாவசியமான சமாசாரம், 'போர்த்துக்கொண்டவனைக் காத்திருக்கும் 'போக்கணம் கெட்ட குளிர்' என்று சொல்வது வழக்கம். போர்த்துக்கொள்ளப் போர்த்துக்கொள்ளத்தான் குளிர் ஜாஸ்தி. போர்வையை எல்லாம் உதறி எறிந்துவிட்டால் குளிரும் போய்விடும். நமக்கு எல்லாம் குளிர் விட்டுப் போகவேண்டும்.

'குளிர்விட்டுப் போச்சு' என்றால் பயம் போச்சு என்று அர்த்தம். நமக்குப் பயம் போகவேண்டும். பயத்தைப் போக்குபவன் ஈச்வரன்தான். குளிரை அவன்தான் போக்குகிறான். உலகம் எல்லாம் நனைந்திருக்கும்படியான நாளில் - சமயத்தில் - அவனுக்குப் பரம சீதளமான உபசாரங்களை எல்லாம் பண்ணி, தாபத்தினாலே கொந்தளித்துக்கொண் டிருக்கும்படியான நம்முடைய உள்ளத்திலே, இருதயத்திலே, அந்தக் குளிர்ந்த மூர்த்தியை வைத்து க்ஷணகாலம் தியானம் செய்தால் போதும்; நம்முடைய தாபங்கள் எல்லாம் நிவிர்த்தியாகி நம்முடைய உள்ளமும் குளிர்ந்து ஆனந்தமாக இருக்கும். இது ஞாபகம் வந்தது. உங்கள் காதில் போட்டு வைத்தேன்.

Koviloor Digital Library

15

திருக்கார்த்திகை

இன்றைக்குத் திருக்கார்த்திவக. இன்றைத்தினம் தீபம் வைக்கிறது என்பது இமயம் முதல் குமரி வரைக்கும் அநேகமாக ஒவ்வொரு தெருவிலும் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு கிராமத்திலும் சம்பிரதாயம். இந்த வழக்கம் இன்ன காலத்தில் ஆரம்பித்தது என்று நமக்குத் தெரியாது. அநாதி காலமாக எல்லோரும் இன்றைத்தினம் ஒரு தீபத்தை ஏற்றி வைத்துக் கொண்டாடுகிறோம். அந்தத் தீபத்தை வைக்கிற காலத்தில் சொல்வதற்காக ஒரு சுலோகம் தர்ம சாஸ்திரத்தில் எழுதியிருக்கிறது. அந்தச் சுலோகத்தினுடைய அர்த்தம்; இன்றைத்தினம் அந்தத் தீபத்தில் ஆவாஹனம் பண்ணுகிற மூர்த்தியை நினைத்துக்கொண்டு யார் அந்தப் பிரகாசத்தைப் பார்த்தாலும், அல்லது அந்தப் பிரகாசம் எந்தப் பொருளின்மேல் பட்டாலும் அவை எல்லாவற்றின் பாபங்களும் நிவிர்த்தியாகி, புனர்ஜன்மம் இல்லாமல் இருக்கவேண்டும் என்று செய்துகொள்கிற பிரார்த்தனைதான். அநேக இடங்களில் விக்கிரகங்களில் ஈச்வரனை ஆவாஹனம் பண்ணுவதுபோல் இன்றைத்தினம் தீபத்திலே தாமோதரன் என்ற மூர்த்தியையோ, உமாதேவியோடு கூடிய த்ரயம்பகனையோ ஆவாஹனம் பண்ணிப் பிரார்த்தித்துக்கொள்வது சம்பிரதாயம். கேசவா நாராயணா, மாதவா என்று சொல்லி வரும்படியான நாமங்களில் பன்னிரண்டாவதாக வருகிற தாமோதரனை ஆவாஹனம் பண்ணினாலும் பண்ணலாம்; உமாதேவியோடு கூடியிருக்கும்படியான த்ரயம்பகனை ஆவாஹனம் பண்ணினாலும் பண்ணலாம். மஹாலிங்கங்களிலே பெரிய பெரிய தபஸ்விகள், மஹரிஷிகள் எல்லாம் தங்கள் தபோவலிமையினால் ஈச்வரனை ஆவாஹனம் பண்ணி, 'நீ இங்கே

Koviloor Digital Library

இருந்துகொண்டு லோகத்தில் இருக்கும்படியான ஜீவன்களுடைய பாவங்களை, உன்னை வந்து தரிசிக்கும்படியான ஜீவன்களுடைய பாபங்களை. நிவிர்த்தி செய்துகொண் டிருப்பாய்'' என்பதாகப் பிரார்த்திக்கொண் டிருக்கிறார்கள். அந்த ஸ்தலங்களில் உள்ள மூர்த்திகளைப்பற்றியும் நாயன்மார்கள், ஆழ்வார்கள் எல்லோரும் பாடியிருக்கிறார்கள், அதனால் அவற்றுக்கு ஒரு தனி விசேஷம் இருக்கிறது. அதேமாதிரி பல தீர்த்தங்களிலும் ஆவாஹனம் பண்ணி, 'இதில் வந்து நீராடும்படியான ஜீவன் களுடைய பாபங்களை நிவிர்த்தி செய்யவேண்டும்' என்று மஹரிஷிகள் பிரார்த்தித்துக்கொண் டிருக்கிறார்கள். அதைப்பற்றியும் அருள்வாக்கு உள்ளவர்கள் பாடியிருக்கிறார்கள். அதனால் எல்லாம் அவற்றுக்கெல்லாம் ஒரு தனி வீசேஷம் இன்னமும் இருந்துகொண் டிருக்கிறது, அதுபோலவே. இன்றைத்தினம் கிருத்திகா பௌர்ணமியில் ஈச்வரனைத் தீபத்திலே ஆவாஹனம் பண்ணி, 'இந்தத் தீபஜ்வாலையைப் பார்த்தாலும் சரி, தீபஜ்வாலை மீது பட்டாலும் சரி, பார்க்கக் கூடிய சக்தி உடைய ஜீவன் களுடைய பாபங்களும், பார்க்கச் சக்தி இல்லாவிட்டாலும், அந்த ஜ்வாலை பட்ட பொருள்களுடைய பாபங்களும் நிவிர்த்தியாக வேண்டும்' என்பதாக மஹரிஷிகள் பிரார்த்தித்துக்கொண் டிருக்கிறார்கள். கிருத்திகா நக்ஷத்திரமும் பௌர்ணமியும் இன்று சேர்ந்து வந்திருக்கின்றன. இவை இரண்டும் ஒரே நாளில் சேர்ந்து சில சமயங்களில் வரும். நக்ஷத்திரம் ஒரு தினமும் பௌர்ணமி ஒரு தினமும் வருவதும் உண்டு. ஆலயங்களுக்குக் கிருத்திகா நக்ஷத்திரந்தான் முக்கியம். திருவண்ணாமலையில் கிருத்திகா நக்ஷத்திரத்தில் தீபம் ஏற்றுவார்கள். வீடுகளில் தீப ஜ்வாலையில் உமாதேவியோடு கூடிய த்ரயம்பகனையோ தாமோதரனையோ ஆஹாவனம் பண்ணி,

கீடா பதங்கா

என்கிற சுலோகத்தைச் சொல்வார்கள். மனுஷ்ய ஜீவன்கன்டைய பாபம் மாத்திரம் நிவர்த்தியாகும்படியாகச் சொல்வது இல்லை. புழுக்களோ, பட்சிகளோ, கொசுவோ=நாமே அடுத்த ஜன்மாவில் கொசுவாக ஆகலாம்;—மரஞ்செடிகொடிகளோ—எல்லா ஜீவன்களுடைய பாபமும் நிவிர்த்தியாகவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்வர்.

சொக்கப்பானை என்று வெகுதூரத்தில் இருந்து பார்க்கிறவர்களுக்குங் கூட அந்த ஜ்வாலை தெரியும்படியாக, பெரிய கோபுரம் மாதிரியாகச் செத்தைகளைப் போட்டுக் கட்டிவைத்து.

Koviloor Digital Library

ஆலயத்திற்குள் இருந்து ஈச்வர ஆவாஹனம் பண்ணின தீபத்தை எடுத்துவந்து இதையும் கொளுத்திவிடுவார்கள். அண்ணாமலை தீபம் என்று, திருவண்ணாமலை உச்சியின்மேல், மைல் கணக்காக நான்கு காதம், ஐந்து காத தூரம் தள்ளி இருக்கும்படியானவர்களுங்கூடத் தரிசனம் பண்ணும்படியாக, தீபம் ஏற்றி வருகிறார்கள். ஜ்வாலையைப் பார்க்கும்படியான மனுஷ்யர்களுடைய பாபங்கள் மாத்திரம் நிவர்த்தியாவது இல்லை: கீடா என்றால் புழுக்கள். பதங்கா என்றால் பட்சிகள். மசகா,-கொசுக்கள். விருக்ஷா - மரங்கள்: இவை எல்லாவற்றினுடைய ஜன்மமும் நிவிர்த்தியாகவேண்டும். செடிகொடிகள் என்றாலும் தண்ணீர் விடவில்லை என்றால் சோர்ந்துபோகின்றன; வாடிப்போகின்றன, நன்றாகத் தம்முடைய உணர்ச்சியை அவை நமக்குத் தெரியப் படுத்துகின்றன. • அவற்றினுடைய ஜன்மமும் நிவிர்த்தியாக வேண்டும்.

ஜலே - ஜலத்தில் இருக்குபடியான மீன், அட்டை போன்றவையாக இருந்தாலும், ஸ்தலே, ஸ்தலத்தில் சஞ்சரிக்கும்படியான ஜீவன்களாக இருந்தாலும்,

த்ருஷ்ட்வா ப்தீபாஞ் ச ஜந்மபாஜா

த்ரயம்பகனை ஆவாஹனம் பண்ணியிருக்கும்படியான தீபத்தைப் பார்த்தாலும்; அந்தத் தீப ஜ்வாலையின் வெளிச்சம் பட்டாலும் பாபங்கள் எல்லாம் நிவிர்த்தியாகி, திரும்பவும் ஜன்மா வராமல் இருக்கும்படியாகச் செய்யவேண்டும் என்பதாக மஹரிஷிகள் பிரார்த்தித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

இரண்டு கால் பிராணியாக இருந்தாலும், நான்கு கால் பிராணியாக இருந்தாலும் லோகம் முழுவதும் க்ஷேமமாக இருக்கவேண்டும். சில பிராணிகளுக்குக் காலே இருக்காது. அது ஒரு ஜன்மம். ஆயிரக்கணக்கான கால் உடைய பிராணி, மரவட்டையைப்போல் இருக்கும். பொதுவாக.

ते द्विपाद् चतुष्पात् ।

தே த்விபாத் சதுஷ்பாத்

என்று வேதத்தில் சொல்லும்போது சகலமும் க்ஷேமமாக இருக்கவேண்டும் என்பதுதான் நம்முடைய பிரார்த்தனையாக இருக்கவேண்டும். நாம் மாத்திரம் க்ஷேமமாக இருந்தால் போதாது.

लोकाः समस्ताः सुखिनो भवन्तु

லோகாஸ் ஸமஸ்தா: ஸுகிநோ பவந்து

என்று சமஸ்த லோகமும் சுகமாக இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. கிருத்திகா தீபத்தை ஏற்றி வைத்துவிட்டுச்

Koviloor Digital Library

சொல்லும்படியான சுலோகம் தனித்தனியாக எல்லாவற்றையும் பிரித்து. லோகத்தில் இருக்கும்படியான மனுஷ்யர்கள், புழு பூச்சிகள், மரம் பூ மட்டைகள் எல்லாமும் பாபநிவிர்த்தியாகி, ஜனன நிவிர்த்தியாகி க்ஷேமத்தை அடையவேண்டும் என்கிற தாத்பர்யத்திலே பரம்பரை பரம்பரையாக வந்துகொண்டிருக்கிறது; ஈச்வரனை ஆவாஹனம் பண்ணுவதற்குப் பிரகாசம் தான் உசிதமான ஸ்தானம். பிரகாசந்தான் பரமேச்வர ஸ்வரூபம்.

கிருத்திகா நக்ஷத்திரம் ஆறுமுகத்தின் ஞாபகத்திற்குச் காரணமாக இருக்கிறது. ஆகாசத்தில் இருக்கும்படியான இந்த ஆறு நக்ஷத்திரங்களுக்கும் தனித்தனியாகப் பெயர் சொல்லியிருக்கிறது. இவர்கள்தான் முருகப்பெருமானுக்குத் தயாராக இருந்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இந்தக் கிருத்திகா தீப உத்சவந்தான் சிவன் கோயிலிலும் சரி, பெருமாள் கோயிலிலும் சரி சேர்ந்து கொண்டாடப்படுகிற உத்சவம். சில சில ஆலயங்களில் சிலசில உத்சவங்கள் சில காலங்களில் விசேஷமாகக் கொண்டாடப்படும். ஓரோர் உத்சவம் ஒரொரு காலத்தில் தான். எல்லாக் கோயில்களிலும், எல்லா க்ஷேத்திரங்களிலும் ஒரே நாளில் கொண்டாடப்படும்படியான உத்வசம் இதுதான். 'லோகாஸ்ஸமஸ்தா: ஸுகினோ பவந்து' என்கிற வாக்கியத்தின் விஸ்தாரமாக இன்றைக்கு இந்தத் தீபத்தின் ஜ்வாலையைப் பார்த்தவர்களுக்கும், இந்தத் தீபத்தின் ஜ்வாலை தானாகவே மேலே பட்டவர்களுக்கும்-பிராணியாக இருந்தாலும் சரி, மனுஷ்யர்களாக இருந்தாலும் சரி-சகல ஜீவர்களுடைய பாபத்தையும் நிவிர்த்தி பண்ணி ஜனன நிவிர்த்தி ஆகிறது. நாமும் அந்தத் தீபத்தின் ஒரு லேசம் நம்மேல் பட்டுப் பாப நிவிர்த்தி ஆகும்படியாகச் சாக்ஷாத் தாமோதரனையோ, உமாதேவியோடு கூடி இருக்கும்படியான திரயம்பகனையோ ஆவாஹனம் பண்ணிக் கொண்டு, க்ஷேமத்தை அடையவேண்டும். லோகம் முழுவதும் க்ஷேமமாக இருக்கவேண்டும் என்று பிரார்த்தித்க்கொள்ள வேண்டும். இந்த எண்ணம், மனோபாவம் வந்துவிட்டால் சகல ஆபத்துக்களும் நீங்கிச் சகல பேர்களும், சகலப் பிராணிகளும் க்ஷேமமாக வாழலாம். எல்லோரும் நன்றாக இருக்கவேண்டும் என்கிற பிரார்த்தனை ஒன்றுதான் நமக்கு எப்போதும் இருக்க வேண்டும்.

முற்றும்

Koviloor Digital Library

ஆசாரிய ஸ்வாமிகள்

உபந்நியாசங்கள் [1957-59]

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாகிய ஜகத் குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமி கள், சென்னைக்கு எழுந்தருளி அற்புதமான உபந்நியாசங்களை அருளினார்கள். ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தபடியே அவற்றைச் சுருக் கெழுத்தில் எடுத்துப் புத்தகமாக வெளியிட் டிருக்கிறோம். ஞானத் தெளிவும் அநுபவச் சிறப் பும் கருணை மிகுதியும் வாய்ந்த ஸ்வாமிகளின் உபதேசங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டி; பல அரிய தத்துவங்களின் கருவூலம்.

பகுதி I ரூ. 2-50
பகுதி II ரூ. 2-00
தபால் செலவு ரூ. 0-75

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.